# காத்திருப்பேனடி கண்ணம்மா...

## ரம்யா ராஜன்



# காத்திருப்பேனடி கண்ணம்மா!

## ரம்யா ராஜன்

**அருண் பதிப்பகம்**

எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Email : arun_pathippagam@yahoo.in
செல் : 9003145749

நூற் குறிப்பு

| | |
|---|---|
| ◆ நூல் தலைப்பு | காத்திருப்பேனடி கண்ணம்மா! |
| ◆ ஆசிரியர் | ரம்யா ராஜன் |
| ◆ மொழி | தமிழ் |
| ◆ முதற் பதிப்பு | மே, 2015 |
| ◆ உரிமை | ஆசிரியருக்கு |
| ◆ தாளின் தன்மை | 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| ◆ நூலின் அளவு | 1 × 8 கிரவுன் |
| ◆ அச்சு எழுத்து | 11 புள்ளிகள் |
| ◆ மொத்தப் பக்கங்கள் | 252 |
| ◆ பைண்டிங் | சாதா அட்டை |

**விலை: ரூ. 120.00**

வெளியிடுவோர்: **அருண் பதிப்பகம்**
எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு: மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 69.
போன்: 9043558732

அச்சிட்டோர்: மஞ்சு ஆப்செட், சென்னை - 5.

# காத்திருப்பேனடி கண்ணம்மா!

# காத்திருப்பேனடி கண்ணம்மா!

1

**செ**ன்னை நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோயில். அதிகாலையிலேயே பக்தர்களின் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. விஸ்வரூப ஆஞ்சநேயரின் முன் கண்மூடி,

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கு கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான்
அவன் நம்மை அளித்துக் காப்பான்.

என்ற துதியைச் சொல்லிக் கண் திறந்த பாரதி, தன் முன் நீட்டப்பட்ட கற்பூர ஆரத்தியைக் கண்களில் ஒற்றியவள், பிரசாதம் வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

பாரதி! பெயருக்கு ஏற்றாற்போல நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையுமாக இருக்கும் புதுமைப் பெண்தான்.

ஆனால், புதுமை என்ற பெயரில் நடக்கும் கலாச் சாரச் சீரழிவுகளைப் பொறுக்காதவள். அவளுக்கு வர்ணனையாகவோ, இல்லை குழைந்தோ பேசத் தெரியாது. எப்போதும் மனதில் நினைப்பதைப் பட்டென்று பேசிவிடுவாள்.

பாரதியை முதலில் பார்ப்பவர்கள், அவளோடு பழகப் பயந்தாலும், சிறிது நாட்களிலேயே அவளின் நல்ல குணத்தைப் புரிந்து கொண்டு, அவளோடு நெருங்கி விடுவார்கள்.

கோயிலிலிருந்து வெளியே வந்த பாரதி, தன் ஸ்கூட்டியைக் கிளப்பிக் கொண்டு, ஆதம்பாக்கத்தில் இருக்கும் அவள் வீட்டிற்குச் சென்றாள். அதிகாலை என்பதால், சாலையில் போக்குவரத்து அதிகமாக இல்லை. அதனால் வேகமாகச் சென்றாள்.

அவள் வருவதைத் தூரத்தில் இருந்து பார்த்த காவல்துறை அதிகாரி, அங்கிருந்த பெண் காவலரிடம், அந்த வண்டியை நிறுத்தச் சொல்லிச் சொல்ல, அவரும் கை காட்டிப் பாரதியின் வண்டியை நிறுத்தினார்.



பாரதி, "ஏன்?" என்று கேட்க, அந்தப் பெண் காவலர் திரும்பி, மேல் அதிகாரியைப் பார்க்க, பாரதியும் திரும்பிப் பார்த்தாள். பார்த்தவளின் முகம் மாறியது.

ஜீப்பின் மீது சாய்ந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த அதிகாரி, பாரதியின் அருகில் வர, அவள் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

பாரதியின் முன்பு வந்து நின்ற அதிகாரிக்கு இளம் வயதுதான். சராசரி உயரத்தை விடச் சற்று அதிக உயரமாகவும், அதற்கேற்ற உடல் கட்டுடன், மாநிறத்தில், பார்க்கக் கம்பீரமாகவும் இருந்தார்.

அந்த அதிகாரி பாரதியின் வண்டியின் முன் பக்கத்தில் தட்டி, "ஹலோ மேடம்..." என்று அழைக்க, பாரதி திரும்பியவள், அப்போதும் அவரின் முகத்தைப் பார்க்காமல், அந்த அதிகாரியின் சட்டையில் குத்தியிருந்த பெயரைப் பார்த்தாள். அதில் சஞ்ஜீவ் IPS என்றிருந்தது.

அதுதான் அவளுக்கு முன்பே தெரியுமே! 'இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை...' என்று நினைத்தவள், மெதுவாக நிமிர்ந்து, 'என்ன?' என்பது போல் சஞ்ஜீவைப் பார்க்க,

அவன், "உங்க லைசென்ஸ் காட்டுங்க," என்றதும்,

"கொண்டு வரலை... வீட்ல இருக்கு..." என்று பாரதி அலட்சியமாகப் பதில் சொல்ல,

"வீட்ல வெச்சிட்டு வரவா லைசென்ஸ் கொடுக்கிறாங்க. டிரைவ் பண்ணும்போது வெச்சிருக்கணும்னு தெரியாதா?"

"எங்க வீடு, இங்கே கிட்டேதான்... நான் கோயிலுக்கு வந்தேன்... அதனால எடுத்திட்டு வரலை."

"வீடு கிட்டே இருந்தா நடந்து வரணும். வண்டியில் வந்தா லைசென்ஸ் கொண்டு வரணும். இது கூடவா தெரியாது...?" என்று சஞ்ஜீவ், பாரதியை வேண்டுமென்றே சீண்ட,

"இதெல்லாம் கேட்க நீங்க யாரு? நீங்க டிராபிக் போலீஸ் இல்லையே..." என்று பாரதி மடக்க,

"டிராபிக் போலீஸ் மட்டும்தான் லைசென்ஸ் செக் பண்ணணும்னு சட்டம் இல்லை. இன்னைக்கு முக்கிய மந்திரி ஒருத்தர் டெல்லியில் இருந்து வர்றார்... அதனால தான் பாதுகாப்புக்கு நிற்கிறோம். சந்தேகப்படற மாதிரி யாரு இருந்தாலும் விசாரிக்க வேண்டியது எங்க கடமை," என்று சஞ்ஜீவ் விளக்கிச் சொல்ல, அதைக் கேட்ட பாரதிக்குக் கோபம் வந்தது.

'நான் சந்தேகப்படற மாதிரி இருக்கேனா... எவ்வளவு திமிர் இவனுக்கு? பேசாம மெயின் ரோடு வராம... அந்தப் பக்கமா வீட்டுக்குப் போய் இருக்கலாம். ரோடு நல்லா இருக்காதேன்னு வந்ததுக்கு... இவன் கிட்டே எல்லாம் பேச்சுக் கேட்க வேண்டியது இருக்கு...' என்று நினைத் தவள்,

"இப்ப என் கிட்டே லைசென்ஸ் இல்லை... அதுக்கு என்ன?" என்று கெத்தாகக் கேட்க,

"ஐந்நூறு ரூபாய் ஃபைன் கட்டு. இல்லேன்னா வண்டியை இங்கே விட்டுட்டுக் கிளம்பு..." என்று சஞ்ஜீவும் பதிலுக்கு எகிற,



பாரதி, தன் பர்சில் இருந்து நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து சஞ்ஜீவ்வின் பக்கம் அலட்சியமாக நீட்டி யவள், "மாமூல்..." என்று கிண்டலாகச் சொல்ல, சஞ்ஜீவ் அவளைப் பார்த்து முறைத்தான்.

"என்ன... தெரியாத மாதிரி பார்க்கிறீங்க... இது உங்களை மாதிரி போலீசுக்கு வழக்கமானதுதானே..." என்று பாரதி நக்கலாகச் சொல்ல,

சஞ்ஜீவ் வந்த ஆத்திரத்துக்கு என்ன செய்கிறோம் என்று யோசிக்காமல், பாரதியின் வண்டியைப் பிடித்துத் தள்ள... வண்டியோடு சேர்ந்து பாரதியும் விழப் பார்த்தாள்.

அவள் விழாமல் பிடித்து நிறுத்தியவன், "பொம்ப ளைங்கல்ல கூட வேற மாதிரியானவங்க இருக்காங்க... அதுக்காக, நீயும் அப்படித்தான்னு சொன்னா, சும்மா விடுவியா?" என்று சஞ்ஜீவ் அடிக் குரலில் சீற,

பாரதிக்கு முகம் நெருப்பாக மாறியது.

அவள் சஞ்ஜீவை அடிக்கக் கை ஓங்க, அதை எதிர் பார்த்த சஞ்ஜீவ், மற்றவர்கள் பார்ப்பதற்கு முன், அவள் கையைப் பிடித்துத் தடுத்தவன்,

"உன்னைத் தப்பாச் சொன்னா கோபம் வருதில்ல... அப்படித்தானே எனக்கும் இருந்திருக்கும். சில பேர் செய்யற தப்பால, எல்லோரையும் தப்பாச் சொல்லுவியா? நாள், கிழமை, பண்டிகைன்னு பார்க்காமத்தான் நாங் களும் வேலை செய்யறோம்... ஆனா, எங்களுக்குக் கெட்ட பேர்தான்," என்றான் வருத்தமாக.

"அதுக்குக் காரணம் உங்க டிபார்ட்மெண்ட் ஆளுங்க தான்..." என்ற பாரதி, தொடர்ந்து, "நீ எப்படி என்னைத் தள்ளி விடலாம்... நான் உன்னைச் சும்மா விடமாட்டேன்," என்று சண்டைக்குச் சென்றாள்.

"நான் பண்ணினது தப்புதான். சாரி..." என்று சஞ்ஜீவ் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, தூரத்தில் சைரன் ஒலி கேட்டது.

"மினிஸ்டர் வர்றாரு... நீ கிளம்பு..." என்ற சஞ்ஜீவ், சுற்றிப் பார்க்க, அவனுக்குக் கீழ் வேலை செய்யும் மற்ற வர்கள், சற்றுத் தள்ளி இடைவெளி விட்டு வரிசையாக நின்றனர்.

"முடியாது... நான் இங்கேதான் இருப்பேன்..." என்று பாரதி பிடிவாதம் பிடிக்க, "சரி, நில்லு..." என்றவன், மினிஸ்டர் வண்டி அருகே வந்ததும், சற்றுத் தள்ளி நின்று கொண்டான். மினிஸ்டர் சென்றதும், சஞ்ஜீவ் திரும்பிப் பாரதியைப் பார்க்க, அவள் அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டே, "இரு, உன்னைப் பத்தி கம்ப்ளயிண்ட் பண்றேன்..." என்று சொல்லி விட்டுத் தன் வண்டியை எடுத்துக் கொண்டு சென்றாள்.

அவர்களை மற்றவர்கள் கவனிக்கவில்லை. ஆனால், உடனிருந்த பெண் கான்ஸ்டபிள் கவலையாகப் பார்க்க, அதை உணர்ந்த சஞ்ஜீவ், "எனக்கு வேண்டி யவங்கதான்..." என்றான்.

"நான் ரொம்பப் பயந்துட்டேன் சார்... மினிஸ்டர் முன்னாடி அந்தப் பொண்ணு எதுவும் சில்லியா பிஹேவ் பண்ணிடுமோன்னு..." என்றாள்.



"இல்லை... அப்படியெல்லாம் பண்ண மாட்டா..." என்று புன்னகையுடன் சொன்னவன், சென்று ஜீப்பில் ஏற, டிரைவர், "எங்கே சார் போகணும்?" என்றதும், "வீட்டுக்குப் போங்க..." என்றான்.

பாரதி, அவர்களது வீட்டிற்கு வந்தவள், செருப்பை வேகமாகக் கழட்டிக் கொண்டே, "ரொம்பத் திமிரு... IPS படிச்சிருந்தா கொம்பா முளைச்சிருக்கு... லூசு..." என்று திட்டிக் கொண்டே உள்ளே சென்றவள், பூஜை அலமாரி யில் பிரசாதத்தை வைத்து விட்டு, உள் அறைக்குச் சென் றாள்.

அவளையே கவனித்துக் கொண்டிருந்த அவளின் அம்மா, "இங்கே ஒருத்தி நிற்கிறேன்... ஏதாவது கவனிக் கிறாளா பாரு. வர வர இந்த வீட்ல எதுவும் ஒழுங்கா இல்லை..." என்று சத்தமாகச் சொல்ல,

அது அந்த வீட்டின் ஒவ்வொரு மூலையில் இருந்த வர்களின் காதிலும் நன்றாக விழுந்தாலும், அதை யாரும் கண்டு கொள்ளும் நிலையில் இல்லை.

சஞ்ஜீவ் வீட்டின் முன் ஜீப் நிற்க, அதில் இருந்து இறங்கியவன், எதிர் வீட்டைப் பார்க்க, வீடு அமைதியாக இருந்தது. ஒரு காலத்தில் இதுபோல் காலை வேளையில், அந்த வீட்டில் இருந்து இனிமையான சங்கீதம் கேட்கும். இப்போ எல்லாம் மாறிடுச்சு... என்று நினைத்துப் பெரு மூச்சு ஒன்றை விட்டுத் தன் வீட்டின் உள்ளே சென்றான்.

மாலை, வேலை விட்டு வந்த பாரதி, மிகவும் களைத்து இருந்தாள்.

முகம், கை, கால் கழுவியவள், தட்டில் இட்லியைப் போட்டுக் கொண்டு சாப்பிட்டாள்.

அவள் சாப்பிட்டதும், அவளது அம்மா, "வர்ற ஞாயிற்றுக் கிழமை உன்னைப் பெண் பார்க்க வர்றாங்க..." என்றார்.

பாரதி, "எத்தனை தடவை கல்யாணம் வேண்டாம்னு சொல்றது..." என்று முனக,

அவளது முகத்தில் தெரிந்த கடுப்பைப் பார்த்த வத்சலா, "முன்னாடி போற ஏர் ஒழுங்காப் போனாத்தானே பின்னாடி போறது ஒழுங்காப் போகும்... இங்கேதான் எதுவுமே சரியில்லையே..." என்று புலம்ப ஆரம்பிக்க,

'இதுக்கு மேலே இந்த அம்மாவோட பேசுறது சுத்த வேஸ்ட். நாம என்ன சொன்னாலும், இவங்க சொல்ற தைத்தான் சொல்லப் போறாங்க. இதுக்கு வேற வழிதான் யோசிக்கணும்...' என்று நினைத்தவள், அவர்கள் வீட்டின் மொட்டை மாடிக்குச் சென்றாள்.

மாடியில் சென்று உலாவியவள், 'இந்தக் கல்யா ணத்தில் இருந்து எப்படித் தப்பிப்பது...?' என்று யோசித் தாள். பெண்ணாகப் பிறந்தால் திருமணம் செய்து கொள் வது ஒன்றுதான், அவர்கள் வாழ்க்கைக்கு முக்கியம் போல் பேசுவது அவளுக்குக் கோபத்தை உண்டாக்கியது.

'எதுக்குத்தான் வளர்ந்தோமோ... சின்னப் பிள்ளை யாகவே இருந்திருக்கலாம்...' என்று எல்லோரும் வாழ்வில் ஒரு முறையாவது நினைப்பதைப் போல், பாரதியும் நினைத்தாள்.



பாரதி மாடியில் உலாவிக் கொண்டிருந்த போது, எதிர் வீட்டின் மாடியில் சஞ்ஜீவ் உலாவிக் கொண்டிருந் தான். கீழே கேட் திறக்கும் சத்தம் கேட்டதும் எட்டிப் பார்த்த பாரதி, அங்கே அவள் அக்கா தான்யா வருவதைப் பார்த்ததும், வேகமாகக் கீழே இறங்கிச் சென்றாள்.

பாரதியும், தான்யாவும் வீட்டுக்குள் பேசிக் கொண்டே செல்வதைப் பார்த்ததும், சஞ்ஜீவின் முகம் மலர்ந்தது.

'சரியான அக்கா கோண்டு... எப்பப் பாரு, அக்கா வோடதான் இருக்கும்...' என்று நினைத்தவனின் நினைவு, முதலில் சந்தித்த தினத்துக்குச் சென்றது.

சஞ்ஜீவ் பன்னிரண்டாம் வகுப்பு முடிக்கும் வரை வேளச்சேரியில்தான் இருந்தனர். அதுவும் அவர்கள் சொந்த அபார்ட்மெண்ட்தான். ஆனால், அதில் இரண்டு படுக்கை அறைகள்தான் இருந்தன. அதனால் ஆதம்பாக் கத்தில் அவர்களுக்கு இருந்த இடத்தில், பெரிய வீடாகக் கட்டிக் கொண்டு இங்கே வந்தனர்.

சஞ்ஜீவ்வோடு கூடப் பிறந்தது ஒரு அண்ணன். பெயர் சரவணன். அவன் என்ஜினீயரிங் முடித்து விட்டு, வேலை பார்த்துக் கொண்டே மேலே படிக்கிறான்.

அவர்களது வீட்டில் பெற்றோர் இருவருமே வேலைக்குச் செல்கின்றனர். வீட்டில் அவர்களோடு சஞ்ஜீவின் தாய் வழிப் பாட்டியும் இருக்கிறார்.

வீட்டிற்குப் பால் காய்ச்சும் முதல் நாள்... வீட்டைச் சுத்தம் செய்து அலங்கரிக்க, மாலை சஞ்ஜீவும், அவன்

அண்ணன் சரவணனும் வந்திருந்தனர். அவர்களுக்கு ஒரு ஸ்டூல் தேவைப்பட்டது.

யாரைக் கேட்பது என்று யோசித்த சஞ்ஜீவ், கீழே இறங்கி வந்தவன், எதிர் வீட்டின் வாசலில் சைக்கிளில் அமர்ந்து, தரையில் கால் ஊன்றி நின்று கொண்டிருந்த பையனைப் பார்த்து, "டேய் தம்பி..." என்று அழைக்க, அந்தப் பையனும் உடனே திரும்பிப் பார்க்க, அவனைப் பார்த்ததும் சஞ்ஜீவ் அதிர்ந்தான்.

'இவ்வளவு அழகான பையனா...?' என்று அவன் முகத்தை ஆழ்ந்து பார்க்க, அந்தப் பையன் காதில் சின்ன சிவப்புக் கல் தோடு இருந்தது. ஸ்டைலுக்குப் போட்டிருக்கிறானோ என்று நினைத்துக் கொண்டே அவனை மேலிருந்து கீழ் வரை பார்க்க... அப்போதுதான் அது பையன் இல்லை... பெண் என்று புரிந்தது.

'ஐயோ... சொதப்பிட்டோமே...' என்று நினைத்துக் கொண்டே சஞ்ஜீவ் அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்க்க, அவள் முகம் கோபத்தில் சிவந்து, தணலாக ஜொலித்துக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்து அரண்ட சஞ்ஜீவ், "சாரி... தெரியாமச் சொல்லிட்டேன்..." என்று மன்னிப்புக் கேட்க, அப்போது, பக்கத்தில் இருந்து சிரிப்புச் சத்தம் கேட்டது. சஞ்ஜீவ், யார் என்று திரும்பிப் பார்க்க, அங்கே அவன் வயதுப் பெண் நின்று கொண்டிருந்தாள்.

"இது பையன் இல்லை, பொண்ணு... என்னோட தங்கச்சிதான். பேரு கன்யா... ஆனா... பாரதின்னு கூப்பிடு



வோம். நான் தான்யா..." என்று அறிமுகப்படுத்திக் கொள்ள,

சஞ்ஜீவும் தன்னைப் பற்றிச் சொல்லி, "எதிர் வீட்டுக்குப் புதிதாகக் குடி வந்திருக்கிறோம்..." என்று சொன்னவன், ஸ்டூல் கேட்க, தான்யா உள்ளே சென்று ஸ்டூல் கொண்டு வந்து கொடுத்தாள்.

சஞ்ஜீவ், பாரதியின் பக்கம் திரும்பாமல், ஸ்டூலை எடுத்துக் கொண்டு சென்றான். "ஹப்பா... என்னமா முறைக்கிறா... பார்வையிலேயே அனல் அடிக்குது..." என்று முனகிக் கொண்டே சென்றான்.

பாரதியின் கோப முகத்தைப் பார்த்த தான்யா, "பையன் மாதிரி எந்நேரமும் ட்ராக் பேண்ட்டும், டி-ஷர்ட்டும் போட்டா... பையன்னு நினைக்காம பொண்ணுன்னா நினைப்பாங்க... இதுல பாய் கட் வேற பண்ணி இருக்க..." என்றதும், இப்போது பாரதி, தான்யாவை முறைத்தாள்.

மாலையில் அவர்கள் பெற்றோர் வேலையில் இருந்து வந்ததும், அனைவரும் ஆளுக்கொரு வேலை பார்த்து, இரவுச் சமையல் முடித்து, எல்லோரும் சேர்ந்து அமர்ந்து சாப்பிடும் போது, தான்யா இன்று நடந்ததைச் சொல்ல, அதைக் கேட்ட வீட்டினர் சிரித்தனர்.

அவர்களின் தாத்தா, "என்னோட செல்லக் குட்டியைப் பார்த்து யாரு இப்படிச் சொன்னது?" என்று கோபப்படுவது போல் நடிக்க, பாரதி, "இருக்கட்டும் தாத்தா... அவன் இங்கேதானே இனி இருப்பான். நான் அவனைக் கவனிச்சுக்கிறேன்..." என்று சொல்வதிலேயே, அவள் எப்படிக் கவனிப்பாள் என்று புரிந்த வீட்டினர், "பாவம்... விட்டுடடா...

புதுசா வந்திருக்காங்க..." என்று பதற, பாரதி கெத்தாக, "பார்ப்போம்..." என்றாள்.

பாரதியின் பெற்றோர் ஸ்ரீநிவாசன், வத்சலா இருவரும் வேலைக்குச் சென்றாலும், அவர்களது குடும்பம் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தது.

திருமணமான புதிதில், அரை கிரவுண்ட் இடத்தில் இருந்த ஒரு சிறு வீட்டை வாங்கி... அதில் வாழ்ந்து வந்தனர்.

பிறந்த இரண்டு குழந்தைகளுமே பெண் என்பதால் அவர்கள் வருத்தப்படவில்லை.

வீட்டிற்கு இரண்டு மகாலக்ஷ்மிகள் வந்ததாகவே நினைத்து, அவர்களுக்கு மகாலக்ஷ்மியின் பெயர்களான ஸ்ரீ தான்யா, ஸ்ரீ கன்யா என்று பெயரிட்டு மகிழ்ந்தனர்.

தான்யா அமைதியான சுபாவம் கொண்டவள். கன்யா அவளுக்கு அப்படியே நேரெதிர்.

வத்சலா வேலைக்குச் செல்வதால் வீட்டு வேலையையும் பார்த்துக் கொண்டு, குழந்தைகளைப் பள்ளிக்குக் கிளப்புவதும் சிரமமாக இருந்ததால்... கன்யாவிற்குத் தலைமுடியை ஆண் பிள்ளை போல் வெட்டி விட்டார்.

நாளடைவில் அதுவே அவளுக்கு வாடிக்கையாகத் தொடர்ந்தது.

கன்யாவிற்குப் பிடித்த உடை பனியனும், டிரௌசரும்தான். சிறு வயதில் அதைத்தான் முழு நேரமும் போட்டுக் கொண்டு சுற்றுவாள்.



வெளியே செல்லும்போது, வேறு உடை அணிந்தாலும், வீட்டுக்கு வந்த வுடனே உடை மாற்றி விடுவாள். அவர்கள் வீட்டில் அவளைத்தான் எப்போதும் கடைக்கு அனுப்புவார்கள். சைக்கிளில் சென்று சாமான் வாங்கி வருவாள். அவளைப் பையன் போலவே வளர்த்தனர்.

கன்யா எப்போதும் ஏதாவது சட்டம் பேசுவாள். பெண் பிள்ளை இப்படி இரு. அப்படி இரு... என்றால் அப்ப பையன்னா எப்படி வேணா இருக்கலாமா என்று எதிர் வாதம் செய்வாள்.

வத்சலாவின் நாத்தனார் இவர்கள் வீட்டின் அருகே தான் இருக்கிறார். அவருக்குப் பாரதியாரின் கவிதைகள் என்றால் மிகவும் பிடிக்கும். அதனால் அவர் கன்யாவைப் பாரதி என்று அழைக்க... நாளடைவில் அதுவே எல்லோருக்கும் பழகிவிட்டது.

சஞ்ஜீவ் வீட்டில் மறுநாள் அதிகாலை பால் காய்ச்சினர். பூஜை முடிந்து ஆறு மணி அளவில் எல்லோரும் அமர்ந்து பால் குடித்துக் கொண்டிருந்தபோது.... எதிர் வீட்டில் இருந்து இனிமையான சங்கீதம் காற்றில் மிதந்து வந்தது.

என்ன தவம் செய்தனை!<br>
என்ன தவம் செய்தனை யசோதா<br>
என்ன தவம் செய்தனை யசோதா

என்ன தவம் செய்தனை யசோதா<br>
என்ன தவம் செய்தனை யசோதா<br>
என்ன தவம் செய்தனை யசோதா

எங்கும் நிறை பரப்பிரம்மம் அம்மா என்றழைக்க
என்ன தவம் செய்தனை யசோதா
எங்கும் நிறை பரப்பிரம்மம் அம்மா என்றழைக்க
என்ன தவம் செய்தனை யசோதா
எங்கும் நிறை பரப்பிரம்மம் அம்மா என்றழைக்க
என்ன தவம் செய்தனை யசோதா!

பாடலைக் கேட்ட அனைவரும் மெய் மறந்து அமர்ந்திருந்தனர்.

சஞ்ஜீவ்க்குத் தெரியும். அந்தப் பாடலைப் பாடுவது தான்யாவும், கன்யாவுமென்று.

பார்க்கப் பையன் மாதிரி இருந்துட்டு, எப்படி மனசு உருகுற மாதிரிப் பாடுறா பாரு... என்று நினைத்தவனின் இதழ் புன்னகையில் விரிந்தது.

அன்றிலிருந்து தினமும் காலை தான்யா, கன்யாவின் பாட்டு இல்லாமல் பொழுது புலராது.

சஞ்ஜீவ்க்கு ஐ.பி.எஸ். படிக்க வேண்டும் என்று ஆசை. அதனால் இஞ்சினீயரிங் படித்துக் கொண்டே, அதற்காகத் தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தான்.

பாரதி பத்தாம் வகுப்பில் இருந்தாள். தினம் அவள் பள்ளிக்குக் கிளம்பும் போதுதான், சஞ்ஜீவ் கல்லூரிக்குக் கிளம்புவான்.

சஞ்ஜீவ் சிரித்தாலும், பாரதி அவனைப் பார்த்து முறைத்து விட்டுச் செல்வாள். அதனால் இருவரும்



ஒருவரை ஒருவர் பார்த்தாலும்... பார்க்காதது மாதிரியே செல்வார்கள். எதிரெதிர் வீட்டில் இருந்ததால்... ரொம்பவும் தவிர்க்க முடியாது. நாள், கிழமை என்றால் ஒருவரின் வீட்டுக்கு மற்றவர் செல்வதும், பேசுவதும் இயல்புதான்.

சஞ்ஜீவுக்குப் பாரதி தலை கோதும் அழகைப் பார்க்க மிகவும் பிடிக்கும். அவள் அடிக்கடி தன் முன்புறத் தலை முடியைக் கோதி விடுவாள். மனசுல சூப்பர் ஸ்டார்னு நினைப்பு என்று அலுத்துக் கொண்டாலும், சஞ்ஜீவ் அதை ரசிப்பான். ஆனால்... இப்போது பாரதி முடியை நீளமாக வளர்த்து விட்டாள் என்பது வேறு விஷயம்.

எப்பவும் அக்காவும், தங்கையும் சேர்ந்துதான் தரிசனம் தருவார்கள். கோவிலுக்குச் செல்வதாக இருந்தாலும் சரி, கடைக்குச் செல்வதாக இருந்தாலும் சரி. தான்யா, பாரதி இருவரும் எப்போதும் ஒன்றாகத்தான் சுற்றுவார்கள்.

ஆனால் சஞ்ஜீவும் சரவணனும் அப்படி இல்லை. இருவரும் சேர்ந்திருந்தால் சண்டைதான் வரும்.

பிறகு இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசாமல் சில நாட்கள் முறைத்துக் கொண்டே இருப்பார்கள். அதனால் சஞ்ஜீவுக்குத் தான்யாவையும், பாரதியையும் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். இரண்டு பேரும் சண்டையே போட மாட்டார்கள் என்று நினைத்தான்.

சஞ்ஜீவ் நினைப்பது போல் இல்லை. தான்யாவும், பாரதியும் சண்டை போடத்தான் செய்வார்கள். ஆனால்,

அதை உடனே மறந்து விட்டு, ராசியாகி விடுவார்கள். அவர்களால் ஒருவரோடு ஒருவர் கோபித்துக் கொண்டு பேசாமல் இருக்க முடியாது.

அவர்கள் வீட்டின் மாடியில் நின்று பழைய நினைவுகளில் மூழ்கி இருந்த சஞ்ஜீவ், அவனின் அம்மா அழைக்கும் குரல் கேட்டுக் கலைந்தவன், கீழே இறங்கிச் சென்றான்.

நேரம் இரவு ஒன்பது மணி. பொள்ளாச்சி மேற்கு மாடவீதியில் இருந்த அந்தப் பெரிய வீட்டில், அனைவரும் அமர்ந்து இரவு உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

அந்தக் குடும்பத்தில் ஈஸ்வரன்தான் குடும்பத் தலைவர். அவரின் மனைவி விஜயா.

அவர்களுக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள். ஒரு மகனுக்கும் மகளுக்கும் திருமணமாகி விட்டது. மீதம் இருப்பது ஷக்தி மட்டும்தான்.

ஷக்தி சாப்பிட்டு விட்டு அவன் அறைக்குச் சென்றவன், டேபிளில் இருந்த போட்டோவைக் கையில் எடுத்துப் பார்த்தான். 'அம்மா ஏதோ பொண்ணு பார்த்திருக்கறதாகச் சொன்னாங்களே... அந்தப் பொண்ணோட போட்டோவா இது...?' என்று நினைத்தவன், போட்டோவை நன்றாகப் பார்த்தான்.

'நல்லாத்தான் இருக்கா...' என்று நினைத்துக் கொண்டே அந்தப் போட்டோவைப் பின்புறம் திருப்ப, ஸ்ரீகன்யா B.A., B.Ed., என்றிருந்தது.



மேடம் டீச்சரா? இந்த வாரம் பொண்ணு பார்க்கப் போறோம்... அங்கே போய் நேர்ல பார்த்து முடிவு செய்வோம்... இந்தப் பல் டாக்டருக்கு மேட்ச் ஆவாங்களான்னு... என்று நினைத்தவன், போட்டோவை வைத்து விட்டுக் கட்டிலில் சென்று படுத்தான்.

## 2

பாரதி இரவு உணவிற்குப் பிறகு, மெதுவாகத் தன் தந்தையிடம், தனக்கு இப்போது திருமணம் வேண்டாம் என்று சொல்ல, அவர் பாரதியைத் தன் தோளில் சாய்த்துத் தலை கோதியவர்,

“பயப்படாதே பாரதி. இந்த இடம் நமக்கு நல்லாத் தெரிஞ்சவங்கதான். ஈஸ்வரனும் நானும் ஒரே ஊரு... காலேஜ் வரை ஒண்ணாத்தான் படிச்சோம். ஷக்தி ரொம்ப நல்ல பையன். ஏற்கெனவே உங்க அக்காவை நினைச்சு அம்மா மனசுக்குள்ள மறுகிக்கிட்டு இருக்கா. நீயாவது கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இருந்தாத்தான், அவ மனசு கொஞ்சமாவது நிம்மதியா இருக்கும். வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. எல்லோரும் கெட்டவங்க இல்லை...” என்று ஸ்ரீனிவாசன், பாரதிக்கு எடுத்துச் சொல்ல, அவள் வெறுமனே தலையை மட்டும் சரி என்று அசைத்தாள்.

சிறிது நேரம் கழித்து எழுந்து படுக்கச் சென்ற பாரதியின் முகத்தைப் பார்த்த வத்சலாவுக்குக் கண்கள் கலங்கின.

அவரும் சென்று படுத்தார்தான். ஆனால், தூக்கம் வரவில்லை. மனது பழைய விஷயங்களை நினைத்துத் தவித்தது.

பெரிய வசதி இல்லையென்றாலும், தன் பிள்ளை களைச் சிறப்பாகவே வளர்த்தனர். அவர்களும் மற்றப் பிள்ளைகளைப் பார்த்து, அது வேண்டும், இது வேண்டும் என்று ஆசைப்பட்டது இல்லை.

பெற்றோர் வாங்கிக் கொடுப்பதை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டனர்.

வத்சலா, இருவருக்கும் எது வாங்கினாலும், ஒரே மாதிரி வேறு வேறு நிறத்தில் வாங்குவார். இருவரும் பெண் பிள்ளைகள் என்று, சிறு வயதில் இருந்தே சேர்த்து வைத்ததால், ஆளுக்கு முப்பது சவரன் நகை வாங்கி வைத்திருந்தனர்.

தான்யாவும், பாரதியும் தங்கள் அத்தையிடம்தான் பாட்டுக் கற்றுக் கொண்டனர். பெரிய பாடகிகள் எல்லாம் இல்லை. ஆனால், ஸ்ருதி சுத்தமாக இருவரும் பாடு வார்கள்.

வீட்டின் அருகே இருக்கும் கோயில் விசேஷங்களில், தெரிந்தவர் திருமணங்களில் அவர்கள் கேட்டுக் கொண் டால் பாடுவார்கள்.

தான்யாவும் பாரதியும் ஒருவருக்கொருவர் மிகவும் பாசமாக இருப்பார்கள். ஒரு முறை கோயிலில் பாடப் போகும்போது...



"அம்மா... நான் இன்னைக்கு அக்காவோட சிவப்புக் கலர் நெக்லஸ் போட்டுக்கிறேன்மா..." என்று பாரதி ஆசை யாகக் கேட்க, தான்யா, அவளே எடுத்துத் தங்கைக்குப் போட்டு விட்டாள்.

"தான்யா... நீ என்னோட பச்சைக் கலர் நெக்லஸ் போட்டுக்கோ..." என்று பாரதி, அவளுடையதைத் தான்யா விற்குக் கொடுக்க... தான்யா புடவையிலும், பாரதி பட்டுப் பாவாடை தாவணியிலும், தலை நிறையப் பூ வைத்து, அழகாகத் தயாராகிக் கோயிலுக்குப் பாடச் சென்றனர்.

அலைபாயுதே கண்ணா
என்மனம் அலைபாயுதே
ஆனந்த மோகன வேணுகானமதில்
அலைபாயுதே கண்ணா
என்மனம் அலைபாயுதே
உன் ஆனந்தமோகன வேணுகானமதில்
அலைபாயுதே கண்ணா ஆ ஆ

நிலைபெயராது சிலைபோலவே நின்று
நேரமாவதறியாமலே மிக விநோதமான முரளீதரா
என்மனம் அலைபாயுதே கண்ணா ஆ ஆ

என்று இருவரின் குரலிலும், பாடல் பாகாக உருகி வழிந்தது. பாடல் முடிந்ததும் கரகோஷம் அடங்க வெகு நேரமானது.

வத்சலாவின் பக்கத்தில் அமர்ந்திருந்த பெண், "ரெண்டு பேரும் நல்லாப் பாடுறாங்க இல்ல..." என்று சொல்ல,

"அவங்க ரெண்டு பேரும் என்னோட பொண்ணுங்க தான்..." என்றார் வத்சலா பெருமையாக.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். ரெண்டு பேரும் என்ன படிக்கிறாங்க?"

"முதல் பொண்ணு தான்யா B.Sc. CS முடிச்சிட்டு, ஒரு கம்பெனியில் வேலை பார்க்கிறா... அவங்க கம்பெனி யிலேயே அவளை M.Sc. படிக்க வைக்கிறாங்க. சின்னவ இப்பத்தான் B.A. முதல் வருஷம் படிக்கிறா."

"இந்தக் காலத்துல எல்லோரும் இன்ஜினியரிங் படிக்கும்போது, உங்க பசங்க மட்டும் ஏன் வேற படிக் கிறாங்க? ஆச்சர்யமா இருக்கே..." என்று அந்தப் பெண் கேட்க,

"ரெண்டு பேரும் நல்ல மார்க்தான் வாங்கினாங்க. நாங்களும் இன்ஜினியரிங்தான் படிக்கச் சொன்னோம். ஆனால், ஏனோ ரெண்டு பேரும் இன்ஜினியரிங் படிக்க விரும்பலை. சின்னவளுக்கு டீச்சர் ஆகணுமாம்.. அவ ளுக்கு மெஷின்கள் கூட இருக்க வேண்டாமாம்..." என்று சிரித்துக் கொண்டே வத்சலா சொல்ல,

"உங்க பொண்ணுங்க அழகா... அறிவா... அதே சமயம் திறமையாவும் இருக்காங்க. உங்க பொண்ணுங்க ளைக் கட்டிக்க மாப்பிள்ளைங்க வரிசையில்தான் நிற்கப் போறாங்க..." என்று அந்தப் பெண் சொன்னதைக் கேட்ட வத்சலாவின் மனம் பெருமையில் பூரித்தது அன்று.

ஆனால், இன்று...?



மறுநாள் சஞ்ஜீவ் ஒரு கேஸ் விஷயமாக வெளியே சென்று விட்டுப் பழவந்தாங்கல் ரயில்வே ஸ்டேஷனைக் கடந்து வரும்போது... பாரதி, கல்லூரி முதல் வருடம் படித்தபோது, தினமும் தாங்கள் இருவரும் ரயில் நிலை யத்தில் சந்தித்துக் கொண்டது அவன் நினைவுக்கு வந்தது.

பாரதி, சஞ்ஜீவிடம் எப்போதும் கலகலப்பாகவெல் லாம் பேச மாட்டாள். பார்த்தால் ஒரு ஹாய்... அவ்வளவு தான்.

தான்யாதான் சஞ்ஜீவிடம் நன்றாகப் பேசுவாள். பாரதி கல்லூரி சேர்ந்ததும், சைக்கிளில் பழவந்தாங்கல் ஸ்டேஷன் வரை சென்று, பின் அங்கிருந்து டிரெயினில் கல்லூரிக்குச் செல்வாள்.

சஞ்ஜீவும் தன் பைக்கை ஸ்டேஷனில் நிறுத்தி விட்டு, டிரெயினில் அவனுடைய கல்லூரிக்குச் செல்வான்.

ஒரு நாள் சஞ்ஜீவ், ஸ்டாண்டில் வண்டியை நிறுத்தி விட்டு, அவன் வண்டியின் கண்ணாடியைப் பார்த்துத் தலை வாரிக் கொண்டிருந்த போது, பாரதி தனது சைக் கிளோடு உள்ளே வந்தவள், அங்கே சஞ்ஜீவ் தலை வாரிக் கொண்டிருப்பதைப் பார்த்துச் சிரிக்க, சஞ்ஜீவுக்கு ஒரே சந்தோஷம், பாரதி அவனைப் பார்த்துச் சிரித்து விட்டாளென்று.

சஞ்ஜீவ், பாரதி சைக்கிள் வைத்து விட்டு வரும்வரை காத்திருந்து, அவள் வந்ததும் சேர்ந்து நடக்க, பாரதியும் ஒன்றும் சொல்லவில்லை. அவனோடு இணைந்து நடந் தாள்.

அன்றிலிருந்து சஞ்ஜீவ் தினமும் பாரதிக்காக ஸ்டாண்டில் காத்திருப்பான்.

இருவரும் ஒரே ரெயிலில்தான் ஏறுவார்கள். ஆனால், பாரதி மகளிர் பெட்டிக்குச் சென்று விடுவாள். முதலில் பாரதி இறங்கும் ஸ்டேஷன் வரும்.

அதன் பிறகு இரண்டு ஸ்டேஷன் தள்ளித்தான் சஞ்ஜீவ் இறங்குவான். அதனால் பாரதி இறங்கும் இடம் வந்ததும் சஞ்ஜீவ் அவள் இறங்கிச் செல்வதைப் பார்ப் பான். ஆனால், பாரதி சஞ்ஜீவைக் கண்டு கொள்ளாமல் செல்வாள்.

திரும்பி வரும்போது, ஆளுக்கு ஒரு நேரம் வரு வார்கள். சில நேரம் சஞ்ஜீவ் முதலில் வருவான். சில நேரம் பாரதி வருவாள்.

இருவருமே ஸ்டாண்ட் வந்ததும், மற்றவர் வண்டி அங்கே இருக்கிறதா என்று பார்த்து விட்டே செல்வார்கள்.

இப்படியே சில நாட்கள் செல்ல, பாரதி ஓரளவு சஞ்ஜீவுடன் பேச ஆரம்பித்தாள்.

ஒரு நாள் மாலை கல்லூரியில் இருந்து திரும்பி வரும்போது, இருவரும் ஒரே டிரெயினில் வந்ததால், ஸ்டே ஷனில் சந்திக்க, சஞ்ஜீவ், "பாரதி... காபி குடிச்சிட்டுப் போவோமா...?" என்று கேட்க, பாரதி, "சரி..." என்றாள்.

பாரதி அங்கிருந்த பெஞ்சில் அமர்ந்திருக்க, சஞ்ஜீவ் சென்று காபி வாங்கி வந்தவன், பாரதியிடம் ஒரு கப் கொடுத்து விட்டு, சற்று இடைவெளி விட்டு அமர்ந் தான்.



பாரதிக்கு இப்போது தோள் வரை கூந்தல் வளர்ந் திருந்தது. ஆனால், முன்புறம் மட்டும் சிறிது முடியை வெட்டி விட்டிருந்தாள்.

அதில் பிரவுன் கலரிங் வேறு. அதை அடிக்கடி அவள் கோதி விட... பார்க்க நன்றாக இருந்தது.

இருவரும் காபி குடித்துக் கொண்டிருந்த போது, கல்லூரி மாணவன் போல இருந்த ஒருவன், பாரதி யிடம் வந்து ஒரு க்ரீட்டிங் கார்டு கொடுக்க, பாரதி அதைக் கையிலேயே வாங்காமல், அவனை, என்ன என்பது போல் பார்க்க, "நான் உன்னை லவ் பண்றேன்..." என்று அந்தப் பையன் சொல்ல, பாரதி, "சாரி..." என்றவள், அவள் பாட்டுக்குக் காபி குடித்தாள்.

அந்தப் பையன், "இப்பவே சொல்லாதே. நல்லா யோசிச்சுச் சொல்லு..." என்று கார்டை அவள் கையில் திணிக்க, பாரதி அவனைப் பார்த்து முறைத்தவள், "உனக்கு என்னைப் பத்தி என்ன தெரியும்? எதை வெச்சி லவ் பண்றேன்னு சொல்ற?" என்று கேட்டதும்,

"நீ ரொம்ப அழகா இருக்கே... எனக்கு உன்னைப் பார்த்ததும் ரொம்பப் பிடிச்சிருக்கு..." என்றான்.

பாரதி கோபத்தை அடக்கி, "எப்படி உனக்கு அழகா ஒரு லவ்வர் கிடைக்கணும்னு ஆசையோ... அதே மாதிரி எனக்கும் என்னோட லவ்வர் எப்படி இருக்கணும்னு சில எதிர்பார்ப்புகள் இருக்கு... சாரி, நீ அப்படி இல்லை..." என்று முகத்தில் அடித்த மாதிரிச் சொல்லி விட்டு எழுந்து செல்ல, சஞ்ஜீவும் எழுந்து அவள் பின்னே சென்றான்.

சஞ்ஜீவ் அமைதியாக வர, பாரதி, "என்ன, ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிற? நான் சொன்னது தப்பா?" என்று கேட்க,

"நீ சொன்னது தப்பு இல்லை. ஆனால்... அதை வேற மாதிரிச் சொல்லி இருக்கலாம்..." என்றான் சஞ்ஜீவ்.

"சொல்லி இருக்கலாம்தான். ஆனால், நான் இப்படிப் பேசலைன்னா... அவன், ஏன் உனக்கு என்னைப் பிடிக்கலை? அப்படின்னு பின்னாடியே சுத்துவான். ஆனால்... இனிமே பாரு... அவன் என் பக்கம் கூட தலை வெச்சுப் படுக்க மாட்டான்..." என்றாள் உறுதியாக.

சஞ்ஜீவ் பதில் சொல்லவில்லை. ஆனால், அவன் சிரிப்பை அடக்குவதைப் பார்த்து, பாரதி, "எதுக்கு நீ சிரிக்கிறே...?" என்று கேட்டாள்.

"ம்ம்... சொல்லுவேன்... ஆனால், நீ என்னைத் திட்டக் கூடாது," என்று சஞ்ஜீவ் பயந்த மாதிரி நடிக்க,

பாரதிக்கு, அவன் ஏதோ தன்னைக் கிண்டல் செய்யப் போகிறான் என்று நன்றாகப் புரிந்தது. "சரி, பரவாயில்லை. சொல்லு..." என்றாள்.

"ஆளு ஒல்லியா, வெள்ளையா இருக்கிறதைப் பார்த்ததும் ஆசைப்பட்டு வந்துட்டான். ஆனால்... கூட இருந்து பார்த்தாத் தெரிஞ்சிருக்கும்..." என்று சஞ்ஜீவ் முடிக்காமல் இழுக்க,

பாரதி, "என்னது...?" என்று புரியாமல் பார்க்க, அவள் எதிரில் நெருங்கி நின்றவன், அவள் கண்களைப் பார்த்து, "நீ பொண்ணு இல்லை, பையன்னு..." என்று சொல்லி விட்டுத் திரும்பி ஓட, பாரதி, அவனைத் துரத்திக் கொண்டு சென்றாள்.



ஆனால், சஞ்ஜீவ் வேகமாகச் சென்று விட்டதால், அவளால் அவனைப் பிடிக்க முடியவில்லை.

சைக்கிள் ஸ்டாண்ட் வந்தவள், அங்கே இன்னும் சஞ்ஜீவ் பைக் நிற்பதைப் பார்த்து, அதன் அருகில் சென்று, இரண்டு சக்கரத்திலும் இருந்த காற்றை இறக்கி விட்டுச் சென்றாள்.

பாரதி சைக்கிளோடு வெளியே வந்த போது, சஞ்ஜீவ் உள்ளே நுழைந்தான். சஞ்ஜீவ் ஓரக் கண்ணில் பாரதியைப் பார்க்க, அவள் அவனைப் பார்த்து முறைக்காமல், சிரித்து விட்டுச் செல்ல,

சஞ்ஜீவ், 'ஹப்பாடா... கோபம் இல்லை போல இருக்கு...' என்று நினைத்து, விசில் அடித்துக் கொண்டே சென்று வண்டியை எடுக்க, அப்போதுதான் அவனுக்குப் பாரதி ஏன் தன்னைப் பார்த்துச் சிரித்தாள் என்று புரிந்தது.

'ராட்சசி... காத்தைப் பிடுங்கி விட்டுட்டா...' என்று புலம்பிக் கொண்டே, வண்டியைத் தள்ளிக் கொண்டு மெக்கானிக் கடைக்குச் சென்றான்.

மறுநாள் காலை சஞ்ஜீவைப் பார்க்கப் பயந்து கொண்டு, பாரதி அவனுக்கு முன்பே சென்று ஸ்டாண்டில் சைக்கிளை விட்டு விட்டு ஸ்டேஷன் சென்றாள். சஞ்ஜீவ் அவளுக்குப் பின்னாடியே வந்து, அவனும் அவள் ஏறிய டிரெயினில்தான் ஏறினான்.

டிரெயின் கிளம்பியவுடன்தான் பாரதிக்கு நினைவு வந்தது... நேற்று அவள் பையைத் துவைக்கப் போட் டிருந்தாள்.

அதனால் இன்று வேறு பை கொண்டு வந்திருந் தாள். துவைக்கப் போட்ட பையில்தான் சீசன் டிக்கெட் இருக்கிறது. 'ஐயோ! இப்போ பையில டிக்கெட் இல்லை. டி.டி.ஆர். வந்தா மாட்டினோம். ஃபைன் கட்டக் கூட காசு இல்லை...' என்று நினைத்துப் பயந்தவள், 'அடுத்த ஸ்டேஷன் வந்ததும், இறங்கிச் சென்று டிக்கெட் வாங்கி விடலாம். ஆனால், அதுக்குள்ள டி.டி.ஆர். கிட்டே மாட் டிக்கக் கூடாது. கடவுளே...' என்று மனதிற்குள் வேண்டிக் கொண்டே இருந்தாள்.

அடுத்த ஸ்டேஷன் வந்ததும், பாரதி வேகமாக இறங்கிச் செல்ல, சரியாக டி.டி.ஆர். அவள் ஏற வேண்டிய படியின் அருகேயே நின்று கொண்டிருந்தார்.

பாரதி பயந்து விட்டாள். 'இன்னைக்கு நல்லா மாட்டி னோம்... மானம் போகப் போகுது..." என்று நினைக்க, அப்போது அவள் பின்னே, "பாரதி... இங்கே எதுக்கு இறங்கினே...?" என்று சஞ்ஜீவின் குரல் கேட்டது.

பாரதி அவனிடம் திரும்பி, "சீசன் டிக்கெட்டை வீட்டிலேயே விட்டுட்டேன்... அதுதான் டிக்கெட் எடுக்கப் போறேன். ஆனால், அங்கே டி.டி.ஆர். இருக்கார்..." என்று பயந்து கொண்டே சொல்ல,

சஞ்ஜீவ், "நீ கூடப் பயப்படுவியா...?" என்று சிரித்துக் கொண்டே கேட்டவன், அவளை வந்த வழியே திரும்ப



அழைத்துக் கொண்டு சென்று, அங்கிருந்த பெஞ்சில் உட்கார வைத்து விட்டு, "நீ இங்கேயே இரு... நான் போய் டிக்கெட் எடுத்திட்டு வரேன். டி.டி.ஆர். கேட்டா, பிரெண்டுக்காக வெயிட் பண்றேன்னு சொல்லு... பயப் படாதே!" என்று சொல்லி, அவளிடம் தன் பையையும் கொடுத்து விட்டுச் சென்றான்.

சஞ்ஜீவ் டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்ததும், இருவரும் அடுத்த டிரெயினுக்காக நின்றனர்.

டிரெயின் வந்ததும் பாரதி மகளிர் பெட்டியில் ஏற, சஞ்ஜீவ் அதற்கு அடுத்து இருந்த பெட்டியில் ஏறினான். டிரெயின் கிளம்பப் போகும் போது வேகமாக வந்த பாரதி, "சஞ்ஜீவ்... தேங்க்ஸ் சொல்ல மறந்துட்டேன்..." என்று சொல்ல... சரியாக டிரெயினும் கிளம்பி விட்டது.

இருவரும் டென்ஷன் ஆக, சஞ்ஜீவ், "இதிலேயே ஏறு பாரதி..." என்று அவளுக்குக் கை கொடுக்க, பாரதியும் அவன் கைப்பிடித்து உள்ளே ஏறி விட்டாள்.

பாரதி ஏறியதும் டிரெயின் வேகமெடுத்தது.

இருவருக்கும் உட்கார இடம் இல்லை. அதனால் கதவின் அருகிலேயே நின்றனர்.

சஞ்ஜீவ், "இன்னைக்கு நீ எல்லாமே ஏடாகூடமாப் பண்றே பாரதி... ஒழுங்கா பார்த்து காலேஜ் போ..." என்று அக்கறையாகச் சொல்ல, பாரதி, "சரி..." என்றாள்.

பாரதி, அவள் ஸ்டேஷன் வந்ததும், "பை... தேங்க்ஸ் சஞ்ஜீவ்..." என்று சொல்லி விட்டு இறங்க, சஞ்ஜீவ்,

'இன்னைக்காவது திரும்பிப் பார்ப்பாளா...?' என்று பார்க்க, பாரதி எப்போதும் போல் திரும்பிப் பார்க்காமல் சென்றாள்.

சஞ்ஜீவ் மனதிற்குள், 'திரும்பிப் பார்த்தால் இவ கெத்து குறைந்திடுமே...' என்று திட்டிக் கொண்டிருந்தான்.

சஞ்ஜீவின் அலுவலகம் வந்து விட்டதால், அவன் தன் கடந்த காலத்தில் இருந்து, நிகழ் காலத்திற்கு வர வேண்டிய கட்டாயம். இவர்களின் நட்பு, காதலாக மாறியதா என்று பிறகு பார்ப்போம்.

**ஷ**க்தி ஞாயிறு அன்று பெண் பார்க்கச் சென்னைக்குச் செல்வது என்று முடிவானதும், அவன் மட்டும் ஒரு நாள் முன்பாகவே பொள்ளாச்சியிலிருந்து கிளம்பினான். அவன் சென்னையில்தான் படித்தான்.

அதனால், அவனுடைய நண்பர்களைச் சந்திக்கப் போவதாகச் சொல்லி, ஒரு நாள் முன்பாகவே சென்னை வந்தான்.

## 3

**அ**ன்று சனிக் கிழமை. காலை வேலைக்குக் கிளம்பும்போதே பாரதி, 'இன்று வரத் தாமதம் ஆகும்...' என்று சொல்லி விட்டுத்தான் சென்றாள்.

வத்சலா, மறுநாள் பாரதியைப் பெண் பார்க்க வருவதால், தேவையான சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்.



தான்யாவிற்கு அன்று அலுவலகம் இல்லை. அதனால் அவள் வீட்டில்தான் இருந்தாள். தன் அம்மாவின் முன் சென்றால், அவர் ஏதாவது சொல்லி விடுவாரோ என்று பயந்து, மொட்டை மாடியில் சென்று அமர்ந்து இருந்தாள்.

அவளுடைய அத்தை வனிதா கீழே இருந்து, "தான்யா... கீழே வா..." என்று குரல் கொடுக்க, தான்யா இறங்கிக் கீழே சென்றாள்.

"வெயில்ல மொட்டை மாடிக்கு எதுக்குப் போனே...? நாளைக்குப் பாரதியைப் பொண்ணு பார்க்க வர்றாங்க. அம்மாவுக்குத் துணையா வேலை செய்யலாம் இல்ல..." என்றார் வனிதா.

"பாரதியாவது கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இருக்கட்டும். நான்தான் ராசி இல்லாதவ... அதனால்தான் ஒதுங்கி இருக்கேன்..." என்று தான்யா விரக்தியாகப் பேச, அதைக் கேட்டு வத்சலா, வனிதா இருவருமே அதிர்ந்தனர்.

"இதெல்லாம் என்ன பேச்சு தான்யா...?" என்று வனிதா அதட்ட,

"உண்மைதானே அத்தை... இப்பல்லாம் அம்மா கூட என்னோட சரியாப் பேசுறது இல்லை. அப்புறம் நான் எப்படி நினைக்கிறது...?" என்று தான்யா கண்களில் நீருடன் சொல்ல, வத்சலா வாய் விட்டு அழுதார்.

தான்யாவும், வனிதாவும் வேகமாக வத்சலாவின் அருகே செல்ல, "என்னால உங்களுக்குக் கஷ்டம்.

என்னைப் பார்த்துத்தான் பாரதி, கல்யாணம்னாலே வேண் டாம்னு சொல்றா... சாரிம்மா... என்னால அங்கிருக்க முடி யலை..." என்று தான்யாவும் அழ,

"அழாதே தான்யா... அம்மாவுக்கு உன் மேலே கோபம் இல்லை... உன் வாழ்க்கை இப்படி ஆயிடுச் சேன்னு வருத்தம்தான். நான் உன்னைத் திட்டினா... நீ திட்டு வாங்கக் கூடாதுன்னு பாரதி இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துப்பா... அதனாலதான் அவ முன்னாடி உன்னைக் கோபமாகப் பேசினேன். இந்த அம்மாவை மன்னிச்சிடு தான்யா..." என்று வத்சலா மகளைக் கட்டிக் கொண்டு அழுதார்.

"போதும், ரெண்டு பேரும் மாத்தி மாத்தி அழுதது. நாளைக்கு வீட்ல விசேஷத்தை வெச்சிக்கிட்டு ஆளுக்கு ஒரு பக்கம் அழுதா நல்லாவா இருக்கு... போய் முகத் தைக் கழுவிட்டு வேலையைப் பாருங்க..." என்று வனிதா இருவரையும் அதட்ட, இருவரும் சென்று முகம் கழுவி வந்தனர்.

வனிதா அவர்களுக்குக் காபி கொண்டு வந்து கொடுத்தவர், தனக்கும் ஒன்று எடுத்துக் கொண்டு ஹாலில் அமர்ந்து, "போனது எல்லாம் போகட்டும். பாரதிக்கு இந்த இடம் நல்லபடியா அமைஞ்சிட்டா... அடுத்து தான்யாவுக்கும் ஒரு நல்ல இடமாப் பார்த்துக் கல்யாணம் பண்ணலாம்," என்று சொல்ல, அதைக் கேட்டு வத்சலா முகம் மலர, தான்யாவின் முகம் இருண்டது.

அதைக் கவனித்த வனிதா, "நீ இப்படியே கால மெல்லாம் இருக்க முடியாது தான்யா. நடந்ததுல உன்



தவறு எதுவும் இல்லை. படணும்னு இருந்திருக்கு, பட்டிருக் கோம். நாட்ல இப்போ ரெண்டாம் கல்யாணம் எல்லாம் சர்வ சாதாரணமா நடக்குது. நீ ஏன் உன் வாழ்க்கையை வீணாக்குறே...?" என்றார்.

"நல்லாச் சொல்லு வனிதா. பொண்ணுங்க யார் துணையும் இல்லாம தனியா இருக்கிற மாதிரியா உலகம் இருக்கு. எங்களுக்குப் பின்னாடி இவங்களுக்கு யார் இருக்கா?

"பாரதி சொல்றா... அவளும், அவ அக்காவும் ஒருத்தருக்கு ஒருத்தர் துணையா இருப்பாங்களாம். அதுக்குக் கல்யாணம் செஞ்சுக்கணும்னு அவசியம் இல்லையாம்..." என்ற வத்சலா தொடர்ந்து,

"பிள்ளைங்க கல்யாணம் பண்ணிக் குடும்பம், குழந்தைங்கன்னு வாழ்ந்தாதானே கண்ணுக்கு நிறைவா இருக்கும். அதை விட்டுட்டு... நாங்க தனியா இருந்து சாதிப்போம்னு வாய் கிழியப் பேசினா நல்லாவா இருக்கு? வாயைக் கட்டி, வயித்தைக் கட்டிச் சேர்த்து வெச்சோமே... அதெல்லாம் யாருக்கு?" என்று சொல்லி வருந்த, அப்போது உள் அறையில் இருந்து இருமல் சத்தம் கேட்டது.

வத்சலா கண்ணைத் துடைத்துக் கொண்டு, "தான்யா... உங்க தாத்தா எழுந்திட்டார் போல. அவருக்குக் குடிக்கப் பால் கொண்டு போ. பாவம்... அவர் காதுல என்னென்ன விழுந்துச்சோ. நல்லா இருந்த மனுஷன், உன் விஷயம் கேட்டுப் படுக்கையில் விழுந்தவர்தான்... இன்னும் எழுந்துக்கலை..." என்று புலம்பியபடி உள்ளே செல்ல...

தான்யா பால் எடுத்துக் கொண்டு தன் தாத்தா இருக்கும் அறைக்குச் செல்ல, வனிதாவும் அவளுடன் தன் அப்பாவைப் பார்க்கச் சென்றார்.

பாரதி வேலை விட்டு வந்தவள், எப்பவும் போல் சாதாரணமாக இருந்தாள். வத்சலா, "ஹப்பா..." என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுத் தன் வேலையைக் கவனிக்கச் சென்றார்.

மறுநாள் பொழுது அழகாக விடிந்தது. மகாகவி பாரதியின் பாடலை நம்ம பாரதி பாடினாள்.

நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி - எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்

வல்லமை தாராயோ
வல்லமை தாராயோ - இந்த
மானிலம் பயனுற வாழ்வதற்கே

வல்லமை தாராயோ - இந்த
மானிலம் பயனுற வாழ்வதற்கே (நல்லதோர்)

தசையினைத் தீச்சுடினும் - சிவ
சக்தியைப் பாடும் நல் அகம் கேட்டேன்

நசையறு மனம் கேட்டேன் - நித்தம்
நவமெனச் சுடர் தரும் உயிர் கேட்டேன்



அசைவறு மதி கேட்டேன் - இவை
அருள்வதில் உனக்கேதும் தடையுள்ளதோ

இவை
அருள்வதில் உனக்கேதும் தடையுள்ளதோ

நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ

என்று பாரதி பாடி முடிக்க, அவள் வீட்டில் எல்லோரும் அவளைப் பெருமையாகப் பார்த்தனர். சஞ்ஜீவ், பாரதியின் பாடலைக் கேட்டபடி உற்சாகமாகக் கிளம்பி, வேலை விஷயமாக வெளியே சென்றான்.

காலை பத்து மணிக்கு மேல், ஷக்தி தன் பெற்றோர் மற்றும் அக்கா, அண்ணியுடன் பெண் பார்க்க வந்தான்.

ஷக்தி சராசரி உயரத்தில், சிவந்த நிறமும், களையான முகத்துடனும் பார்க்க அழகாக இருந்தான். அவனைப் பார்த்ததும், பாரதியின் வீட்டில் அனைவருக்கும் மிகவும் பிடித்தது.

ஷக்தியின் அம்மா எழுந்து உள்ளே பாரதி இருந்த அறைக்குச் செல்ல, அவரைப் பாரதியின் அத்தை வனிதா, "வாங்க..." என்று உள்ளே அழைத்து, பாரதியின் அருகே கட்டிலில் அமர வைத்தார்.

அவர் பாரதியைப் பார்த்து லேசாகச் சிரிக்க, பாரதியும் கஷ்டப்பட்டுச் சிரித்தாள்.

"உனக்கு ஒரு அக்கா இருக்குன்னு சொன்னாங்களே..." என்று அவர் கேட்க, பாரதி தயக்கத்துடன் தன்

அத்லதையைப் பார்க்க, “பக்கத்து ரூம்ல இருக்கா...” என்றார் வனிதா.

“கொஞ்சம் அவளைக் கூப்பிடுங்களேன்... நான் அவளைப் பார்க்கணும்...” என்று ஷக்தியின் அம்மா கேட்டதும், அவரை ஆச்சர்யமாகப் பார்த்துக் கொண்டே சென்ற வனிதா, தான்யாவை அழைத்து வந்தார்.

தான்யா தயங்கிக் கொண்டே உள்ளே வர, அவளைப் பார்த்துச் சிரித்த விஜயா, அவளைத் தன் அருகில் அமர்த்திக் கொள்ள, பாரதியும் வனிதாவும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர் தான்யாவிடம், “இப்போது என்ன செய் றேம்மா...?” என்று அக்கறையாகக் கேட்க, தான்யாவும் தான் வேலைக்குச் செல்வதாகச் சொன்னாள்.

அப்போது வெளியே இருந்து பெண்ணை அழைத்து வரச் சொல்லிக் குரல் கேட்க, விஜயா, தான்யாவிடம், “நீயே உன் தங்கையை அழைச்சிட்டு வா...” என்று சொல்லி விட்டு வெளியே சென்றார்.

வெளியே வந்த தன் அம்மாவின் முகத்தை ஷக்தி ஆவலாகப் பார்க்க, அதில் நிறைந்த புன்னகை இருந்தது. ஷக்தி திரும்பித் தன் அப்பாவைப் பார்க்க, அவர் அவனைப் பார்த்துத் தலை அசைத்தார்.

தான்யா, பாரதியுடன் செல்லத் தயங்கினாள்.

வனிதா, “அவங்கதான் சொல்றாங்கல்ல...” என்று அவள் தலையிலும் மல்லிகைப் பூ வைத்து விட்டவர்,



“ரெண்டு பேரும் போங்க...” என்று பாரதியையும் தான்யாவையும் வெளியே அனுப்பினார்.

தான்யாவும் பாரதியும் ஹாலுக்கு வர, ஷக்தி நிமிர்ந்து பாரதியைப் பார்த்தவன், அருகில் நின்ற தான்யா வைப் பார்த்து முகம் மலர்ந்து புன்னகைக்க, அவள், பதிலுக்குச் சிரிப்பதா வேண்டாமா என்று குழம்பினாள்.

அதைப் பார்த்த ஷக்தியின் முகத்தில் இருந்த புன்னகை மேலும் விரிந்தது. பாரதி நிமிர்ந்து ஷக்தியைப் பார்க்கவே இல்லை.

அவள், கடமையே என்று ஹாலில் அமர்ந்து இருந்தாள்.

ஷக்தியின் அக்காவும், அண்ணியும் பாரதியைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் குடைய... அவள் எரிச்சலை அடக்கிக் கொண்டு பதில் சொன்னாள்.

தான்யா அவர்களிடம் பாரதியைப் பற்றிப் பெருமை யாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் பேசுவதையே ஷக்தி பார்த்துக் கொண்டிருந்தான். எதேச்சையாக ஷக்தி யைப் பார்த்த தான்யா, அவனின் பார்வையில் திடுக் கிட்டாள். இவன் ஏன் பாரதியைப் பார்க்காம... என்னையே பார்க்கிறான் என்று நினைத்தவளுக்குக் கோபம் வந்தது.

இந்த ஆண்களில் நல்லவங்களே இல்லையா! தங்கையைப் பெண் பார்க்க வந்துட்டு... அக்காவைப் பார்க்கும் இவனைப் பாரதி கல்யாணம் செய்து கொண்டால்... அவள் வாழ்க்கை நன்றாக இருக்குமா... என்று அவள் கண்டதையும் நினைத்து வருந்த...

அவள் முக மாற்றத்தில் இருந்தே... அவள் நினைப்பதைப் புரிந்து கொண்ட ஷக்தி, தன் தந்தையைப் பார்க்க... அவர், "சரி. நாங்க கிளம்புறோம்..." என்றார்.

அவர்கள் கிளம்புகிறோம் என்றதும், வத்சலா - ஸ்ரீனிவாசன் இருவரின் முகமும் வாடியது. பெண் பார்த்து விட்டு எதுவுமே சொல்லாமல் கிளம்பினால்... என்ன வென்று நினைப்பது என்று நினைத்தவர்கள், அதை வெளியே சொல்ல முடியாமல் நின்றனர்.

ஷக்தியின் வீட்டினர்... பாரதி வீட்டினரிடம் விடை பெற்றுக் கிளம்ப... ஷக்தி பாரதியைப் பார்த்து, "வரேன்..." என்றவன், அருகில் நின்ற தான்யாவைப் பார்க்க... அவள் நிமிர்ந்து அவனைப் பார்க்கவே இல்லை.

அவள் முகம் கோபத்தில் சிவந்திருந்தது. மற்ற வர்கள் காருக்குச் செல்ல... ஈஸ்வரன், ஸ்ரீனிவாசனை அழைத்துக் கொண்டு தனியே சென்றவர்... அவரிடம் ஏதோ ரகசியமாகப் பேசினார். பேசி விட்டுக் காரின் அருகில் சென்றவர், "போன் பண்ணு, ஸ்ரீனி..." என்று சொல்லி விட்டுக் காரில் ஏறினார்.

அவர்கள் சென்றதும், உள்ளே வந்த ஸ்ரீனிவாச னிடம் வத்சலா, "என்ன சொன்னாங்க?" என்று ஆர்வ மாகக் கேட்க... ஸ்ரீனிவாசன், ஈஸ்வரன் சொன்னதைச் சொல்ல... அதைக் கேட்டு எல்லோரும் இன்ப அதிர்ச்சியில் உறைந்தனர்.

சஞ்ஜீவ் மதியம் மூன்று மணி போல்தான் வீட்டுக்கு வந்தான். பசியில் இருந்ததால் நேராகச் சாப்பிட அமர்ந் தான். அவன் சாப்பிட்டு முடிக்கும்போது... அவன் அம்மா ராதா, "இன்னைக்குப் பாரதியைப் பெண் பார்க்க வந் தாங்க..." என்று சொல்லி முடிக்கவில்லை.



சஞ்ஜீவ், தன் கையை உதறிக் கொண்டு வேகமாக எழுந்தவன், கையைக் கழுவி விட்டு நேராகப் பாரதி வீட்டுக்குச் செல்ல... சஞ்ஜீவ்வின் அம்மாவும், அப்பாவும் அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

சஞ்ஜீவ் சென்று, பாரதியின் வீட்டு அழைப்பு மணியை அடிக்க... தான்யா தான் வந்து கதவைத் திறந் தாள்.

சஞ்ஜீவ் அவளிடம், "பாரதி எங்கே?" என்று கேட்க... தான்யா உள்ளே கை காட்டினாள்.

"பாரதி, வெளியே வாடி..." என்று சஞ்ஜீவ் சத்தம் போட... தான்யா அதிர்ந்தாள்.

இவன் எதுக்கு இப்படிச் சத்தம் போடுறான்... என்று நினைக்கும்போது சஞ்ஜீவ் மறுபடியும், "பாரதி, இப்ப நீ வெளியே வர்றியா... இல்ல... நான் உள்ளே வரட்டுமா?" என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே பாரதி வெளியே வந்தாள்.

பாரதி பட்டுப் புடவையில், தலை நிறையப் பூ வைத்து நின்றதைப் பார்த்த சஞ்ஜீவிற்கு ஆத்திரம் வர... நேராகச் சென்று பாரதியின் கழுத்தைப் பிடித்தவன், "உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தா... இன்னொருத்தன் வந்து உன்னைப் பெண் பார்க்க... அவன் முன்னாடி இப்படி நின்னிருப்ப...?" என்று சீற,

பாரதி அவன் கையை விலக்கியவள், "நின்னா என்ன தப்பு?" என்று அலட்சியமாகக் கேட்டாள்.

சஞ்ஜீவ், "என்ன தப்பு... உனக்கு எதுவும் தப்பு கிடையாது. நான் உன்னை விரும்புறேன்னு உனக்குத் தெரியாது...?" என்று கோபமாகக் கேட்க... பாரதி அமைதியாக இருந்தாள்.

சஞ்ஜீவ் போட்ட சத்தத்தில் அக்கம் பக்கம் இருந்தவர்கள் எட்டிப் பார்க்க... அப்போது கையில் சாமான்களோடு வீட்டுக்கு வந்த ஸ்ரீனிவாசன், வத்சலா மற்றும் வனிதா... அங்கே சஞ்ஜீவ் நிற்பதையும், அக்கம் பக்கம் இருப்பவர்கள் இவர்கள் வீட்டையே பார்ப்பதையும் பார்த்துக் குழம்ப...

சஞ்ஜீவ் நேராக ஸ்ரீனிவாசனைப் பார்த்து, "மாமா, நான் பாரதியை விரும்புறேன். தான்யாவை நினைச்சுத் தான் இத்தனை நாள் பேசாம இருந்தேன். ஆனா, இன்னைக்கு யாரோ வந்து பாரதியைப் பொண்ணு பார்த்துட்டுப் போய் இருக்காங்க. என்னால பாரதியை யாருக்கும் விட்டுத் தர முடியாது!" என்று அழுத்தமாகச் சொல்ல...

அதைக் கேட்டுப் பாரதியின் பெற்றோர் மட்டுமில்லை. சஞ்ஜீவ்வின் பெற்றோரும் அதிர்ந்தனர்.

அவர்கள் சஞ்ஜீவ் எதற்காகப் பாரதியின் வீட்டுக்குக் கோபமாகச் சென்றான் என்று பார்க்க வந்திருந்தனர்.

எல்லோரும் சிறிது நேரம் என்ன செய்வது என்று புரியாமல் நிற்க... ஸ்ரீனிவாசன், "நீ பாரதியை விரும்புற. ஆனா... பாரதி உன்னை விரும்புறாளா?" என்று கேட்க,



"அவளும்தான் என்னை லவ் பண்றா..." என்று சஞ்ஜீவ் உறுதியாகச் சொல்ல... பாரதி அதிர்ந்து போய் சஞ்ஜீவ்வைப் பார்த்தாள்.

ஸ்ரீனிவாஸ் பாரதியைப் பார்த்து, "சஞ்ஜீவ் சொல்றது உண்மையா... பாரதி?" என்று கேட்க,

இல்லை... என்று சொன்னால், எல்லோரின் முன்பும் சஞ்ஜீவ் தலை குனிய வேண்டி வரும் என்று பாரதி அமைதியாக இருந்தாள்.

இத்தனை நாள் சஞ்ஜீவ் கேட்கும்போது எல்லாம், 'நான் உன்னை லவ் பண்ணலை!' என்று சொன்னவள்... இன்று அவனை மற்றவர்கள் முன்பு விட்டுத் தர முடியாமல் அமைதியாக நிற்க... அது ஏன் என்று பாரதி யோசித்திருந்தால்... அவளுக்குத் தன் மனது புரிந்திருக்கும்.

பாரதி அமைதியாக நிற்பதைப் பார்த்ததும், எல்லோரும் சஞ்ஜீவ் சொல்வதுதான் உண்மை என்று நினைத்தனர்.

ஸ்ரீனிவாஸ் சஞ்ஜீவ்வின் பெற்றோரை வீட்டினுள் அழைக்க... அவர்களும் உள்ளே வந்து அமர்ந்தனர்.

"இன்னைக்குப் பெண் பார்க்க வந்தவங்க... அவங்க பையனுக்குத் தான்யாவைக் கேட்கிறாங்க..." என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டு இப்போது சஞ்ஜீவ் அதிர்ந்தான். அப்ப பாரதியைப் பெண் பார்க்க வரலையா... என்று நினைத்தவன்... திரும்பித் தான்யாவைப் பார்க்க... அப்போதுதான் கவனித்தான். அவள் முகம் அழுததால் வீங்கிச் சிவந்திருப்பதை.

ஸ்ரீனிவாஸ் சஞ்ஜீவ்வின் பெற்றோரிடம்... இன்று பாரதியைப் பெண் பார்க்க வந்ததில் இருந்து, நடந்த அனைத்தையும் சொல்லி... அவர்கள் தான்யாவை, அவர்கள் மகனுக்குத் திருமணம் செய்ய விரும்புகிறார்கள், அவர்கள் தான்யாவின் கடந்த காலத்தைப் பற்றிப் பெரிதுபடுத்தவில்லை என்றதும்...

சஞ்ஜீவ்வின் அப்பா, "நல்ல விசயம்தான். நல்ல படியா நடக்கட்டும்..." என்றார்.

சஞ்ஜீவ் சென்று தான்யாவின் கையைப் பிடித்துக் குலுக்கியவன், "ஐ அம் சோ ஹேப்பி ஃபார் யூ தான்யா..." என்று மகிழ்ச்சியுடன் சொல்ல... தான்யா லேசாகப் புன்ன கைக்க முயன்றாள்.

பாரதி சஞ்ஜீவ்வைப் பார்த்து முறைத்துக் கொண்டி ருந்தாள்.

சஞ்ஜீவ்வின் குணத்தை அறிந்த சுதாகரன், "நம்ம பசங்க விரும்புறேன்னு தெரிஞ்சதுக்கு அப்புறம் நாம இனி அவங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறது தான் நமக்கு மரியாதை..." என்று சொல்ல, ஸ்ரீனிவாசன் ஆமோதிப்பாகத் தலையசைத்தார்.

வத்சலா பாரதியைப் பார்த்து முறைக்க... ராதா சஞ்ஜீவ்வைப் பார்த்து முறைத்தார்.

ராதா, சஞ்ஜீவ்வைப் பெரிய இடத்தில் செய்து, நிறைய வரதட்சிணை வாங்க வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தார். அது எல்லாம் நிராசையான கோபம்.



வத்சலா பாரதி கல்யாணம் வேண்டாம் என்று சொன்னதுக்குச் சஞ்ஜீவ்வை விரும்பியதுதான் காரணமோ என்று நினைத்தார்.

இவர்கள் எல்லோரும் இப்படி ஆளுக்கொரு சிந்தனையில் இருக்க... அப்போது ஷக்தி அவன் பெற்றோருடன் உள்ளே நுழைந்தான்.

அவர்களைப் பார்த்ததும், ஸ்ரீனிவாசன் அவர்களை வரவேற்று அமர வைத்தார். ஷக்தியைப் பார்த்ததும் தான்யா உள்ளே செல்ல... பாரதியும் அவள் பின்னே சென்றாள்.

ஷக்தியின் அப்பா ஈஸ்வரன், "சொல்லு ஸ்ரீனி, கல்யாணத்தை எப்ப வச்சுக்கலாம்?" என்று கேட்டதும்,

ஸ்ரீனிவாசன் ஈஸ்வரனின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "என்னால இன்னும் நம்பவே முடியலை... நீங்க நல்லா யோசிச்சிட்டீங்களா...?" என்று பதிலுக்குக் கேட்க...

"நாங்க நல்லா யோசிச்சுத்தான் முடிவெடுத்தோம். எங்க எல்லோருக்கும் தான்யாவை ரொம்பப் பிடிச்சிருக்கு. அவளை நாங்க நல்லாப் பார்த்துப்போம்..." என்று சொல்ல... அதைக் கேட்டு ஸ்ரீனிவாஸும் வத்சலாவும் மிகவும் மகிழ்ந்தனர்.

ஈஸ்வரன் சஞ்ஜீவ்வின் பெற்றோரைப் பார்க்க... அப்போது ஸ்ரீனிவாஸ், "இவங்களை எங்களுக்கு ரொம்ப வருசமாத் தெரியும். எதிர் வீட்லதான் இருக்காங்க..." என்று சொல்லி விட்டுத் தயக்கமாக சஞ்ஜீவ்வின் அப்பாவைப் பார்க்க...

அவர், "நான் சுதாகரன். இவங்க என்னோட மனைவி ராதா... இவன் என் பையன் சஞ்ஜீவ் ஐ.பி.எஸ்..." என்று அறிமுகப்படுத்தியவர் தொடர்ந்து, "நாங்க எங்க பையனுக்குப் பாரதியைக் கேட்டு வந்திருக்கோம்..." என்று சொல்ல, அதைக் கேட்டு ஷக்தி குடும்பத்தினர் மிகவும் மகிழ்ந்தனர்.

வத்சலாவும், வனிதாவும் சமையல் அறைக்குச் சென்று எல்லோருக்கும் டிபன், காபி தயார் செய்தனர்.

ஈஸ்வரன், சுதாகரன் மற்றும் ஸ்ரீனிவாஸ் மூவரும் சேர்ந்து அமர்ந்து பேச... ராதாவும், ஷக்தியின் அம்மாவும் ஒரு பக்கம் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். ஷக்தி சஞ்ஜீவ்வைப் பார்த்துப் புன்னகைக்க... சஞ்ஜீவ் சென்று ஷக்தியின் அருகே அமர்ந்தான். இருவரும் ஒருவரோடு ஒருவர் கை குலுக்கி அறிமுகம் செய்து கொண்டனர்.

வனிதா தான்யாவையும், பாரதியையும் தேடிச் செல்ல... இருவரும் ஆளுக்கு ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தனர். வனிதா சென்று இருவரையும் முகம் கழுவித் தலை வாரிப் புடவை மாற்றச் சொல்ல... இருவரும் காது கேட்காதது போல் இருந்தனர்.

அப்போது உள்ளே வந்த வத்சலா... இருவரையும் பார்த்து, "எங்க கண்ணீரைப் பார்த்துக் கடவுள் மனசு வந்து கருணை காட்டினாலும், நாங்க பெத்த பெண்களுக்கு எங்க மேல இரக்கம் இல்லையே...!" என்றார், கண்ணீருடன்.

தாயின் கண்ணீரைப் பார்த்ததும், தான்யாவும், பாரதியும் எழுந்து தயாராகினர்.



தான்யாவும், பாரதியும் உடை மாற்றித் தயாரானதும், வனிதா இருவருக்கும் தலையில் பூ வைக்க... வத்சலா இருவர் கையிலும் டிபன் இருந்த தட்டுகளைக் கொடுத்து அனுப்பினார்.

பாரதி உஷாராகப் பெரியவர்களிடம் சென்று கொடுத்தாள். தான்யா வேறு வழியில்லாமல் ஷக்திக்கும், சஞ்ஜீவ்வுக்கும் கொடுத்தாள். அவள் யாரையும் நிமிர்ந்தே பார்க்கவில்லை.

ஷக்தி தான்யாவைப் பார்த்துக் கொண்டே டிபன் தட்டை எடுக்க... சஞ்ஜீவ் எடுக்காமல், "எனக்குப் பாரதி தருவா..." என்றான்.

அதைக் கேட்டு மற்றவர்கள் சிரிக்க... பாரதியும் வேறு வழியில்லாமல் சென்று சஞ்ஜீவ்வுக்கு டிபன் இருந்த தட்டைக் கொடுத்தாள். சஞ்ஜீவ் அவளைப் பார்த்துப் புன்னகைக்க... பாரதி அவனைப் பார்த்து முறைத்து விட்டுச் சென்றாள்.

அடுத்து சிறிது நேரம் சென்று தான்யாவும், பாரதியும் காபி தம்ளர்களைக் கொண்டு வந்தனர். இப்போது தான்யா ஷக்தியிடம் மட்டும் கொடுத்து விட்டுச் செல்ல... சஞ்ஜீவ், "தான்யா..." என்று அழைத்து, அவளிடம் இருந்தே காபி எடுத்துக் கொண்டான்.

ஷக்தி ஏனென்பது போல் பார்க்க... "காப்பியை விட, பாரதி ரொம்பச் சூடா இருக்கா..." என்றான் மெதுவாக.

ஷக்தி, "உங்க ஆளு மட்டுமில்லை... என் ஆளும் தான்..." என்றான்.

"கவலைப்படாதீங்க பிரதர்... கூல் பண்ணிடுவோம்..." என்றான் சஞ்ஜீவ், நம்பிக்கையாக. ஷக்தியும் நம்பிக்கை யோடு புன்னகைத்தான்.

இவர்களின் நம்பிக்கை கை கொடுக்குமா...? விருப்பம் இல்லாமல் மற்றவர்களுக்காகச் செயல்படும் தான்யாவும், பாரதியும் தங்கள் துணைகளின் அன்பைப் புரிந்து கொள்வார்களா...?

## 4

மறுநாள் சஞ்ஜீவ் ஜீப்பில் தன் அலுவலகம் செல்லும்போது... மொபைல் அழைத்தது. எடுத்துப் பார்த்தால்... பாரதி.

'ஐயய்யோ! இவகிட்ட மாட்டினோம் செத் தோம்...' என்று நினைத்தவன், வேண்டுமென்றே செல்லை எடுக்கவில்லை. ஆனால், பாரதியும் விடவில்லை. திரும்ப அழைத்தாள்.

சஞ்ஜீவ், 'இன் மீட்டிங். கால் யூ லேட்டர்' என்று மெசேஜ் அனுப்பினான். அதன் பிறகு பாரதி அழைக்க வில்லை. 'ஹப்பா... தப்பிச்சோம்டா சாமி...' என்று நினைத்துச் சந்தோஷப்பட்டான். மதிய உணவு நேரத்தில், பாரதி திரும்ப அழைத்தாள்.

சஞ்ஜீவ், இப்போது 'பிஸி' என்று மெசேஜ் அனுப்பினான்.

மதியம் இரண்டு மணியான போது... இதற்கு மேல் பாரதியிடம் பேசவில்லை என்றால் சந்தேகம் வந்து விடும் என்று நினைத்தவன்... அவள் வகுப்பில் இருப்பாள். அவளால் எடுத்துப் பேச முடியாது என்று தெரிந்தே வேண்டுமென்று அந்த நேரத்தில் அழைத்தான்.



அவன் எதிர்பார்த்தபடி பாரதி செல்லை எடுத்துப் பேசவில்லை. மாலை பாரதி அழைக்கும்போது திரும்ப... 'மீட்டிங்' என்று மெசேஜ் அனுப்பினான்.

பாரதிக்கு நன்றாகப் புரிந்தது. சஞ்ஜீவ் தன்னை வேண்டுமென்றே தவிர்க்கிறான் என்று. 'நான் ஏன் அன்னைக்கு அப்பா கேட்டபோது சும்மா இருந்தேன். அதுதான் அவனுக்குத் தைரியம். அவனுக்குப் பாவம் பார்த்து... கடைசியில் இப்ப நான் மாட்டிக்கிட்டேன்...' என்று நினைத்தாள்.

பாரதி வீட்டில் இரவு உணவு எல்லோரோடும் சேர்ந்து அமர்ந்து சாப்பிடும்போது... சஞ்ஜீவ் அழைக்க... பாரதி பல்லைக் கடித்தாள்.

'திமிரைப் பாரு... எப்ப போன் பண்றான்...' என்று மனதிற்குள் திட்டியவள்... 'பிஸி...' என்று மெசேஜ் அனுப்பி னாள்.

அவனுக்குத் தெரியும். அவளால் இப்போது பேச முடியாது என்று... சஞ்ஜீவ் சிரித்துக் கொண்டே செல்லை வைத்தான்.

அன்றிரவு சஞ்ஜீவ் கட்டிலில் படுத்துக் கொண்டு, பாரதியிடம் தன் காதல் சொன்ன தினத்தை நினைத்துப் பார்த்தான்.

சஞ்ஜீவ் இன்ஜினீயரிங் படிப்பை முடித்து விட்டு, முழு மூச்சாக சிவில் சர்வீஸ் பரிட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்தான். விடியற்காலை நாலு மணிக்கே எழுந்து படித்துக் கொண்டிருப்பான்.

முதல் சுற்றில் வெற்றி பெற்றதும், அவனுக்கு அடுத்தடுத்த தேர்வுக்குத் தயார் செய்யத்தான் நேரம் இருந்தது. அவனுக்கு வேறு எதைப் பற்றியும் யோசிக்க நேரம் இல்லை. சஞ்ஜீவ் முதல் முயற்சியிலேயே ஐ.பி.எஸ். தேர்வில் வெற்றி பெற்றான்.

இந்த இடைப்பட்ட நாட்களில் சஞ்ஜீவ்வும், பாரதியும் பார்த்துக் கொள்ளத்தான் செய்தார்கள். ஆனால்... படிப்பைப் பற்றி மட்டும்தான் பேசுவார்கள்.

சஞ்ஜீவ் ட்ரெய்னிங் சென்ற இடத்தில்.... அங்கே அஞ்சலி என்ற வட இந்தியப் பெண்ணைச் சந்தித்தான். அவளும் ஐ.பி.எஸ். ட்ரெய்னிங்கிற்காகத்தான் வந்திருந்தாள். அவள் சஞ்ஜீவ்வுடன் நன்றாகப் பேசிப் பழகினாள்.

ஒரு நாள் எல்லோரும் ஒரு பார்ட்டியில் இருந்த போது... அவள் சஞ்ஜீவ்விடம் காதல் சொல்ல... சஞ்ஜீவ், தனக்கு அந்த மாதிரி ஒரு எண்ணமே, அவள் மேல் இல்லை என்று சொல்லி மறுக்க...

"இவ்வளவு நாள் இல்லைன்னா என்ன? இனிமே நினைக்கலாமே..." என்று அஞ்சலி காதலாகக் கேட்ட போது,

சஞ்ஜீவ், "சாரி, அஞ்சலி. என் மனசுல வேற ஒரு பொண் இருக்கா..." என்று பட்டென்று சொல்லி விட்டான்.



மேலும் அங்கே இருக்க முடியாமல்... தன் அறைக்கு வந்தவன், அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான்.

நான் ஏன் அப்படிச் சொன்னேன்... என் மனசுல யாரு என்று யோசிக்கும் போது, அவனுக்குப் பாரதியின் முகம்தான் கண் முன் வந்தது.

பாரதியை அவனுக்குப் பிடிக்கும். ஆனால்... அது காதலா என்று எல்லாம் அவன் இதவரை யோசித்தது இல்லை.

அவனுக்குப் பாரதியைப் பார்க்கும்போது எல்லாம் மனதில் ஒரு பரவசம் எழும். ஆனால்... பாரதியின் பக்கமிருந்து அதற்கு எந்த விதமான பிரதிபலிப்பும் இல்லாததால்... அவனுக்கே இதுவரை அவள் மீது தனக்கிருப்பது காதல் என்று தெரியாமல் இருந்தது.

ஆனால்... இன்று அஞ்சலி காதலைச் சொன்னதும், தன் மனைவி என்ற இடத்தில்... அவனால் பாரதியைத் தவிர வேறு யாரையும் நினைக்க முடியாது என்று நன்றாகப் புரிந்தது.

சஞ்ஜீவ் காதலை உணர்ந்ததும், அவனுக்கு உடனே பாரதியுடன் பேச வேண்டும் போல் இருந்தது. மணி பார்க்க... மணி ஒன்பதரை. பாரதி ஒன்பது மணிக்கெல்லாம் தூங்கி விடுவாள். இனி, நாளைக்குத்தான் பேச முடியும் என்று நினைத்தவன், போனில் அவளிடம் காதலைச் சொல்வதை விட நேரில் சென்று சொல்வோம் என்று முடிவு செய்தான்.

பாரதி இப்போது பி.ஏ. முடித்து விட்டு பி.எட். படித்துக் கொண்டிருந்தாள். இன்னும் ட்ரெய்னில்தான் சென்று கொண்டிருந்தாள். ஆனால்... இப்போது சைக்கிளுக்குப் பதில் ஸ்கூட்டி.

அன்று காலேஜ் முடிந்து திரும்பி வந்தவள்... ரெயிலில் இருந்து இறங்கியதும், தூரத்தில் சஞ்ஜீவ் நிற்பதைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டாள்.

பாரதி முதல் வருடம் கல்லூரி முடித்தபோது, சஞ்ஜீவ் தன் பி.இ., கடைசி வருடப் படிப்பை முடித்திருந்தான்.

அவள் இரண்டாவது வருடம் கல்லூரி சென்றபோது, முதல் நாள் ரயில் நிலையத்தில், அவளையும் அறியாமல் அவள் கண்கள் சஞ்ஜீவ்வைத் தேடத்தான் செய்தன. பிறகு தான் அவளுக்குச் சஞ்ஜீவ் படிப்பை முடித்ததும், இனி அவன் வர மாட்டான் என்பதும் நினைவு வந்தது. அது அவளுக்குக் கொஞ்சம் ஏமாற்றமாகத்தான் இருந்தது.

இன்று திரும்பி சஞ்ஜீவ்வை அங்கே பார்த்ததும், பாரதி சந்தோஷப்பட்டாள். முகத்தில் புன்னகையுடன் சஞ்ஜீவ்வை நோக்கிச் சென்றாள். சஞ்ஜீவ்வும் பாரதியைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் முகத்தில் இருந்த மகிழ்ச்சி, அவனுக்கு நம்பிக்கையைக் கொடுக்க... அவன் புன்னகையுடன் அங்கேயே நின்றான்.

பாரதி அருகில் வந்ததும், "ஹாய் சஞ்ஜீவ்! எப்படி இருக்கீங்க?" என்று மரியாதையாகக் கேட்க... சஞ்ஜீவ் ஆச்சரியத்தில் புருவத்தை உயர்த்தினான்.



"என்ன மரியாதை எல்லாம் தர்ற? எப்பவும் வா, போன்னுதானே சொல்வ. இன்னைக்கு என்ன புதுசா?"

"நீங்க இப்ப ஐ.பி.எஸ். ஆச்சே..."

"பரவாயில்லை. நீ எப்பவும் போலவே கூப்பிடு."

"சரி, எப்ப வந்த? எதுக்கு இங்க வந்த?"

"ரெண்டு நாள் லீவ் கிடைச்சுது. அதுதான் வந்தேன். அப்புறம் உன்னோட பேசணும். அதுக்குத்தான் இங்கே வந்தேன்."

பாரதி அவனைக் கேள்வியாகப் பார்க்க... "காபி குடிக்கலாம், பாரதி..." என்று சஞ்ஜீவ் அங்கிருந்த கடைக்குச் செல்ல... பாரதி சென்று பெஞ்ச்சில் அமர்ந் தாள்.

சஞ்ஜீவ் காபி வாங்கி வந்ததும், இருவரும் அமைதி யாகக் குடித்தனர். சஞ்ஜீவ் அடிக்கடி தன்னையே பார்ப் பதைப் பாரதியும் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்.

இருவரும் காபி குடித்ததும், சஞ்ஜீவ் பாரதியின் கையில் இருந்த கப்பையும் வாங்கிச் சென்று குப்பைக் கூடையில் போட்டு விட்டு வந்து, அவள் அருகே அமர்ந் தான்.

பாரதி அவனையே பார்க்க... சஞ்ஜீவ் அவளைப் பார்த்துப் புன்னகைத்து விட்டு, "எனக்கு உன்னை ரொம்ப நல்லாத் தெரியும். உன் குணம், உன் பழக்கவழக்கம் எல்லாம் பிடிச்சிருக்கு. உன் கூடவே காலமெல்லாம் இருக்க ஆசைப்படுறேன். நாம கல்யாணம் பண்ணிப்

போமா...?" என்று தன் மனதைத் திறந்து கேட்டு விட... பாரதி முகம் மாறினாள்.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை என்பது அவள் முகத்தில் இருந்தே தெரிந்தது. அவள் பதில் சொல்லாமல் மௌனமாக இருக்க...

சஞ்ஜீவ் தொடர்ந்து, "நான் உன்னை லவ் பண்றேன், பாரதி... எனக்கே இப்ப கொஞ்ச நாள் முன்னாடிதான் தெரிஞ்சுது..." என்றான்.

பாரதி எதுவும் சொல்லாமல் அங்கிருந்து எழுந்து செல்ல... சஞ்ஜீவ் அவளது கை பிடித்து இழுத்தவன், "பதில் சொல்லிட்டுப் போ, பாரதி..." என்று அழுத்தமாகச் சொல்ல...

பாரதி திரும்ப அமர்ந்தவள்... அவன் கையைப் பார்த்து முறைக்க... சஞ்ஜீவ் அவளது கையை மெதுவாக விட்டான்.

"எனக்கு உங்க மேல, அந்த மாதிரி யெல்லாம் எதுவும் இல்லை..." என்றாள் பாரதி, எங்கோ பார்த்துக் கொண்டு.

"எனக்கும் அது தெரியும். நீ என்னை லவ் பண்ண வேண்டாம். ஆனா, நான் எங்க வீட்ல இருந்து உன்னைப் பெண் கேட்டு வர வைக்கிறேன். நீ அப்ப என்னை வேண்டாம்னு மட்டும் சொல்லாம இருந்தாப் போதும்."

"நீங்க வசதியானவங்க. உங்க வீட்ல இருந்து என்னைப் பெண் கேட்டு வர்றதெல்லாம் நடக்காது. நீங்க வீணா மனசுல ஆசையை வளர்த்துக்காதீங்க."



"அதை நான் பார்த்துக்கிறேன். நீ ஓ.கே. மட்டும் சொன்னாப் போதும். சரியா?"

"நான் எங்க அம்மா, அப்பா சொல்றதைத்தான் கேட்பேன். அவங்க உங்களைக் கல்யாணம் பண்ணிக்கச் சொன்னா... ஓ.கே. இல்லைன்னா இல்லை..." என்று பாரதி கறாராகச் சொல்ல...

'எல்லாம் என் நேரம். உன்னை லவ் பண்றேன் இல்ல... நீ எல்லாம் பேசுவ. உன்னை விட, உங்கப் பாவைச் சமாளிக்கிறது ரொம்ப ஈசி. நான் அவர்கிட்டயே பேசிக்கிறேன்...' என்று மனதிற்குள் நினைத்த சஞ்ஜீவ், அதைப் பாரதியிடம் சொன்னால் அவ்வளவுதான். அவள், உன்னை யாரு என்னை லவ் பண்ணச் சொன்னது என்று சண்டைக்கு வருவாள் என்று தெரியும்.

அது மட்டுமில்லை. பாரதிக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்றால்... உடனே பிடிக்கவில்லை என்று சொல்லி யிருப்பாள். அவளுக்குத் தன்னைப் பிடிக்கிறது. ஆனால்... அது அவளுக்கே தெரியவில்லை என்று சஞ்ஜீவ் நினைத்தான்.

சஞ்ஜீவ் அமைதியாக இருப்பதைப் பார்த்து, பாரதி என்னவென்று புருவத்தை உயர்த்திக் கேட்க, சஞ்ஜீவ் புன்னகையுடன், "ஓ.கே. நான் உனக்காகக் காத்திருப்பேன். அதை மட்டும் நீ ஞாபகம் வச்சுக்கோ..." என்றான்.

இருவரும் எழுந்து வீட்டுக்குச் சென்றனர். அந்தத் தடவை பாரதியை விட்டுக் கிளம்ப... சஞ்ஜீவ்க்கு ரொம்பக் கஷ்டமாக இருந்தது.

பழைய விசயங்களை நினைத்துக் கொண்டே... சஞ்ஜீவ் அப்படியே தூங்க... கனவில் பாரதி வந்து அவனை இம்சைப் படுத்தினாள்.

விடியற்காலையில் வீட்டிலிருந்து கிளம்புவது, இரவு தாமதமாக வருவது, பாரதி போன் செய்தால்... பிசியாக இருப்பது போல் நடிப்பது என்று இப்படியே... சஞ்ஜீவ் அந்த வாரம் முழுவதும், பாரதியுடன் பேசாமல் தட்டிக் கழித்து விட்டான்.

இங்கே மற்றொரு ஜோடியான ஷக்தி, தான்யா எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் அப்படியே இருந் தனர். ஷக்தி போன் செய்யும் போதெல்லாம் தான்யா எடுப்பதே இல்லை.

ஒரு வாரம்வரை பொறுத்த ஷக்தி, ஒரு நாள் தன் மருத்துவ மனையில் இருந்து அழைக்க... தான்யாவும் யார் என்று தெரியாமல் போனை எடுத்து விட்டாள்.

"தான்யா, நான் ஷக்தி. போனை வச்சுடாதே ப்ளீஸ்... நீ இப்ப பேசலைன்னா நான் நேரில் வருவேன். அதுக்கு ஓ.கே.ன்னா போனை வை!" என்று ஷக்தி மிரட்ட... தான்யா மௌனமாகக் காதில் போனை வைத்திருந்தாள்.

"உனக்கு என் மேல கோபமா... என்னைப் பிடிக்கலையா? எதுவா இருந்தாலும் பரவாயில்லை. சொல்லு!" என்று ஷக்தி சொன்னதும்,

"தங்கையைப் பெண் பார்க்க வந்துட்டு... அக்காவைப் பிடிச்சிருக்குன்னு சொன்னா... அதுவும் என்னைப் பற்றித் தெரிஞ்சே சொன்னா... நான் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறது?"



"முதல்ல ஒரு விசயம் தெரிஞ்சிக்கோ. நான் உன்னைத்தான் பெண் பார்க்க வந்தேன். அப்புறம் உன் கடந்த காலம் முடிஞ்ச விசயம். அதுக்காக எதிர்காலத்தைப் பாழாக்கிறது அர்த்தம் இல்லை..." என்று ஷக்தி தெளி வாகச் சொல்ல... தான்யா அதிர்ந்தாள்.

"நீங்க என்ன சொல்றீங்க...? நீங்க என்னைப் பெண் பார்க்க வந்தீங்களா?"

"ஆமாம். உன்னைத்தான் பார்க்க வந்தேன். உன் தங்கை எனக்கு அதுக்கு ரெண்டு நாள் முன்னாடியே போன் பண்ணி, எனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம் இல்லைன்னு சொல்லிட்டா..."

ஷக்தி சொன்னதைக் கேட்ட தான்யா மேலும் அதிர்ந்தாள்.

"அவ எதுக்கு அப்படிச் சொன்னா?" என்று தான்யா புரியாமல் குழம்ப...

"என் அக்கா லைஃப் செட்டில் ஆகாம, என்னால என்னைப் பற்றி யோசிக்க முடியாது. ஒருவேளை என் அக்கா இப்படியே தனியா இருந்தா... நானும் அவளுக்குத் துணையாக் கல்யாணம் பண்ணிக்காமலே இருந் துடுவேன்னு சொன்னா.

"அவ அப்படிச் சொன்னதும், இப்படி ஒரு அக்கா, தங்கையான்னு தோணுச்சு. அப்புறம் தான் எங்க அப்பாகிட்ட உன்னைப் பற்றி விசாரிச்சேன். அவர் சொன்னதைக் கேட்டதும், நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முடிவு பண்ணேன். போதுமா?"

ஷக்தி சொன்னதைக் கேட்டுத் தான்யா அமைதியாக இருந்தாள். அவளுக்குப் பாரதியை நினைத்துப் பெருமை யாக இருந்தது.

இருந்தாலும் அவளால் இன்னொரு திருமணத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியவில்லை. அதோடு பிடிக் கவும் இல்லை.

அதானல், "ஷக்தி, எனக்கு இப்ப இன்னொரு கல்யாணத்தைப் பற்றி நினைக்கத் தைரியமோ, தெம்போ இல்லை. என்னை விட்டுடுங்க... ப்ளீஸ். நீங்க வேற பொண்ணு பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோங்க..." என்று தான்யா கெஞ்சலாகச் சொல்ல...

"நீ ரொம்ப சுயநலவாதி தான்யா. உன் தங்கை, உன் பெற்றோர்... இவங்க கஷ்டத்தையெல்லாம் விட, உனக்கு உன்னோட விருப்பம்தான் முக்கியம். பாரதி அன்னைக்கு சஞ்ஜீவ்வை எப்படி முறைச்சிட்டு இருந்தா, பார்த்தே இல்ல...

"அவளுக்கு வந்த நல்ல வாழ்க்கையையும், அவ உனக்காகத்தான் ஏத்துக்கத் தயங்குறா... உனக்கு ஏன் இது புரிய மாட்டேங்குது? நீ உன் கல்யாணத்தை நிறுத்தினா... பாரதியும் அவளோட கல்யாணத்தை நிறுத் திடுவா..." என்ற ஷக்தி தொடர்ந்து, "நம்ம கல்யாணம் நல்லபடியா முடியட்டும். நான் உனக்கு வேண்டிய டைம் தரேன். உன் மனசு மாறினதும், நாம சேரலாம்.

"ஆனா, அதுக்காகக் கல்யாணம் வேண்டாம்னு சொல்லாதே. நான் சொல்றது எல்லாம் சொல்லிட்டேன்.



இனி முடிவெடுப்பது உன் இஷ்டம்..." என்று ஷக்தி போனை வைக்க... தான்யாவும் போனை அணைத்து விட்டுச் சென்று கட்டிலில் படுத்தாள்.

அவளுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. இந்த வீணாப் போன வினீத், என் வாழ்க்கையில் வந்ததற்கு முன்பே... இந்த ஷக்தி வந்திருக்கக் கூடாதா... என் வாழ்க்கை இப்படி ஆகிடுச்சே... என்று கண்ணீர் வடித்தபடி படுத்திருந்தாள்.

## 5

ஒரு வழியாகப் பாரதியின் கோபம் உச்சத்தை எட்டும் சமயம், சஞ்ஜீவ் அவள் வீட்டிற்கு வந்து, ஹால் சோபாவில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டு, வத்சலா கொடுத்த டிபனைச் சாப்பிட்டுக் கொண்டே... "சாரி பாரதி, நீ போன் செய்யும் போதெல்லாம் பேசவே முடியலை. ஒரே பிஸி. இப்ப சொல்லு... எதுக்குப் போன் பண்ணின?" என்று வீட்டில் எல்லோர் முன்பும் வைத்துக் கேட்க

பாரதிக்கு ஒரு உருட்டுக் கட்டையால்... இவன் மண்டையில் ஓங்கி அடித்தால் என்ன என்றுதான் தோன்றியது. பாரதி வேறு வழியில்லாமல் அமைதியாக அவனையே பார்த்துக் கொண்டிருக்க...

சஞ்ஜீவ், ஸ்ரீனிவாசனிடம், "மாமா, மண்டபம் நாம சொன்ன தேதியில கிடைச்சிடுச்சு. சமையல்காரர் கிட்ட உங்க நம்பர் குடுத்திருக்கேன். அவர் உங்ககிட்ட பேசு வார். மண்டபம் அலங்காரம் எல்லாம் பண்ண அங்கேயே

ஆள் இருக்காங்க. நமக்குப் பெருசா எந்த வேலையும் இல்லை.

"கல்யாணப் பத்திரிகை ப்ரூஃப் சரி பார்த்துக் கொடுத்தா... அடுத்த நாளே வந்திடும். அதைக் கொண்டு போய் எல்லோருக்கும் கொடுக்கிறதுதான் வேலை..." என்று நீளமாக விளக்கி, பாரதிக்கு மறைமுகமாகக் கல் யாணத்தை நிறுத்த முடியாது என்று புரிய வைத்தான்.

"பரவாயில்லை, சஞ்ஜீவ்! ஒரு வாரத்தில நீ எவ் வளவு வேலை பார்த்திருக்க..." என்று ஸ்ரீனிவாசன் பெரு மையாகச் சொல்ல...

"உங்களுக்கு நான்தானே மாமா செய்யணும். வேற யாரு செய்வா?" என்றவன், தொடர்ந்து... "அடுத்த வாரம் நிச்சயத்துக்கு... பாரதிக்கு நகையும், புடவையும் வாங்கச் சொல்லி அம்மா சொன்னாங்க. நான் பாரதியைக் கடைக்கு அழைச்சிட்டுப் போகட்டுமா?" என்று பணிவாகக் கேட்க..

ஸ்ரீனிவாசன் வத்சலாவைப் பார்க்க... அவர், "சரி..." என்றார்.

வத்சலா பாரதியை உடை மாற்றிக் கொண்டு, சஞ்ஜீவ்வுடன் செல்லச் சொன்னார்.

பாரதியும் சென்று உடை மாற்றி வர, சஞ்ஜீவ் அவளை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

இருவரும் காரில் செல்லும் போது, பாரதி அமைதி யாக வர... சஞ்ஜீவ், "என்ன பாரதி, எதுவும் பேச மாட் டேங்கிற... என் மேல கோபமா?" என்று கேட்டான்.



"என்ன பேசுறது... நான் சொல்லி இனி எதுவும் மாறப் போகுதா? எங்க அம்மா, அப்பாவே என்னிடம் உனக்கு இந்தக் கல்யாணத்தில் சம்மதமான்னு கேட்கலை. அவங்க கடமை முடிஞ்சாப் போதும்னு இருக்காங்க..." என்று பாரதி படபடவென்று பொரிய...

காரை ஓரமாக நிறுத்திய சஞ்ஜீவ், "எப்படிக் கேட் பாங்க? நான் நாம லவ் பண்றோம்னு சொன்னேன். நீயும் அதை மறுக்கலை. அப்ப அவங்க உனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமான்னு வேற கேட்பாங்களா...? ஆனா, உன்கிட்ட கண்டிப்பா கேட்டிருக்கணும். நீ அடிக்கடி உன் மனசை மாத்திக்கிறவதானே..." என்று சஞ்ஜீவ் நக்கலாகச் சொல்ல... பாரதி அவனை முறைத் தாள்.

"என்ன முறைக்கிற? உண்மை இல்லைன்னு சொல்லு... நான் உன்கிட்ட லவ் பண்றேன்னு சொல்லும் போது, நீ என்ன சொன்ன? உன்னோட அப்பா, அம்மா ஓ.கே. சொன்னா... சரின்னுதானே சொன்ன. அப்புறம் தான்யா திரும்பி வந்ததும்... என்னைத் திரும்பிக் கூடப் பார்க்கிறது இல்லை. ஏன்னு கேட்டா... உனக்கும், எனக்கும் ஒத்து வராதுன்னு சொன்ன...

"நானும் அக்கா விஷயத்துல கவலையா இருக்கேனு நினைச்சுப் பேசாம இருந்தேன். இப்ப தான்யாவுக்கும் கல்யாணம் ஆகப் போகுது. இப்பவும் உனக்கு நம்ம கல்யாணம் நடக்கிறதுல இஷ்டமில்லை. அதுதான் ஏன்னு எனக்குப் புரியலை..." என்று சஞ்ஜீவ் முடிக்க...

"நீ இவ்வளவு பேசுறியே... ஆமா, உங்க வீட்ல இருந்து ஏன் நிச்சயப் புடவை வாங்க யாரும் கூட வரலை?" என்று பாரதி மடக்க...

சஞ்ஜீவ், "நம்மையே செலக்ட் பண்ணச் சொன் னாங்க..." என்று சமாளித்தான்.

"சும்மா சமாளிக்காதே. உன் அம்மா, அப்பாவுக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம் இல்லை. அதனாலதான்... நான் என்ன உங்க அண்ணி மாதிரிப் பணக்காரியா? அவங்களை மாதிரி வசதியா இருந்தா... இந்நேரம் விழுந் தடிச்சு வந்திருப்பாங்க..." என்று பாரதி நக்கலாகச் சொல்ல...

அவள் சொல்வது உண்மை என்பதால் சஞ்ஜீவ் அமைதியாக இருந்தான்.

அவனின் பெற்றோர் இருவருக்கும் இந்தத் திரு மணத்தில் இஷ்டமில்லை. அதோடு அவன் பாட்டியும் சேர்ந்து கொண்டு வீட்டில் எந்நேரமும் ஒரே புலம்பல்தான்.

அவனின் அண்ணி எல்லோருக்கும் மேல். எப்போதும் சஞ்ஜீவ்வை ஒரு இகழ்ச்சியான பார்வைதான். அவள் ஏதோ ராஜ பரம்பரை மாதிரியும், பாரதி ஏதோ தாழ்ந்த நிலையில் இருக்கும் குடும்பத்தில் இருந்து வருவது மாதிரியும், எப்போதும் ஒரே அலட்டல்தான்.

"என்ன... அமைதியா இருக்க... உண்மைதானே! எதுக்கு இதெல்லாம்? உங்க குடும்பத்துக்கு ஏத்த மாதிரி இடத்தில நீ கல்யாணம் செஞ்சிக்கோயேன்..." என்று பாரதி சொல்ல...



சஞ்ஜீவ்வுக்கு மனதில் வலித்தது.

"அவங்க எல்லாம் என்ன நினைச்சா என்ன பாரதி? உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறது நான்... எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. அது போதாதா... நான் உன்னை நல்லாப் பார்த்துப்பேன்னு உனக்கு நம்பிக்கை இல்லையா...?" என்று சஞ்ஜீவ் பாரதியைப் பார்க்க...

"எனக்குக் கல்யாணத்தின் மீதே நம்பிக்கை இல்லை, சஞ்ஜீவ்! தான்யாவுக்குப் பார்த்துப் பார்த்து எப்படிக் கல்யாணம் செஞ்சோம். கடைசியில அவ நிலைமை பார்த்தியா என்ன ஆச்சுன்னு? இன்னும் தான்யா அந்த அதிர்ச்சியில இருந்து வெளியவே வரலை. அதுக்குள்ள அவளுக்கு இன்னொரு கல்யாணம்..." என்று பாரதி வருத்தப்பட...

"ஷக்தி ரொம்ப நல்லவர் பாரதி... தான்யா சந்தோசமா இருப்பா..." என்றான் சஞ்ஜீவ்.

"இப்படித்தான் அந்த வினீத்தையும் நினைச்சேன். நான்தான் அந்த வினீத் போட்டோ பார்த்துட்டு, தான்யா கிட்ட அவனைக் கல்யாணம் பண்ணிக்கச் சொன்னேன். அவ அப்பவே, 'அவனுக்கு மீசை இல்லை. வேண்டாம்'னு தான் சொன்னா...

"நான்தான் ஹிந்திப் பட ஹீரோ மாதிரி சூப்பரா இருக்கானு சொல்லி... ஒத்துக்க வச்சேன். நானே தான்யா வாழ்க்கை கெடக் காரணமாகிட்டேன்..." என்ற பாரதி அழுதாள்.

"அழாதே பாரதி! நீ நல்லதுதானே நினைச்சே... உனக்குத் தெரியுமா, இப்படி எல்லாம் நடக்கும்னு..." என்று சஞ்ஜீவ் பாரதியைச் சமாதானம் செய்ய...

"நான் அது மட்டும் செய்யலை. அவளுக்கு வந்த நல்ல வாழ்க்கையையும் கெடுத்தேன்..." என்று பாரதி அடுத்த குண்டைத் தூக்கிப் போட...

சஞ்ஜீவ், "இன்னும் என்ன செஞ்ச?" என்றான், பயந்து கொண்டே.

"ஒரு தடவை நான் மட்டும் கோவில் போயிட்டு வரும்போது... உன்னோட அண்ணன் வந்து, என்கிட்ட தான்யா கிட்ட குடுக்கச் சொல்லி ஒரு கிரீட்டிங்ஸ் கொடுத்தார். நான் என்னன்னு கேட்க... 'நான் தான்யாவை லவ் பண்றேன். இதை அவகிட்ட குடுத்துடு!'ன்னு சொன்னார்..." என்று பாரதி சொன்னதைக் கேட்டதும்...

சஞ்ஜீவ், 'டேய், அண்ணா... போயும் போயும் இவ கிட்ட போய் நீ லவ் பண்றேன்னு சொல்லித் தொலைப்பியா? இவ உன்கிட்ட என்ன டயலாக் பேசினாளோ...?' என்று மனதிற்குள் நினைத்தவன்...

"அதுக்கு நீ என்ன சொன்ன?" என்றான் ஆர்வமாக.

"நான் எங்க அக்காவுக்கு இதெல்லாம் பிடிக்காது. நீங்க உண்மையாவே லவ் பண்ணா... உங்க அம்மா, அப்பாவோட வந்து எங்க அக்காவைப் பொண் கேளுங்கன்னு சொன்னேன். உன் அண்ணனும் சரின்னு சொல்லிட்டுப் போயிட்டார். ஆனா, உன் அண்ணன் வரவே இல்லை. அவர் வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டார். தான்யாவுக்கும் வேற இடத்தில கல்யாணம் ஆயிடுச்சு.



"அன்னைக்கு நான் மட்டும் அவர் குடுத்த கிரீட்டிங்ஸை தான்யாகிட்ட குடுத்திருந்தா... ஒருவேளை அவங்க ரெண்டு பேரும் லவ் பண்ணிக் கல்யாணம் செஞ்சு சந்தோஷமா இருந்திருக்கலாம்..." என்றாள் பாரதி, சோகமாக.

"இப்ப சொல்லு லூசு... இதெல்லாம் அவங்க சொந்த விசயம். நீ எப்படி முடிவெடுக்கலாம்?" என்ற சஞ்ஜீவ், தொடர்ந்து, "சரி. நான் அன்னைக்கு உன்கிட்ட எங்க அப்பா, அம்மாவோட வந்து பொண்ணு கேட்கிறேன்னு சொன்னபோது, இதை நினைச்சுத்தான் அவங்க வர மாட்டாங்கன்னு சொன்னியா?" என்றதும்,

"ஆமாம். நீயும் உன் அண்ணன் மாதிரிதான்னு நினைச்சேன். ஆனா, நீ உன் அண்ணா மாதிரி இல்லை..." என்று பாரதி சொன்னபோது, அதைக் கேட்ட சஞ்ஜீவ்வால் சந்தோசப்பட முடியவில்லை.

பாரதி, தான் அவளைப் பெண் கேட்டு வர மாட்டேன் என்றுதான் நினைத்திருக்கிறாள்.

அவளுக்குத் தன் மேல் காதலோ... நம்பிக்கையோ இல்லை என்று நினைக்கும் போதே சஞ்ஜீவ்க்கு ரொம்பக் கஷ்டமாக இருந்தது.

பாரதிக்குச் சஞ்ஜீவ்வின் முகத்தில் இருந்தே... அவன் என்ன நினைக்கிறான் என்று புரிந்தது.

"சாரி சஞ்ஜீவ்! எனக்கு உன் மேல லவ்வெல்லாம் வரலை. ஆனா, உன்னை எனக்குப் பிடிக்கும். உங்க வீட்ல இருந்து வந்து பெண் கேட்டா... பார்ப்போம்னு இருந்தேன்.

"தான்யா திரும்பி வந்ததும், எங்க அக்கா ஒரு வேளை உங்க வீட்டுக்கு வந்திருந்தா சந்தோசமா இருந் திருப்பாளோ... அவளுக்குக் கிடைக்காத வாழ்க்கை எனக்கும் வேண்டாம்னுதான்... உன்கிட்ட வேண்டாம் விட்டுடுன்னு சொன்னேன்.

"ஆனா, அன்னைக்கு எல்லார் முன்னாடியும் எங்க அப்பா கேட்டதும், உன்னை விட்டுக் கொடுக்க முடியலை. அப்புறமா உண்மையைச் சொல்லலாம்னு நினைச்சேன். இவ்வளவு சீக்கிரமாக் கல்யாணம் நிச்சயம் ஆகும்னு எதிர்பார்க்கலை..." என்று பாரதி சொல்லி முடித்ததும், சஞ்ஜீவ் காரை எடுத்தான்.

சஞ்ஜீவ் அமைதியாகக் கார் ஓட்ட... பாரதி, "தான்யா வுக்குக் குழந்தை பிறக்கணும்னு நானும், அம்மாவும் எத்தனை கோவில் ஏறி இறங்கினோம் தெரியுமா! அவ எப்ப நல்ல செய்தி சொல்வானு ஆசையாக் காத்திருந் தோம். ஆனா அவ..." என்று பேச முடியாமல் கண் கலங்கிய பாரதி, தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"அவ சந்தோசமா வாழ ஆரம்பிச்சாத்தான் என்னால சந்தோசமா இருக்க முடியும். என்னால நீயும் எதுக்குக் கஷ்டப்படுற? நீ வேற நல்ல பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோ..." என்றாள்.



சஞ்ஜீவ் அவளைத் திரும்பிப் பார்த்தவன், ஒன்றும் சொல்லாமல் காரை ஓட்டினான்.

இருவரும் முதலில் புடவைக் கடைக்குச் சென்றனர். சஞ்ஜீவ் பாரதியிடம் பேசவே இல்லை. அவனே அவ ளுக்குக் கரும் பச்சையில் ஒரு புடவையைத் தேர்ந்தெடுத் தான். பின் நகைக் கடைக்குச் சென்றனர்.

சஞ்ஜீவ் அவளுக்கு நெக்லஸ், ஆரம், வளையல்கள், தோடு, மோதிரம் என்று வாங்க...

பாரதி, "என்ன இவ்வளவு வாங்குற?" என்று கேட்க... சஞ்ஜீவ் பதிலே சொல்லவில்லை.

அடுத்து அவளை அழைத்துக் கொண்டு ஹோட் டலுக்குச் சாப்பிடச் சென்றான். இருவருக்கும் உணவு ஆர்டர் கொடுத்து விட்டுப் பாரதியைப் பார்த்தவன், "எல் லோரும் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிறது இல்லை பாரதி... உங்க வீட்ல உனக்கு எப்படியும் கல்யாணம் பண்ணத்தான் போறாங்க. நீ வேற யாரையோ பண்ணிக் கிறதுக்கு என்னையே கல்யாணம் பண்ணிக்கோ.

"உங்க அக்கா சந்தோஷமா, ஷக்தியோட குடும்பம் நடத்த ஆரம்பிச்சிட்டானு தெரிஞ்ச பிறகு, நாம நம்ம வாழ்க்கையை ஆரம்பிக்கலாம். உனக்கு நான் சொல்றது புரியும்னு நினைக்கிறேன்.." என்று சஞ்ஜீவ் சொல்ல... பாரதி புரிந்தது என்று தலையாட்டினாள்.

அதன் பிறகு, சஞ்ஜீவ் அவளிடம் எதுவும் பேச வில்லை. அமைதியாகச் சாப்பிட்டான்.

இருவரும் வீட்டுக்கு வந்ததும், அவனும் பாரதியுடன் உள்ளே வந்து புடவை, நெக்லஸ் மற்றும் மோதிரத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, "மத்தது... நான் உனக்கு வாங்கினது. அதை எல்லோருக்கும் சொல்லணும்னு அவசியம் இல்லை..." என்று சொல்லி விட்டுச் சென்றான்.

அதாவது அவன் வீட்டில் சொல்ல வேண்டாமென்று அர்த்தம். அது பாரதி வீட்டில் எல்லோருக்கும் புரிந்தது.

சஞ்ஜீவ் அவன் வீட்டுக்குச் சென்றபோது, சரவணன் ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான். சஞ்ஜீவ் புடவை, நகைகளை எடுத்துச் சென்று தன் அம்மாவிடம் கொடுத்து விட்டு வந்து, சரவணனின் எதிரில் அமர்ந்தவன், "நீ தான்யாவை லவ் பண்ணியா?" என்று கேட்க... சரவணன் தலை குனிந்தான்.

சஞ்ஜீவ் சொன்னதைக் கேட்ட... அவனின் அம்மா ஹாலுக்கு வந்தார். சரவணனின் மனைவி வீட்டில் இல்லை. அவள் பெரும்பாலும், அவள் அம்மா வீட்டில் தான் இருப்பாள்.

"சொல்லு, லவ் பண்ணியா... இல்லையா?" என்று சஞ்ஜீவ் திரும்பக் கேட்க... சரவணன், "ஆமாம்!" என்றான்.

"அப்புறம் ஏன் அவளைக் கல்யாணம் பண்ணிக் காம... அண்ணியைக் கல்யாணம் பண்ண..." என்று சஞ்ஜீவ், சரவணனைப் புரியாமல் பார்க்க...

சரவணன் பதில் சொல்லும் முன், அவன் அம்மா முந்திக் கொண்டு, "அவன் என்ன உன்னை மாதிரிக் குடும்பத்துக்கு அடங்காதவனா... அவன் எங்ககிட்ட வந்து



கேட்டான். நாங்க வேண்டாம்னு சொன்னோம். அவனும் சரின்னு நாங்க சொன்ன பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டான். இப்ப ராஜா மாதிரி இருக்கான்..." என்றார் கர்வமாக.

"ராஜா மாதிரி இருக்கானா...!" என்று சிரித்துக் கொண்டே, சஞ்ஜீவ் நக்கலாகக் கேட்க... அவன் அம்மா வாயை மூடிக் கொண்டு உள்ளே சென்றார்.

சரவணனின் மனைவி சௌமியா, அவள் வீட்டிற்கு ஒரே பெண். அவள் அப்பா பிசினஸ் செய்கிறார். ரொம்ப வசதியான குடும்பம். தினமும் அவள் அப்பா கம்பெனிக்குச் செல்வதாகச் சொல்லி, காலையிலேயே வீட்டிலிருந்து கிளம்புபவள், பாதி நேரம் அவள் அம்மா வீட்டில் இருந்து விட்டு, இரவுதான் இங்கு வருவாள்.

வீட்டில் ஒரு வேலையும் செய்ய மாட்டாள். யாரை யும் மதிக்க மாட்டாள். அவளுடைய ஒரு வயதுப் பெண் குழந்தையையும் அவளோடு தூக்கிக் கொண்டு சென்று விடுவாள்.

"அம்மா, அப்பா பேச்சை மீற முடியாமத்தான் சௌமியாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். ஆனா... தான்யா அவ புருசன் வீட்டில இருந்து திரும்பி வந்த போது... உண்மையிலேயே நான் பட்ட வேதனைக்கு அளவே இல்லை.

"இனியாவது அவ வாழ்க்கை நல்லபடியா இருக் கட்டும். எனக்கு இல்லாத தைரியம், உனக்கு இருக்கிறதை நினைச்சு எனக்குச் சந்தோசம் தான்..." என்ற சரவணன்

எழுந்து அவன் அறைக்குச் செல்ல... சஞ்ஜீவ்வுக்கு ஆத்திர மாக வந்தது.

இவனோட கோழைத்தனத்தால இன்னைக்குத் தான்யா தான் கஷ்டப்படுறா... என்று நினைத்தவன், டி.வி.யை அணைத்து விட்டு, அவன் அறைக்குச் சென்றான்.

பாரதி மனதில் தனக்கென்று இப்போதைக்கு எந்த இடமும் இல்லை என்று நினைக்கும்போதே... சஞ்ஜீவ்வுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

ஆனால், அதற்காகப் பாரதியை அவனால் விடவும் முடியவில்லை. சஞ்ஜீவ் பாரதியின் காதலுக்காகக் காத்திருந் தான்.

பாரதி சஞ்ஜீவ்வின் காதலைப் புரிந்து கொள் வாளா...?

சஞ்ஜீவ் நினைப்பது போல், திருமணம் முடிந்தபின் பாரதியை விட்டு விலகியிருப்பது அவனுக்குச் சுலபமாக இருக்குமா...? பொறுத்திருந்து பார்ப்போம்.

## 6

சென்னை வடபழனி கோவிலில் வள்ளி, தெய்வானையுடன் உற்சவ மூர்த்தி யாக முருகன் காட்சி தரும் அழகைப் பார்க்கக் கண் கோடி வேண்டும்.

அந்தக் கோவிலில் இருக்கும் மண்டபத்தில் அக்னி வார்த்து, வாத்தியார் மந்திரம் சொல்ல... ஷக்தி மணமக



னாகப் பட்டு வேட்டி, பட்டுச் சட்டையில் அமர்ந்து, வாத்தியார் சொன்ன மந்திரங்களைத் திரும்பச் சொல்லிக் கொண்டி ருந்தான்.

அப்போது வாத்தியார், “பெண்ணை அழைச்சிட்டு வாங்கோ...” என்று குரல் கொடுத்ததும், வனிதாவும், ஷக்தியின் அக்கா ஷரண்யாவும் சேர்ந்து தான்யாவை அழைத்துக் கொண்டு வந்தனர்.

தான்யாவிற்கு மணமேடை அருகே வர... வர... கை, கால் எல்லாம் நடுங்க ஆரம்பிக்க... அதை உணர்ந்த வனிதா, அவள் கைகளை இறுகப் பற்றிக் கொண்டவர், “எல்லாம் உன்னோட நன்மைக்குத்தான் தான்யா... தைரியமா இரு...” என்று மெதுவான குரலில் சொல்லிக் கொண்டே உடன் நடந்து வந்தார்.

தான்யா மணமேடை அருகே வந்ததும், ஷக்தி அவளைத் திரும்பிப் பார்க்க... வெந்தயக் கலரில் மெரூன் பார்டர் வைத்த மடிசார் அணிந்து, எளிமையான அலங்காரத்தில் அவனின் மனதை நிறைத்தாள்.

தான்யா ஷக்தியின் அருகே அமர்ந்ததும், அவளுக்கு இதற்கு முன் நடந்த அவளின் திருமணம் நினைவுக்கு வர... அவள் கண்கள் கலங்க ஆரம்பித்தன.

அவளுக்கு ஒவ்வொரு விஷயமும் ஞாபகம் வர வர... ஏதோ நெருப்பின் மேல் அமர்ந்திருப்பதைப் போல் தவிப்பாக உணர்ந்தாள்.

தன்னால் இன்னொரு திருமணத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தோன்ற... அவள் எழுந்து

சென்றுவிடலாமா என்று நினைக்கும் போது... ஷக்தி அவளது கையைப் பிடித்து மெதுவாக அழுத்த... தான்யா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

நான் இருக்கேன் என்று பார்வையால் சொன்னவன், திரும்பிப் புன்னகையுடன் மந்திரத்தைச் சொல்ல... தான்யா சற்று அமைதி அடைந்தவள், சுற்றி எல்லோரையும் பார்த்தாள்.

தான்யாவின் பெற்றோர் மகிழ்ச்சியுடனும், கண்களில் ஆனந்தக் கண்ணீருடனும் நின்று கொண்டிருந்தனர். பாரதி ஒரு ஓரமாக நின்று தான்யாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் முகம் கடுகடுவென்று இருந்தது. விருப்பம் இல்லாமல் தன் அக்கா திருமணம் செய்து கொள்கிறாளே என்று அவளுக்குக் கவலை. எல்லோரும் தான்யாவை வற்புறுத்தித் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்ததால் வந்த கோபம்.

"பச்ச மிளகா! இந்தா... இந்த அட்சதையைக் கொண்டு போய் எல்லோருக்கும் கொடு..." என்று சஞ்ஜீவ் ஒரு தட்டைப் பாரதியின் முன்பு நீட்ட... பாரதி அவனைப் பார்த்து முறைத்தாள்.

சஞ்ஜீவ் தன் கைக்குட்டையை வைத்துப் பாரதியின் மூக்கின் மீதிருந்த வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டே, "எப்ப பாரு மூக்குக்கு மேல கோபம் வருது...!" என்று செல்லமாகக் கொஞ்ச...

பாரதி அவன் கையைத் தட்டிவிட்டு, அவன் மற்றொரு கையில் இருந்த தட்டை வாங்கிக் கொண்டு



சென்றாள். சஞ்ஜீவ் அவள் செல்வதைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஷக்தி - தான்யாவின் திருமணத்திற்கு நெருங்கிய உறவினர்களை மட்டும்தான் அழைத்திருந்தனர்.

சஞ்ஜீவ்வின் குடும்பத்தில் அவன் அண்ணி சௌமியாவைத் தவிர மற்ற அனைவரும் வந்திருந்தனர்.

பாரதி முதலில் தன் பெற்றோர் மற்றும் ஷக்தியின் பெற்றோரிடம் சென்று அட்சதையைக் கொடுத்து விட்டு... அடுத்து ஷக்தியின் அண்ணன், அண்ணியிடம் சென்று தட்டை நீட்ட... ஷக்தியின் அண்ணன் ஷிவா புன்னகையுடன் அட்சதையை எடுத்துக் கொள்ள... அண்ணி அலட்சியமாக அமர்ந்து இருந்தாள்.

அவள் பார்வையிலிருந்தே அவளுக்கு இந்தத் திருமணம் பிடிக்கவில்லை என்று தெரிந்தது. அதே போல் ஷக்தியின் அத்திம்பேர் ரவியின் பார்வையில் கேலி தெரிந்தது.

இதை எல்லாம் பார்க்கும்போது பாரதிக்கு இன்னும் கோபம் அதிகமாகியது. 'இவர்கள் வீட்டில் எல்லோருக்கும் திருமணத்தில் விருப்பம் என்று சொல்லிவிட்டு, பாரு இப்ப... ஒண்ணு ஒண்ணும் மூஞ்சியை எப்படி வச்சிருக்குன்னு...' என்று நினைத்து மனதிற்குள் பொருமிக் கொண்டே சென்றவள், அட்சதைத் தட்டை வைத்து விட்டு, ஷக்தியைப் பார்த்து முறைத்துக் கொண்டே சென்று தான்யாவின் அருகே அமர்ந்தாள்.

ஷக்திக்குத் தெரியும், பாரதிக்குத் தன் மேல் கோபமென்று. பெண் பார்க்கச் சென்ற முன் தினம், பாரதியைத்

தனியே சந்தித்துப் பேசும் போதுகூட, ஷக்தி அவன் மறு நாள் தான்யாவைப் பெண் பார்க்க வருவதைச் சொல்ல வில்லை.

பாரதியிடம், நான் உன்னைப் பெண் பார்த்து விட்டுப் பிடிக்கவில்லை என்று சொல்வதாகத்தான் சொல்லி யிருந்தான்.

ஷக்திக்குத் தான்யாவைப் பிடித்திருக்கிறது என்று தெரிந்த போது, ஒரு பக்கம் சந்தோஷம் இருந்தாலும், இவனும் எப்படிப்பட்டவனோ என்ற பயமும் பாரதிக்கு இருந்தது.

அந்த வினீத் வீட்டினர் கூட முதலில் நல்லவர்கள் மாதிரித்தான் தெரிந்தனர். பின்புதான் அவர்கள் வண்ட வாளம் தெரிந்தது.

ஷக்தி வீட்டில் வேறு எல்லோருக்கும் இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லை. தான்யா இவர்கள் வீட்டிற்குச் சென்று எப்படி இருப்பாளோ என்று அவ ளுக்குக் கவலையாக இருந்தது. இப்படிப் பாரதி தன் அக்காவைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க... வாத்தியார் தாலி இருந்த தட்டை எடுத்து ஷக்தியிடம் நீட்டினார்.

கெட்டி மேளம் ஒலிக்க, மங்கள வாத்தியம் முழங்க, ஸ்வாமி சந்நிதியில் ஷக்தி, தான்யாவின் கழுத்தில் பொன் மஞ்சள் தாலியைக் கட்டி, இனி இவள் என் மனைவி, என்னில் சரி பாதி. அவள் இன்பத்திலும் துன்பத்திலும் என்றென்றும் துணை இருப்பேன் என்று உறுதி எடுத்தான்.



திருமணம் முடிந்ததும், மணமக்கள் ஸ்வாமி தரிசனம் செய்து விட்டுக் கோவிலை வலம் வர... தான்யா ஏதோ சாவி குடுத்த பொம்மை மாதிரி நில் என்றால் நின்றாள். உட்காரு என்றால் உட்கார்ந்தாள். அவள் உடல் தான் இங்கிருந்தது. மனம் எதை... எதையோ நினைத்துக் குழம்பிக் கொண்டிருந்தது.

அவளுக்குத் தான் ஏதோ தவறு செய்து விட்டதைப் போலவே மனம் தவித்தது.

புதுமணத் தம்பதி தான்யாவின் வீட்டிற்கு வந்து பெரியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கியதும், எல்லோ ருக்கும் திருமண விருந்து மாடியில் பரிமாறப்பட்டது.

ஷக்தியின் வீட்டினர் மதிய உணவு முடிந்ததும், புதுமணத் தம்பதியை அழைத்துக் கொண்டு அவர்கள் ஊருக்குக் கிளம்ப... எல்லோரும் அவர்களுக்கு மகிழ்ச்சி யாக விடை கொடுத்தனர். ஆனால் தான்யா, பாரதி இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு அழுதனர்.

"இன்னும் நாலு நாள்தான். அப்புறம் உன்னோட கல்யாணத்துக்குத் தான்யா வந்திடுவா. அழாத..." என்ற வனிதா, அவர் கணவருடன் தான்யாவிற்குத் துணை யாகப் பொள்ளாச்சி செல்கிறார். இரு கார் மற்றும் ஒரு வேன் நிறைய உறவினர்களுடன், தான்யா தன் புகுந்த வீட்டிற்குக் கிளம்பினாள்.

ஷக்தியின் அண்ணன் கார் ஓட்ட... அவன் அருகில் அவன் மனைவி அருந்ததி அமர்ந்திருந்தாள். பின் இருக்கையில் ஷக்தியும், தான்யாவும் இருந்தனர்.

அவர்களுக்கு நடுவே ஷிவாவின் ஐந்து வயது மகன் தனுஷ் அமர்ந்திருந்தான்.

அருந்ததி தான்யாவுடன் பேச விரும்பவில்லை... அதனால் சாய்ந்து அமர்ந்து தூங்குவது போல் கண்மூடிக் கொள்ள... ஷக்தியும் ஷிவாவும் சிறிது நேரம் பேசிக் கொண்டு வந்தனர்.

சிறிது நேரம் சென்ற பிறகு ஷிவா சி.டி.யில் பாடலைப் போட... ஷக்தி திரும்பித் தான்யாவைப் பார்த் தான். அவள் கார் ஜன்னலில் தலை சாய்த்துக் கண் மூடி இருந்தாள்.

ஷக்தியின் பார்வை அவளை மேலும் ஆராய்ந்தது. தான்யா பயணத்துக்கு ஏற்ற வகையில் சில்க் காட்டன் புடவை அணிந்து, தலையைத் தளரப் பின்னிப் பூ வைத் திருந்தாள். அவளது இமைகள் மூடி இருந்தாலும் கரு விழிகள் அசைவதும், அவள் கண்கள் கண்ணீரால் நிரம்பி இருப்பதும் ஷக்திக்குத் தெரிந்தது.

அவனுக்குத் தான்யாவை நினைத்து வருத்தமாக இருந்தது. இவள் மனம் மேலும் காயப்படாமல், இவ ளுடைய மனதில் இருக்கும் ரணத்தை எப்படி அகற்றுவது என்று யோசிக்க ஆரம்பித்தான்.

அவன் வீட்டினரே தான்யாவை மேலும் காயப் படுத்தப் போவதை அறியாமல், பொள்ளாச்சியில் இருக் கும் அவர்கள் வீட்டிற்குச் சென்று சேர்ந்தபோது, நேரம் நள்ளிரவையும் த.ாண்டி இருந்தது.

அன்று இரவு தான்யா வனிதாவுடன் படுத்துக் கொண்டாள்.



மறுநாள் காலை தான்யாவிடம், அவளுடைய மாமியார் பூஜை ரூமில் விளக்கேற்றச் சொல்ல... தான்யாவும் சரி என்று சென்றாள்.

ஆனால்... அவள் அங்கு சென்று பார்த்தபோது, ஏற்கெனவே விளக்கு ஏற்றி இருந்தது.

தான்யாவுக்கு ஒரே குழப்பம். வேறு எதுவும் விளக்கு இருக்கிறதா என்று தேடிப் பார்க்க... அங்கே வேறு விளக்கு எதுவும் இல்லை. தான்யாவும் சாமி மட்டும் கும்பிட்டு விட்டு வெளியே வந்தாள்.

"தான்யா, விளக்கு ஏத்திட்டியாம்மா?" என்று அவள் மாமியார் கேட்க...

"ஏற்கெனவே விளக்கு ஏற்றி இருக்கும்மா..." என்று தான்யா சொன்னதும்,

அவள் மாமியார் யார் ஏற்றி இருப்பா... என்று யோசித்தவர், சுற்றிப் பார்க்க... சற்றுத் தள்ளி அருந்ததி அவள் மகனைப் பால் குடிக்க வைத்துக் கொண்டிருந் தாள்.

"அருந்ததி, நீதான் விளக்கு ஏத்தினியா...?" என்று விஜயா கேட்க...

"ம்..." என்று மட்டும் சொல்லி விட்டு, அருந்ததி எழுந்து உள்ளே சென்றாள்.

விஜயா, "அவ ஏதோ ஞாபகம் இல்லாம ஏத்தி யிருப்பா... நீ சாயங்காலம் ஏத்து..." என்றவர், அங்கே வந்த ஷக்தியிடம், "காபி குடிச்சதும் தான்யாவை அழைச் சிட்டுக் கோவிலுக்குப் போயிட்டு வா..." என்றார்.

காபி குடித்ததும், தான்யாவை அழைத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்றான்.

கோவில் அவர்கள் வீட்டின் அருகிலேயே இருப்ப தால்... இருவரும் நடந்தே சென்றனர்.

ஷக்தி தான்யாவிடம் பேச்சுக் கொடுக்க... தான்யா அவன் கேட்டதற்கு... ஆமாம், இல்லை என்று மட்டும் தலை ஆட்டிக் கொண்டிருந்தாள்.

இருவரும் தம்பதியாகச் சென்று பெருமாளையும், தாயாரையும் சேவித்து விட்டு வெளிப் பிராகாரத்தில் அமர்ந் தனர்.

அந்த இடம் மிகவும் ரம்யமாக இருந்தது. பெரிய தூண்களை வைத்த பிராகாரமும், கோவிலைச் சுற்றித் தென்னை மரங்களும், சற்றுத் தள்ளி நீர் ஓடையும் என்று அந்த இடம் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தது.

தான்யா சென்னையில் இதுபோல் எல்லாம் பார்த்தது இல்லை. அவள் அங்கிருந்த தூணில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்து, சுத்தமான காற்றையும், நீரின் சலசலப் பையும் ரசித்துக் கொண்டிருந்தாள்.

அதுவரை அவள் மனதில் இருந்த குழப்பம் நீங்கி, மனம் அமைதி அடைந்தது.

சற்றுத் தள்ளி அமர்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்த ஷக்தி, "விவசாயம்தான் எங்க முக்கியத் தொழில். அதோட கருப்பட்டியும் தயாரிக்கிறோம். இங்கே யும், கோயம்புத்தூர்லேயும் சில இடங்கள் வாங்கிப் போட் டிருக்கோம்.



"அண்ணனும் அப்பா கூடச் சேர்ந்து இதையெல் லாம் பார்த்துக்கிறார். நானும் ஃப்ரீயா இருக்குற நேரத்தில பார்த்துப்பேன். அக்கா பக்கத்தில் கோபிசெட்டிப்பாளை யத்துலதான் இருக்கா... அடிக்கடி வந்து போய் இருப்பா..." என்று தன் குடும்பத்தைப் பற்றிச் சிறிய முன்னுரையைக் கொடுக்க, தான்யாவும் கேட்டுக் கொண்டாள்.

இருவரும் சிறிது நேரம் சென்று வீட்டிற்கு வந்தனர். அப்போது காலைச் சமையல் முடிந்து, எல்லோரும் சாப்பிட டைனிங் ஹாலில் அமர்ந்து இருந்தனர்.

இவர்களைப் பார்த்ததும் விஜயா, "வாங்க. நீங்களும் வந்து சாப்பிடுங்க..." என்று அழைக்க... ஷக்தி தான்யாவுடன் சென்று சாப்பிட அமர்ந்தான்.

அங்கே அவள் அத்தை வனிதாவும், அவர் கணவரும் இருந்தனர். தான்யாவின் முகத்தில் இருந்த தெளிவைப் பார்த்த வனிதா சந்தோஷப்பட்டார்.

எல்லோரும் சாப்பிட்டு முடித்து ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது உள்ளூரில் இருக்கும் சில உறவினர்கள் கல்யாணம் விசாரிக்க வந்தனர்.

தான்யாவின் கடந்த காலம் ஷக்தியின் குடும்பத் தினருக்கு மட்டும்தான் தெரியும். தான்யாவின் அப்பா ஸ்ரீனிவாசனும் இதே ஊர்தான். ஆனால்... அவர் கல்லூரிப் படிப்பை முடித்ததும் சென்னைக்குக் குடும்பத்துடன் சென்று விட்டதால்... இங்குள்ளவர்களுடன் தொடர்பு இல்லை.

வந்திருந்த உறவினர்களிடம் விஜயா, தான்யாவைப் பற்றிப் பெருமையாகச் சொன்னார்.

"சென்னையில் பிறந்து வளர்ந்திருந்தாலும், நம்ம ஊர்ப் பக்கம், நாம எப்படிக் குழந்தைகளை வளர்ப் போமோ அப்படித்தான் தான்யா அப்பா, அம்மா வளர்த் திருக்காங்க. தான்யா நல்லாப் படிச்சிருக்கா. அதோட ரொம்ப நல்லாப் பாடுவா..." என்றவர், தான்யாவிடம், "பாடுறியா தான்யா!" என்று கேட்டதும்,

தான்யா நிமிர்ந்து ஷக்தியைப் பார்க்க.... அவன், பாடு... என்பது போல் ஜாடை செய்ய...

தான்யா, "சரிம்மா..." என்றாள்.

ஷக்திக்கு அவள் தன்னை நிமிர்ந்து பார்த்ததே... கோடிப் பூக்கள் தலையில் கொட்டியது போல் மகிழ்ச்சியாக இருந்தது.

"கண்ணனைக் கண்டாயோ அல்லிக் கொடியே!
கண்ணனைக் கண்டாயோ அல்லிக் கொடியே!
கண்ணனைக் கண்டாயோ அல்லிக் கொடியே!
கண்ணா மணிவண்ணனின்
குழல் ஓசையைக் கேட்டாயோ
கண்ணனைக் கண்டாயோ அல்லிக் கொடியே!"

என்று தான்யா கண் மூடி மெய்மறந்து பாட... அதை எல்லோரும் ரசித்துக் கேட்க... ஷக்தி முகத்தில் சந்தோஷமும், பெருமிதமும் வெளிப்படையாகத் தெரிந்தது.

தான்யா பாடி முடித்ததும், எல்லோரும் அவளைப் பாராட்ட... அருந்ததி மட்டும் எதுவும் சொல்லவில்லை. அதே போல் ஷரண்யாவின் கணவனும் நக்கலாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.



மறுநாள் பொள்ளாச்சியில் ஷக்திக்கும், தான்யாவுக்கும் திருமண வரவேற்பு நடப்பதாக இருந்ததால்... எல்லோரும் அதற்காக ஆளுக்கு ஒரு வேலை பார்க்கச் சென்றனர்.

ஹாலில் அமர்ந்து அருந்ததியும், ஷரண்யாவும் சமையலுக்காகக் காய்கறி நறுக்க... தான்யாவும் அவர்களோடு சேர்ந்து வேலை செய்தாள்.

ஷக்தி வெளியே செல்லக் கிளம்பி வந்தவன், தான்யாவிடம் சொல்லிக் கொண்டு செல்ல ஆசைப் பட்டான். ஆனால், அவனுக்கு அவளை அழைக்கத் தயக்கமாக இருந்தது.

அவனைக் கவனித்த ஷரண்யா, "தான்யா, ஷக்தி வெளியே போறான் போலிருக்கு. அவனுக்குக் குடிக்கத் தண்ணி கொடு..." என்று சொல்ல,

தான்யாவும் உள்ளே சென்று, தண்ணீர் கொண்டு வந்து ஷக்தியிடம் கொடுத்தாள்.

"வெளியே வேலை இருக்கு, தான்யா! மதியம் வந்திடுவேன்..." என்று ஷக்தி சொல்லி விட்டு, அவள் கொடுத்த நீரைக் குடித்து விட்டுச் சென்றான்.

தான்யா திரும்பி வந்ததும், ஷரண்யா தான்யாவையும், ஷக்தியையும் சேர்த்து வைத்துக் கிண்டல் செய்து பேச... தான்யா அமைதியாக வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்னோட தம்பி பொண்டாட்டிக்கு வெட்கம்... புதுப் பொண்ணு இல்லையா..." என்று ஷரண்யா அதற்கும் அவளைக் கேலி செய்ய...

ஹாலில் இருந்த ஊஞ்சலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த ரவி, அவன் மனைவி சொன்னதைக் கேட்டு விட்டுக் கிண்டலாக, "புதுப் பொண்ணா..." என்று வேண்டுமென்றே அழுத்திச் சொல்ல...

எப்படா தான்யாவை மட்டம் தட்ட வாய்ப்புக் கிடைக்கும் என்று காத்திருந்த அருந்ததி, "ஆமாம்... அதெப்படி புதுப் பொண்ணுன்னு சொல்லலாம். புதுப் பையன்னு வேணா சொல்லலாம்..." என்று நக்கலடிக்க... ஷரண்யா அவள் கணவனைப் பார்த்து முறைத்தாள்.

தான்யாவுக்கு அவர்கள் யாரையும் நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை.

அவள் மறுமணம் செய்து கொண்டால்... இது போல் பேச்சுக்களைக் கேட்க வேண்டி வரும் என்று பயந்து கொண்டுதான் இருந்தாள். அவள் நினைத்தது போல் வந்த முதல் தினமே நடந்துவிட்டது.

தான்யா அவர்கள் பேசியது அவள் காதில் விழாத மாதிரியே நடந்து கொண்டாள். அது அருந்ததிக்கும் ரவிக்கும் ஏமாற்றத்தைத் தந்தது.

வேலை முடிந்ததும், அவள் தங்கியிருந்த அறைக்கு வந்த தான்யா, இன்று நடந்ததை நினைத்ததும், அவள் விழிகள் அருவியாகக் கண்ணீரைக் கொட்ட... அந்த நேரம் பார்த்துத் தான்யாவைப் பாரதி செல்லில் அழைத்தாள்.

இப்போது எடுத்துப் பேசினால் தான் அழுதிருப்பதைப் பாரதி தெரிந்து கொள்வாள். எதற்கு அவளை



வேறு வருத்தப்பட வைக்க வேண்டும் என்று தான்யா போனை எடுக்கவில்லை.

பாரதி, தான்யா போனை எடுக்கவில்லை என்றதும், ஷக்தியின் எண்ணுக்கு அழைத்தாள்.

ஷக்தி பாரதியின் எண்ணைப் பார்த்ததும், முகத்தில் புன்னகையுடன் போனை எடுத்து, "ஹலோ டீச்சர், எப்படி இருக்கீங்க?" என்று தன் மச்சினியை நலம் விசாரிக்க...

"ம்... நல்லா இருக்கேன். எங்க அக்கா எங்கே? அவகிட்ட குடுங்க..." என்று பாரதி கெத்தாகச் சொல்ல...

"உங்க அக்காகிட்ட ஒரு நாள் கூட உன்னால பேசாம இருக்க முடியலையா?" என்று ஷக்தி, பாரதியுடன் பேசிக் கொண்டே மாடிப்படி ஏறினான்.

அவனும் வெளியில் சென்று விட்டு வந்ததிலிருந்து, தான்யாவைப் பார்க்க ஆசைப்பட்டுத் தேடினான். அவள் மாடிக்குச் சென்று விட்டாள் என்று ஷரண்யா சொல்ல... வேறு வழியில்லாமல்தான் ஹாலில் அமர்ந்திருந்தான்.

இப்போது பாரதி அழைக்கவும், அதுதான் சாக்கென்று தான்யாவைத் தேடிச் சென்றான்.

"நீ உங்க அக்கா செல்லுக்குக் கூப்பிட வேண்டியதுதானே..." என்று சொல்லிக் கொண்டே, தான்யா இருந்த அறைக் கதவை ஷக்தி திறந்தான்.

"நான் அவளுக்குத்தான் போட்டேன். அவ எடுக்கலை..." என்று பாரதி சொல்ல...

அதைக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்த ஷக்தி, தான்யாவைப் பார்க்க... அவள் கட்டிலில் படுத்து அழுது கொண்டிருந்தாள். அவளுடைய செல் அவள் பக்கத்தில் தான் இருந்தது.

ஷக்தி தான்யா பார்ப்பதற்கு முன், அறையில் இருந்து வெளியே வந்தவன், "பாரதி, அவ தூங்கிட்டு இருக்கா... அவ எழுந்ததும், நான் போன் செய்யச் சொல்றேன்..." என்றான்.

பாரதி சிணுங்கலுடன் போனை வைத்தாள்.

ஷக்திக்கு ஒரே குழப்பமாக இருந்தது. காலையில் நல்லாத்தானே இருந்தா. அதுக்குள்ள என்ன ஆச்சு என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

மதிய உணவுக்குக் கீழே வந்த தான்யா... தன்னுடைய அழுது சிவந்த முகத்தை நிறையத் தடவை நீர் அடித்துக் கழுவி இருந்தாலும், அவள் அழுதிருக்கிறாள் என்று நன்றாகவே தெரிந்தது.

அவள் முகத்தைப் பார்த்து வனிதா கவலைப்பட்டார். அதைக் கவனித்த விஜயா, நான் பார்த்துக்கிறேன்... என்று ஜாடையாகச் சொன்னார்.

விஜயா சலசலவென்று பேசிக் கொண்டே பரிமாறினார். தான்யாவையும் பரிமாறச் சொன்னார். எல்லோரும் சாப்பிட்டுச் சென்றதும், அவரும் தான்யாவும் சாப்பிட அமர்ந்தனர்.

அவர் தான்யாவிடம், தங்கள் குடும்பக் கதைகளைச் சுவாரசியமாகச் சொல்லிக் கொண்டே, அவளை ஒழுங்காகச் சாப்பிட வைத்தார்.



அதை ஊஞ்சலில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த ஷக்திக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

சாப்பிட்டதும்... தான்யாவை அவளுடைய உடைகள் இருந்த பெட்டியைப் பிரித்து ஷக்தியின் அறையில் இருந்த அலமாரியில் அடுக்கச் சொன்னார். மாலை விளக்கேற்றி, அவளை ஸ்லோகம் சொல்லச் சொல்லி... இரவு உணவு தயார் செய்யும்போது, அவளையும் உடன் நிற்க வைத்துப் பேசிக் கொண்டே வேலை செய்தார்.

அன்று முழுவதும் அவளை அவர் தனியே விடவே இல்லை. அதனால் தான்யாவிற்கும் கண்டதையும் நினைத்துக் குழம்ப நேரமில்லாமல் போய் விட்டது. அன்று இரவு தான்யாவை ஷக்தியின் அறையில் படுக்கச் சொன்னார்.

ஷக்தி அவன் அம்மாவிடம் தனிமையில், "அவ மனசு மாறினதும் ஒரே அறையில் படுப்போம்னு நினைச்சேன்..." என்று தயங்கிக் கொண்டே சொல்ல... விஜயாவிற்கு அவன் சொல்ல வருவது புரிந்தது.

"நீ என்ன நினைக்கிறேன்னு புரியுது. நீங்க தனியாப் படுக்கிறது வெளியே இருக்கிறவங்களுக்குத் தெரிஞ்சா.. ஆளுக்கு ஒரு மாதிரிப் பேசுவாங்க... இதெல்லாம் தேவையா...? உங்க வாழ்க்கையை நீங்க எப்ப ஆரம்பிக்கணும்னு நினைக்கிறீங்களோ... அப்ப ஆரம்பிச்சுக்கோங்க. அது உங்க புருஷன், பொண்டாட்டி விவகாரம்...

"ஆனா, அது நாலு சுவத்துக்கு மட்டும்தான் தெரியணும். ஏதாவது விசயம் கிடைக்குமான்னு காத்துட்டு

இருக்கிறவங்க வாய்க்கு அவல் கொடுக்காதே..." என்று விஜயா சொல்லி விட்டுச் செல்ல... ஷக்தி தன் அறைக்குள் சென்றான்.

ஷக்தி அறைக்குள் வந்து கதவைச் சாற்றி விட்டுத் தான்யாவைத் தேட... அவள் கட்டிலின் மறுபக்கம் தரையில் போர்வை விரித்துப் படுத்திருந்தாள்.

ஒரு நாள் இந்த நிலை மாறி... தானும் தான்யாவும் சேர்ந்து சந்தோஷமாகக் குடும்பம் நடத்துவோம் என்ற நம்பிக்கையோடு... ஷக்தி சென்று கட்டிலில் படுத்துக் கொண்டான்.

சஞ்ஜீவ்க்கு அன்று ஒரு முக்கியமான வழக்குக் காரணமாகக் குற்றவாளியை விசாரிக்க வேண்டி யிருந் தது. மறு நாள் அந்தக் குற்றவாளியைக் கோர்ட்டில் ஒப்படைக்க வேண்டும். விசாரணை முடிந்து கைதியைச் சிறைக்கு அனுப்பி விட்டு, அவன் வீட்டுக்குக் கிளம்பும் போது இரவு மணி பத்தரை. அப்போது அவன் செல் அழைக்க... எடுத்துப் பார்த்தால் பாரதி அழைத்திருந்தாள்.

பாரதிக்குத் தன் மேல் திடீரென்று அக்கறையோ, காதலோ வந்திருக்காது என்று சஞ்ஜீவ்க்கு நன்றாகத் தெரியும். அதனால்... எதுவும் அவசரமோ என்று நினைத்து வேகமாக, "என்ன பாரதி, எதுக்கு இந்த நேரத்தில போன் பண்ணியிருக்க?" என்று கேட்டவுடன், பாரதி அந்தப் பக்கம் பொரிய ஆரம்பித்து விட்டாள்.

"உன்னாலதான்... நான் எங்க அக்கா கல்யாண வரவேற்புக்குப் போக முடியலை. இந்த வாரம் கல்யா



ணத்தை வச்சிக்கிட்டு வெளியூர் போகக் கூடாதுன்னு, என்னை மட்டும் விட்டுட்டு எல்லோரும் பொள்ளாச்சி கிளம்பிட்டாங்க. எல்லாம் உன்னாலதான்... எதுக்கு இப்ப நம்ம கல்யாணத்தை இவ்வளவு சீக்கிரம் வச்ச...?" என்று சஞ்ஜீவைத் திட்ட...

அவள் சொல்வதைக் கேட்டு, சஞ்ஜீவ் முகம் புன்னகையில் மலர்ந்தது. ஏற்கெனவே சஞ்ஜீவ் வீட்டில் இவர்கள் திருமணத்தில் யாருக்கும் விருப்பமில்லை. இதில் இவன் வேறு கல்யாணத்தைத் தள்ளி வைத்தால்... நிச்சயமாக இந்தக் கல்யாணத்தைத் தடுக்கப் பார்ப்பார்கள் என்றுதான்... சஞ்ஜீவ் நிச்சயம் முடிந்த ஒரு மாதத்தில் திருமணத்தை நடத்திவிட வேண்டும் என்று நினைத்தான்.

அதே போல் இவர்கள் திருமணத்திற்கு ஒரு வாரம் முன்பே... தான்யாவின் திருமணமும் நல்லபடியாக நடந்து முடிந்தது.

"ஹே, செல்லம்... இன்னும் தூங்கலையா நீ?" என்று சஞ்ஜீவ் சரசமாகப் பேச...

"நான் என்ன கேட்கிறேன்... நீ என்ன பேசுற? சரியான லூசு... வை போனை!" என்று பாரதி போனை வைத்து விட்டாள்.

'கல்யாணம் நிச்சயமாகி இருந்த இந்த ஒரு மாசத்தில் கூட, ஒருத்திக்கு ஒரு ஃபீலீங்ஸும் வர மாட்டேங்குதே... ரொம்பக் கஷ்டம்டா சஞ்ஜீவ்!' என்று மனதிற்குள் புலம்பிக் கொண்டே வீட்டுக்குச் சென்றான்.

மறுநாள் வரவேற்புக்கு வந்த தன் பெற்றோரைப் பார்த்துத் தான்யா சந்தோஷப்பட்டாள். ஈஸ்வரன் அந்த ஊரில் முக்கிய மனிதர் என்பதால்... ஷக்தி – தான்யா திருமண வரவேற்பை வெகு விமரிசையாகச் செய்தனர்.

தான்யாவுக்குச் சங்கடமாக இருந்தாலும், ஷக்திக் காகப் பொறுத்துக் கொண்டாள். அவன் வீட்டில், அவன் திருமணத்தை விமரிசையாகச் செய்ய ஆசைப்பட்டாலும், அவன் தனக்காகத் திருமணத்தைக் கோவிலில் வைத்துக் கொண்டான்.

அதனால் வரவேற்பில் நிற்கத் தயக்கமாக இருந் தாலும், சமாளித்துக் கொண்டாள்.

வரவேற்பு அன்றே வத்சலாவும், ஸ்ரீனிவாசனும் பாரதி கல்யாண வேலை பார்க்க வேண்டுமென்று ஊருக்குக் கிளம்பிவிட... அவர்களோடு வனிதாவும், அவர் கணவரும் சென்றனர்.

மறுநாள் ஷக்தியும், தான்யாவும் காரில் சஞ்ஜீவ் – பாரதி கல்யாணத்திற்குக் கிளம்பிச் சென்றனர்.

காரில் செல்லும் வழியில் பாரதி தான்யாவை அழைக்க... தான்யா எடுத்துப் பேசினாள். அக்காவும் தங்கையும் வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தனர்.

தான்யா அவளிடம், “பொள்ளாச்சி ரொம்ப அழகான ஊர். நீ இங்க வரணும் பாரதி... உனக்கு இந்த ஊர் ரொம்பப் பிடிக்கும்...” என்றவள், சிறிது நேரம் மற்ற விசயங்களைப் பேசிவிட்டுப் போனை வைத்தாள். தான்யாவின் முகம் இப்போது மலர்ந்திருந்தது.



“அக்காவும் தங்கையும் பேச ஆரம்பிச்சா... நிறுத்த மாட்டீங்க போலிருக்கே...” என்று ஷக்தி கிண்டல் செய்ய... தான்யாவும் புன்னகைத்தாள்.

ஷக்தி, தான்யாவிடம் பாரதியைப் பற்றிப் பேச... அவளும் தங்கையைப் பற்றி என்றதும் மனம் திறந்து பேசினாள்.

“உனக்குப் பாரதி மேல ரொம்பப் பாசம்... இல்ல, தான்யா?”

“என்னை விட, அவதான் என் மேல ரொம்பப் பாசமா இருப்பா. எனக்குப் பிரச்சனைன்னு தெரிஞ்ச போது... என்னோட அப்பா, அம்மா கூடத் தயங்கினாங்க. ஆனா, பாரதி... ‘உனக்கு நான் இருக்கேன்க்கா... நீ வா’ன்னு என்னைத் தைரியமா வெளியே கொண்டு வந்தா... அவள் எனக்குத் தங்கைக்கும் மேல்...” என்று தான்யா உணர்ச்சி வசப்பட... அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

அதை உரிமையோடு துடைக்க முடியாமல்... ஷக்தி பார்த்துக் கொண்டிருந்தான்.

## 7

தான்யாவும், ஷக்தியும் வந்ததும்தான் வீட்டில் கல்யாணக் களை கட்டியது.

தான்யாவைப் பார்த்ததும்தான், பாரதி கொஞ்சமாவது தன் திருமணத்தைப் பற்றி நினைத்துப் பார்த்தாள். தான்யா பாரதியை வற்புறுத்தி அழைத்துக்

கொண்டு, பார்லர் சென்று மெஹந்தி போட்டுக் கொள்ள வைத்தாள். அக்காவும், தங்கையும் எந்நேரமும் ஒட்டிக் கொண்டே திரிந்தனர்.

வத்சலா தான்யாவிடம், இதைக் கொண்டு போய் ஷக்திக்குக் கொடு. உணவு பரிமாறு... என்றால் தான்யா மறுக்காமல் செய்வாள். மற்றப்படி ஷக்தி ஹாலில் இருந் தால்... அவள் ரூமில் இருப்பாள். ஷக்தி ரூமில் இருந் தால்... அவள் வேறு எங்காவது இருப்பாள். அவளாக அவனிடம் சென்று பேச மாட்டாள். அதை வீட்டிலிருந்த அனைவருமே கவனித்தாலும்... போகப் போகச் சரியாகி விடும் என்று நினைத்தனர்.

உடம்பு சரியில்லாமல் படுக்கையிலிருந்த அவர் களின் தாத்தா பேத்திமாரின் திருமணச் செய்தி கேட்டதும், துள்ளிக் குதித்து எழுந்து உட்கார்ந்து விட்டார்.

வெள்ளிக் கிழமை பாரதியின் வீட்டில் சுமங்கலி பூஜைக்கே உறவினர்கள் எல்லோரும் வந்துவிட்டனர். சனிக்கிழமை இரவு ஜானவாசம், நலங்கு நல்லபடியாக நடந்தது.

மறுநாள் காலை காசி யாத்திரை, ஊஞ்சல் முடிந்து சஞ்ஜீவ், பாரதி இருவரும் மணமேடை நோக்கிச் சென் றனர். பாரதி அமைதியாக மற்றவர்கள் சொல்வதைச் செய்து கொண்டிருந்தாள்.

ஷக்தி, பாரதிக்கு ஒரு உடன் பிறந்த சகோதரன் இருந்தால்... அவன் என்னென்ன வேலைகள் செய் வானோ, அதை யெல்லாம் சிறப்பாகச் செய்தான்.



திருமணத்திற்கு வந்திருந்த உறவினர்களுக்குத் தான்யாவின் மறு திருமணத்தைப் பற்றித் தெரிந்ததும்... அதைப் பற்றி ஆளுக்கொன்று பேசி, அலசி ஆராய்ந் தனர். சிலர் சந்தோஷப்பட... சிலர் பொறாமைப் பட்டனர்.

பாரதி சிவப்பு வண்ணத்தில், தங்க நிற ஜரிகை வைத்த மடிசார் கட்டி, அதற்குப் பொருத்தமாகச் சிவப்புக் கல் அட்டிகை, மாங்கா மாலை அணிந்து, கை நிறையக் கண்ணாடி வளையல்கள் போட்டு, மணமகள் அலங் காரத்தில் லட்சுமிகரமாக வர... சஞ்ஜீவ் அவளையே கண் ணெடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஷக்தி அவன் தோளில் தட்டிய பிறகுதான் சுய நினைவுக்கு வந்தான்.

பாரதி அவள் அப்பாவின் மடியில் அமர... சஞ்ஜீவ் தாலியைக் கையில் எடுத்தவன், பாரதியைப் பார்க்க... அவள் குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தாள்.

சஞ்ஜீவ், "பாரதி..." என்று மெதுவாக அழைத்ததும், பாரதி தலை நிமிர்ந்து பார்க்க... சஞ்ஜீவ் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

பாரதி முதலில் விழித்தவள், பிறகு பதிலுக்குப் புன்னகைக்க... சஞ்ஜீவ் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே தாலி கட்டினான். எல்லோரும் அட்சதை தூவி மணமக்களை வாழ்த்தினர்.

வத்சலா கண்கள் ஆனந்தக் கண்ணீரைப் பொழிந்தன. தன் பெண்கள் வாழ்க்கையை நினைத்து, அவர் வருந் தாத நாட்களே இல்லை.

ஆனால்... இன்று தன் பெண்களுக்கு அருமை யான மாப்பிள்ளைகள் கிடைத்து, அவர்கள் திருமணம் நல்லபடியாக நடந்தது... அவர் மனதுக்கு மிகவும் சந்தோ ஷத்தைத் தந்தது. அந்தச் சந்தோஷத்தோடு வந்திருந்த உறவினர்களைக் கவனிக்கச் சென்றார்.

மாலை வரவேற்பும் சிறப்பாக நடந்தது. பாரதி டிசைனர் புடவையில், சஞ்ஜீவ் வாங்கிக் கொடுத்த நகைகள் அணிந்து ஜொலித்தாள்.

சௌம்யாவிற்கு அவளைப் பார்க்கப் பார்க்க... பொறாமையாக இருந்தது. அவள் பாரதி இவ்வளவு நகைகள் போட்டிருப்பாள் என்று நினைக்கவில்லை.

கல்யாணத்தில் ஏதாவது மட்டம் தட்டலாம் என்றால்... வத்சலா - ஸ்ரீனிவாசன் தம்பதியர் சமையலில் இருந்து, சகலத்தையும் சிறப்பாகச் செய்ததால்... அதிலும் குற்றம், குறை ஒன்றும் சொல்ல முடியவில்லை.

திருமணத்திற்கு வந்திருந்த ஷக்தியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அன்றே கிளம்பி விட... மணமக்கள் அன்றைய இரவு பாரதியின் வீட்டில் தங்கினர்.

சஞ்ஜீவ் பாரதி உள்ளே வரும்போதே கவனித்தான். அவள் கண்கள் நிறையத் தூக்கத்தோடு இருந்தாள். சஞ்ஜீவ்வின் அருகே வந்ததும், பாரதி அங்கிருந்த பாலை எடுத்து அவனுக்குக் கொடுத்தாள்.

சஞ்ஜீவ் கூட... பாரதியா இது என்று நினைத்து ஆச்சரியப்பட்டான்.



பாரதி அங்கிருந்த இனிப்பைக் காட்டி வேண்டுமா என்று கேட்க... சஞ்ஜீவ் வேண்டாம் என்று தலையாட்ட... பாரதிக்கு எப்போதும் ஸ்வீட் என்றால் ரொம்பப் பிடிக்கும். அதனால் அவள் பாட்டுக்கு எடுத்து உள்ளே தள்ளியவள், அங்கிருந்த தண்ணீரையும் குடித்து விட்டு, "குட் நைட் சஞ்ஜீவ்!" என்று சொல்லி விட்டுக் கட்டிலில் தள்ளிச் சென்று படுத்துக் கொண்டாள்.

'அடிப் பாவி! நல்லா மொக்கிட்டுப் படுத்துட்டாளே... இங்க ஒருத்தன் இருக்கிறதை மதிக்கிறாளா பாரு...' என்று மனதில் நினைத்த சஞ்ஜீவ், "தூக்கம் வருதா பாரதி... கொஞ்ச நேரம் பேசலாமா...?" என்று கேட்க,

பாரதி, "ம்ம்..." என்றாள்.

சஞ்ஜீவ் பாரதியின் அருகே அவளைப் பார்க்கும்படி படுத்தவன், "இன்னைக்கு உனக்கு எப்படி இருந்தது? நீ எப்படி ஃபீல் பண்ண? நமக்குக் கல்யாணம் ஆகி டுச்சுன்னு இன்னும் என்னால நம்ப முடியலை..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே...

பாரதி அவன் கையில் நறுக்கென்று கிள்ளிப் புன்னகையுடன், "இப்ப நம்ப முடியுதா...?" என்று கேட்டுக் கொண்டே கையை எடுக்க... சஞ்ஜீவ் அவள் கையை விடாமல் பிடித்துக் கொண்டான்.

சஞ்ஜீவ் அவள் விரல்களோடு விளையாடிக் கொண்டே... "சொல்லு, பாரதி! எப்படி ஃபீல் பண்ண?" என்று திரும்பவும் ஆரம்பிக்க...

"நல்லாத்தான் இருந்தது சஞ்ஜீவ்... உன்னைத்தான் எனக்கு முன்னமே தெரியுமே... அதனால டென்ஷன் எல்லாம் ஒண்ணும் இல்லை..." என்றவள் கண்ணைக் கசக்கினாள்.

சஞ்ஜீவ், "தூங்கு பாரதி..." என்றான். பாரதியும் சரி... என்று தூங்கினாள்.

சஞ்ஜீவ் முன்பே முடிவு செய்திருந்தான். திருமணம் தான் பாரதியின் முழு விருப்பமும் இல்லாமல் செய்து கொள்கிறோம். ஆனால் தாம்பத்ய உறவு பாரதியின் முழு விருப்பத்தோடு, அவள் தன்னை விரும்புகிறேன் என்று சொன்ன பிறகுதான் என்ற உறுதியோடு இருந்தான்.

அதனால் அவனும் கண் மூடித் தூங்க முயன்றான். ஆனால்... பாரதி அவனைத் தூங்க விட்டால் அல்லவா?

சிறு வயதிலிருந்து பாரதியும், தான்யாவும் எப்போதும் ஒன்றாகத்தான் தூங்குவார்கள். பாரதி தான்யாவின் மீது கையையும், காலையும் போட்டுக் கொண்டு தூங்குவாள்.

தான்யா திருமணம் முடிந்து சென்ற பிறகு, தலை யணை மேல் கையையும் காலையும் போட்டுக் கொண்டு, அந்தக் கட்டில் முழுவதும் சுற்றி வந்து விடுவாள்.

அதே போல் இன்றும் தலையணை மேல் கை, கால் போடுவதாக நினைத்துக் கொண்டு சஞ்ஜீவ்வின் மேல் போட... பாவம், சஞ்ஜீவ் காதலித்த பெண்ணையே திருமணம் செய்திருந்தாலும்... அவள் தன்னை விரும்பு கிறேன் என்று சொன்ன பிறகே, அவளுடன் தாம்பத்ய



உறவு கொள்ள வேண்டும் என்று நினைத்தவனைச் சோதிப்பது போல்... பாரதி நடந்து கொள்ள...

சஞ்ஜீவ்வும் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அவளை அணைத்துக் கொண்டான். அந்த முதல் அணைப்பு அவனை எங்கோ அழைத்துச் சென்றது.

பாரதி புடவையோடு தூங்கியதால்... அவள் ஆடை அங்கங்கே விலகியிருக்க... அவளைத் தொடத் துடித்த கைகளை சஞ்ஜீவ் கட்டுப்படுத்த முடியாமல் தவித்தவன்... ஒரு கட்டத்தில் பொறுக்க முடியாமல், எங்கே அவளை அவள் விருப்பம் இல்லாமல் தொட்டு விடுவோமோ என்ற பயத்தில் எழுந்து அமர்ந்தான்.

அதன் பிறகு சஞ்ஜீவ் உறங்கவே இல்லை. விடிய விடியப் பாரதியைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

விடியற்காலையில்தான் தன்னையுமறியாமல் உறங் கினான்.

பாரதிக்கு இது எதுவும் தெரியாததால்... அவள் நிம்மதியாக எப்போதும் போல் படுக்கை முழுவதும் சுற்றிச் சுற்றி உறங்கிக் கொண்டிருந்தாள்.

விடியற்காலையில் யாரோ அவர்கள் அறைக் கதவைத் தட்ட... பாரதி தான் முதலில் எழுந்தாள். அவள் எழுந்து பார்க்கும்போது, கட்டிலில் அவள் ஒரு மூலையில் இருக்க... சஞ்ஜீவ் ஒரு மூலையில் உறங்கிக் கொண் டிருந்தான். மெதுவாகத்தான் சஞ்ஜீவ்வைத் தாண்டிக் கீழே இறங்கினாள். இருந்தாலும் சஞ்ஜீவ் அவளின் அசைவில் விழித்து விட்டான்.

பாரதி எப்போதும் நைட் பேண்ட்டில் தூங்கும் நினைப்பில் அப்படியே கதவைத் திறக்கச் செல்ல... சஞ்ஜீவ், "பாரதி, புடவையை ஒழுங்காக் கட்டிட்டுப் போ..." என்று குரல் கொடுக்க... அப்போதுதான் தன் உடையைப் பார்த்தவள் அதிர்ந்தாள். சிந்தெடிக் புடவை என்பதால் புடவை அங்கங்கே விலகியிருந்தது.

பாரதிக்கு ஒரே வெட்கமாகப் போய் விட... வேகமாகப் புடவையைச் சரி செய்து கொண்டே சஞ்ஜீவ்வைப் பார்க்க... அவன் பார்வையை விலக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருக்க... பாரதிக்குக் கோபம் வந்தது.

"இங்க எதுக்குப் பார்க்கிற?" என்றவள், கட்டிலுக்குப் பின்னே சென்று புடவையைக் கட்டினாள்.

அப்போது மறுபடியும் கதவை யாரோ தட்ட... பாரதி, "வரேன்..." என்று எரிச்சலோடு குரல் கொடுக்க...

வெளியே இருந்து வத்சலா, "பாரதி, குளிச்சிட்டு... நேத்து உனக்கு எடுத்து வச்சிருந்த புடவையைக் கட்டிட்டு சீக்கிரம் வா... நல்ல நேரத்தில நீங்க சஞ்ஜீவ் வீட்டுக்குக் கிளம்பணும்..." என்று குரல் கொடுத்து விட்டுச் செல்ல... பாரதி, "சரிம்மா..." என்றாள்.

பாரதி புடவையை ஒழுங்காகக் கட்டிக் கொண்டு வந்தவள், சஞ்ஜீவ்வைப் பார்த்து முறைத்து விட்டு, உடைகளை எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றாள்.

எல்லாம் நேரம்... சொல்லி யிருக்கவே கூடாது. அப்படியே போய்க் கதவைத் திறந்திருந்தா... இவளே



முதல் ராத்திரி நடக்கலைன்னு சொன்னாலும், யாரும் நம்பி இருக்க மாட்டாங்க. நைட் எல்லாம் தூங்க விடாமப் பண்ணிட்டு, இப்ப பண்ற அலும்ப பாரு... என்று சஞ்ஜீவ் மனதிற்குள் புலம்பிக் கொண்டிருக்க... பாரதி குளித்து முடித்து பன்னீர் ரோஜா போன்று பளிச்சென்று வெளியே வர... சஞ்ஜீவ் அவளை ரசித்தான்.

பாரதி, "போதும், பார்த்தது... போய்க் குளி!" என்றதும், சஞ்ஜீவ் எழுந்து குளியல் அறைக்குச் செல்ல... பாரதி அவன் வருவதற்குள் நைட்டியைக் கழற்றி விட்டுப் புடவையைக் கட்டிக் கொண்டு தயாரானாள்.

சஞ்ஜீவ் குளியலறையில் இருந்து வெறும் துண்டை மட்டும் இடுப்பில் சுற்றிக் கொண்டு வர... பாரதிக்கு அவனை நிமிர்ந்தே பார்க்க முடியவில்லை.

"உனக்கு மேனர்ஸ் தெரியாது. இப்படியா துண்டோட வருவ..." என்று பாரதி, சஞ்ஜீவ்விடம் சண்டைக்குச் செல்ல...

சஞ்ஜீவ் பாரதியின் எதிரே வந்து நின்று, "பின்ன உன்னை மாதிரி என்னையும் நைட்டி போட்டுக்கிட்டு வரச் சொல்றியா... நான் என்ன வெளியேவா போனேன்... ரூமுக்குள்ள என் பொண்டாட்டி முன்னாடிதானே நிற்கிறேன். ஏதாவது தேவை இல்லாம வெறுப்பேத்தினே... எதையும் யோசிக்காம இப்பவே முதல் ராத்திரி கொண்டாடிடுவேன். ஓ.கே. வா?" என்று கோபமாகக் கேட்க...

அதற்கு மேல் பாரதி அங்கு நிற்பாளா... அவள் ஒரே ஓட்டமாக வெளியே சென்று விட்டாள்.

காலை டிபன் முடிந்ததும், பாரதி சஞ்ஜீவ்வோடு தன் புகுந்த வீட்டிற்குச் செல்ல.... அவர்களோடு தான்யாவும், ஷக்தியும் சென்றனர்.

செளமியாவிற்குப் பாரதிக்கு ஆரத்தி எடுத்து உள்ளே அழைக்க விருப்பமில்லாததால்... ஏதோ வேலை இருப்பது போல் அவள் சென்று விட... வந்திருந்த உறவுப் பெண்கள் ஆரத்தி சுற்றி வரவேற்றனர்.

பாரதிக்கு சஞ்ஜீவ் வீட்டினரைப் பற்றி ஏற்கெனவே தெரிந்ததால்... அவளுக்குப் பயமோ, தயக்கமோ இல்லை.

அதனால் அவள் தயக்கமில்லாமல் எல்லோருடனும் பேசிக் கொண்டிருந்தாள். ஷக்தியும், சஞ்ஜீவ்வும் தனியாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

"சஞ்ஜீவ், பாரதியோட நீங்க எங்க வீட்டுக்கு வந்து மூணு நாளாவது தங்கணும்..."

"கண்டிப்பா வாறோம் ஷக்தி. ஆனா எப்ப வர்றதுன்னுதான் தெரியலை."

"நீங்க ஹனிமூன் போறீங்களா... ஊட்டி போனா பொள்ளாச்சி வந்திட்டுப் போங்க."

"நல்ல ஐடியாதான். நாங்க பொள்ளாச்சி வந்தா... நீங்களும் தான்யாவும் எங்களோட ஊட்டிக்கு வரணும். ஓ.கே.வா?" என்று சஞ்ஜீவ் கேட்க...

தான்யாவுடன் செல்ல ஆசைப்பட்டு, அதனால் ஏற்படப் போகும் மனக் கஷ்டம் பற்றித் தெரியாமல் ஷக்தியும் சரி என்றான்.



"அப்படின்னா நாளைக்கே கிளம்பலாம். போற வழியில பொள்ளாச்சி போயிட்டுப் போகலாம்..." என்று சஞ்ஜீவ் சொல்ல... ஷக்தியும் சரி என்றான்.

அன்று இரவு சஞ்ஜீவ்வின் அறைக்குள் பாரதி வந்தபோது... சஞ்ஜீவ், "நீ நைட் டிரஸ் போட்டுக்கிட்டு தூங்கு. இன்னைக்காவது நான் தூங்கணும்..." என்றான்.

பாரதிக்கு அவன் சொன்னது புரியவில்லை. அவள் என்ன என்பது போல் சஞ்ஜீவ்வைப் பார்க்க... அவன் போர்வையைத் தலை வரை இழுத்து மூடிக் கொண்டு படுக்க... பாரதி தோளைக் குலுக்கிவிட்டு உடை மாற்றச் சென்றாள்.

சஞ்ஜீவ்வின் அறை மிகப் பெரியது. அதில் இருக்கும் கட்டிலும் மிகப் பெரியது.

பாரதிக்கு அவன் அறையில் ஓடிய ஏ.சி.க்கு இன்னும் சுகமாகத் தூக்கம் வர... தூங்கிய சிறிது நேரத்திற் கெல்லாம் அவள் சஞ்ஜீவ்வின் மீது கையையும், காலையும் போட... சஞ்ஜீவ் இதுக்கு மேல தாங்காதுடா, சாமி... என்று நினைத்தவன், எழுந்து தரையில் படுக்கை விரித்துக் கொண்டு படுத்து விட்டான்.

அங்கே தான்யாவின் வீட்டின் அறையில் ஷக்தி கட்டிலில் படுத்திருக்க... தான்யா கீழே படுத்திருந்தாள்.

ஷக்தி, சஞ்ஜீவ் இருவருமே நொந்திருந்தனர். அந்த அழகில் ஹனிமூன் வேறு செல்கின்றனர். என்ன ஆகப் போகிறதோ?

# 8

மறுநாள் காலை எழுந்ததும், ஷக்தி தான்யாவிடம், சஞ்ஜீவ்வும் பாரதியும் தங்களோடு பொள்ளாச்சி வருவதையும், அப்படியே அங்கிருந்து அவர்களோடு சேர்ந்து நாமும் ஹனிமூன் செல்கிறோம் என்று சொல்லாமல், ஊட்டி சுற்றிப் பார்க்கச் செல்வதாகச் சொன்னதும், தான்யாவின் முகம் சந்தோஷத்தில் மலர்ந்தது.

பாரதியும் அவர்களோடு வருகிறாள் என்ற மகிழ்ச்சியில், வேகமாகக் குளித்துக் கிளம்பித் தன் அம்மாவிடம் அதைச் சொல்ல ஓடினாள்.

இங்கே சஞ்ஜீவ் வீட்டில் காலையில் எழுந்த பாரதி, கட்டிலில் இருந்து தரையில் கால் வைப்பதாக நினைத்து, சஞ்ஜீவ்வின் வயிற்றில் கால் வைத்தவள்... நிற்க முடியாமல் தடுமாறி, அவன் மீதே பொத்தென்று விழுந்து வைக்க... சஞ்ஜீவ் அலறி அடித்துக் கொண்டு எழுந்தான்.

"கண்ணு தெரியாதாடி உனக்கு... மேல வந்து விழற..." என்ற சஞ்ஜீவ் எரிந்து விழ,

"நீ கீழே படுத்திருப்பேனு எனக்கெப்படித் தெரியும்? ஆமா, நீ எதுக்குக் கீழே படுத்திருக்க?" என்று பாரதி அப்பாவியாகக் கேட்க...

"ம்... நேர்த்திக் கடன். உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா... இப்படிக் கீழே படுக்கிறதா வேண்டுதல்..." என்று சஞ்ஜீவ் நக்கலாகச் சொல்ல...

பாரதி இப்படியெல்லாம்கூட வேண்டுதல் இருக்குமா என்று நினைத்துக் கொண்டே குளிக்கச் சென்றாள்.



சஞ்ஜீவ் அவள் செல்வதையே பார்த்தவன்... நல்ல வேளை, ஏடாகூடமான இடத்தில மிதிக்காம இருந்தாளே... இவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு... நான் தினமும் பயந்துகிட்டே இருக்கணும் போலிருக்கே... என்று புலம்பிக் கொண்டே எழுந்து படுக்கையை மடித்து வைத்தான்.

பாரதி குளித்து முடித்துக் கீழே சென்றபோது... சமையல் அறையில் அவள் மாமியாரும், மாமியாரின் அம்மாவும் நின்று பேசிக் கொண்டே வேலை பார்த்தனர்.

பாரதி அவர்களின் அருகே செல்லவும், இருவரும் திரும்பி அவளை ஆராய்ந்தனர்.

தலைக்குக் குளித்துப் புடவை கட்டி வந்து நின்றவளைப் பார்த்து ராதா, "வேலைக்காரி வாசல் தெளிச்சிருப்பா. போய்க் கோலம் போட்டுடு. அப்படியே ஸ்வாமி முன்னாடி விளக்கேத்திடு!" என்று சொல்ல... பாரதியும் சரி என்று அவர் சொன்னதைச் செய்தாள்.

பாரதி விளக்கேற்றியதும், கண் மூடிப் பாட... மாடி பால்கனியில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த சஞ்ஜீவ் முகத்தில் புன்னகை மலர்ந்தது. எப்போதும் எதிர் வீட்டில் கேட்கும் பாட்டு... இன்று தன் வீட்டிலேயே கேட்டதும், சந்தோஷத்துடன் கீழே இறங்கி வந்தான்.

பாரதி ஸ்வாமி அறையில் பாட... சஞ்ஜீவ் அதை ஹாலில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

பாரதி பாடி முடித்ததும். சமையல் அறைக்குச் செல்ல... சஞ்ஜீவ் பேப்பர் படிப்பதைத் தொடர்ந்தான்.

ராதா பாரதியிடம், "உனக்கும் சஞ்ஜீவுக்கும் காபி கலந்துக்கோ. காபி குடிச்சிட்டு... கொஞ்சம் சக்கரைப் பொங்கல் செய். செய்யத் தெரியுமோல்லியோ?" என்று கேட்க,

பாரதி, "தெரியும்..." என்றாள்.

பாரதி, ராதா சொன்னது போல்... அவளுக்கும், சஞ்ஜீவுக்கும் காபி கலந்து கொண்டு ஹாலுக்குச் செல்ல... சஞ்ஜீவ் அவளைப் பார்த்ததும் புன்னகையுடன் காபியை எடுத்துக் கொண்டவன், அவளைத் தன் அருகே அமரச் சொல்ல... பாரதியும் அமர்ந்தாள்.

காபி குடித்துக் கொண்டே சிறிது நேரம் பாரதியை ரசித்த சஞ்ஜீவ், "காலையில் டிபன் சாப்பிட்டதும்... நாமும் ஷக்தி, தான்யாவோட பொள்ளாச்சி போயிட்டு, அப்படியே அங்கிருந்து அவங்களையும் அழைச்சிட்டு ஊட்டிக்குப் போறோம். உனக்கு ஓ.கே.வா?" என்று கேட்டதும்,

பாரதி, "நிஜமாவா... எனக்கு ஓ.கே. வீட்ல சொல் லிட்டியா?" என்று ஆவலாக அவன் முகம் பார்க்க...

"இனிமேதான் சொல்லணும். ஆனா, நாம எங்காவது ஹனிமூன் போவோம்னு அவங்களுக்குத் தெரியும். அதனால ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. நான் பேசிக்கிறேன்..." என்றான் சஞ்ஜீவ்.

பாரதியும், சரி... என்று எழுந்து சென்றாள்.

பாரதி சமையல் அறையில் அரிசியையும், சிறு பருப்பையும் ஊற வைத்து விட்டு... நெய்யில் முந்திரியை வறுத்துக் கொண்டிருந்தாள். கீழே அமர்ந்து ராதா காய் நறுக்கிக் கொண்டிருக்க... அவருடைய அம்மா அவருக்கு அருகில் அமர்ந்து தேங்காய் துருவிக் கொண்டிருந்தார்.



அப்போது ராதா அவர் அம்மாவிடம், "இவ சௌம்யா மாதிரி இல்லம்மா..." என்று கிசுகிசுப்பாகச் சொல்ல...

"எல்லோரும் முதல்ல அப்படித்தான் இருப்பாங்க. போகப் போகத்தான் தெரியும்..." என்றவர் சத்தமாக, "புதுத் துடைப்பம் நல்லாத்தான் கூட்டும். பழசானாத்தான் தெரியும்..." என்று நொடிக்க...

பாரதிக்கு அவர் தன்னைத்தான் சொல்கிறார் என்று தெரியவில்லை. அவர் ஏதோ பழமொழி சொல்கிறார் என்று நினைத்து, "பழசானா எதுக்குப் பாட்டி வச்சிக்கணும்... தூக்கி வெளியே போட்டுட வேண்டியதுதானே..." என்று சாதாரணமாகச் சொல்ல...

அதைக் கேட்ட அம்மாவும், மகளும் அதிர்ந்தனர். அப்போது சரியாகச் சௌமியாவும் உள்ளே நுழைந்தாள்.

ராதா எழுந்து சௌமியாவுக்கும், சரவணனுக்கும் காபி கலந்தவர்... அப்படியே அவர்களின் குழந்தை வைஷூவுக்கும் பூஸ்ட் கலந்து கொடுத்தார்.

சௌமியா அதை எடுத்துக் கொண்டு மட்டும் சென்றாள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பாரதி, 'ம்ம்... பணக்கார மருமகள்னா ராஜ உபச்சாரம்தான் போலிருக்கு...' என்று மனதில் நினைத்தவள், வெளியே ஒன்றும் காட்டிக் கொள்ளாமல்... பொங்கல் செய்ய ஆரம்பித்தாள்.

காலை வேளைக்கு வெண் பொங்கல், சட்னி, சாம்பாருடன்... பாரதி செய்த சர்க்கரைப் பொங்கலையும் வைத்துக் கொண்டு எல்லோரும் சாப்பிட அமர்ந்தனர்.

பாரதி செய்திருந்த பொங்கல் நிஜமாகவே நன்றாக வந்திருந்தது.

ராதா எப்போது பொங்கல் செய்தாலும், அவதி அவதியாகக் கிண்டிக் கிளறி இறக்கி விடுவார். பாரதி நன்றாகப் பால் விட்டுக் குழைத்து, அதில் நெய்யில் வறுத்த தேங்காய்த் துருவலையும் சேர்த்துச் செய்தி ருந்தாள். ரொம்பச் சுவையாக இருந்தது.

சஞ்ஜீவ்வின் அப்பா சுதாகர் எப்போதும் சாப்பாடு சுவையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார். அதோடு அவருக்குச் சர்க்கரைப் பொங்கல் என்றால் ரொம்பப் பிடிக்கும்.

இன்று பொங்கல் ரொம்ப சுவையாக இருந்ததால்... நன்றாக வழித்து வழித்து உள்ளே தள்ளியவர்... "சர்க்கரைப் பொங்கல் யார் செய்தது? ரொம்ப நல்லாயிருக்கு..." என்று சொல்ல,

ராதா, நாம செஞ்சு என்னைக்காவது நல்லா இருக்குன்னு சொல்லி இருக்கிறாரா என்று மனதில் நினைத்தவர், "பாரதிதான் செஞ்சா..." என்று சொன்னதும்...

சுதாகர், பாரதியைப் பாசமாக ஒரு பார்வை பார்த்து, "பேஷ்... பேஷ்... ரொம்ப நல்லாப் பண்ணியிருக்க...!" என்று புகழ...



பாரதி அவரைப் பார்த்துப் புன்னகைத்து விட்டுத் தான் சாப்பிடுவதைத் தொடர்ந்தாள்.

பாரதி வந்த முதல் தினமே... மாமனாரிடம் நல்ல பெயர் வாங்கினால்... அது சௌமியாவுக்குப் பொறுக்குமா? அவள் வேண்டுமென்றே பாரதியை வம்பு இழுத்தாள்.

"ஏன் பாரதி... நீ ஸ்கூல் டீச்சர்தானே! உனக்கு என்ன சம்பளம்? ஒரு பத்தாயிரம் இருக்குமா?" என்று சௌமியா தன் குள்ளநரித் தனத்தைக் காட்ட...

பாரதி, "இருபத்தைஞ்சு..." என்று சொல்ல...

ட்வென்டி ஃபைவ் தௌசனா... என்று ஆச்சரியப் பட்ட சௌமியா, பாரதியை நம்பாத பார்வை பார்த்தாள்.

பாரதி, நீ நம்பினா எனக்கென்ன... நம்பலைன்னா எனக்கென்ன என்று அவள் பாட்டுக்குச் சாப்பிட்டாள்.

"சௌமியா மன்னி, நீங்க பாரதியை மூணாம் கிளாஸ் டீச்சர்னு நினைச்சிட்டு இருக்கீங்களா...! பாரதி பிரெஞ்ச் மொழி படிச்சிருக்கா. அவ வேலை பார்க்கிறது ஒரு பெரிய இன்டர்நேஷனல் ஸ்கூல்ல. அங்க அஞ்சாவது கிளாஸ்ல இருந்து ஒன்பதாவது கிளாஸ் வரைக்கும் பிரெஞ்ச் எடுக்கிறா. அதோட எம்.ஏ. ஆங்கில இலக்கியமும் கரஸ்ல படிக்கிறா..." என்று சஞ்ஜீவ், தன் மனைவியின் பெருமைகளை எடுத்துச் சொல்ல...

இவளைப் பற்றிச் சரியாத் தெரிஞ்சிக்காம வாய் விட்டுட்டோமே என்று சௌமியா நினைத்துக் கொண்டி ருந்தபோது,

சரவணன், "நீ மட்டும் மொழி பெயர்ப்பாளரா வேலை பார்த்தேனு வை... இன்னும் நிறையச் சம்பாதிக் கலாம்..." என்று பாரதியிடம் சொல்ல... சௌமியா இது வேறா என்று நினைத்தாள்.

"தெரியும், அத்திம்பேர்! ஆனா, எனக்கு டீச்சரா இருக்கத்தான் பிடிச்சிருக்கு. லைஃப் ரொம்ப லைவ்லியா இருக்கும்..." என்று பாரதி பெருமையாகச் சொல்ல, சரவணன் புரிந்தது என்று தலையாட்டினான்.

சஞ்ஜீவ், தன் பெற்றோரிடம்... ஷக்தி, தான்யாவோடு சேர்ந்து அவர்களும் ஊட்டி செல்வதாகச் சொல்ல...

"சரி, போயிட்டு வாங்கோ. ஆனா, முதல்ல கோவிலுக்குப் போயிட்டுப் போங்க..." என்று சுதாகர், தன் சம்மதத்தைச் சொல்ல... சஞ்ஜீவ்வும் பாரதியும் சரி என்று தேவையான உடைகளை எடுத்துக் கொண்டு, எல்லோ ரிடமும் விடைபெற்றுக் கிளம்பினர்.

அவர்கள் நேராக ஷக்தியின் வீட்டுக்குச் செல்வ தால்... இருவரையும் புடவையிலேயே செல்லும்படி சொன்ன வத்சலா... தன் பெண்கள் இருவர் நெற்றியிலும் குங்குமம் வைத்து, "சந்தோஷமாப் போயிட்டு வாங்க..." என்றார்.

அவர்கள் அத்தை வனிதா, அவர்கள் இருவரின் தலையிலும் மல்லிகைப் பூவை வைத்து விட்டார்.

வனிதாவுக்கு ஒரு மகன்தான். பெயர் மகேஷ். அவருக்குத் திருமணமாகி ரொம்ப வருடம் கழித்துப் பிறந்தவன். அதனால் தான்யா, பாரதி இருவருக்கும் இளையவன். இப்போது வெளிநாட்டில் மேற்படிப்பு படிக்கச் சென்றிருக்கிறான்.



வனிதாவுக்குப் பெண் குழந்தை இல்லாததால் தான்யா, பாரதியிடம் ரொம்பப் பாசமாக இருப்பார். அவர்களும் இவரிடம் ரொம்ப ஒட்டுதலாக இருப்பார்கள்.

இரண்டு ஜோடிகளும் பெரியவர்களிடம் விடை பெற்றுக் காரில் கிளம்ப... ஷக்தி வண்டி ஓட்ட... தான்யா அவன் அருகில் அமராமல் பின்னால் சென்று ஏற... வேறு வழியில்லாமல், சஞ்ஜீவ் பாரதியை ஏக்கமாகப் பார்த்துக் கொண்டே முன்னே ஏறினான்.

வீட்டில் சொன்னது போல்... முதலில் ஆஞ்சனேயர் கோவிலுக்குச் சென்று, ஸ்வாமியைச் சேவித்து விட்டு... பின் அங்கிருந்தே பொள்ளாச்சிக்குக் கிளம்பினர்.

சஞ்ஜீவ் பாரதியைப் பார்க்கும்படி திரும்பி அமர்ந்து கொண்டு, அவளை வம்பிழுத்துக் கொண்டிருந்தான்.

"தான்யா, உங்கப்பா கிட்ட சொல்லி... எனக்குத் தனியா ஒரு கட்டில் வாங்கித் தரச் சொல்லு..." என்று சஞ்ஜீவ் பாரதியைப் பார்த்துக் கொண்டே சொல்ல...

"இதுக்குத்தான் கொஞ்சமா வளரணும். பனை மரத்தில பாதி உசரம் இருந்தா... இப்படித்தான் கட்டில் பத்தாது..." என்று பாரதி சஞ்ஜீவ்வைப் பார்த்துக் கிண்டலடிக்க...

"தான்யா, உன் தங்கச்சி மொத்தக் கட்டிலையும் சுற்றி... சுற்றி வர்றதுனால எனக்கு இடம் பத்தலையே

தவிர... நான் வளர்ந்ததுனால இல்லை..." என்று சஞ்ஜீவ் திருப்பிக் கொடுக்க...

ஐயையோ! அதனாலதான் இவன் கட்டில்ல படுக்காம கீழே படுக்கிறானா...? இனிமே இவன் இதைச் சொல்லியே என் மானத்தை வாங்குவானே என்று நினைத்த பாரதி, தலையில் கை வைக்க... சஞ்ஜீவ் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

"போலீசா இருந்துட்டு வரதட்சிணை கேட்கிறியே...!" என்று பாரதி பேச்சை மாற்ற...

"போலீசா இருந்தா மட்டும்தான் வரதட்சிணை வாங்கக் கூடாதா... அப்ப டாக்டரா இருந்தா வாங்கலாமா?" என்று கேட்ட சஞ்ஜீவ், தொடர்ந்து, "ஷக்தி, அப்ப நீங்க கேளுங்க..." என்று சொல்ல, ஷக்தி சஞ்ஜீவ்வைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"அவருக்கு வரதட்சிணை வாங்கித்தான் நிறையப் போகுதா? அதுதான் ரூட் கேனல் பண்றேன்னு... பல்லைத் தேய்ச்சு, ஓட்டை போட்டு, அதுல எதையோ போட்டு அடைச்சு... அப்புறம் அளவெடுத்து... ம்ம்... கடைசியா அதுல தொப்பி போட்டு, இப்படி ஒவ்வொண்ணுக்கும் வர வச்சு... சுளையா அஞ்சாயிரம் பிடுங்குறாரே... இதுக்கு மேல வரதட்சிணை வேற வேணுமாக்கும்..." என்று பாரதி நொடிக்க...

ஷக்தி, பாரதி சொல்லச் சொல்ல... புன்னகைத்துக் கொண்டிருந்தவன், அவள் சொல்லி முடிந்ததும் சத்தமாகச் சிரித்தான்.



"ஹா...ஹா...ஹா... ஆமாம். வர்றவங்களுக்கு அவங்க பல்லுப் போனா என்ன? சாப்பிட முடியலைன்னா என்ன? எங்க வேலை முடிஞ்சாப் போதும்னு பல்லைப் பிடுங்காம... பொறுமையா எல்லாம் பண்றோம்ல... எங்களுக்கு இந்தப் பேர் தேவைதான்..." என்றான்.

"ஆமா... ஆமா. நீங்க இதெல்லாம் அவங்களுக் காகத்தான் பண்றீங்க. உங்களுக்கு அதனால ஒண்ணும் லாபமில்லை..." என்று பாரதி கிண்டலாகச் சொல்ல...

தான்யா, "பேசாம இருடி!" என்று அவள் கையில் கிள்ள...

"நீ மட்டும் சம்பளம் வாங்காமலா வேலை பார்க்கிற... சம்பளம் வாங்கிறதானே?" என்று சஞ்ஜீவ் பாரதியை மடக்க...

பாரதி சஞ்ஜீவ்வை முறைத்தாள்.

"விடு சஞ்ஜீவ்! அவ என்னோட விளையாட்டாப் பேசுறா... நீ எதுக்கு சீரியஸ் ஆகுற...!" என்ற ஷக்தி, பாரதி யிடம், "நான் காசு வாங்கிட்டுத்தான் வைத்தியம் பார்க் கிறேன். ஆனா... என்னால முடிஞ்ச அளவு, ஏழைகளுக்கு இலவசமாவும் வைத்தியம் பார்க்கிறேன்," என்றான்.

பாரதி முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு, "சாரி!" என்றாள்.

ஷக்தி, "நமக்குள்ள எதுக்கு சாரி எல்லாம்..." என்று புன்னகைத்தவன், மதிய உணவிற்காக ஒரு ஹோட்டலில் காரை நிறுத்தினான்.

பாரதி இன்னும் ஷக்தியை ஒரு முறை கூட உறவு முறை சொல்லி அழைக்கவில்லை. அது ஏன் என்று ஷக்திக்குப் புரியவில்லை.

அது ஒரு உயர்தரச் சைவ உணவகம். மதிய வேளை என்பதால்... எல்லோரும் சாப்பாடு வரவழைத்துச் சாப்பிட்டனர். சாப்பிட்டதும் காரில் சென்று ஏற... இந்த முறை சஞ்ஜீவ் காரை ஓட்டினான்.

சிறிது நேரம் சென்ற பின் பாரதி, "சஞ்ஜீவ், காரை நிறுத்து!" என்றாள்.

சஞ்ஜீவ் வேகமாகச் சென்றதால் காரை உடனே நிறுத்த முடியவில்லை. முதலில் காரின் வேகத்தைக் குறைத்தவன், பின் மெதுவாக ஓரமாகச் சென்று காரை நிறுத்த...

அவன் காரை நிறுத்தியதும், பாரதி கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓட... மற்றவர்களும் காரிலிருந்து இறங்கினர்.

சஞ்ஜீவ், இவ எங்க போறா என்று யோசிக்கும் போதே... பாரதி சற்றுத் தூரம் தள்ளிச் சென்றவள்... வாந்தி எடுக்க... சஞ்சீவ் வேகமாக அவள் அருகில் சென்று, அவள் தலையைப் பிடித்துக் கொண்டான்.

பாரதி மதியம் சாப்பிட்டது அனைத்தையும் வாந்தி எடுக்கும்வரை ஓயவில்லை. அவள் வாந்தி எடுத்து முடித்ததும், தான்யா அவளிடம் தண்ணீர் பாட்டில் கொடுக்க... பாரதி வாயைக் கொப்புளித்து, முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தாள்.



பாரதி ரொம்ப களைப்பாக இருந்தாள். பின் சீட்டில் ஏறியவள், தான்யாவின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டாள்.

சஞ்ஜீவ் காரின் கண்ணாடி வழியாகப் பாரதியை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தான்.

பாரதிக்கு எப்போதும் காரில், பஸ்சில் ரொம்பத் தூரம் சென்றால் ஒத்துக் கொள்ளாது.

மாலை ஒரு ஹோட்டலில் நிறுத்தி அனைவரும் காபி அருந்த... பாரதிக்கு மட்டும் லெமன் சோடா வாங்கிக் கொடுத்தான் சஞ்ஜீவ். திரும்ப அனைவரும் காருக்குச் செல்ல... இந்த முறை ஷக்தி ஓட்டுனர் இருக்கையில் ஏறியவன், "தான்யா, முன்னாடி ஏறு..." என்று சொல்ல,

"நீ பின்னாடி வா தான்யா! அப்பதான் நான் உன்னோட மடியில படுத்துக்க முடியும்..." என்றாள் பாரதி.

தான்யாவுக்கு யார் சொல்வதைக் கேட்பது என்று தெரியவில்லை. அவள் முழித்துக் கொண்டிருக்கும் போதே, ஷக்தி, "பாரதி, எனக்கு என் வொய்ஃப் பக்கத்தில் உட்காரணும்னு ஆசை இருக்காதா... ப்ளீஸ்!" என்றவன், தான்யாவைப் பார்க்க...

அவள் அவனைப் பார்த்து முறைத்துக் கொண்டே முன்னே ஏறி அமர்ந்தாள். சஞ்ஜீவ் பின்னால் பாரதியின் அருகே அமர... ஷக்தி காரை எடுத்தான்.

பாரதி ஜன்னல் மீது சாய்ந்திருந்தாள். அவளுக்கு ஷக்தி மீது கோபம். சிறிது தூரம் சென்றதும், சஞ்ஜீவ் பாரதியை அவன் அருகில் இழுக்க... பாரதி வர மறுத்தாள்.

சஞ்ஜீவ் அவளைப் படக்கென்று இழுத்து... அவன் மடியில் படுக்க வைத்தவன்... அவள் எழுந்து கொள்ள முடியாமல்... அவளைச் சுற்றிக் கையால் அணைத்துக் கொண்டான்.

பாரதி சஞ்ஜீவ்வை முறைக்க... சஞ்ஜீவ் அவளின் முகத்தின் அருகே குனிந்து, மெதுவான குரலில், "என்ன... என்னை இப்பதான் புதுசாத் தொடுற மாதிரி சீன் போடுற... ரெண்டு நாளா நைட் என்னைக் கட்டிப் பிடிச்சிட்டுத்தான் தூங்குற..." என்றான், சீண்டும் குரலில்.

பாரதி, "அது தூங்கும்போது... தெரியாம..." என்று இழுக்க, "இப்பவும் அப்படியே நினைச்சுக்கோ..." என்றவன், அதற்கு மேல் அவளிடம் பேசாமல்... ஜன்னலில் வேடிக்கை பார்க்க... பாரதி கண் மூடித் தூங்கினாள்.

அவள் நன்றாகத் தூங்கியதும், சஞ்ஜீவ் அவளைப் பார்த்துக் கொண்டே அவளின் கூந்தலை வருடினான்.

ஷக்தி காரை ஓட்டிக் கொண்டே கண்ணாடி வழியாக சஞ்ஜீவையும் பாரதியையும் பார்த்தவன், திரும்பித் தான்யாவைப் பார்க்க... அவள் முகம் உர்ரென்று இருந்தது.

அவள் கோபமாக இருக்கிறாள் என்று புரிந்து கொண்ட ஷக்தி, மெதுவாக அவளின் கையைத் தொட... திடீரென்று அவன் தொட்டதும், பதறிய தான்யா, வேகமாக அவள் கையை எடுத்தவள்... ஷக்தியைப் பார்க்க... அவன் முன்புறம் இருந்த காரின் கண்ணாடியை அவள் பக்கம் திருப்பினான்.



தான்யாவும் அதில் சஞ்ஜீவ் மற்றும் பாரதியின் நெருக்கத்தைப் பார்த்து முகம் சிவந்தவள், ஷக்தியைப் பார்க்க முடியாமல்... ஜன்னல் பக்கம் திரும்பி அமர்ந்தாள்.

அவளுக்கு இப்போது ஷக்தி எதற்குத் தன்னை முன்புறம் அமரச் சொன்னான் என்று புரிந்தது. ஷக்தி புன்னகையுடன் காரை ஓட்டினான்.

இரவு எட்டு இருபதுக்கு ஷக்தி காரை அவன் வீட்டினுள் சென்று நிறுத்தினான்.

அவர்கள் வருவது ஏற்கெனவே அவன் வீட்டினருக்குத் தெரியும் என்பதால்... அதோடு, புது மணமக்களும் வருவதால்... அவர்களுக்கு விருந்து தயார் செய்து விட்டு... அவர்கள் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தனர்.

## 9

ஈஸ்வரனும், விஜயாவும் வாசலுக்கே வந்து சஞ்ஜீவ், பாரதியை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர். பாரதிக்குத் தான்யாவின் வீட்டை ரொம்பவும் பிடித்தது.

பழமை மாறாமல்... அதே சமயம் இந்தக் காலத்திற்கு என்னென்ன வசதிகள் வேண்டுமோ... அனைத்தும் அந்த வீட்டில் இருந்தன.

பாரதி கழுத்து வலிக்க... வலிக்க... வீட்டை உட்கார்ந்த இடத்தில் இருந்தே சுற்றிச் சுற்றிப் பார்க்க... விஜயா அவளுக்குக் குடிக்க நீர் கொடுத்தவர், "காலையில

வெளிச்சத்துல வீட்டைச் சுத்திப் பாரு. இப்ப சாப்பிட வா..." என்று புன்னகையுடன் அழைக்க...

பாரதி பதிலுக்கு லேசாகப் புன்னகைத்தவள், "நான் குளிச்சிட்டு சாப்பிடுறேன்..." என்றாள்.

விஜயா தான்யாவிடம், பாரதியை அவளுக்கென்று ஒதுக்கி இருக்கும் அறைக்கு அழைத்துக் கொண்டு செல்லச் சொன்னார்.

பாரதி களைப்பு நீங்க ஒரு குளியல் போட்டவள், ஒரு சுடிதாரை அணிந்து கொண்டு கீழே சாப்பிடச் சென்றாள். அவள் கீழே செல்லவும், ஷக்தியும் சஞ்ஜீவ்வும் வெளியே இருந்து உள்ளே வரவும் சரியாக இருந்தது.

தான்யா அவள் மாமியாரோடு சேர்ந்து பரிமாற, மற்றவர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவு அருந்தினர்.

இரவு வேளையிலும் வாழை இலை நிறையப் பதார்த்தங்கள் பரிமாறப்பட்டன. பாரதி நல்ல பசியில் இருந்ததால்... வேகமாகச் சாப்பிட்டாள். எல்லோரும் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டே சாப்பிட்டனர்.

அருந்ததி பாரதியை ஏதாவது வம்பு இழுப்போமா என்று யோசித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு, பாவம்! பாரதியைப் பற்றித் தெரியவில்லை. அவள் தான்யாவைப் போல் பொறுத்துப் போக மாட்டாள். பதிலுக்கு முகத்தில் அடித்தது போல் பேசி விடுவாள் என்று தெரியாமல்... அவளை எப்படி வம்பிழுப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.



பாரதி சாப்பிட்டதும், அங்கிருந்த ஊஞ்சலில் சென்று அமர்ந்து ஆட... அப்போது பின்புறமிருந்து தாவி, அவள் அருகில் வந்த சஞ்ஜீவ் அமர... பாரதி அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"வீடு ரொம்ப நல்லா இருக்குல்ல, சஞ்ஜீவ்! எவ்வளவு பெரிய ஹால்... தூண் எல்லாம் வச்சு... இந்த ஊஞ்சல் கூட எவ்வளவு பெரிசு..." என்று பாரதி வீட்டை வர்ணிக்க... சஞ்ஜீவ் முகம் மாறினான்.

"ஆமாம்... ரொம்ப நல்லாயிருக்கு. ஷக்தி மட்டும் பெண் பார்க்க வந்திருந்த அன்னைக்கு உன்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்லியிருந்தா... இது இப்ப உன்னோட வீடா இருந்திருக்கும்..." என்று வெறுமையான குரலில் சஞ்ஜீவ் சொல்ல...

பாரதி அவன் பேசப் பேச முகம் மாறியவள்... அவன் பேசி முடித்ததும், அவனை முறைத்தாள்.

சஞ்ஜீவ்க்குப் பாரதி ஷக்தியிடம் தனக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லை என்று சொன்னது தெரியாது.

தான்யா சாப்பிட்டு வந்ததும், இரண்டு ஜோடியும் மாடிக்குச் சென்றனர்.

சிறிது நேரம் மொட்டை மாடியில் அமர்ந்து பேசியவர்கள், பின்பு அவரவர் அறைக்குச் செல்ல... பாரதி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டே உள்ளே வந்தவள்... கட்டிலில் படுக்காமல் கீழே போர்வை விரித்துப் படுத்துக் கொண்டாள்.

சஞ்ஜீவ் புன்னகையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்குத் தெரியும், அவள் கோபமாக இருக்கிறாள் என்று.

சஞ்ஜீவ் எழுந்து சென்று அவளைத் தன் இரு கைகளாலும் தூக்கியவன், "உண்மையைச் சொன்னா... உனக்குக் கோபம் வருதா?" என்று சொல்லிக் கொண்டே அவளை மெத்தையில் சென்று பொத்தென்று போட...

பாரதி, "உனக்கு ரொம்பத் தெரிஞ்ச மாதிரிப் பேசாதே..." என்றதும்,

சஞ்ஜீவ் அவளைப் பார்த்துப் புருவம் உயர்த்தி, பின்ன... வேறென்ன என்று கண்களால் கேட்க...

"நான் ஷக்தி பெண் பார்க்க வர்றதுக்கு முன்னாடியே, அவர்கிட்ட போன் செஞ்சு எனக்கு இந்தக் கல்யாணத்தில விருப்பம் இல்லைன்னு சொல்லிட்டேன்..." என்று பாரதி முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு சொல்ல...

சஞ்ஜீவ் கட்டிலில் அவள் அருகில் அமர்ந்தவன், அவள் முகத்தைப் பற்றித் தன் புறம் திருப்பி, "என்ன சொன்ன? நீ ஷக்தி கிட்ட இந்தக் கல்யாணம் வேண் டாம்னு சொன்னியா... எதுக்கு? என்னை லவ் பண்றது னாலதானே அப்படிச் சொன்ன!" என்று சொல்லிக் கண் சிமிட்டிச் சிரித்தான்.

"அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை. எனக்குக் கல்யாணம் பண்ணிக்கவே இஷ்டம் இல்லைன்னுதான்



சொன்னேன். ஆனா... நீதான் நடுவுல வந்து... கடைசி யில என்னமோ ஆகிடுச்சு..."

பாரதி சொன்னதைக் கேட்டு சஞ்ஜீவ் சத்தமாகச் சிரிக்க... "பண்றதெல்லாம் நீ பண்ணிட்டு... இப்ப சிரிக்கிறியா?" என்றவள், அங்கிருந்த தலையணையை எடுத்து அவனை அடித்தாள்.

பாரதி அடிக்க அடிக்கச் சிரித்துக் கொண்டே அடி வாங்கிய சஞ்ஜீவ், அவளிடம் இருந்து தலையணையைப் பிடுங்கிக் கட்டிலில் போட்டவன், அவளை அருகில் இழுத்து அணைக்க... பாரதி அவனைத் தள்ளி விட முயல... சஞ்ஜீவ் இன்னும் அவளை இறுக அணைத்தவன், அவள் நெற்றியில் இதழ் ஒற்றி விட்டு, அவளை விட்டு விலகி,த் தள்ளிச் சென்று படுத்துக் கொண்டான்.

பாரதியும் மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டாள். அவள் வீம்பு எல்லாம் தூங்கும் வரைதான். வழக்கம் போல் தூக்கத்தில் சஞ்ஜீவ் அருகில் நெருங்கிப் படுத்தவள், அவன் மேல் கையையும் காலையும் போட... சஞ்ஜீவ்வும் இந்த முறை விலகாமல்... அவளை அணைத்தபடி தூங்கி னான்.

மறுநாள் காலை ஷக்தியும், தான்யாவும் சஞ்ஜீவ், பாரதியை அழைத்துக் கொண்டு அவர்கள் வீட்டின் அருகே இருக்கும் பெருமாள் கோவிலுக்குச் சென்றனர்.

பாரதி ஸ்வாமி கும்பிட்டு அமைதியாக இருந்தாள்.

அவள் கோவிலையும், சுற்றி உள்ள இயற்கை அழகையும் பார்த்து விட்டு சந்தோஷத்தில் குதிப்பாள்

என்று எதிர்பார்த்த தான்யா, "என்ன பாரதி, அமைதியா இருக்க? உனக்கு இந்த இடம் பிடிக்கலையா?" என்று கேட்டாள்.

பாரதி, "ரொம்ப நல்லா இருக்கு..." என்று மட்டும் சொல்லி விட்டு நடந்து விட்டாள்.

அவள் ஏதாவது சொல்ல... சஞ்ஜீவ் ஏதாவது நினைத்துக் கொண்டு பேசுவான் என்று அமைதியாக இருந்தாள்.

பாரதியும், சஞ்ஜீவ்வும் வந்திருப்பதைக் கேள்விப்பட்டு ஷரண்யா அவர்களைப் பார்க்க... தன் கணவனுடன் வந்தாள். அவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள். இருவரையும் பள்ளிக்கு அனுப்பி விட்டு வந்திருந்தனர். அவர்கள் வந்த நேரம் ஷக்தியும், சஞ்ஜீவ்வும் வெளியே சென்றிருந்தனர்.

ஷரண்யா பாரதியுடன் பிரியமாகப் பேச... ரவி பாரதியை விஷமப் புன்னகையுடன் பார்த்திருந்தான்.

ஷரண்யா பாரதியிடம், "பசங்களுக்குப் பரிட்சை. அதான் உங்க கல்யாணத்துக்கு வர முடியலை..." என்று திருமணத்திற்குத் தாங்கள் வர முடியாத காரணத்தைச் சொல்ல...

ரவி, "உங்களுக்காவது இது முதல் கல்யாணமா?" என்று கிண்டலாகக் கேட்டான்.

பாரதி, ரவியைப் பார்த்து முறைத்தவள், "அது உங்களுக்குத் தேவையில்லாதது. என்னோட தனிப்பட்ட



விஷயத்தைப் பத்திக் கேள்வி கேட்க... நீங்க யாரு?" என்று முகத்தில் அடித்தது போல் கேட்க... ரவியின் முகம் வீழ்ந்து விட்டது.

ஷரண்யா மனதிற்குள், நல்லா வேணும்... அடுத்த வங்க விஷயத்துல மூக்கை நுழைச்சா.. இப்படித்தான் வாங்கணும் என்று நினைத்தாள். அவள் வாயைத் திறந்து அவள் கணவனிடம் எதுவும் சொல்லி விட முடியாது.

அவனை எதிர்த்து ஏதாவது பேசினால்... அவனும், அவன் அம்மாவும் சேர்ந்து அவளை ஒரு வழியாக்கி விடுவார்கள்.

சஞ்ஜீவ் அப்போது உள்ளே நுழைந்தவன், பாரதி யின் அருகில் வந்து, அவள் தோளில் கை போட்டு, "என்ன பாரதி! என்ன பேசுறீங்க?" என்று கேட்க...

பாரதி அவனைப் பார்த்துப் புன்னகைத்தவள், ரவியிடம் திரும்பி, "என்னோட கணவர் சஞ்ஜீவ் ஐ.பி.எஸ். க்ரைம் பிராஞ்ச் ஆபீசர்!" என்று அழுத்திச் சொல்ல... ரவி சஞ்ஜீவ்வைப் பார்த்து அசடு வழிந்து விட்டு, அங் கிருந்து நழுவி விட்டான்.

இந்த ரவி தன்னிடமே இப்படிப் பேசுகிறானே... தான்யாவிடம் இப்படிப் பேசினால் என்று நினைத்த பாரதி, தான்யாவை நினைத்துக் கவலைப்பட்டாள்.

அருந்ததி அவர்கள் பேசும்போது சற்றுத் தள்ளி நின்று கவனித்துக் கொண்டிருந்தவள், நல்ல வேளை நாம அவகிட்ட வாயைக் குடுக்கலை... என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

மதிய உணவு முடிந்ததும்... இரண்டு ஜோடியும் காரில் ஊட்டிக்குக் கிளம்பினர். ஷக்தியும், சஞ்ஜீவ்வும் அவரவர் ஜோடியுடன் உட்கார்ந்திருந்தனர்.

போகும் வழியெல்லாம் இயற்கை அன்னை தாராளமாகக் கொட்டிக் கொடுத்த... இயற்கைக் காட்சிகளை ரசித்தபடி சென்றனர்.

அவர்கள் ஊட்டிக்குச் சென்று சேர்ந்தபோது, இரவாகி விட்டது. ஹோட்டலில் இரண்டு அறை பதிவு செய்து, சாவி வாங்கிக் கொண்டு அறைக்கு வந்ததும், சஞ்ஜீவ் முதலில் ஷக்தி, தான்யா தங்கும் அறைக்குள் சென்று, எதுவும் கேமரா இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

பாரதி தான்யாவிடம், "போலீஸ்னு காமிக்கிறார். வேறொண்ணும் இல்லை..." என்று சஞ்ஜீவ்வைக் கிண்டலடிக்க... தான்யா, "சும்மா இருடி..." என்று சொல்ல... ஷக்தி புன்னகைத்தான்.

சஞ்ஜீவ் அறையை நன்றாகப் பார்த்து விட்டு வெளியே வந்தவன்... ஷக்தி, தான்யாவைப் பார்த்து,

"உள்ளே போங்க..." என்று சொல்லி விட்டுப் பாரதியை அழைத்துக் கொண்டு அடுத்த அறைக்குச் சென்றான்.

உள்ளே வந்து கதவைச் சாத்தியதும், பாரதியின் காதைப் பிடித்துத் திருகிய சஞ்ஜீவ், "கிண்டலா பண்ற... இப்ப இதெல்லாம் ரொம்ப அவசியமாப் பார்க்கணும். தெரியுமா! இல்லன்னா ஏதாவது மட்டமான வெப்சைட்ல நம்ம போட்டோ இருக்கும். ரொம்பக் கவனமா இருக்கணும்..." என்றவன், பாரதியின் காதை விட...



அவள் அவனைப் பார்த்து, "ரைட் சார்..." என்று சல்யூட் அடித்தாள்.

சஞ்ஜீவ் அவள் தலையில் தட்டி விட்டுச் சென்றவன், அவர்கள் அறையையும் சோதனை செய்து முடித்தான்.

இரவு உணவு அவரவர் அறையில் உண்பது என்று ஏற்கெனவே முடிவு செய்திருந்ததால்... ஷக்தி இரவு உணவை ஆர்டர் செய்ய... சிறிது நேரத்தில் உணவும் வந்தது. அங்கிருந்த சோபாவில் அமர்ந்து இருவரும் சாப்பிட்டனர்.

சாப்பிடும்போது ஷக்தி தான்யாவிடம் அவன் கல்லூரியில் படிக்கும்போது நடந்த சுவாரசியமான விஷயங்களைப் பற்றிப் பேச... தான்யாவும் அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டே சாப்பிட்டாள்.

சாப்பிட்டு முடித்ததும், தான்யா எங்கே படுப்பது என்று யோசிக்கும் போது... ஷக்தி, "கட்டிலில் படு, தான்யா! ஊட்டியில் கீழே எல்லாம் படுக்க முடியாது!" என்றான்.

தான்யா சோபாவைப் பார்க்க... அதிலும் படுக்க முடியாது என்று புரிந்ததால், அவள் கட்டிலில் சென்று ஒரு ஓரமாக நன்றாக ஒதுங்கிப் படுத்துக் கொண்டாள்.

ஷக்தி அவள் முதுகைப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தான்.

இங்கே அடுத்த அறையில் சாப்பிடுகிறேன் என்ற பெயரில் சஞ்ஜீவ் நன்றாகப் பாரதியுடன் கொட்டம் அடித்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு ஃப்ரைட் ரைஸ் வாங்கியவன், பாரதிக்கு நூடுல்ஸ் வாங்கி விட்டு... "பாரதி, உன்னோடது கொஞ்சம் டேஸ்ட் பண்ணக் கொடு..." என்று, அவள் தட்டிலிருந்து எடுத்துச் சாப்பிட்டு விட்டு, அவன் தட்டில் இருந்த சாப்பாட்டை எடுத்து, "நீயும் டேஸ்ட் பாரு..." என்று அவள் வாயில் திணிக்க... பாரதி அவனை முறைத்துக் கொண்டே சாப்பிட்டாள்.

சாப்பிட்டு முடித்துக் கட்டிலுக்கு வந்ததும், சஞ்ஜீவ்வுக்குச் சோதனை ஆரம்பித்தது. பாரதி பயணக் களைப்பில் படுத்ததும், உடனே உறங்கி விட... ஊட்டியின் குளிரில் சஞ்ஜீவ்வுக்குத்தான் தூக்கம் வரவில்லை.

அழகான மனைவியை அருகில் வைத்துக் கொண்டு பிரம்மசரியத்தைக் கடைப்பிடிப்பது ரொம்பவும் சிரமமாக இருந்தது. தன் நிலையை நொந்தபடி இப்படியும் அப்படியும் உருண்டவன்... சிறிது நேரம் சென்ற பிறகே உறங்கினான்.

மறுநாள் காலையில் எழுந்ததும், இரண்டு ஜோடியும் சேர்ந்து ஒன்றாக ஊர் சுற்றினர். சஞ்ஜீவ்வும், ஷக்தியும் ஒழுங்காகத்தான் இருந்தனர். ஆனால் அங்கு ஹனிமூனிற்காக வந்திருந்த மற்ற ஜோடிகளின் நெருக்கத்தைப் பார்த்ததும், இவர்களுக்கும் மனதில் ஆசை வர, அதைக் கட்டுப்படுத்த முடியாமல், இருவரும் தங்கள் இணையுடன் நெருங்கி நடந்தனர்.



சஞ்ஜீவ் எப்போதும் அவளுடன் நெருக்கமாக இருப்பதால்... பாரதிக்கு ஒன்றும் தெரியவில்லை. அவள் சஞ்ஜீவ்வுடன் இணைந்து நடந்தாள்.

ஆனால், தான்யாவால் ஷக்தியுடன் நெருக்கமாக இருக்க முடியாமல், அவள் விலகிச் செல்ல... ஷக்தி தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல், அவள் கையைப் பிடித்து அருகில் இழுக்க...

தான்யாவும் பாரதி, சஞ்ஜீவ் அவர்களுடன் இருந்ததால்... வேறு வழியில்லாமல் அவனுடன் இணைந்து நடந்தாள்.

அன்று முழுவதும் வெளியே சுற்றும்போது... ஷக்தி தான்யாவின் கையை விடாமல் பிடித்திருந்தான்.

தான்யா எதுவும் சொல்ல முடியாமல் மனதிற்குள் குமுறிக் கொண்டிருக்கிறாள் என்று ஷக்திக்குத் தெரியவில்லை.

அவர்கள் தங்கியிருந்த ஹோட்டல் ரெஸ்டாரண்ட் சென்று நான்கு பேரும் இரவு உணவு சாப்பிட அமர்ந்தனர். தான்யாவும், பாரதியும் ரெஸ்ட் ரூம் சென்றிருந்ததால்... தான்யாவிற்கும் சேர்த்து ஷக்தியே ஆர்டர் கொடுக்க... காலையில் இருந்து ஷக்தி, தன் விருப்பத்தை மதிக்கவே இல்லை என்று தவறாகப் புரிந்து கொண்ட தான்யா... "எனக்குத் தோசை வேண்டாம். சப்பாத்திதான் வேணும்..." என்றாள், பிடிவாதமாக.

ஷக்தி, "சரி. சப்பாத்தியும் கொண்டு வரச் சொல்றேன். முதல்ல தோசை சாப்பிடு!" என்றான்.

"உங்க இஷ்டப்படி எல்லாம் என்னால இருக்க முடியாது. நீங்க யாரைக் கேட்டு ஆர்டர் பண்ணீங்க? எனக்கென்ன வேணும்னு நான்தான் முடிவெடுப்பேன். ஏன் எல்லோரும் எப்பவும் என்னை அடக்கி வைக்கவே பார்க்கிறீங்க... நீங்க சொலறபடியெல்லாம் என்னால இருக்க முடியாது..." என்று தான்யா டென்ஷனாகப் பேச...

சஞ்ஜீவ், 'இவளுக்கு என்ன ஆச்சு? நல்லாத்தானே இருந்தா...' என்பது போல் பார்க்க...

"சரி, தான்யா! நீ தோசை சாப்பிட வேண்டாம். நான் சப்பாத்தி ஆர்டர் பண்றேன். ஏன் இந்தச் சின்ன விஷயத் துக்கு டென்ஷன் ஆகுற?" என்று ஷக்தி சமாதானம் செய்ய... அதை உணரும் நிலையில் தான்யா இல்லை.

"சின்ன விஷயமா... இப்படித்தான் எல்லோரும் என்னை ஒவ்வொரு தடவையும் ஏமாத்தப் பார்க்கிறீங்க... ஒரு குடும்பமே என்னை ஒரு வருசம் ஏமாளியா வச்சிருந்தது தெரியாம... அவங்களுக்கு வேலைக்காரியா இருந்திருக்கேன்..." என்று தான்யா அழ ஆரம்பிக்க...

பாரதி, ஷக்தி ஏதோ தவறு செய்து விட்டது போல் அவனைப் பார்த்தவள், ஏதோ சொல்ல வர...

சஞ்ஜீவ், "இது பொது இடம். ஏதாவது பேசணும்னா ரூம்ல போய்ப் பேசு..." என்று பாரதியை அதட்ட... அந்த அதட்டல் வேலை செய்தது.

தான்யா அழுகையை நிறுத்த... பாரதியும் அமைதி யானாள்.



தான்யா சொன்னது ஷக்தி, சஞ்ஜீவ் இருவருக்குமே தெரியாத விசயம். இவ என்ன சொல்றா? ஒரு வருசமா ஏமாத்தினாங்களா... யாரு? - என்று யோசித்தவர்கள்... இப்போது அதைப் பேசும் நேரம் இல்லை என்பதால், அமைதியாகச் சாப்பிட ஆரம்பித்தனர்.

ஷக்தி தான் மனதில் ரொம்பவும் வேதனைப்பட்டான். அவன் முகமே வாடிவிட்டது.

தான்யா ஷக்தியைப் புரிந்து கொள்வாளா?

## 10

அவர்கள் அறைக்குள் வந்ததும், பாரதி செருப்பை உதறி விட்டுக் கையில் வைத் திருந்த கைப்பையைத் தூக்கிச் சோபாவில் போட்டு விட்டுக் கோபமாகச் சென்று கட்டிலில் அமர... சஞ்ஜீவ் அவளைப் பார்த்துக் கொண்டே சோபாவில் அமர்ந்தவன்...

"இப்ப நீ எதுக்கு இப்படிக் கோபப்படுற? நியாயமாப் பார்த்தா ஷக்திதான் கோபப்படணும். அவரே அமைதியா இருக்கார். தேவையில்லாம உங்க அக்காவும், நீயும் சீன் போடுறதுதான் ஆச்சரியமா இருக்கு..." என்றான்.

"நானும் எங்க அக்காவும் சீன் போடறோமா... ஏன் சொல்ல மாட்ட? இதுக்குத்தான் நான் தான்யாவுக்கு எங்க வீட்ல கல்யாணம் செய்யணும்னு சொல்லும்போது, அவசரப்படாதீங்கன்னு சொன்னேன். யாரு கேட்டா... அவ மனசுல எவ்வளவு கஷ்டம் இருக்குன்னு எனக்குத்தான் தெரியும்!" என்று பாரதி, தன் சகோதரிக்குப் பரிந்து பேச...

சோபாவில் இருந்து எழுந்து, பாரதி அருகில் சென்று அமர்ந்த சஞ்ஜீவ், அவள் கையை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டு, "பாரதி, எனக்கு வினீத்க்கு ஏதோ உடம்புல பிரச்சனை... அவனால குடும்ப வாழ்க்கையில ஈடுபட முடியாது. அதனாலதான் தான்யா வந்துட்டானு மட்டும்தான் தெரியும். ஆனா, இப்ப தான்யா பேசுறதைப் பார்த்தா... அவ இன்னும் அங்கே வேற ஏதோ கஷ்டம் அனுபவிச்சிருக்கானு புரியுது.

"உனக்கு என் மேல நம்பிக்கை இருந்தா... அது என்னன்னு சொல்லு. நான் அவ அந்தரங்கத்தைத் தெரிஞ்சிக்க ஆசைப்பட்டுக் கேட்கலை. ஷக்தி ரொம்ப நல்லவர், பாரதி. அவர் தான்யாவை உண்மையா விரும்புறார். என்ன பிரச்சனைன்னு தெரிஞ்சாதான், நாம ஷக்தியும் தான்யாவும் சேர்ந்து சந்தோஷமா இருக்க ஏதாவது பண்ண முடியும்..." என்று சொல்ல,

பாரதிக்கு சஞ்ஜீவ் கேட்டதும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அவன் மீது காதலா... நம்பிக்கையா என்று எல்லாம் அவளுக்குத் தெரியவில்லை. ஆனால்... அவனிடம் சொல்வது ஒன்றும் தவறு இல்லை என்று தோன்றியதால், சொல்ல ஆரம்பித்தாள்.

இங்கே தான்யா கட்டிலில் ஒரு மூலையில் சுருண்டு படுத்திருந்தாள். ஷக்தி இன்னும் படுக்கைக்கு வரவில்லை. வெளியே பால்கனியில் குளிரில் அமர்ந்திருந்தான்.

தான்யாவிற்கே புரிந்தது. தான் இன்று நடந்து கொண்டது அதிகமென்று. ஷக்தி ரொம்ப நல்லவன் என்று



மனதிற்குப் புரிந்தாலும், சூடு கண்ட பூனையின் கதைதான் அவள் கதையும்!

ஷக்தி ரொம்ப நேரமாகக் குளிரில் வெளியில் இருக்கிறான். அவன் இதற்கு மேல் வெளியில் இருப்பது நல்லது இல்லை என்பதால்.... தான்யா எழுந்து பால்கனி கதவைத் திறந்து கொண்டு வெளியில் சென்றாள்.

சில்லென்ற காற்று முகத்தில் மோத... குளிரில் நடுங்கியவள்... ஷக்தியைப் பார்க்க... அவன் சேரில் சாய்ந்தபடியே உறங்கிக் கொண்டிருந்தான்.

தான்யா இன்றுதான் அவன் முகத்தை நன்றாகப் பார்க்கிறாள். கைகளைக் கட்டிக் கொண்டு, குழந்தை போல் தூங்கும் ஷக்தியின் அருகில் மெதுவாகச் சென்றவள், "ஷக்தி..." என்று அழைக்க... அவன் அசையவே இல்லை.

அவள் அவன் கையில் மெதுவாகத் தட்ட... கண் விழித்தவன், அருகில் தான்யாவைப் பார்த்து முதலில் முழித்தவன்... பின் தூக்கம் கலைந்து, தான்யாவை என்ன என்பது போல் பார்த்தான்.

"உள்ளே வந்து படுங்க... பனி கொட்டுது..." என்று தான்யா அழைக்க...

"பரவாயில்லை. நான் இங்கேயே தூங்குறேன்..." என்ற ஷக்தி திரும்பக் கண் மூடிக் கொள்ள...

தான்யாவிற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவள் அங்கிருந்த மற்றொரு சேரில் அமர்ந்து கொண்டாள்.

ஷக்தி சிறிது நேரம் சென்று கண் திறந்து பார்க்க... தான்யாவும் அங்கேயே அமர்ந்திருப்பதைப் பார்த்தவன், அவளுக்குக் குளிருமே என்று வேகமாகப் பதறி எழுந்தான்.

"தான்யா, நீ ஏன் இங்க உட்கார்ந்திருக்க? வா. உள்ளே போகலாம்..." என்று அழைக்க...

தான்யா அவனைப் பார்த்து, "சாரி..." என்றாள்.

"நீ எதுக்கு சாரி சொல்ற? நான்தான் உன் மனம் கஷ்டப்படும்படி நடந்துக்கிட்டேன். சரி... வா. உள்ளே போகலாம்..." என்றவன், உள்ளே செல்ல...

தான்யாவும் அவன் பின்னே உள்ளே வந்தவள், அங்கிருந்த சோபாவில் சென்று அமர்ந்தாள்.

ஷக்தி அவள் எதிரில் சென்று அமர்ந்தவன், "தான்யா, நாம காலம் முழுதும் சேர்ந்திருக்கப் போறோம். எனக்கு உன் கடந்த காலத்தைப் பற்றி நல்லாத் தெரிஞ்சா தான்... உன் மனசு நோகாம நான் நடந்துக்க முடியும். நீ மனசுலயே வச்சு வருத்தப்படுறதுக்கு... அதை என்கிட்ட சொல்லு. உனக்கும் ஆறுதலா இருக்கும். என்ன நடந் துச்சு?" என்று கேட்க...

தான்யாவும் சொல்ல ஆரம்பித்தாள்.

**தா**ன்யா வேலை பார்த்துக் கொண்டே எம்.எஸ்சி. முடித்திருந்த சமயம்... அவளைப் பெண் கேட்டு ஹைதரா பாத்தில் இருந்து ஒரு வரன் வந்தது. அவர்களும் இவர் களைப் போல் நடுத்தர வர்க்கம்தான்.



பையன் பார்க்க லட்சணமாக இருந்தான். பெயர் வினீத். எம்.பி.ஏ. முடித்து விட்டு ஒரு கம்பெனியில் மார்க் கெட்டிங் பிரிவில் வேலை பார்த்தான். அவனுக்குக் கூடப் பிறந்தது ஒரு தங்கை மட்டும்தான்.

அந்தப் பெண்ணிற்கும் திருமணமாகி விட்டது. அவர்களும் இவர்களைப் போல் சின்னக் குடும்பம். எல்லோருக்கும் திருப்தியாக இருந்ததால்... திருமண நிச்சயம் செய்தனர்.

பாரதி, தன் அக்காவிற்குத் திருமணம் என்று தலை கால் புரியாமல் ஆடிக் கொண்டிருந்தாள். அவளுக்கு இருந்த ஒரே ஒரு வருத்தம், தன் அக்கா கல்யாணம் முடிந்து ஹைதராபாத் சென்று விடுவாள் என்பது மட்டும் தான்.

தான்யா வேலை செய்யும் கம்பெனியின் கிளை ஹைதராபாத்தில் இருப்பதால்... அவள் அங்கே வேலை மாற்றித் தரும்படி தன் கம்பெனியில் கேட்க... அவர்களும் சரி என்றனர்.

எல்லோரும் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்க... தான்யா வின் திருமணமும் சிறப்பாக நடந்தது.

சஞ்ஜீவ் வீட்டில் சரவணனைத் தவிர... மற்ற அனை வரும் கலந்து கொண்டனர். சரவணனுக்கு இரண்டு மாதம் முன்புதான் திருமணமாகி இருந்தது.

அவன் மனைவியுடன் வேறு ஒரு விசேஷத்திற்குச் சென்றிருந்ததால்... தான்யாவின் திருமணத்திற்கு வர வில்லை.

திருமணம் சென்னையில்தான் நடந்தது.

திருமணம் நடந்த அன்று இரவு வினீத், "நம்ம வீட்ல போய் நாம வாழ்க்கையை ஆரம்பிக்கலாம்..." என்றதும், தான்யாவும் வெட்கத்தால் அவன் முகம் பார்க்காமல் "சரி..." என்றாள்.

"அத்திம்பேர்... நாங்க உங்க ஊருக்கு வர்றோம். நீங்க எங்களுக்கு உங்க ஊர் முழுசும் சுத்திக் காமிக் கணும்..." என்று பாரதி அதிகாரமாக வினித்தீடம் கேட்க...

"அதுக்கென்ன காமிச்சிட்டாப் போச்சு... மச்சினி கேட்டு இல்லைன்னு சொல்ல முடியுமா..." என்று வினீத்தும் வேடிக்கையாகப் பதில் சொன்னான்.

வினீத் பாரதியிடம் நன்றாகப் பேசுவான். பாரதிக்கும் அவனைப் பிடிக்கும்.

ஹைதராபாத்தில் நடந்த வரவேற்புக்குப் பாரதியின் குடும்பமும் மற்றும் நெருங்கிய உறவினர்களும் சென் றனர். வினீத் வீடு ஹைதராபாத்தில் சார்மினார் பகுதியில் இருந்தது. அபார்ட்மென்ட்டில் இரண்டு படுக்கை அறைகள் கொண்டது. அதோடு ஆல்டோ காரும் வைத்திருந்தனர்.

வினீத் தான்யா வீட்டினரை அழைத்துக் கொண்டு, கோல்கொண்டா ஃபோர்ட், ஃபிலிம் சிட்டி, லேக்... என்று எல்லா இடத்தையும் சுற்றிக் காட்டினான். பாரதியும் எல்லா இடத்தையும் ஆர்வத்துடன் பார்த்தாள்.

ஹைதராபாத்தில் வரவேற்பு முடிந்ததும்... தான்யா வீட்டினர் கிளம்ப... தான்யாவும், பாரதியும் பிரிவை நினைத்து ரொம்ப அழுதனர்.



இத்தனை வருடங்களில் இரண்டு பேரும் ஒருவரை விட்டு ஒருவர் இருந்ததே இல்லை.

அவர்கள் அழுவதைப் பார்த்து வத்சலா, தான்யாவைச் சென்னையில் இருக்கும் வரனுக்குச் செய் திருக்கலாமோ என்று நினைத்தவர்... தான்யா, வினீத் சேர்ந்து நிற்பதையும், வினீத் தான்யாவிடம் ஏதோ ரகசியமாகப் பேசுவதையும், அதற்குத் தான்யா வெட்கப் படுவதையும் பார்த்தவர், இவர்கள் ஜோடிப் பொருத்தம் ரொம்ப நல்லா இருக்கு. பெண்களா பிறந்தா இன்னொரு வீட்டுக்குப் போய்த்தான் ஆகணும்... என்று மனதைத் தேற்றிக் கொண்டு கிளம்பினார்.

அன்று இரவு அறையில் வினீத் தான்யாவை நெருங்க... தான்யா வெட்கத்துடன் அவனிடம் இருந்து விலகினாள். ஆனால் விடாமல் வினீத் அவளை அணைத்து, முத்த மழை பொழிய... தான்யாவும் அவன் கைகளுக்குள் அடங்கினாள்.

ஆனால்... சிறிது நேரத்தில் வினீத் விலகிப் படுத்துக் கொண்டான். தான்யாவிற்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது. அதன் பிறகு வந்த நாட்களில், அவன் அவளை நெருங்க வில்லை. இப்படியே சிறிது நாட்கள் சென்றபோது...

வினீத் அடிக்கடி தான்யாவிடம், "நான் சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் என்னைக் கிண்டல் பண்றாங்க. எனக்கு இருபத்தாறு வயசுதான் ஆகுது. அதுக்குள்ளே குழந்தை, குட்டின்னு ஆகிட்டா... நேரமும், பணமும் அதுக்கே போயிடும்.

அதனால நாம முதல்ல லைஃப்ல செட்டில் ஆவோம். பிறகுதான் மத்தது..." என்று சொல்ல...

தான்யாவும் அவன் சொல்வது புரிந்தும், புரியாமலும் சரி என்றாள்.

அவள் சரி என்றதும், வினீத் உடனே, "உங்க ஆபீஸ்ல லோன் போடு. நாம வேற பெரிய அபார்ட்மென்ட் போகலாம்..." என்றவன், இப்போது இருக்கும் வீட்டை விற்கவும் ஏற்பாடு செய்தான்.

இரண்டு மாதங்கள் கழித்து, மூன்று படுக்கை அறைகள் கொண்ட புதிய அபார்ட்மென்ட்டிற்கு மாறினர்.

வத்சலாவும், ஸ்ரீநிவாசனும் பால் காய்ச்ச வந்தவர்கள்... வீட்டைப் பார்த்து மகிழ்ந்தனர். மகள் வாழாமல் இருக்கிறாள் என்ற அவர்களுக்குத் தெரியவில்லை.

தான்யா வேலை பார்க்கும் இடத்திலும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும், கல்யாணமாகி மூணு மாசம் ஆச்சே... குழந்தை பெத்துக்கலை... குழந்தை பெத்துக்கிறதைத் தள்ளிப் போட்டிருக்கீங்களா... என்று கேட்கும் போது... தான்யா எல்லோரையும் சிரித்தே சமாளித்து விடுவாள்.

தான்யாவிற்கே தன் கணவன் எதற்கு இன்னும் அவர்கள் வாழ்க்கையை ஆரம்பிக்காமல் தள்ளிப் போடுகிறான் என்று புரியவில்லை. அவன் எதைப் பற்றியும் கவலைப்படுவதும் இல்லை.

வாரத்தில் ஐந்து நாட்கள் ஆபீஸ் செல்வதும், வந்த பிறகு நன்றாக டி.வி. பார்ப்பது, சனி, ஞாயிறுகளில்



நண்பர்களோடு சேர்ந்து விளையாடச் செல்வது, இல்லையென்றால் எங்காவது ட்ரெக்கிங் செல்வது... என்று அவன் வரை நன்றாகத்தான் இருந்தான்.

ஆனால், தனக்குக் கல்யாணமாகி விட்டது. வீட்டில் மனைவி என்று ஒருத்தி இருக்கிறாள். அவளையும் கவனிக்க வேண்டும் என்பதை மறந்து விட்டுத் திருமணமாகாத பிரம்மசாரி போல் நடந்து கொண்டான்.

தான்யா ஒரு முறை அவள் நாத்தனார் அவர்கள் வீட்டிற்கு வந்தபோது.. மெதுவாக அவளிடம் ஜாடையாக வினீத்தைப் பற்றிச் சொல்ல... அவளும் அதைத் தன் அம்மாவிடம் சொல்லி விட்டே சென்றாள்.

வினீத்தின் அம்மா அவனைக் கூப்பிட்டு விசாரிக்க... வினீத் சிறிது நாட்கள் தான்யாவை அழைத்துக் கொண்டு ஹோட்டல், சினிமா என்று சென்று வந்தான்.

வத்சலா ஆறு மாதம் வரை பார்த்தவர், தான்யாவிடம், "குழந்தை வேண்டாம்னு இருக்கீங்களா...?" என்று மெதுவாக விசாரிக்க...

தான்யாவும், "ஆமாம்மா... இப்பதானே வீடு வாங்கினோம். அதனாலதான்..." என்று சொன்னபோது, வத்சலாவும் ஒன்றும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

இப்போது எல்லோருமே குழந்தை பெறுவதைத் தள்ளிப் போடுகின்றனர் என்று சாதாரணமாகத்தான் நினைத்தார்.

நாட்கள் செல்லச் செல்ல... தான்யாவிற்கே எரிச்சலாக இருந்தது.

இது என்ன வாழ்க்கை?

சமைப்பது, ஆபீஸ் செல்வது, திரும்ப ஆபீஸ் விட்டு வந்ததும் சமைப்பது, தூங்குவது... என்று இருப்பதற்குக் கல்யாணம் செய்யாமல் வீட்டிலேயே இருந்திருக்கலாம். அங்காவது மனம் விட்டுப் பேச முடியும் என்று மனதிற்குள் புழுங்க ஆரம்பித்தவள், அதை வினீத்திடமும் காட்ட...

அவன் அதைக் கண்டு கொள்ளாமல், அடுத்ததாகப் பெரிய கார் வாங்கும் கனவில் இருந்தான்.

"தான்யா, பர்சனல் லோன் போடு, கார் வாங்கணும்..." என்று சொன்னபோது... தான்யாவின் பொறுமை எல்லையைக் கடந்திருந்தது.

அவள், "முடியாது. வர்ற சம்பளம் எல்லாம் நீங்களே வாங்கிட்டா... எனக்கு..." என்று கோபப்பட...

வினீத் அவளை விநோதமாகப் பார்த்தவன், "உனக்குன்னு எதுக்குத் தனி சேவிங்ஸ்? நீ மட்டுமா பணம் போடுற... நானும்தான் போடறேன். குடும்பம்னா ரெண்டு பேரும்தான் ஷேர் செஞ்சிக்கணும்..." என்று பெரிய மனிதன் தோரணையில் சொல்ல...

"ஓ... உங்களுக்குக் குடும்பம்னா பணம் மட்டும்தான் ஷேர் பண்ணிக்கிறது ஞாபகம் வருமா... வேறொண்ணும் ஞாபகம் வராதா..." என்று தான்யா பட்டென்று கேட்டு விட...

அவள் கேட்டது அவள் மாமனார், மாமியார் காதிலும் விழுந்தது.

"இப்ப நீ என்ன சொல்ற, லோன் போடுவியா மாட்டியா...?" என்று வினீத் கேட்க...



"மாட்டேன்... காருக்கு வேற லோன் போட்டா... எனக்கு மாசம் பத்தாயிரம் கூட மிஞ்சாது..." என்று சொல்லி விட்டுத் தான்யா அறையை விட்டு வெளியே சென்று விட்டாள்.

தான்யா வினீத்திடம் சண்டை போட்டு விட்டு... ஆபீஸ் சென்றவள், டிபன் பாக்சை மறந்துவிட்டுச் சென்றதால்... அதை எடுக்கத் திரும்ப வீட்டுக்கு வந்தவள், வினீத் அவன் அம்மா, அப்பாவோடு ஏதோ ரகசியம் பேசுவதைப் பார்த்தாள்.

இவளைப் பார்த்ததும், அவர்கள் பேச்சை நிறுத்தி விட்டு, ஏதோ வேலை இருப்பது போல் அங்கிருந்து சென்று விட்டனர்.

இப்படித்தான் அடிக்கடி ரகசியம் பேசுகின்றனர். என்னவென்றுதான் தான்யாவுக்குப் புரியவில்லை.

அன்று மாலை தான்யா ஆபீஸில் இருந்து வந்ததும், அவளது மாமியார் பேச்சுவாக்கில், "அவனுக்கு 29 வயசுலதான் கல்யாணம் பண்ணணும்னு ஜாதகத்தில் இருக்கு. அது தெரியாம நாங்கதான் சீக்கிரம் பண்ணிட்டோம். அதுதான் அவன் அப்படி இருக்கான். எல்லாம் அந்த வயசு வந்தா சரியாப் போய்டும்.

"நீ இதைப் பெரிசு படுத்தாதே. உங்க அம்மா, அப்பாகிட்டயும் எதுவும் சொல்லாதே... அவங்க வேற வீணாக் கவலைப்படுவாங்க..." என்று சொல்ல... தான்யா எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தாள்.

தலை தீபாவளிக்கு அழைக்க வந்த வத்சலா, ஸ்ரீனிவாசனுடன் தான்யாவும் கிளம்பினாள்.

அவள் புகுந்த வீட்டினருக்கு அவளை அனுப்ப இஷ்டம் இல்லை. அவர்கள் எவ்வளவு தடுக்க நினைத்தும், தான்யா பிடிவாதமாகக் கிளம்பிச் சென்றாள்.

வினீத் தீபாவளி அன்று வருவதாகச் சொன்னான்.

பாரதியைப் பார்த்ததும் தான்யா தன் கவலையை மறந்து சந்தோஷமாக இருந்தாள். எல்லோரும் தான்யா சந்தோஷமாகவே இருப்பதாக நினைத்தனர்.

ஆனால்... வனிதா தான்யா ஏதோ கவலையில் இருக்கிறாள் என்று புரிந்து கொண்டவர்... தனிமையில் அவளிடம் வினீத் பற்றிப் பேச... தான்யா கொஞ்சம் கூட விருப்பமோ, சந்தோஷமா இல்லாமல் பதில் சொன்னாள்.

வனிதா தான்யாவிடம் துருவித் துருவிக் கேட்டு விஷயத்தை வாங்கிவிட்டார்.

"அத்தை, என் வீட்டுக்காரர் ஏன் இப்படி இருக்கார்? எனக்குக் கல்யாணமாகிப் புகுந்த வீட்ல இருக்கிற மாதிரி இல்லை, ஏதோ ஹாஸ்டல்ல இருக்கிற மாதிரிதான் இருக்கு. என்னோட டைம் ஸ்பென்ட் பண்ணவே மாட் டேன்கிறார்.

"எனக்கு மட்டும் ஒரு குழந்தை பிறந்திட்டா... நான் அந்த ஆளோட வாழவே மாட்டேன். நான் என்னோட குழந்தையோட வெளியே வந்துடுவேன். எப்ப பாரு, பணத்தைப் பத்திதான் பேச்சு..." என்று தான்யா சலிப் பாகச் சொல்ல...

வனிதா மனதில், இன்னும் வாழவே இல்லை... இவ அதுக்குள்ளே குழந்தைக்குப் போயிட்டாளே என்று



நினைத்தவர்... "சில ஆண்கள் அப்படித்தான் தான்யா, குழந்தை பிறக்கிறதுக்குள்ள நல்லா வசதியா செட்டில் ஆகிடணும்னு நினைப்பாங்க. வேறொண்ணும் இல்லை. கவலைப்படாதே!" என்று தான்யாவைத் தேற்றினாலும், வனிதா மனதில் வினீத் பற்றிச் சந்தேகம் விழுந்துவிட்டது.

## 11

**வ**னிதா விஷயத்தை மெதுவாக வத்சலாவின் காதில் போட... வத்சலா மிகவும் மனம் உடைந்தார்.

இந்தக் காலத்தில் குழந்தை பெற்றுக் கொள்வதைத் தள்ளிப் போட வழியா இல்லை. எதுக்கு வாழாம இருக் கணும் என்று அவருக்குப் புரியவில்லை.

வத்சலா தான்யாவிடமும் எதுவும் கேட்கவில்லை.

வினீத் தீபாவளி அன்று வந்தபோது வத்சலா அவனிடம் எதையும் காண்பித்துக் கொள்ளாமல் அமைதி யாக இருந்தார். வினீத்தும் பாரதியிடம் நன்றாக அரட்டை அடித்தான். தீபாவளி அன்றே வினீத் கிளம்ப வேண்டும் என்று சொல்ல... தான்யாவும் வேறு வழியில்லாமல் அவனோடு கிளம்பினாள்.

வத்சலா அதுவரை அமைதியாக இருந்தவர்... தான்யா கிளம்பும் போது, அவளிடம் சொல்வது போல்,

"தான்யா, சீக்கிரம் குழந்தை உண்டாகிற வழியைப் பாரு... பாரதி கல்யாணத்துக்கு முன்னாடி நீ குழந்தை பெத்துகிட்டாத்தான், எனக்கு உன்னைக் கவனிக்க வசதியா

இருக்கும்..." என்று வினீத்தை ஜாடையாகப் பார்த்துக் கொண்டே சொல்ல...

அவன் முகம் மாறிவிட்டது. அவன் தான்யாவை அழைத்துக் கொண்டு எல்லோரிடமும் விடைபெற்றுச் சென்றான்.

செல்லும் வழியில் வினீத், "உங்க அம்மா என்ன இப்பவே குழந்தை பற்றிப் பேச ஆரம்பிச்சிட்டாங்க. கல்யாணம் ஆகி ஆறு மாசம்தானே ஆகுது, அதுக்குள்ள என்ன அவசரம்? நீ எதுவும் அவங்ககிட்ட சொன்னியா...?" என்று தான்யாவிடம் கேட்டான்.

தான்யா, "நான் எதுவும் சொல்லலை..." என்பதோடு பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

வினீத் முகம் ஹைதராபாத் சென்று சேரும்வரை கடுகடுவென்றே இருந்தது.

வீட்டிற்குச் சென்றதும், அவன் பெற்றோரிடம் ஏதோ ரகசியம் பேசினான். தான்யா எதையும் கண்டு கொள் ளாமல் அலுவலகம் கிளம்பிச் சென்றாள்.

மேலும் மூன்று மாதம் சென்றது.

வினீத் முன்பாவது எப்போதாவது ஒரு முறை தான்யாவை அழைத்துக் கொண்டு வெளியே செல்வான், இப்போது அதுவும் இல்லை... அவளோடு சரியாகப் பேசு வதும் இல்லை. இந்நிலையில் வத்சலா... ஸ்ரீனிவாசனை அழைத்துக் கொண்டு தான்யாவைச் சும்மா பார்க்க வருவது போல் வந்தார்.



வத்சலா தான்யாவிடம் விசாரிக்க... அவள் அம்மா வுக்கும் விஷயம் தெரிந்துவிட்டது என்று புரிந்ததும், வத்சலாவின் மடியில் படுத்து அழுதாள்.

"அம்மா, நான் உங்களோடேயே வந்துடுறேன். என்னால இங்க இருக்க முடியலை..."

"எடுத்தேன், கவுத்தேன்னு முடிவு எடுக்கக் கூடாது. பொறுமையா இரு, பார்க்கலாம். ஒரு வேளை உன் புருஷன் நிஜமாவே குழந்தை பிறக்கிறதுக்கு முன்னாடி வசதியா செட்டில் ஆகணும்னு நினைக்கிறாரோ என்னவோ..." என்று வத்சலா தான்யாவை ஆறுதல் படுத்திவிட்டு எழுந்து... வினீத்தின் அம்மாவிடம் பேசச் சென்றார்.

வத்சலா ஜாடையாக அவரிடம் குழந்தையைப் பற்றிப் பேச... வினீத்தின் அம்மா பிடிகொடுக்காமல் பதில் சொன்னார்.

அவர் வத்சலாவிடமும் அதே ஜாதகக் கதையை எடுத்துவிட... வத்சலாவுக்கு எரிச்சலாக வந்தது.

அப்படி ஜாதகம் பார்த்தால், அதைத் திருமணத்திற்கு முன்பே பார்த்திருக்க வேண்டியதுதானே... இது என்ன கல்யாணம் பண்ணிக் கொண்டு வாழாமல் இருப்பது என்று நினைத்தவர்... அதைத் தன் சம்பந்தியிடமும் கேட்டுவிட்டார்.

அவர் சொன்னதைக் கேட்டு வினீத்தின் அம்மாவின் முகம் விழுந்துவிட்டது. அவர், "சரி. நான் அவன்கிட்ட பேசு றேன்..." என்றார்.

வத்சலாவும், ஸ்ரீனிவாசனும் சென்னைக்குத் திரும்பினர். இன்னும் ஸ்ரீனிவாசனுக்கு விஷயம் தெரியாது.

வினீத்தின் அம்மா அவனிடம் என்ன பேசினாரோ.. வினீத் சென்று தான்யாவிடம் சண்டை போட்டான்.

"எதுக்குப் புருஷன், பொண்டாட்டி விசயத்தை ஊர் எல்லாம் சொல்லிட்டுத் திரியுற... உனக்கே அசிங்கமா இல்லையா... உங்க அம்மாவுக்கு எதுக்கு இப்ப அவசரம்? அவங்ககிட்ட நீ எதுக்கு சொன்ன?" என்று தான்யா தவறு செய்தது போல் வினீத் பேச...

"நான் அவங்ககிட்ட சொல்லலை... அவங்களா எப்படியோ தெரிஞ்சிக்கிட்டாங்க," என்று தான்யா எழுந்து செல்ல...

அவள் கை பிடித்து இழுத்து நிறுத்திய வினீத், "உங்க அம்மா சொல்றாங்கன்னு எல்லாம் என்னால உன்னோட வாழ முடியாது... எனக்கு எப்ப தோணுதோ அப்பதான்..." என்றவன், அவளைக் கட்டிலில் தள்ளி விட்டுச் செல்ல... தான்யா அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு ஞாயிறு அன்று வினீத்தின் தங்கை ஸ்வாதி, பிறந்த வீட்டிற்கு வந்திருந்தாள்.

மதிய உணவைச் சாப்பிட்டுவிட்டு அனைவரும் ஓய்வு எடுக்க... தான்யா பாரதியுடன் பேசுவோம் என்று கையில் செல்லை எடுத்தவள், அந்த அறையில் வினீத் தூங்குவதால்... எழுந்து வெளியே பால்கனிக்குச் சென்றாள்.



அப்போது தான்யாவின் மாமியாரும், நாத்தனாரும் ஹாலுக்கு வந்தனர். தான்யா பால்கனியில் இருப்பது தெரியாமல் அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

"ஏன்மா... வினீத் தான் வேலைக்கு ஆக மாட்டான்னு தெரிஞ்சு போய்டுச்சு இல்ல... அப்புறம் ஏன் இன்னும் அவளை இங்க வச்சிக்கிட்டு இருக்கீங்க. பேசாம அவங்க அம்மா வீட்டுக்கு அனுப்பிட வேண்டியதுதானே..."

"ம்ம்... என்ன சொல்றது! எல்லாம் எங்க விதி... அவனுக்கு இப்படி ஒரு பிரச்சனை இருக்கும்னு யாரு கண்டா... இந்தப் பொண்ணு அவங்க அம்மா வீட்டுக்குப் போய்ட்டா... எல்லோரும் எதுக்குன்னு வேற கேட்பாங்க. என்ன பதில் சொல்றது?

"அதோட உங்க அண்ணன் வீடு, காருன்னு வேற வாங்கி வச்சிருக்கான், அவளோட நகையும் அடமானத்தில வச்சிருக்கான். இதுக்கெல்லாம் அவளும் சேர்ந்துதான் லோன் கட்டுறா... அவ அவங்க அம்மா வீட்டுக்குப் போய்ட்டா... யாரு கட்டுறது? அதானாலதான் அவகிட்ட சும்மா, ஜாதகத்துல அவனுக்கு 29 வயசுலதான் கல்யாணம் பண்ணணும்னு இருக்குன்னு சொல்லி வச்சிருக்கேன்."

அவர்கள் பேசுவதைப் பால்கனியில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த தான்யா, தலையில் இடி விழுந்தது போல் அதிர்ந்து நின்றாள்.

தான்யாவிற்கு முதலில் சிறிது நேரம் அவள் காதில் விழுந்ததை நம்பவே முடியவேயில்லை.

அதிர்ச்சியில் இருந்து வெளியில் வந்ததும், அவள் கண்களில் இருந்து கண்ணீர் அருவியாகக் கொட்ட ஆரம்பித்தது.

அங்கேயே ஒரு மூலையில் அமர்ந்து அழ ஆரம்பித்தாள்.

சிறிது நேரம் அழுதவள், தன்னைத் தேற்றிக் கொண்டு எழுந்து அவள் அறைக்குச் செல்ல... அப்போது தான் அவள் இவ்வளவு நேரம் பால்கனியில் இருந்தது அவள் மாமியாருக்கும், நாத்தனாருக்கும் தெரிந்தது.

அவள் காதில் என்னென்ன கேட்டதோ என்று இருவரும் பயத்தில் முழிக்க... தான்யா அவர்களைக் கண்டு கொள்ளாமல் அறைக்குள் சென்றாள்.

இவர்கள் இருவரும் பேசியதைத் தான்யா மட்டும் கேட்கவில்லை. ஸ்வாதியின் கணவன் திவாகரும் கேட்டான். ஏற்கெனவே சபல புத்தி கொண்டவன். இந்த விஷயம் தெரிந்ததும், முகத்தில் விஷமப் புன்னகையுடன், கட்டிலில் சென்று அமைதியாகப் படுத்துக் கொண்டான்.

தன் அறைக்குள் வந்ததும் தான்யா... கட்டிலில் படுத்திருந்த வினீத் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘கடவுளே! பார்க்க அழகா இருக்கும் இவனுக்கு இப்படி ஒரு குறையா... காலமெல்லாம் இப்படித்தான் வாழணும்னு என் தலையில எழுதி இருக்கோ...’ என்று நினைத்தவள், முகம் கழுவக் குளியல் அறைக்குள் சென்றாள்.



தான்யா அப்போதும் வினீத்தை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டும் என்று நினைக்கவில்லை.

மாலையில் தான்யா சமையல் அறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது, திவாகர் அடிக்கடி சமையல் அறைக்கு வந்து தண்ணீர் குடிப்பது... இல்லை, ஏதாவது எடுப்பது என்று சாக்கு வைத்துக் கொண்டு வந்து தான்யாவிடம் வழிந்தான்.

அவன் எப்போதும் ஹாலில் அமர்ந்துதான் அதிகாரம் பண்ணுவான்.

வினீத்தின் குறை தெரிந்தும், தான்யா அமைதியாக இருக்க... தன் அம்மாவின் மூலம் தான்யாவிற்கு விஷயம் தெரிந்து விட்டது என்று தெரிந்ததும், வினீத் தான்யாவை இன்னும் வார்த்தைகளால் வதைக்க ஆரம்பித்தான்.

தான்யா வேலைக்குச் சீக்கிரம் கிளம்பினாலும், சண்டைக்கு வந்தான். லேட்டாக வந்தாலும்... எவன் கூட கூத்தடிச்சிட்டு வர என்று கேள்வி கேட்டு அவளைக் கொன்றான்.

இதில் சுவாதியின் கணவன் திவாகர் வேறு தான்யாவிற்குத் தொந்தரவு கொடுத்தான். அவனுக்கு வாழாமல் இருக்கும் தான்யாவை எப்படியாவது தன் வலையில் விழ வைத்துவிட வேண்டும் என்ற எண்ணம்.

தான்யாவும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள், யாரும் திருந்தும் வழியைக் காணோம் என்றதும், பாரதிக்கு அழைத்து எல்லாவற்றையும் சொல்லி விட்டாள்.

பாரதி தான்யா சொன்னதைக் கேட்க... கேட்க... எரிமலையாகப் பொங்கினாள்.

நேராகச் சென்று ஸ்ரீனிவாசனிடம் தான்யா சொன்ன அனைத்தையும் சொல்ல... “அவர் என் பொண்ணு இப்படி கஷ்டப்பட்டு அங்க வாழணும்னு இல்லை...” என்றவர், விஷயத்தை இத்தனை நாள் தன்னிடம் மறைத்ததற்காகத் தன் மனைவி வத்சலா மேல் கோபம் கொண்டார்.

ஸ்ரீனிவாசனும், பாரதியும் உடனே கிளம்பி ஹைதரா பாத் சென்றனர்.

திவாகர், தான்யாவிடம் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்த வினீத்தின் அம்மாவின் வயிற்றில் புளியைக் கரைத்தது. எங்கே தான்யாவால் தன் மகள் வாழ்வில் பிரச்சனை வருமோ என்று பயந்து கொண்டி ருந்தவர்... ஸ்ரீனிவாசனும், பாரதியும் வந்து தான்யாவைத் தங்களோடு அழைத்துச் செல்கிறோம் என்றபோது தடுக் காமல் அமைதியாக இருந்தார்.

வினீத் தான் குதி குதியென்று குதித்தான்.

அவனுக்குத் தன் குறையை வெளியே சொல்ல விருப்பம் இல்லை. அதனால் தான்யா மீது தான் தவறு என்பது போல் பேசினான். அவன் தான்யாவின் ஒவ் வொரு செயலையும் குற்றம் சொல்ல... தான்யா கண் களில் நீருடன் அவனையே பார்த்துக் கொண்டு இருந் தாள்.

தன் அக்காவைக் குறை சொல்வதைப் பொறுக்க முடியாத பாரதி, “அதிகம் பேசாதீங்க, உங்களுக்கு எந்தக் குறையும் இல்லையா... அப்ப எங்களோட ஹாஸ்பிடல் வாங்க. ஒரு மெடிகல் செக்-அப் பண்ணிடுவோம்,” என்று சொல்ல...



அவள் சொன்னதைக் கேட்ட வினீத்துக்கு வியர்த்து விட்டது. இவ நம்ம மானத்தை வாங்காம போக மாட்டா போலயே... என்று நினைத்தவன், தான்யா அவள் பிறந்த வீட்டுக்குச் சென்றால்... அவள் நகைகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதோடு வீட்டுக்கு மற்றும் காருக்கு வாங்கிய கடனைத் தான் மட்டுமே அடைக்க வேண்டும். அதற்கு இப்போது என்ன செய்வது என்று யோசிக்க ஆரம்பித்தான்.

அவர்களுக்கு விஷயம் தெரிந்து விட்டது. இனி மறைக்க எதுவும் இல்லை. இதை இப்படியே இழுத்துக் கொண்டு சென்றால்... சொந்தக்காரர்கள் முன்பு அவமானப்பட வேண்டும் என்பதைப் புரிந்து கொண்ட வினீத்தின் தந்தை, “நீங்க தான்யாவை அழைச்சிட்டுப் போங்க... எந்தப் பிரச்சனையும் பண்ணாம, என் பையன் விவாகரத்துப் பத்திரத்துல கையெழுத்துப் போடுவான். நகையைத் திருப்பிக் கொடுக்க மட்டும் கொஞ்சம் டைம் கொடுங்க...” என்று சமாதானமாகப் பேச... ஸ்ரீனிவாசனும் சரி... என்றார்.

தான்யா அழுது கொண்டே அவளது பொருட்களை எடுத்து வைக்க... பாரதி அவளுக்கு உதவினாள்.

தான்யா அவளும், வினீத்தும் சேர்ந்திருக்கும் திருமணப் படத்தைப் பார்த்தவள் கதறி அழுதாள்.

என்னென்ன கனவுகளுடன் இந்த வீட்டிற்குள் நுழைந்தாள். அது அத்தனையும் கலைந்ததைத் தாங்க முடியாமல், அவள் அழ... இப்படி ஒரு நிலையில் தன் மகளைப் பார்க்க முடியாது என்பதால்தான், வத்சலா அவர்களுடன் வரவில்லை.

“நீ இப்படி அழுது உன்னையே வருத்திக்கும் அளவுக்கு இந்த வீட்ல யாருக்கும் தகுதி இல்லை, தான்யா. தன்கிட்ட குறை இருக்குன்னு தெரிஞ்சும், உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட வினீத்... அவங்களுக்கும் ஒரு பெண் இருந்தும், மருமகளோட வாழ்க்கையைப் பற்றி யோசிக்காம இருந்த உன்னோட மாமனார், மாமியார்... தங்கச்சி மாதிரி நினைக்க வேண்டிய உன்கிட்ட தவறா நடந்துக்கப் பார்த்த திவாகர்...

“இப்படி இந்த வீட்ல யாராவது ஒருத்தராவது நல்லவங்கன்னு சொல்லு பார்ப்போம்...” என்று பாரதி கேட்க... தான்யா அழுகையை நிறுத்திவிட்டு, நிமிர்ந்து பாரதியைப் பார்த்தாள்.

தான்யாவிற்குக் கண்ணீரைத் துடைத்து விட்ட பாரதி, “நாம விடுற கண்ணீர் கூட தகுதியானவங்களுக்காக இருக்கணும். இப்படி தரம் தாழ்ந்தவங்களுக்காக இருக்கக் கூடாது. இதுல உன் தவறு எதுவும் இல்லை. எந்தத் தப்பும் செய்யாத நீ ஏன் அழுற? உனக்கு நான் எப்பவும் இருப்பேன். நீ மத்தவங்களைப் பற்றிக் கவலைப் படாதே...” என்று தான்யாவிற்குத் தைரியம் சொல்லி, அவளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்னைக்குக் கிளம்பினாள்.



போகும் முன் பாரதி, திவாகரையும் எச்சரித்து விட்டே சென்றாள். வினீத்தைப் பார்க்கவே அவளுக்கு எரிச்சலாக இருந்தது. கூடப் பிறந்த சகோதரன் இல்லாதவள், தான்யாவின் கணவனைத்தான் சகோதரன்போல் நினைத்திருந்தாள்.

ஆனால்... அவன் தான்யாவிற்குச் செய்த கொடுமையை நினைக்கும் போது... அவளுக்கு ஆத்திரமாக வந்தது. அவன் முகத்தைப் பார்க்கவும் அவளுக்கு விருப்பம் இல்லை. ஆனால் அவனைச் சும்மா விட்டு விட்டுச் செல்லவும் மனம் இல்லை... அதனால் நேராக அவனிடம் சென்றவள்.

“இனி ஒரு முறை வேற யாராவது பெண்ணை நீ கல்யாணம் பண்ணி ஏமாத்துறேனு தெரிஞ்சுது... நீ வெளியே இருக்கிறது அன்னைக்குத்தான் கடைசி நாள். இவங்களால என்ன செய்ய முடியும்னு நினைக்காத... எனக்குத் தெரிஞ்ச பெரிய போலீஸ் ஆபீசர் இருக்கார். அவர்கிட்ட சொல்லி உன்னை உள்ளே வச்சிடுவேன். அதோட பேப்பர்லேயும் உன்னைப் பத்தி நியூஸ் போட்டு, உன் மானத்தை வாங்கிடுவேன், ஜாக்கிரதை!” என்று எச்சரித்து விட்டே சென்றாள்.

என்னதான் பாரதி தான்யாவிற்குத் தைரியமும் ஆறுதலும் சொன்னாலும், அவளுக்கும் தன் அக்கா வாழ்க்கை இப்படி ஆனதில் மிகவும் வருத்தம்தான். தான்யா முன்பு அழுது விடக்கூடாது என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தவள், சென்னைக்கு வந்ததும் தன் அம்மாவின் மடியில் படுத்து அழ...

ரயிலில் வரும்போது வழியெல்லாம் வினீத் தன்னைப் பற்றி அவதூறாகப் பேசியதே தான்யாவின் காதில் கேட்டுக் கொண்டிருந்தது. அவனுக்காக நான் எவ்வளவு பார்த்திருப்பேன்... அவனிடம் குறை என்று தெரிந்த பின்பும் அவனை விட்டுப் பிரிய நினைக்க வில்லை. ஆனால்... அவன் தன்னைப் பற்றிச் சிறிதும் நினைக்கவில்லையே... இனி, பாரதி சொன்னது போல், அவனுக்காக அழுவதும் வீண்தான் என்று நினைத்தவள், அதன் பின் அழவில்லை.

தான்யாவைத் தேற்றுவதுதான் சிரமமாக இருக்கும் என்று நினைத்த வத்சலாவுக்கு... பாரதியைத் தேற்றுவது தான் பெரிய வேலையாக இருந்தது.

தான்யா வெளியே அமைதியாக இருந்தாலும், மனதிற்குள் ஒரு புயலை அடக்கிக் கொண்டு இருக்கிறாள் என்று யாருக்கும் தெரியவில்லை.

அவள் தன் வேதனையில் இருந்து தெளிந்து விட்ட தாகவே அனைவரும் நினைத்தனர். ஆனால்... அவள் மனதிற்குள் வைத்துக் குமுறுகிறாள். அதுதான் இன்று அவள் ஷக்தியிடம் கோபப்படக் காரணம்.

தங்கள் மனைவிமார் பேசியதைப் பொறுமையாகக் கேட்ட ஷக்தி, சஞ்ஜீவ்க்கு அவர்கள் மனக் கஷ்டம் நன்றாகவே புரிந்தது. அவர்கள் நிலைமையில் யார் இருந்தாலும் இப்படித்தான் இருப்பார்கள் என்பதையும் புரிந்து கொண்டனர்.

ஷக்தி... இனி தான்யாவிடமிருந்து விலகக் கூடாது. இன்னும் அவள் கடந்த கால வாழ்க்கையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பது நல்லது இல்லை... அவளோடு நெருங்கிப் பழகிச் சீக்கிரம் அவளை மாற்ற வேண்டும் என்று நினைத்தான்.



சஞ்ஜீவ்... பாரதி மனதில் திருமணத்தைப் பற்றியோ, கணவன், மனைவி உறவைப் பற்றியோ நல்ல எண்ணம் இல்லை. அவள் என் காதலை எப்போது புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்கிறாளோ... அதுவரை காத்திருப்பது என்று முடிவெடுத்தான்.

ஷக்தி, சஞ்ஜீவ் இருவரில் ஒருவர் நெருங்கவும், இன்னொருவர் விலகி இருக்கவும் முடிவெடுத்தனர். இவர்கள் துணை என்ன முடிவெடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## 12

மறுநாள் காலையில் எழுந்த ஷக்தி, சஞ்ஜீவ் இருவரும் மேலும் ஊட்டியில் இருந்து தங்களைத் தாங்களே சோதனைக்கு ஆளாக்கிக் கொள்ள விரும்பாமல், அங்கிருந்து கிளம்பி விட்டனர்.

கோயம்புத்தூர் திரும்பும் வழியில் இருந்த சுற்றுலாத் தலங்களை எல்லாம் சுற்றிப் பார்த்தனர். அதற்கே இரண்டு நாட்களாகி விட்டன.

சஞ்ஜீவ் மற்றும் பாரதியைச் சென்னை செல்வ தற்காகக் கோயம்புத்தூர் ரெயில் நிலையத்தில் இறக்கி விட்ட ஷக்தியிடம், "நீங்க வீட்டுக்குக் கிளம்புங்க ஷக்தி... நீங்க பொள்ளாச்சி போய்ச் சேர ரெண்டு மணி நேரம்

ஆகும். எங்களுக்குப் பத்தரை மணிக்குத்தான் ட்ரெய்ன். அதுவரை நீங்க இங்க இருக்க வேண்டாம்..." என்று வற்புறுத்தி சஞ்ஜீவ் அவர்களை அனுப்பி வைக்க...

தான்யா, பாரதி இருவரின் மனமும் பிரிவை நினைத்து வாடியது. ஆனால்... வேறு வழியில்லாமல் அவரவர் பாதையில் பிரிந்து சென்றனர்.

ரெயில் நிலையத்தில் இருந்த பயணிகள் அறைக்கு வந்ததும், ஓரமாக இருந்த இருக்கையாகப் பார்த்து அமர்ந்த சஞ்ஜீவ், அவன் அருகில் அமர்ந்த பாரதியைப் பார்த்து, "என்ன பாரதி, ரொம்ப டல்லா இருக்க... தான்யாவை விட்டு ஊருக்குப் போறோம்னு ஃபீல் பண்றியா...?" என்றான்.

"ம்ம்... அது இல்ல... தான்யா வீட்ல ஷக்தியோட அத்திம்பேரும், அவரோட அண்ணியும் சரி இல்லை. தான்யா ஏற்கெனவே ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கா... திரும்பவும் அவ கஷ்டப்படுவாளோன்னு கவலையா இருக்கு..." என்று பாரதி தயங்கித் தயங்கிச் சொல்ல...

"நீதான் அந்த ரவியை என் புருஷன் போலீஸ்னு சொல்லி மிரட்டினியே... அதுக்கப்புறமும் அவனுக்குத் தான்யாகிட்ட வாலாட்டத் தைரியம் இருக்குமா என்ன..." என்று சஞ்ஜீவ் கிண்டலாகக் கேட்க...

தான் மறைமுகமாக மிரட்டியதை சஞ்ஜீவ் கவனித் திருக்கிறான் என்று புரிந்து கொண்ட பாரதி புன்னகைத் தாள்.

"ஏன் பாரதி, வினீத்தை மிரட்டும் போதும், ரவியை மிரட்டும் போதும்தான் என் ஞாபகம் வருமா... நான்



போலீஸ் மட்டும் இல்லை... உன்னோட புருஷனும்தான். அதையும் கொஞ்சம் ஞாபகம் வச்சுக்கோ!" என்ற சஞ்ஜீவ் பாரதியைப் பார்த்துக் கண் சிமிட்ட... அவள் முகம் முதன் முறையாக வெட்கத்தில் சிவந்தது.

அரக்கு வண்ணச் சுடிதாரில், கழுத்தில் நான்கு நாட்கள் முன்பு கட்டிய பொன் மஞ்சள் தாலியுடன், முகம் அந்தி வானமாகச் சிவக்க அமர்ந்திருந்தவளை ரசனை யுடன் பார்த்துக் கொண்டிருந்தான் சஞ்ஜீவ்.

பாரதி அவன் பார்ப்பதை உணர்ந்தாலும், அவனைக் கண்டுகொள்ளாமல் வேடிக்கை பார்ப்பது போல் திரும்பிக் கொண்டாள்.

மறுநாள் சென்னையில் வந்து இறங்கிய இருவ ரையும் பார்த்து இரு வீட்டினரும், 'என்ன அதுக்குள்ள வந்துட்டீங்க...!' என்று ஆச்சர்யப்பட...

சௌம்யா அவர்களுக்குள் எதுவும் பிரச்சனையோ என்று ஆர்வமாகப் பார்த்தாள்.

"ஷக்தி ஏற்கெனவே ரெண்டு வாரமா ஹாஸ்பிடல் போகலை... அதனால அவரும், தான்யாவும் ஊட்டியில் இருந்து கிளம்பிட்டாங்க. நாங்களும் வேற எங்காவது போவோம்னு வந்துட்டோம்..." என்று சஞ்ஜீவ் அனைவரும் நம்பும்படி ஒரு காரணத்தைச் சொல்ல... அதைக் கேட்ட வீட்டினரும் சரி என்றனர்.

மறுநாள் விடியற்காலையில் தூங்கிக் கொண்டிருந்த சஞ்ஜீவ் தன் மொபைல் சத்தத்தில்தான் விழித்தான்.

செல்லை எடுத்து யார் என்று பார்க்க... அவனுடன் பணிபுரியும் மதன் அழைத்தான். எதற்கு இந்நேரத்தில் அழைக்கிறான் என்று யோசித்துக் கொண்டே, "சொல்லுங்க, மதன், என்ன விஷயம்?" என்றான்.

சஞ்ஜீவ் நேரடியாக விஷயத்துக்கு வர... மதன் முதலில் தயங்கியவன் பிறகு, "சாரி சார், ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்... அதுதான்..." என்று இழுக்க...

சஞ்ஜீவின் பொறுமை குறைந்து கொண்டே வந்தது. "எனக்குத் தெரியும், மதன்! நீங்க ஏதோ முக்கியமான விஷயம் சொல்லத்தான் போன் பண்ணி இருக்கீங்கன்னு. தயங்காமச் சொல்லுங்க..." என்றான்.

மதனும் சொல்ல ஆரம்பிக்க, அதைக் கேட்க... கேட்க சஞ்ஜீவின் முகம் மாறியது. மதன் சொன்னது முழுவதையும் கேட்ட பின்னர், "சரி. நான் பார்த்துக் கிறேன்," என்று மட்டும் சொல்லிவிட்டுப் போனை வைத்து விட்டான்.

சஞ்ஜீவ் படுக்கையிலிருந்து எழுந்து குளித்துக் கிளம்பிக் காக்கி உடை அணியும் வரை பாரதி எழுந்திருக்க வில்லை... அவன் கண்ணாடியின் முன் நின்று தலை வாரிக் கொண்டிருந்த போதுதான் கண் விழித்தாள்.

பாரதி இரவில் படுத்திருந்தது ஒரு பக்கம். இப்போது எழுந்திருக்கும்போது இருந்தது வேறொரு பக்கம்.

சஞ்ஜீவ் அவளைக் கண்ணாடியில் பார்த்தவன், முகத்தில் புன்னகையுடன் அவள் பக்கம் திரும்ப... பாரதி கண்ணைக் கசக்கிக் கொண்டே சஞ்ஜீவைப் பார்த்தவள்,



அவன் யூனிஃபார்மில் இருப்பதைப் பார்த்து, அடுத்த வாரம் தானே ஆபீஸ் போவேன்னு சொன்னான் என்று குழம்பினாள்.

சஞ்ஜீவ் அவள் அருகில் வந்து, "மேடம்! நல்லாத் தூங்கி எழுந்துட்டீங்களா... ஹனிமூன் கொண்டாடின களைப்பு..." என்று வேண்டுமென்றே பாரதியை வம்பிழுக்க...

அவள் பதில் பேசாமல் சஞ்ஜீவைத் தலை முதல் கால்வரை பார்த்துக் கொண்டிருந்தாள்.

காக்கி உடையில் கம்பீரமாக நின்றவனின் தோற்றம் மனதைக் கவர... அதை வெளிக்காட்டாமல், அலட்சிய மாகப் பார்த்த பாரதி, "ஒண்ணே ஒண்ணு மட்டும்தான் குறையுது. அது மட்டும் இருந்தா... பக்கா!" என்றாள்.

சஞ்ஜீவ் பாரதியின் அருகில் வந்து என்ன என்பது போல் புருவத்தை உயர்த்த... பாரதி குறும்புப் புன்னகை யுடன் சஞ்ஜீவைப் பார்த்தவள், மேஜை மேல் இருந்த பேனாவைக் கையில் எடுத்து, அதை அவன் வயிற்றில் வைத்து அழுத்தி, "தொப்பை மட்டும்தான் மிஸ்ஸிங். அதுவும் இருந்தா பக்கா போலீஸ்தான்!" என்றாள்.

"எனக்குத் தொப்பை வராது... ஆனா, உனக்கு என்னால தொப்பை வர வைக்க முடியும். வர வைக் கட்டுமா...?" என்று சஞ்ஜீவ் சரசமாக அவள் காதின் அருகே குனிந்து கேட்க...

பாரதி சிவக்கத் தொடங்கிய தன் முகத்தைக் கஷ்டப் பட்டுக் கட்டுப்படுத்தியவள்... "ம்ம்... போலீஸுக்குத்தான்

தொப்பை இருக்கணும்..." என்று சொல்லி, சஞ்ஜீவ்வைப் பிடித்துக் கட்டிலில் தள்ளிவிட்டுக் குளியல் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

அவள் தள்ளி விடுவாள் என்று எதிர்பார்த்திராத சஞ்ஜீவ், 'ராட்சஷி! கிரிமினல்ஸைக் கூடச் சமாளிச்சிட லாம். இவளைச் சமாளிக்க முடியலை...' என்று புலம்பிக் கொண்டே எழுந்தவன், தன் உடை கசங்கி இருக்கிறதா என்று பார்த்துவிட்டுக் கீழே இறங்கிச் சென்றான்.

சஞ்ஜீவ் ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருக்க... பாரதி குளித்து முடித்து வந்தவள், அவனுக்குக் காபி கலந்து கொண்டு வந்து கொடுத்து விட்டு, அவளும் அங்கயே அமர்ந்து காபி குடித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அங்கே வந்த சுதாகரன், "என்ன சஞ்ஜீவ்! இன்னைக்குச் சீக்கிரம் கிளம்பிட்ட... அதுவும் நீ அடுத்த வாரம் தானே லீவ் முடிஞ்சு வேலைக்குப் போறதா இருந்தது..." என்று கேட்டார்.

"ஒரு முக்கியமான கேஸ் விஷயமாப் போக வேண் டியதா இருக்குப்பா... அதனாலதான்!" என்றவனின் முகம் இறுக... "சரி. நான் போயிட்டு வரேன்..." என்று எல்லோருக்கும் பொதுவாகச் சொல்லிவிட்டுக் கிளம்பிச் சென்றான்.

அவன் செல்வதையே பாரதி கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஷக்தியும் அன்று மருத்துவமனைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். அவன் பொள்ளாச்சியில் இருக்கும்



ஒரு பெரிய மருத்துவ மனையில் பல் மருத்துவராக வேலை பார்க்கிறான். காலை, மாலை இரு வேளையும் மருத்துவமனையில்தான் இருப்பான். மதிய உணவுக்கு வீட்டுக்கு வருபவன், உணவு அருந்திவிட்டுச் சிறிது நேரம் ஓய்வு எடுத்துவிட்டு, மாலையில் திரும்ப மருத்துவமனை சென்றால்... வீடு திரும்ப இரவு பத்து மணி ஆகும்.

மருத்துவ மனை செல்லாமல் இருந்தபோதே, தான்யாவுடன் நெருங்கிப் பழக முடியவில்லை... இதில் வேலைக்கும் சென்றுவிட்டால் தன் நிலைமை... என்று மனதிற்குள் புலம்பிக் கொண்டே வேலைக்குக் கிளம்பினான்.

தான்யா மனதில் இருந்த குமுறல்களை எல்லாம் கொட்டி விட்டதாலோ என்னவோ அமைதியாக இருந்தாள்.

விஜயா சொன்ன வேலைகளைச் செய்து கொண்டு... தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருந்தாள். அவர்களுக்குள் இன்னும் ஒண்ணும் சரி ஆகவில்லை என்று புரிந்து கொண்டார் விஜயா.

ஷக்தியின் தேவைகள் அனைத்தையும் தான்யா வையே கவனிக்கச் செய்தார். அவனுக்கு உணவு பரிமாறுவது... அவன் தினமும் காலையில் அவன் தந்தைக்கு உதவியாக அவர்கள் விவசாயம் செய்யும் தோட்டத்திற்குச் செல்லும்போது, தான்யாவையும் அவ னுடன் அனுப்பி வைப்பது என்று அவர்கள் இருவரும் சேர்ந்து இருக்கும்படியாகப் பார்த்துக் கொண்டார்.

இதனால் தான்யாவிடம் சில நல்ல மாற்றங்கள் ஏற்படத்தான் செய்தன. அவள் அவளாகவே ஷக்தியின் தேவைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

அங்கே அடுத்த வாரத்தில் இருந்து பாரதியும் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தாள். அவள் வேலை செய்யும் பள்ளியின் பேருந்திலேயே வேலைக்குச் சென்று, திரும்பி வருவாள். சஞ்ஜீவின் அம்மாவும், மாமியாருமே சமையல் செய்வதால், இவள் காலையில் எழுந்து அவர்களுக்கு உதவி செய்துவிட்டு... மதியம் அவர்கள் வீட்டில் யாரும் சாப்பாடு கட்டிக் கொண்டு செல்ல மாட்டார்கள், வீட்டுக்கு வந்தே சாப்பிடுவார்கள். அதனால் பாரதி தனக்கு மட்டும் ஏதாவது சமைப்பாள்.

தக்காளி சாதம், தயிர் சாதம், புலாவ் என்று ஏதாவது ஒன்று செய்து எடுத்துக் கொண்டு செல்வாள்.

அவள் செய்ததில் மிச்சம் இருப்பதை, அவள் மாமனார் விரும்பிச் சாப்பிட்டு விட்டுப் பாராட்டுவார். அதனால்... இப்போது அவருக்கும் கொஞ்சம் சேர்த்துச் செய்கிறாள்.

பாரதியைப் பொறுத்தவரை அவள் யார் வம்புக்கும் போவது இல்லை... வேலை முடிந்து நேராக இங்குதான் வருவாள். இங்கு இரவு உணவுக்கு மாமியாருடனும், பாட்டியுடனும் சேர்ந்து வேலை செய்துவிட்டுத்தான் தன் அம்மாவின் வீட்டுக்குப் போய்ச் சிறிது நேரம் இருந்துவிட்டு வருவாள். இதெல்லாம் செளம்யாவுக்குத்தான் எரிச்சலாக இருந்தது.

சஞ்ஜீவ் ரொம்ப வேலையாக இருந்தான். அவன் எப்போது வீட்டுக்கு வருகிறான் என்றே பாரதிக்குத் தெரியவில்லை... காலை அவள் தூங்கி எழுந்திருக்கும்போதுதான் அவனைப் பார்ப்பாள். அசந்து தூங்கிக் கொண்டி



ருப்பான். அவனை எழுப்பவே மனம் வராது. ஆனால்... அவனாகவே ஆறு மணிக்கு எழுந்து, அவர்கள் வீட்டில் இருக்கும் ஜிம்மிற்குச் சென்று உடற்பயிற்சி செய்வான்.

இப்போது எல்லாம் சஞ்ஜீவ் ஏதோ யோசனையிலேயே இருந்தான். அவனிடம் முன்பு இருக்கும் கலகலப்பு இல்லை. பாரதியை அவன் வம்பு இழுப்பதும் இல்லை. அவனுக்கு வேலையில் ஏதோ பிரச்சனை என்று பாரதிக்குப் புரிந்தது. ஆனால் அதைப் பற்றிப் பேசினால் சஞ்ஜீவ் பேச்சை மாற்றி விடுவான்.

இப்படியே சில நாட்கள் சென்றபோது, சஞ்ஜீவ் ஒரு நாள் வேலை முடிந்து வீட்டுக்கு வந்தவன், அவனுக்குப் பதவி உயர்வு கொடுத்து, அவனைக் கோயம்புத்தூர்க்கு மாற்றி விட்டதாகச் சொல்ல... அதைக் கேட்டு வீட்டில் உள்ள அனைவரும் மகிழ...

சஞ்ஜீவ் முகத்தில் துளிக் கூடச் சந்தோஷம் இல்லை. அவன் பார்க்கும் வேலையில் இடம் மாற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால்... சஞ்ஜீவ் இப்படி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் அளவுக்கு என்ன நடந்தது என்றுதான் பாரதிக்குப் புரியவில்லை.

## 13

தங்கள் அறைக்கு வந்ததும் சஞ்ஜீவ் பாரதியிடம், "நாளைக்குக் கமிஷனர் அவர் வீட்டுக்கு நம்ம ரெண்டு பேரையும் சாப்பிடக் கூப்பிட்டிருக்கார், போகணும்..." என்று சொல்லி விட்டு உடை மாற்ற...

அவனையே பார்த்துக் கொண்டிருந்த பாரதி, "ஏன் சஞ்ஜீவ் ஒரு மாதிரி இருக்க... ஏதாவது பிரச்சனையா? என்கிட்ட சொல்ல மாட்டியா...?" என்று கேட்டாள்.

சஞ்ஜீவ் பாரதியின் அருகே கட்டிலில் வந்து அமர்ந் தவன், "இந்தப் பதவி உயர்வு என்னோட திறமைக்காக வந்தது இல்லை, பாரதி. என்னை இந்த இடத்தில இருந்து அனுப்புறதுக்காகக் கொடுத்தது..." என்று சொன்னவனின் குரலில் அத்தனை வேதனை இருந்தது.

பாரதி அவனையே கவலையாகப் பார்க்க... சஞ்ஜீவ் தொடர்ந்து...

"ஒரு பெரிய அரசியல்வாதியோட பினாமி, ஒரு கொலை கேஸ்ல மாட்டிக்கிட்டான். நான்தான் அவனைப் பிடிச்சேன். அவனை அந்தக் கேஸ்ல இருந்து விடச் சொல்லி எனக்கு ஏற்கெனவே ரொம்ப ப்ரஷர். எனக்கு லஞ்சம் கொடுக்கக் கூட ரெடியா இருந்தாங்க. ஆனா... நான் திட்டவட்டமா முடியாதுன்னு மறுத்ததால, நம்ம கல்யாணத்துக்கு நான் லீவ்ல இருந்த போது... அவ னுக்குப் பதில் வேற ஒருத்தனை அந்தக் கேஸ்க்குள்ள கொண்டு வரப் பார்த்தாங்க.

"எனக்கு மதன் போன் பண்ணி விஷயத்தைச் சொன்னதும், நான் போய் அதைத் தடுத்திட்டேன். இப்ப நான் இங்க இருந்தா தானே பிரச்சனை... என்னை வேற இடத்துக்கு மாத்திட்டா... அதனாலதான் இந்தப் பதவி உயர்வு, இட மாற்றம் எல்லாம்..." என்றான்.

பாரதிக்கு அவன் சொன்னதைக் கேட்டு மிகவும் வருத்தமாக இருந்தது. நாம எவ்வளவு ஈஸியா... இந்தப் போலீஸ் எல்லாம், என்ன பண்றாங்க? இதைக் கூட இவங்களால பண்ண முடியாதான்னு சொல்றோம். ஆனா... அவங்களுக்கு இருக்கிற ப்ரஷர் நமக்குத் தெரி யறது இல்ல... என்று நினைத்தவள், சஞ்ஜீவைப் பார்க்க... அவன் கண் மூடிப் படுத்திருந்தான்.



பாரதியும் விளக்கை அணைத்துவிட்டு, அவன் அருகில் படுத்துக் கொண்டாள்.

மறுநாள் இரவு உணவிற்கு சஞ்ஜீவ், பாரதி கமிஷனர் பார்த்திபன் வீட்டிற்குச் சென்றனர்.

கமிஷனருக்குக் கல்லூரியில் படிக்கும் மகனும், மகளும் இருந்தனர். பாரதி அவர்களோடு பேசிக் கொண் டிருந்தாள்.

சஞ்ஜீவ் அமைதியாக இருப்பதைப் பார்த்த பார்த்திபன், "சஞ்ஜீவ், உன்னோட கோபம், ஆதங்கம் எல்லாமே எனக்குப் புரியுது. நானும் உன்னை மாதிரித் தான் போலீஸ் ஆனதும்... அப்படி இருப்பேன், இப்படி இருப்பேன்னு ஏகப்பட்ட கனவுகளோட இருந்தேன். ஆனா, யதார்த்தத்துல நடந்தது வேற... கண்ணுக்குத் தெரியாத சங்கிலியால நம்ம கைகள் கட்டப்பட்டிருக்கு.

"இதுக்கெல்லாம் மனம் தளர்ந்திடாத! நீ இன்னும் பார்க்க வேண்டியது எவ்வளவோ இருக்கு. இவங்க ஆட்டம் எல்லாம் அவங்க ஆட்சி நடக்கும் வரைதான். ஆனா நாம அப்படி இல்ல... நாம என்னைக்குமே போலீஸ்தான். ஆட்சி மாறட்டும்... இந்தப் பினாமி மட்டும்

இல்லை... அந்த அரசியல்வாதியையும் சேர்த்து உள்ள போட்டுடலாம். இதுக்கெல்லாம் மூட் அவுட் ஆகக் கூடாது. come on, cheer up my boy..." என்றார்.

"நல்லாச் சொல்லுங்க சார்... இவன் ரொம்ப போலீசா இருக்கான். ஒரு வாரமாவே வீட்ல எப்பவும் சோக கீதம்தான்!" என்று பாரதி சஞ்ஜீவைப் போட்டுக் கொடுத்தாள்.

அவள் சொன்னதைக் கேட்டுப் பார்த்திபனும், அவர் மனைவியும் சிரிக்க... சஞ்ஜீவ் அவளை முறைக்க, பாரதி அவனைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்.

அவர்களைக் கவனித்த பார்த்திபனின் மகள் ஷாலினி, "உங்களுக்குச் சஞ்ஜீவ் அண்ணாகிட்ட பயம் இல்லையா...?" என்று கேட்டாள்.

"நான் ஏன் பயப்படணும்?" என்று பாரதி ஆச்சரியப் பட...

"அதானே... யாரைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்கிற... இந்தக் கேள்வியை நீ என்னைப் பார்த்துக் கேட்கணும் ஷாலினி..." என்று சஞ்ஜீவ் சொல்ல...

அவன் சொன்னதைக் கேட்டு ஷாலினி வாய் பொத்திச் சிரிக்க... இப்போது பாரதி அவனை முறைத் தாள்.

"சும்மா சொல்லாதீங்க அண்ணா! உங்களுக்கு அக்காவைப் பார்த்துப் பயமா... நீங்க அவங்களை லவ் பண்ணீங்கதானே..."



"அது என்ன பண்ணீங்க... இப்பவும்தான் லவ் பன்றேன். அது இல்ல மேட்டர். நான் முதல் தடவை பாரதியைப் பார்த்தபோது, அவ என்னைக் கிரிமினலைப் பார்க்கிற மாதிரி ஒரு பார்வை பார்த்தா பாரு... அன்னை யில இருந்து எனக்கு அவளைப் பார்த்தா பயம்தான்..." என்ற சஞ்ஜீவ் பாரதியைப் பார்க்க...

அவள் நீ என்ன வேணா சொல்லிக்கோ... என்பது மாதிரி அலட்சியமாக அமர்ந்து இருந்தாள்.

"அப்படியா பாரதிக்கா! நீங்க அண்ணாவை அப்படியா பார்த்தீங்க...?" என்று ஷாலினி ஆவலாகப் பார்க்க...

"உங்க அண்ணாவை எல்லாம் எப்படித்தான் போலீஸ் வேலைக்கு எடுத்தாங்களோ... சரியான டப்ஸா கண்ணு. என்னைப் பார்த்துப் பையன்னு நினைச்சுப் பேசினார். அப்புறம் அவரைப் பார்த்து முறைக்காம... என்ன செய்வாங்க?" என்று பாரதி சொல்ல...

பார்த்திபன், "பாரதி சொல்றதும் கரெக்ட்தான். தப்பை உன் மேல வச்சிக்கிட்டு, நீ எப்படிப் பாரதியைத் தப்பு சொல்லலாம்...?" என்றார்.

சஞ்ஜீவ் வேகமாகத் தன் பர்சில் இருந்து ஒரு போட்டோவை எடுத்து, ஷாலினியிடம் கொடுத்து, "நீயே இந்தப் போட்டோவைப் பார்த்து, இது பையனா இல்ல பொண்ணான்னு சொல்லு..." என்று கேட்க...

ஷாலினி வாங்கும் முன், அந்தப் போட்டோவை அவனிடம் இருந்து பறித்த பாரதி, அதைத் தர மாட்டேன் என்று அடம் பிடிக்க...

ஷாலினி அவளிடம், "ப்ளீஸ்க்கா... நாங்கதானே. காமிங்க..." என்று கெஞ்ச... பாரதி அவளிடம் இஷ்ட மில்லாமல் போட்டோவைக் கொடுத்தாள்.

போட்டோவைப் பார்த்த ஷாலினி, "வாவ்... இது பாரதி அக்காவா! எவ்வளவு சூப்பரா இருக்காங்க!" என்று சந்தோஷக் கூச்சலிட... அவளிடம் இருந்து எல்லோரும் அந்தப் போட்டோவை வாங்கிப் பார்த்தனர்.

அந்தப் போட்டோ பாரதி பள்ளியில் படிக்கும்போது, பாய் கட் வைத்திருந்த போது எடுத்த போட்டோ.

சஞ்ஜீவ் அந்தப் போட்டோவை வாங்கித் தன் பர்சில் பத்திரப்படுத்தியவன், "சூப்பரா இருக்கா இல்ல... எனக்கு ரொம்பப் பிடிச்ச ஃபோட்டோ!" என்று பெருமையாகச் சொன்னான்.

அவன் பாரதியைச் சீண்டினாலும், அவளை ரொம் பவும் விரும்புகிறான் என்று எல்லோருக்கும் புரிந்தது. ஆனால் அது புரிய வேண்டியவளுக்குப் புரிந்ததா?

கமிஷனர் வீட்டில் இருந்து திரும்பிச் செல்லும் போது, காரில் பாரதி சஞ்ஜீவ்வை வம்பிழுத்தாள்.

"நீ போலீஸ்னு நினைச்சா... பெரிய திருடனா இருப்ப போலயே... அந்தப் போட்டோவை எப்ப சுட்ட...?"

"நம்ம ஃபர்ஸ்ட் நைட் அன்னைக்கு, நீ களைப்புல தூங்கிட்டு இருந்தியே... அப்ப எனக்குத் தூக்கம் வராம என்ன பண்றதுன்னு பார்த்தப்ப... உன்னோட ஆல்பம் இருந்தது. அதை எடுத்துப் பார்த்திட்டு இருந்தேனா... அப்ப இந்தப் போட்டோ அதுல இருந்தது.



"நம்ம பொண்டாட்டி போட்டோ தானே. யார்கிட்ட கேட்கணும்னு நினைச்சு எடுத்து வச்சிக்கிட்டேன்... இதைப் போய் இப்படிப் பொசுக்குன்னு திருடிட்டேன்னு சொல்றியே. உனக்கே நியாயமா...?" என்று சஞ்ஜீவ் சினிமா வசனம் போல் பேச...

"போதும் நிறுத்து. உன்னோட அறுவை தாங்கல... எப்போ கோயம்புத்தூர் போகப் போற...? ஹப்பா! எனக்கு இனிமே ஜாலிதான்..." என்று பாரதி துள்ளலாகச் சொல்ல...

"போகப் போறேன் இல்ல... போகப் போறோம். நான் மட்டும் தனியா இல்ல... நீயும்தான்!" என்றான் சஞ்ஜீவ்.

"நான் எப்படி சஞ்ஜீவ் வர முடியும்? வருஷம் பாதியில ஸ்கூல்ல இருந்து எப்படி வேலையை விட முடியும்?" என்று பாரதி சஞ்ஜீவைப் பார்க்க... அவன் காரை ஓரமாக நிறுத்தியவன்,

"எப்ப பாரு எனக்கு எதிராப் பேசணும்னே பேசக் கூடாது. வேலையை விட்டுட்டு வா... அங்க போய் வேற ஸ்கூல்ல சேர்ந்துக்கோ..."

"அதெப்படி சஞ்ஜீவ், பாதியில விட முடியும்? ஃப்ரெஞ்சு எடுக்க டீச்சர் கிடைக்கிறது அவ்வளவு சுலபம் இல்லை. நீ போ... நான் இந்த வருஷம் முடிச்சிட்டு வரேன்," என்று பாரதி சஞ்ஜீவைச் சமாதானம் செய்ய...

அவன், "இன்னும் ஆறு மாசம் இருக்கு. அதுவரை நான் அங்க தனியா இருக்கணுமா... முடியாது. நீயும்

என்னோட வரணும்," என்று உறுதியாகச் சொல்லிவிட்டு, காரை எடுத்தான்.

அதன் பிறகு இருவரும் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளவில்லை. இருவரும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தனர்.

வீட்டுக்கு வந்ததும் பாரதி, தன் அம்மா வீட்டுக்குச் சென்றுவிட்டு வருவதாகச் சொல்லிச் செல்ல... சஞ்ஜீவ் அவன் வீட்டிற்குச் சென்றான். வீட்டுக்கு வந்த பாரதி யாரோடும் பேசாமல் உம்மென்று இருக்க... வத்சலா அவளை விசாரித்தார்.

"பாருங்கம்மா... இந்த சஞ்ஜீவ், என்னையும் அவரோட கோயம்புத்தூர் வரச் சொல்றார். நான் எப் படிம்மா போக முடியும்?" என்று பாரதி நியாயம் கேட்க...

"ஏன் போகறதுக்கு என்ன... கல்யாணம் பண்ணிட்டு உன்னை இங்க விட்டுட்டு, அங்க சஞ்ஜீவ் தனியா இருக்கணுமா... ஒழுங்கா, உன் புருஷனோட கிளம்புற வழியைப் பாரு..." என்று வத்சலா சொல்ல... ஸ்ரீனி வாசனும், வத்சலா சொல்வதுதான் சரி என்றார்.

"நீங்க எல்லாம் எப்பவும் சஞ்ஜீவ்க்குத்தான் சப்போர்ட் பண்ணுவீங்க..." என்ற பாரதி எழுந்து அவள் வீட்டுக்கு வர... சஞ்ஜீவ் கட்டிலில் படுத்து உறங்கிக் கொண் டிருந்தான்.

எல்லாம் இவனால என்று நினைத்தவள், சென்று கட்டிலில் படுத்தாள். அவள் தூங்கியவுடன், கண் திறந்த சஞ்ஜீவ் அவளைத் தன் அருகில் இழுத்து அணைத்தவன்,



'நீ என் மேல கை, கால் போடாம எனக்குத் தூக்கமே வராதே செல்லம்! உன்னை எப்படிடா விட்டுட்டுப் போவேன்?' என்றவன் அவளை அணைத்தபடி தூங்கினான்.

மறுநாள் பள்ளிக்குச் சென்ற பாரதி... சஞ்ஜீவ் சொன்னதையே யோசித்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்குத் தெரியும், அவளை வருடத்தின் பாதியில் பள்ளியில் இருந்து செல்ல அனுமதிக்க மாட் டார்களென்று... இருந்தாலும் ஒரு முயற்சி செய்து பார்ப்போம் என்று நினைத்தவள், தலைமை ஆசிரியரைச் சந்தித்துத் தன் நிலையைச் சொல்ல... அவர் பாரதி எதிர் பார்த்த பதிலைத்தான் சொன்னார்.

"உனக்கே தெரியும் பாரதி, ஃப்ரெஞ்சு எடுக்க டீச்சர்ஸ் கிடைக்கிறது எவ்வளவு கஷ்டம்னு. எனக்கு உன்னோட நிலைமையும் புரியுது. உனக்குக் கல்யாண மாகி ஒரு மாசம் கூட இன்னும் ஆகலை. ஆனா... எனக்கு வேற வழி இல்லை. நான் வேற டீச்சர் கிடைக்கிறாங் களான்னு பார்க்கிறேன். வேற டீச்சர் கிடைக்கிறவரை நீ வேலையில இருந்துதான் ஆகணும்..." என்றார்.

"வேற டீச்சர் வராம நானும் வேலையை விட்டுப் போக மாட்டேன், மேடம். என்னால பசங்க கஷ்டப்பட நான் விட மாட்டேன்," என்றவள் புன்னகையுடன் தலைமை ஆசிரியரிடமிருந்து விடைபெற்று, அவள் வகுப்பிற்குச் சென்றாள்.

பாரதி பள்ளிக்குச் சென்றதும், தனிமையில் இருந்து சஞ்ஜீவ் யோசித்தபோது, அவனுக்குப் பாரதி தன்னுடன்

வர மறுத்ததற்கான காரணம் நியாயமாகவே பட்டது. அவளை வருடத்தின் பாதியில் வேலையை விட்டுட்டு அவனுடன் வரச் சொன்னது தவறுதான் என்று நினைத் தவன், பாரதியை அழைக்க... மாலை அவள் வேலை செய்யும் பள்ளிக்குச் சென்றான்.

சஞ்ஜீவ் பள்ளி வளாகத்தில் தன் பைக்குடன் பாரதிக்காகக் காத்திருக்க... பாரதி பள்ளி பஸ்ஸில் ஏற வந்தவள், அங்கே சஞ்ஜீவ் நிற்பதைப் பார்த்து ஆச்சரியப் பட்டாள்.

சஞ்ஜீவ் புன்னகையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பாரதியின் கால்கள் அவளையும் அறியாமல் சஞ்ஜீவை நோக்கிச் செல்ல... பாரதி அருகே வந்ததும்... வண்டியில் ஏறி அமர்ந்த சஞ்ஜீவ், "நான் உன்னை வேலைய விட்டுட்டு வரச் சொன்னது தப்புதான், பாரதி! சாரி..." என்றவன், அவளை வண்டியில் ஏறச் சொல்ல... பாரதியும் புன்னகையுடன் அவன் பின்னால் ஏறி அமர்ந்தாள்.

சஞ்ஜீவ் வண்டியைத் திருப்பும்போது அங்கே வந்த சிறுவர்கள் சிலர், "நீங்க யாரு, எங்க மேமை எங்கே கூட்டிட்டுப் போறீங்க?" என்று மிரட்டலாக ஆங்கிலத்தில் கேட்க... சஞ்ஜீவ் அவர்களைப் பார்த்துப் புருவத்தை உயர்த்தியவன்,

"je suis son mari (I'm her husband)" என்று ஃப்ரெஞ்சில் சொல்ல... பாரதி அவனை ஆச்சரியமாகப் பார்க்க... சிறுவர்கள் ஹே... என்று உற்சாகக் குரல் எழுப்பினர்.



சஞ்ஜீவ்வும், பாரதியும் பள்ளி வளாகத்தை விட்டு வெளியே வரும்வரை வழியில் பார்த்த மாணவ, மாணவிகள் பாரதிக்கு bye mam என்று கை ஆட்ட... பாரதியும் பதிலுக்குப் புன்னகையுடன் கை ஆட்டினாள்.

அதை யெல்லாம் பார்த்த சஞ்ஜீவ் முகத்தில் சந்தோஷமும், பெருமிதமும் இருந்தது.

பள்ளியை விட்டுச் சற்றுத் தள்ளி வந்ததும், சஞ்ஜீவ் வண்டியை ஓரமாக நிறுத்த, பாரதி வண்டியில் இருந்து இறங்கி அவன் முன்பு வந்து நின்றவள், "உனக்கு எப்படி ஃப்ரெஞ்ச் தெரியும்...?" என்று ஆவ லாகக் கேட்டாள்.

"நீ என்னை ஃப்ரெஞ்ச்ல திட்டுனா எனக்குத் தெரியணும் இல்ல... அதுதான் நானும் ஃப்ரெஞ்ச் கத்துக்கிறேன்..." என்று சஞ்ஜீவ் சொல்ல... பாரதி அவனை நம்பாமல் பார்த்தாள்.

இதற்கிடையில் புன்னகையை அடக்கி வைத்திருந்த சஞ்ஜீவ், "என்னைக்காவது தேவைப்படும்னு ரெண்டு, மூணு வார்த்தை மனப்பாடம் பண்ணி வச்சிருந்தேன். இன்னைக்குப் பார்த்த இல்ல... அந்த வாலுங்க கிட்ட ஃப்ரெஞ்ச்ல பேசினதும் அரண்டுட்டாங்க இல்ல..." என்று தன் சட்டை காலரைத் தூக்கிவிட...

"யாரு அவங்க பயந்தாங்களா... போனாப் போகு துன்னு உன்னைச் சும்மா விட்டாங்க... அவங்க எல்லாம் யாரு தெரியுமா... என்னோட ஸ்டுடன்ஸ்!" என்று பாரதி பெருமையாகச் சொல்ல... சஞ்ஜீவ் அவளைப் புன்னகை யுடன் பார்த்தான்.

"நீயே ஒரு ரௌடி. உன்கிட்ட படிக்கிற பசங்க வேற எப்படி இருப்பாங்க?" என்றவன் தொடர்ந்து, "இப்ப உனக்குச் சந்தோஷமா... நான் மட்டும்தான் கோயம்புத்தூர் போறேன்," என்று சொன்னபோது,

பாரதியால் உடனே சந்தோஷம் என்று சொல்ல முடியவில்லை... ஏதோ வொன்று தடுத்தது. அதனால் தலையை மட்டும் ஆமாம் என்று ஆட்டினாள்.

சஞ்ஜீவ்வுக்குப் பாரதியின் தடுமாற்றம் புரியாமல் இல்லை. அவர்கள் இருவரும் திருமணமானவர்கள். அதனால்... அவர்களுக்கு இடையே ஏற்படும் ஈர்ப்பு இயல்பானது.

ஆனால் சஞ்ஜீவ்க்கு அது மட்டும் போதாது. அவனுக்குத் தெரியும், பாரதி மனதில் திருமணத்திற்கு முன்பே அவன் இருக்கிறானென்று. ஆனால்... அது பாரதிக்குத்தான் தெரியவில்லை.

அவள் என்றாவது ஒரு நாள் உன்னை விரும்பு கிறேன் என்று சொல்லிவிட மாட்டாளா என்றுதான் சஞ்ஜீவ் காத்திருக்கிறான்.

பாரதி சொல்வாளா...?

## 14

அந்த வார இறுதியில் சஞ்ஜீவ் கோயம் புத்தூர் கிளம்ப... பாரதி அவனுக்குத் தேவை யான உதவிகள் செய்தாள்.

"ஏன் சஞ்ஜீவ், எங்க யாரையும் ஏர்போர்ட் வர வேண்டாம்னு சொல்ற...?" என்று பாரதி சஞ்ஜீவ் பெட்டியை அடுக்கிக் கொண்டே கேட்க...



அவள் அருகில் நின்று கொண்டிருந்த சஞ்ஜீவ், பாரதியின் கை பற்றித் தன் அருகில் இழுத்தவன், "எதுக்கு நீ ஏர்போர்ட் வர இவ்வளவு ஆர்வம் காட்ற...? எனக்கு ஃபேர்வெல் கிஸ் ஏதாவது குடுக்கப் போறியா என்ன... அது அங்க வந்துதான் குடுக்கணும்னு இல்லை. இங்க கூட கொடுக்கலாம்..." என்றான், பாரதியின் உதடுகளைப் பார்த்துக் கொண்டே...

"ரொம்பத்தான் ஆசை... எனக்கு அப்படி எதுவும் கொடுக்கிறதா ஐடியா இல்லை. நீ கிளம்பு..." என்ற பாரதியின் குரலும் குழைந்துதான் வந்தது.

அவ்வளவு நெருக்கத்தில் சஞ்ஜீவின் முகத்தைப் பார்த்ததும், பாரதியின் மனமும் தடுமாறத்தான் செய்தது. அதை அவள் மறைக்கப் பார்த்தும், அவள் கண்கள் சஞ்ஜீவ்க்குக் காட்டிக் கொடுத்தன.

இதழில் புன்னகையுடன் பாரதியைப் பார்த்துக் கொண்டிருந்த சஞ்ஜீவ், "இத்தனை நாள் ஆரம்பிச்சா நிறுத்த முடியாதுன்னு, அமைதியா இருந்தேன். ஆனா... இன்னைக்கு..." என்று இழுக்க...

பாரதி எதை நிறுத்த முடியாதுன்னு சொல்றான் என்று புரியாமல் குழம்பிக் கொண்டிருக்கும் போதே...

சஞ்ஜீவ் பாரதியின் கன்னத்தில் முத்தமிட்டவன், அடுத்து பாரதி உணரும் முன்பே... அவள் இதழ்களையும் சிறை செய்திருந்தான்.

பாரதி சஞ்ஜீவின் முத்த யுத்தத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல், தடுமாறியவள்... விழாமல் இருக்க

அவன் சட்டையைப் பற்ற... அது இன்னும் சஞ்ஜீவ்க்கு வசதியாக ஆனது. அவன் நெடு நேரம் சென்றே பாரதியை விட்டான்.

பாரதியின் உடல் முழுவதும் உள்ள ரத்தம் அனைத்தும் அவள் முகத்திற்கு வந்தது போல் முகம் சிவந்து இருந்தது. பத்ரகாளி என்ன ஆட்டம் ஆடப் போறாளோ என்று நினைத்த சஞ்ஜீவ், வேகமாக அறை யில் இருந்து வெளியே சென்றான்.

சஞ்ஜீவ் வெளியே சென்றதும் அதுவரை முறைத் துக் கொண்டிருந்த பாரதியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

அவள் அவன் பெட்டி அடுக்கும் வேலையைத் தொடர்ந்தாள்.

அன்று மாலை சஞ்ஜீவ் குடும்பத்தினரிடம் விடை பெற்றுக் கோயம்புத்தூர் சென்றான். அவன் இருந்தவரை எதுவும் உணராத பாரதி, அவன் சென்ற அன்றே அவன் இல்லாமல்... வீடே ஏதோ களை இழந்தது போல் உணர்ந் தாள். எப்போதும் படுத்தவுடன் உறங்குபவள், இன்று தூங்க முடியாமல் புரண்டு, புரண்டு படுத்துக் கொண்டி ருந்தாள்.

சஞ்ஜீவ் இல்லாமல் நாட்களைக் கடத்துவது சிரம மாக இருந்தாலும்... பாரதி அதைச் சஞ்ஜீவிடம் காட்டிக் கொள்ளவில்லை. அவனிடம், அவள்... தான் ரொம்ப சந்தோஷமாக, நிம்மதியாக இருப்பதாகவும் சொன்னாள்.



ஆனால்... உண்மையில் அவ்வளவு பெரிய அறையில் தனியாகத் தூங்கப் பயந்து கொண்டு, இரவில் விளக்கைப் போட்டுக் கொண்டே தூங்குவது அவளுக்கு மட்டும்தானே தெரியும்.

ஷக்தியின் அம்மா விஜயா, அவர்கள் இருவரையும் சேர்க்க எடுத்த முயற்சிகள் தான்யாவிற்குப் புரியாமல் இல்லை... அதோடு அவளும் ஷக்தியைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாள்.

தான் அவனிடம் இருந்து விலகி இருந்த போதும், அவன் தன் மீது காட்டும் அக்கறை அவளுக்குப் பிடித்தே இருந்தது. அன்பைக் காட்டுபவனிடம் முகத்தைத் திருப்பிக் கொள்ள அவளால் முடியவில்லை.

அன்று அவர்கள் ஊரில் இருக்கும் கோவிலில் கும்பாபிஷேகம். ஷக்தியின் தந்தை ஈஸ்வர் முன்னின்று அந்த விழாவை நடத்துவதால்... ஷக்தி குடும்பத்தில் எல் லோரும் விடியற்காலையிலேயே எழுந்து கோவிலுக்குக் கிளம்பினர்.

விஜயா தான்யாவை மடிஸார் கட்டிக் கொள்ளச் சொன்னதால்... தான்யா அவளுடைய திருமணத்திற்கு எடுத்த மடிசார் புடவையைக் கட்டிக் கொண்டு தலை நிறையப் பூ வைத்து... அழகாக நடந்து வர... ஷக்தி அவ ளையே கண்ணெடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

விஜயா அவர்கள் இருவரையும் முதலில் போகச் சொன்னார். அதனால் ஷக்தி தான்யாவை அழைத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்றான்.

ஷக்தியும், தான்யாவும் வீடுகள் இருந்த பகுதியைக் கடந்து... வயல் வரப்பில் நடக்கும்போது, ஷக்தி தான்யாவின் கையை மெதுவாகப் பிடித்துக் கொள்ள..

தான்யாவும் கையை உருவிக் கொள்ளாமல் அவனுடன் இணைந்து நடந்தாள்.

அதைப் பார்த்து ஷக்திக்கு ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது. அவன் தான்யாவின் முகம் பார்க்க... அவள் முகம் தாமரை மலர் போல் மலர்ந்து, சிவந்து இருந்தது.

தான்யாவின் மன மாற்றம் ஷக்திக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. அவன் இன்னும் தான்யாவுடன் நெருங்கி நடக்க... அவளும் விலகாமல் அவனுடன் இணைந்து நடந்தாள்.

இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் அடிக்கடி ஓரக் கண்ணால் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

கோவிலுக்கு வந்த ஷக்தி அங்கிருந்த ஆண்களோடு சேர்ந்து கொள்ள... தான்யா பெண்களோடு சேர்ந்து கொண்டாள்.

ஆனால் ஷக்தி, தான்யா இருவரின் பார்வையும் அடிக்கடி சந்தித்து ரகசியம் பேசிக் கொண்டது. இவர்கள் இருவரும் விழிகளால் பேசிக் கொள்வதை அருந்ததி வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கும்பாபிஷேகம் முடிந்து... கோவிலிலேயே மதிய விருந்தைச் சாப்பிட்டுவிட்டு அனைவரும் வீட்டிற்கு



வந்தனர். ஷக்திக்குத் தான்யாவுடன் தனியாகப் பேச வேண்டும் என்று ஆசையாக இருந்தது.

அவன் அதற்காகக் காத்திருந்தான். தான்யா சமையல் அறைக்குச் செல்ல... ஷக்தியும் அவள் பின்னே உள்ளே சென்றவன், "தான்யா!" என்று அழைக்க... தான்யா திரும்பிப் பார்த்தவள், அவனைப் பார்த்துப் புன்னகைக்க...

ஷக்தி தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல், தான்யாவின் இடுப்பில் கை வைத்து அவளை அருகில் இழுக்க... தான்யாவும் வெட்கத்துடன் அவன் மீது சாய்ந்து கொண்டாள்.

ஷக்திக்கு நடப்பதை நம்பவே முடியவில்லை.

அவன் மேலும் தான்யாவை இறுக அணைக்க... வெளியில் யாரோ வரும் சத்தம் கேட்டதும் இருவரும் வேகமாக விலகினர். அருந்ததி தான் உள்ளே வந்தாள். அவளைப் பார்த்ததும் ஷக்தி வெளியே சென்றுவிட... தான்யா தன் சிவந்த முகத்தை மறைக்கப் பெரும் பாடு பட்டாள்.

தான்யா அனைவருக்கும் காபி கலந்து கொண்டே அருந்ததியின் முகத்தைப் பார்க்க... அருந்ததி அப்போதும் தான்யாவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஏதோ தான்யா செய்யக் கூடாத இழிசெயலைச் செய்தது போல் அருந்ததி பார்க்க... அதைப் பார்த்த தான்யாவிற்கு ஆத்திரம் வந்தது.

நான் என் புருஷனோட தானே இருந்தேன்... இவங்க எதுக்கு நம்மளை இப்படிக் கேவலமா ஒரு பார்வை பார்க்கிறாங்க என்று நினைத்துக் கொண்டே, காபி கலந்து எடுத்துக் கொண்டு ஹாலுக்குச் சென்றாள்.

ஷக்தி தான்யா முகத்தை ஆவலாகப் பார்க்க... அவள் வேறு ஏதோ சிந்தனையில் இருந்ததால்... ஷக்தியை நிமிர்ந்தும் பார்க்காமல், காபியைக் கொடுத்து விட்டுச் சென்றாள். ஷக்தியும் மற்றவர்கள் இருப்பதனால் அப்படி இருக்கிறாள் என்று நினைத்தான்.

இரவு படுக்க அவர்கள் அறைக்கு வந்ததும், ஷக்தி ஆசையாகத் தான்யாவைப் பார்க்க... அவள் எப்போதும் போல் கட்டிலின் மறுபக்கத்தில் படுத்திருந்தாள்.

இன்று தான்யா தன்னிடம் நடந்து கொண்டதை வைத்து, ஷக்தி தைரியமாகத் தான்யாவின் அருகே நெருங்கிப் படுத்தவன், அவளைப் பின்னால் இருந்து அணைக்க... தான்யா மெதுவாகத் திரும்பிப் படுத்தவள் ஏதோ சொல்ல வர... ஷக்தி அவள் பேசும் முன் அவள் இதழ்களைத் தன் இதழ்களால் மூடினான்.

சிறிது நேரம் சென்று விலகிய ஷக்தி, தான்யாவின் முகம் பார்க்க... அவள் விழிகள் சிவந்து, கலங்கி இருந்தன.

அதைப் பார்த்து அதிர்ந்த ஷக்தி, "பிடிக்கலையா தான்யா... சாரிடா! உன் மனசு தெரியாம அவசரப் பட்டுட்டேன்..." என்றவன் எழுந்து அமர... தான்யாவும் எழுந்து அமர்ந்தாள்.



"நான் நல்ல பொண்ணு இல்ல தானே ஷக்தி... ஏற்கெனவே ஒரு கல்யாணம் பண்ணிக்கிட்டு திரும்பவும் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டேன். என்னைப் பத்தி தப்பாதான் நினைப்பாங்க!" என்று தான்யா புலம்ப...

அவளைப் பிடித்து உலுக்கிய ஷக்தி, "ஏன் இப்படி எல்லாம் பேசற? உனக்கு முன்னாடி நடந்தது கல்யா ணமா...? அதை நீ மறந்துடு தான்யா... அதுதான் நல்லது!" என்றான்.

"அப்ப ஏன் உங்க அண்ணியும், அத்திம்பேரும் என்னைக் கேவலமாப் பார்க்கிறாங்க. உங்க அண்ணி என்னைச் சாமி ரூம்ல விளக்கு ஏத்தக்கூட விடுறது இல்லை. அவங்க பையனை என்னோட பேசக் கூட விட மாட்டேங்கிறாங்க. உங்க அத்திம்பேர் என்னை எப்பவும் கிண்டலாகவே பேசுறார்..." என்ற தான்யா, தொடர்ந்து... "நான் தப்பானவளா ஷக்தி?" என்று அவன் சட்டையைப் பிடித்து ஆவேசமாக உலுக்க...

"இல்லடா... நீ எனக்குக் கிடைச்ச மிகப்பெரிய வரம். என்னோட தேவதை. அவங்களுக்கு உன்னைப் பத்தி என்ன தெரியும்! நான் உன்னை விரும்பிக் கல்யாணம் பண்ணி இருக்கேன் தான்யா... நீ அதை மறந்துடாத..." என்ற ஷக்தி, தான்யாவைத் தன் தோளில் சாய்த்துத் தட்டிக் கொடுத்தான்.

"நான் நல்ல பொண்ணு இல்லை... அதனால தான் அவங்க என்னை அப்படிப் பார்க்கிறாங்க!" என்று தான்யா சொன்னதையே சொல்லிப் புலம்ப...

'ஒரு ஆண் மூன்று திருமணம் செய்து கொண்டாலும் அவனை ஒன்றும் சொல்லாத இந்தச் சமூகம். அதே... ஒரு பெண் தனக்கு அமைந்த வாழ்க்கை சரி இல்லை என்று, வேறு திருமணம் செய்து கொண்டால்... அவளை மட்டும் ஏன் தவறாகப் பார்க்கிறதோ...' என்று நினைத்து வருந்திய ஷக்தி, தான்யாவைப் பார்க்க... அவள் அவன் மீது சாய்ந்தபடியே உறங்கி இருந்தாள்.

அவளை மெதுவாகப் படுக்கையில் படுக்க வைத்த ஷக்தி, முதலில் தான்யா மனதில் மற்றவர்களால் ஏற்பட்ட தவறான எண்ணத்தை மாற்றி விட்டே... அவளுடன் கூடல் என்று முடிவெடுத்தவன் கண் மூடித் தூங்க முயன்றான்.

## 15

மறுநாளிலிருந்து ஷக்தி, தன் குடும்பத்தினரைக் கவனித்துப் பார்க்க... அவனுக்குத் தான்யா எதையும் மிகைப்படுத்திச் சொல்லவில்லை என்று நன்றாகவே புரிந்தது.

அருந்ததியின் வெறுப்பான பார்வையும், ரவியின் கிண்டலான பார்வையும் அவனுக்கு ஒரு பக்கம் வருத்தத்தையும் மறுபக்கம் கோபத்தையும் தந்தது.

ஷக்திக்கு என்ன செய்வது என்று குழப்பமாக இருந்தது. தான் அதிரடியாக ஏதாவது செய்தால் அது குடும்பத்தில் பிரச்சனையை உருவாக்கும்.

அதோடு ஷிவா மிகவும் கோபக்காரன். அவனுக்கு மட்டும் தான்யாவிடம் அருந்ததி நடந்து கொள்வது பற்றி



தெரிந்தால்... அவன் தன் மனைவியைத் தள்ளி வைக்கவும் தயங்க மாட்டான்.

ஒரு பக்கம் தன் அண்ணன் ஷிவா, இன்னொரு பக்கம் தன் அக்கா ஷரண்யா. அவர்கள் இருவரின் வாழ்விலும் பிரச்சனை வராமல் இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்று ஷக்தி யோசித்துக் கொண்டிருந்தான்.

இரண்டு மூன்று நாட்களாகவே ஷக்தியைக் கவனித்த விஜயா... தனிமையில் அவனிடம் விசாரிக்க... ஷக்தியும் எதையும் மறைக்காமல் தன் அம்மாவிடம் சொன்னான்.

"நானும் கவனிச்சேன் ஷக்தி!" என்று விஜயா சொன்னவுடன் ஷக்தியின் முகம் மாறியது.

"உங்களுக்குத் தெரிஞ்சும், நீங்க ஏன்ம்மா பேசாம இருந்தீங்க?" என்று ஷக்தி தன் ஆதங்கத்தை வெளியிட...

"ம்ம்... வேற என்ன பண்ணச் சொல்ற...? நேரடியாப் பேசினாக் கேட்கலாம். மறைமுகமா ஜாடையா பேசினா என்னன்னு கேட்கிறது?" என்று விஜயா, தன் எண்ணத்தைச் சொல்ல... ஷக்தி அமைதியாக அமர்ந்திருந்தான்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த விஜயாவுக்குத் தன் மகனின் நிலை புரியாமல் இல்லை.

"அம்மா மேல கோபமா ஷக்தி? நான் என்னால முடிஞ்ச அளவு அருந்ததியும், ரவியும் தான்யா வம்புக்குப் போகாமப் பார்த்துகிட்டேன். ஆனா... என்னால எப்பவும்

அவளோட இருக்க முடியாது இல்ல..." என்றவர் தொடர்ந்து...

"எப்படியும் வம்பு பேசுறவங்க பேசத்தான் செய் வாங்க. தான்யாதான் தைரியமா இருக்கணும். அவ மனசுல இருக்கிற தாழ்மை உணர்ச்சி போகணும். நான் எந்தத் தவறும் செய்யலைனு முதல்ல அவ நம்பணும். அவ தைரியமா இருந்தாலே மத்தவங்களுக்கு அவளைப் பத்திப் பேசத் தைரியம் வராது.

"இவ தங்கை பாரதி இங்க வந்திருந்தபோது, அவ கிட்டயும்தான் வேலையைக் காட்டினாங்க. ஆனா... அவ சொன்ன பதிலைக் கேட்டு நானே ஆடிப் போயிட்டேன்..." என்றார்.

"அப்படி என்னம்மா பாரதி சொன்னா...?" என்று கேட்ட ஷக்தியின் முகத்தில் புன்னகை அரும்பியது.

அவனுக்குப் பாரதியைப் பற்றித் தெரியும்தான். இருந்தாலும், அவள் அப்படி என்ன சொல்லியிருப்பாள் என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டான்.

"உன் அத்திம்பேர் அவகிட்ட உனக்காவது இது முதல் கல்யாணமா...னு நக்கலாக் கேட்க... அவ அசர லையே... அது உங்களுக்குத் தேவையில்லாதது. அதைக் கேட்க நீங்க யாருன்னு சொன்னா பாரு... நானே அசந்துட்டேன்.

"ரவி முகத்தை அப்ப பார்க்கணுமே... அதோட சும்மாவா விட்டா... என்னோட புருஷன் போலீஸ்னு மறைமுகமா மிரட்டிட்டுத்தான் போனா..." என்று விஜயா



சிரித்துக் கொண்டே சொல்ல... அதைக் கேட்ட ஷக்தியும் சிரித்தான்.

"சரியான வாலும்மா அவ... புருஷனைக் காட்டி மிரட்டுறாளா... சஞ்ஜீவையே இவதான் மிரட்டி வச்சி ருக்கா... பாவம் அவன்... இவகிட்ட மாட்டிக்கிட்டு முழிக் கிறான். பார்க்கத்தான் ரெண்டு பேரும் எலியும், பூனை யும் மாதிரி சண்டை போடுவாங்க.

"சஞ்ஜீவை விளையாட்டுக்குக் கிண்டல் பண்ணாக் கூட பாரதியால பொறுக்க முடியாது, உடனே சண்டைக்கு வந்திடுவா... அவ புருஷனை அவ மட்டும்தான் டேமேஜ் பண்ணலாம். மத்தவங்க எதுவும் சொல்லக் கூடாது. சஞ்ஜீவும் அப்படித்தான். ரெண்டும் நல்ல ஜோடி!" என்று ஷக்தி சொல்ல... அதை விஜயாவும் புன்னகை யுடன் ஆமோதித்தார்.

தங்கள் அறைக்கு வந்த ஷக்தி தான்யாவைப் பார்க்க... அவள் நன்றாக உறங்கிக் கொண்டு இருந்தாள்.

அவள் அருகில் படுத்தவன், அவன் அம்மாவுடன் இன்று பேசியதை நினைத்துப் பார்த்தான். அவனுக்கு அவன் அம்மா தான்யாவைப் பற்றிச் சொல்வது சரிதான் என்று புரிந்தாலும், தான்யாவின் நிலையில் இருந்து யோசிக்கும் போது... அவள் மேலும் குறை சொல்ல முடிய வில்லை.

ஒன்று அருந்ததியும், ரவியும் திருந்த வேண்டும், அல்லது தான்யா அவர்களைத் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். இந்த இரண்டில் ஏதாவது ஒன்று நடந்தால் தான், இந்தப் பிரச்சனை முடிவுக்கு வரும்.

அது இரண்டும் இப்போதைக்கு நடக்கும் வழி இல் லாததால்... ஷக்தி வேறு வழி யோசித்தான்.

மறுநாளிலிருந்து ஷக்தி மற்றவர் முன்பு தான் யாவை இன்னும் அதிகமாகத் தாங்கினான். நீங்க எல்லாம் என்ன நினைச்சா என்ன... எனக்கு என் பொண்டாட்டிதான் உசத்தி என்பது மாதிரி இருந்தது, அவன் செய்கை.

அவனுக்கு அருந்ததியுடனும், ரவியுடனும் சண்டை போடவோ... இல்லை, அவர்களிடம் ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று கேட்கவோ ஒரு நிமிடம் ஆகாது. ஆனால்... அதனால் பாதிக்கப்படுவது ஷிவாவும், ஷரண் யாவும்தான். அதோடு தன்னால் குடும்பம் பிரிவதிலும் அவனுக்கு விருப்பம் இல்லை. அதனால் அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

ஆனால் அவனுக்குத் தெரியவில்லை, ஒரு நாள் அவன் தன் கட்டுப்பாட்டை இழக்கப் போகிறானென்று.

**ச**ஞ்ஜீவ் கோவையின் புதிய அஸிஸ்டெண்ட் கமிஷனராகப் பதவி ஏற்றவுடன், அவனுக்கு அங்கே நிறைய வேலைகள் இருந்தன. வீட்டில் அவன் மட்டும் தனியே இருப்பதால்... இரவில், நேரம் சென்றே வீடு திரும்புவான். தனியே படுக்கையில் படுத்துக் கொண்டு அவர்கள் திருமணப் படத்தைப் பார்த்துக் கொண்டே உறங் குவான்.

சஞ்ஜீவுடன் பணிபுரிவோர் இவ்வளவு சின்ன வயசுல எவ்வளவு பொறுப்பா வேலை பார்க்கிறார். நேரம், காலம்



பார்க்காம இவரை மாதிரி வேலை பார்க்கிறவங்க, நம்ம ஆபீஸ்ல இருக்கிறது நமக்கெல்லாம் பெருமை என்று சஞ்ஜீவைப் பற்றி உயர்வாகப் பேச... அது சஞ்ஜீவ் காதுக்கு வந்த போது, 'எனக்கு மட்டும் நேரத்தோட வீட்டுக்குப் போக ஆசை இல்லையா... யாரும் இல்லாத வீட்டுக்குப் போய் என்னை என்னடா செய்யச் சொல் றீங்க?' என்று அவனால் மனதிற்குள் புலம்ப மட்டும்தான் முடிந்தது.

அன்று அலுவலகத்தில் சஞ்ஜீவ் வேலையாக இருந்த போது... "ஹாய் சஞ்ஜீவ், தொந்தரவு பண்றதுக்கு சாரி..." என்றபடி ஷக்தி உள்ளே வர...

"வாங்க ஷக்தி, ஒண்ணும் முக்கியமான வேலை இல்லை. தான்யா எப்படி இருக்கா?" என்று சஞ்ஜீவ் புன்னகையுடன் தன் சகலையை வரவேற்றான்.

"நல்லா இருக்கா. அவதான் என்னைப் போய் உன்னைப் பார்த்திட்டு வரச் சொன்னா... ரொம்ப பிஸியா? எப்போ எங்க வீட்டுக்கு வர...?"

"கொஞ்சம் பிஸிதான். சீக்கிரம் வரேன். அதுக்கு முன்னாடி ஒரு தடவை சென்னை போயிட்டு வந்திடுறேன்."

"ஏன் பொண்டாட்டியைப் பார்க்காம இருக்க முடிய லையா.. எப்படி விட்டுட்டு வந்த?"

"நான் எங்கே விட்டுட்டு வந்தேன்... மேடம்தான் வர மாட்டேன்னு சொல்லிட்டாங்க.. நாளைக்கு அவ பிறந்த நாள். அதான் நேர்ல போய்ப் பார்த்திட்டு வரலாம்னு... நான் வரேன்னு அவளுக்குத் தெரியாது."

"ஓ... பாரதிக்கு சர்ப்ரைஸா.. சரி, நான் சொல்லலை..." என்றான் ஷக்தி, புன்னகையுடன்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த ஷக்தி, "சரி. சென்னைக்குப் போயிட்டு வந்த பிறகு, ஒரு நாள் கண்டிப்பா எங்க வீட்டுக்கு வரணும்," என்று சொல்லி விட்டுக் கிளம்ப... சஞ்ஜீவ் அவனை வெளியே வரை சென்று வழியனுப்பினான்.

சஞ்ஜீவ் அன்று இரவு பத்து மணிக்கு விமானம் மூலம் சென்னை வந்து இறங்கியவன், அவன் வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது நேரம் பத்து முப்பது.

அந்த நேரத்தில் அவன் அறை ஜன்னல் வழியாகத் தெரிந்த விளக்கு வெளிச்சத்தைப் பார்த்து, நம்ம பொண்டாட்டி இன்னும் தூங்கலையா... என்று ஆச்சரியப் பட்டுக் கொண்டே வாயில் மணி அடிக்க... சுதாகரன் வந்து கதவைத் திறந்தார்.

சஞ்ஜீவ் வருவது வீட்டினர் யாருக்கும் தெரியாது. அவன் குரல் கேட்டு, ஒவ்வொருவராக வந்து அவனிடம் நலம் விசாரிக்க... பாரதி மட்டும் வரவில்லை. சஞ்ஜீவ் அவள் வருகிறாளா என்று ஆவலாக மாடிப் படியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அதைக் கவனித்த சரவணன், "என்னடா?" என்று கேட்க...

"பாரதி இன்னும் தூங்கல போலிருக்கு... எங்க ரூம்ல லைட் எரியுது. அதுதான் அவ வராளான்னு பார்க்கிறேன்," என்று சஞ்ஜீவ் சொல்ல..



அவனைப் பார்த்துக் கிண்டலாகச் சிரித்த சரவணன், "அவ தினமும் லைட் போட்டுட்டுத்தான் தூங்குறா... தனியா தூங்கப் பயம் போல..." என்று சொல்லி விட்டு அவன் அறைக்குச் செல்ல... சஞ்ஜீவ் தலையில் அடித்துக் கொண்டான்.

'மனசுக்குள்ள பயத்தை வச்சிக்கிட்டு எல்லாரையும் பார்வையாலேயே மிரட்டறது... இருடி, உன்னைக் கவனிக்கிறேன்!' என்று நினைத்தபடி, மாடிப்படி ஏறிய சஞ்ஜீவ், தன்னிடம் இருந்த சாவியால் கதவைத் திறக்க முயல... அவனால் கதவைத் திறக்க முடியவில்லை.

பாரதி உள்ளே தாழ்ப்பாள் போட்டிருந்தாள்.

சஞ்ஜீவ் மெதுவாகக் கதவைத் தட்டிப் பார்க்க... பாரதி எழுந்து வரவில்லை.

சஞ்ஜீவ் மறுபடியும் சற்றுப் பலமாகத் தட்ட... அந்தச் சத்தத்தைக் கேட்டுச் சரவணன் வெளியே வந்தான். ஆனால் அப்போதும் பாரதி வந்து கதவைத் திறக்கவில்லை.

சஞ்ஜீவ் அவனுடைய கைபேசியில் பாரதியை அழைக்க... அவள் எடுக்கவில்லை... தொடர்ந்து சஞ்ஜீவ் அழைத்துக் கொண்டே இருக்க... பாரதி போனை எடுத்தாள்.

"ஹலோ பாரதி, நான் சஞ்ஜீவ்..." என்று சஞ்ஜீவ் சொல்லிக் கொண்டிருக்கும் போதே...

"நைட் எதுக்குத் தூங்க விடாம தொந்தரவு பண்ற... உனக்கு இதே வேலையாப் போச்சு. காலையில போன்

பண்ணு...” என்று சொல்லி விட்டுப் பாரதி போனை வைத்து விட்டாள்.

அடிப்பாவி என்னைப் பேசக்கூட விடாம, இவளா ஒண்ணு நினைச்சிக்கிட்டு வச்சிட்டாளே... என்று திரும்ப சஞ்ஜீவ் பாரதியை அழைக்க... போனை எடுத்த பாரதி, “எதுக்குடா இப்படி என்னைத் தூங்க விடாம கொல்ற...” என்று அழ...

சஞ்ஜீவ்க்குக் கோபம் தலைக்கு ஏறியது. பத்தரை மணிக்கு ஏதோ நடு ராத்திரி மாதிரி பண்ற அலும்ப பாரு... என்று எரிச்சல்பட்டவன், “ஏய் லூசு! நான் நம்ம ரூம்க்கு வெளியேதான் இருக்கேன். வந்து கதவைத் திறடி!” என்று கத்தினான்.

அவனுக்கு ஏற்கெனவே சரவணனும், சௌமியா வும் அவனை வேடிக்கை பார்ப்பது வேறு எரிச்சல்.

பாரதிக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை... சிறிது நேரம் சென்றுதான் சஞ்ஜீவ் என்ன சொன்னான் என்று யோசித்தாள்.

அதற்குள் சஞ்ஜீவ் கதவை மறுபடியும் தட்ட... பாரதிக்கு அப்போதுதான் அவன் அறைக்கு வெளியே நிற்கிறான் என்று புரிந்தது.

வேகமாக எழுந்து சென்று கதவைத் திறந்தாள். கோபத்தில் இருந்த சஞ்ஜீவ் பாரதியைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றவன், அவளை விட்டுவிட்டுக் கட்டிலில் சென்று விழுந்தான்.



‘ஹப்பா... ஒரு மனுஷன் அவன் ரூமுக்குள்ள வர்றதுக்கே இந்தப் பாடு பட வேண்டியதிருக்கே... இதுல இன்னும் மத்ததுக்கு...’ என்று நினைத்தவன், பாரதியைப் பார்க்க... அவள் இன்னும் தூக்கம் கலையாமல், சஞ்ஜீவ் வந்தது கனவா அல்லது நிஜமாக என்று புரியாமல் முழித்துக் கொண்டு நின்றாள்.

‘பத்து நாள் கழிச்சுப் புருஷன் வந்திருக்கான். அவனைப் பார்த்ததும் ஓடி வந்து கட்டிப் பிடிப்போம், முத்தம் கொடுப்போம்னு இல்லாம நின்னுகிட்டே தூங்குறா பாரு... இவளை வச்சிகிட்டு நான் குடும்பம் நடத்திப் புள்ள குட்டி பெத்த மாதிரிதான்...’ என்று மனதிற்குள் நொந்தவன் பேசாமல் குப்புறப் படுத்துத் தூங்க...

சிறிது நேரம் சென்றுதான் பாரதிக்கு அவன் நிஜமாகவே வந்திருக்கிறான் என்று புரிந்தது. அவள் பேச வாயைத் திறக்கும் முன் சஞ்ஜீவ் குப்புறப் படுத்துத் தூங்க... அவனுக்குக் களைப்பாக இருக்கும் என்று நினைத்துப் பாரதியும் விளக்கை அணைத்துவிட்டு, அவன் அருகில் சென்று படுத்துக் கொண்டாள்.

பத்து நாள் கழிச்சு வந்திருக்கேன், ஏதாவது பேசு றாளா பாரு. நல்லாப் படுத்துத் தூங்குறா... இவ என்னைக் கொஞ்சம் கூடத் தேடவே இல்லையா... நான்தான் எப்ப பாரு இவளையே நினைச்சிட்டு இருக்கேன் என்று சஞ்ஜீவ் மனதிற்குள் புலம்ப...

ஏன்... சஞ்ஜீவ் வந்து ஒண்ணுமே பேசலை... ஒரு வேளை கதவைத் திறக்கலைன்னு கோபமா... என்று

பாரதியும் தூங்காமல், மனதிற்குள் குழம்பிக் கொண்டு தான் இருந்தாள்.

சஞ்ஜீவ்க்குப் பாரதி இன்னும் தூங்கவில்லை என்று தெரியும். தூங்கி இருந்தால்தான் இந்நேரம் அவன் மேல் கையையும், காலையும் போட்டிருப்பாளே. இப்படி ஒரே இடத்தில் படுத்திருக்க மாட்டாள் என்று நினைத்தவன், அமைதியாகப் படுத்திருந்தான்.

மணி பன்னிரண்டு ஆனதும், அவர்கள் மெத்தை யின் அருகே இருக்கும் விளக்கைப் போட்ட சஞ்ஜீவ், பாரதியை அணைத்து அவள் கன்னத்தில் முத்தமிட்டு, "ஹாப்பி பர்த் டே பொண்டாட்டி..." என்று வாழ்த்த...

பாரதியும் அவன்புறம் வேகமாகத் திரும்பியவள், முகத்தில் புன்னகையுடன், "தேங்ஸ் சஞ்ஜீவ். உனக்கு என் மேல கோபம் இல்லையா...? ஏன் நீ வந்ததும் என் னோட பேசலை. நான் நீ கோபமா இருக்கியோன்னு நினைச்சேன்!" என்றாள்.

அவளைப் பார்த்துப் புன்னகைத்த சஞ்ஜீவ், "ரொம்ப நேரமா கதவைத் தட்டினேனா... நீ திறக்கலை. அதான் கொஞ்சம் எரிச்சல் ஆகிடுச்சு..." என்றான்.

"சாரி சஞ்ஜீவ். உனக்குத்தான் நான் தூங்கிட்டா எழுந்துக்க மாட்டேன்னு தெரியும் இல்ல. ஆமா... நீ ஏன் களைப்பா இருக்க... நைட் சாப்பிட்டியா இல்லையா...?" என்று பாரதி சரியாக அவன் பசி அறிந்து கேட்டாள்.

அவள் அக்கறையில் மனம் குளிர்ந்த சஞ்ஜீவ், "நான் நைட் சாப்பிட வீட்டுக்கு வந்திடலாம்னு நினைச் சேன். ஆனா... லேட் ஆகிடுச்சு!" என்றான்.



பாரதி, "அதான் உனக்குக் கோபம் வருது... இரு, நான் போய் உனக்குச் சாப்பிட ஏதாவது எடுத்திட்டு வர்றேன்..." என்று எழுந்தாள்.

அவள் கைப் பிடித்து நிறுத்திய சஞ்ஜீவ், "உனக்கு இந்த நேரத்தில தனியாக் கீழே போகப் பயமா இல்லை..." என்று கேட்க...

பாரதி அவனைப் புரியாமல் பார்க்க... "இல்லை. நைட் லைட் போட்டுட்டுத் தூங்குற... அதுக்குத்தான் கேட்டேன்..." என்றதும்,

"நீதான் இப்போ இருக்க இல்ல..." என்று பட்டென்று சொல்லிவிட்டுப் பாரதி வெளியே சென்றுவிட...

பாரதி சொன்னதைக் கேட்ட சஞ்ஜீவ் எப்படி உணர்ந் தான் என்று அவனுக்கே புரியவில்லை. ஆனால் கண்டிப் பாக மகிழ்ச்சி அடைந்தான். நான் உன்னை மிஸ் பண் றேன். நீ இல்லாம இருக்க முடியலை. இப்படி எல்லாம் பாரதி அவனிடம் சொன்னதில்லை.

ஆனால்... அவள் சொன்ன வார்த்தையின் அர்த் தம், நீ இருக்கும்போது எனக்குப் பயம் இல்லை என்பது தான்.

பாரதி மனதில் தன் மேல் காதல், அக்கறை, பாசம் எல்லாம் இருக்கிறது. ஆனால் அதை அவள் வெளிப் படுத்தத் தெரியாமல் இருக்கிறாள் என்று சஞ்ஜீவ்க்குப் புரிந்தது.

ஆனால்... அது பாரதிக்குப் புரிந்த போது காலம் காத்திருந்ததா...?

## 16

பாரதி சஞ்ஜீவ்க்குத் தோசை ஊற்றிக் கொண்டு வந்து பார்த்தபோது, சஞ்ஜீவ் கட்டிலில் சாய்ந்து உறங்கிக் கொண்டு இருந் தான்.

பாரதி அவன் அருகில் அமர்ந்து, அவனை எழுப்ப... கண் திறந்து பார்த்தவன், "ரொம்பத் தூக்கமா வருது பாரதி, சாப்பாடு வேண்டாம்..." என்று சொல்லி விட்டுத் தன் தூக்கத்தைத் தொடர... பாரதி அவனைத் தட்டி எழுப் பினாள்.

"பசியில இருந்திட்டு சாப்பாடு வேண்டாமாம்..." என்றவள், அவளே கொஞ்சமாகத் தோசையை எடுத்துச் சாம்பாரில் தோய்த்து சஞ்ஜீவ்க்கு ஊட்டிவிட...

அட, இது கூட நல்லா இருக்கே என்று நினைத்த சஞ்ஜீவ், அதை வெளியில் சொன்னால்... பாரதி தட்டைத் தூக்கிப் போட்டு விட்டுச் சென்று விடுவாள் என்று அஞ்சி, அமைதியாக அவள் கொடுக்க... கொடுக்க... மூன்று தோசைகளை முழுங்கி விட்டுப் படுத்தான்.

அவன் அருகில் படுத்த பாரதி மெதுவாக, "சஞ்ஜீவ்..." என்று அழைக்க...

சஞ்ஜீவ் அவள் புறமாகத் திரும்பிப் படுத்து, "என்ன பாரதி?" என்றான்.

"எனக்குப் பர்த்டே கிஃப்ட் இல்லையா...?" என்று பாரதி சின்னக் குழந்தை போல் ஆவலாகப் பார்க்க...

"வாங்க டைம் இல்லடா..." என்றான் சஞ்ஜீவ்.



பாரதி அவனை நம்பாமல் பார்க்க... "நிஜமாவே டைம் இல்ல பாரதி. உனக்கு என்ன வேணும்... சொல்லு!" என்றான்.

"எனக்குச் சாக்லேட் கேக் வேணும்."

"நாளைக்கு உனக்கு வாங்கித் தரேன்," என்று சொல்லிவிட்டு சஞ்ஜீவ் கண் மூடித் தூங்க... பாரதியும் தூங்கினாள்.

மறுநாள் காலையில் எழுந்த பாரதி குளித்து, வத்சலா வாங்கிக் கொடுத்த சுடிதார் அணிந்து கொண்டு, குளியல் அறையில் இருந்து வெளியே வந்தவள், கண் ணாடி முன் நின்று தலை துவட்டும் போது, அங்கிருந்த சஞ்ஜீவ்வின் பையைப் பார்த்தாள்.

பிறந்த நாளுக்காக மெனக்கெட்டு வந்தவன், நமக்குப் பரிசு எதுவும் வாங்காமலா வந்திருப்பான் என்ற சந்தேகத்தில், அவன் பையைத் திறந்து பார்க்க.. அதில் ரோஜா நிற ஜார்ஜெட் புடவை ஒன்று, உடல் முழுவதும் சிறு சிறு வெள்ளை நிறக் கற்கள் பதித்து அழகாக இருந்தது.

பாரதி அதை வெளியில் எடுத்துப் பிரித்துப் பார்க்க.. அதன் உள்ளே இருந்து தைக்கப்பட்ட ரவிக்கை விழுந்தது.

பாரு, புடவை வாங்கிட்டு, எதுவும் வாங்கலைன்னு பொய் சொல்றதை... என்று முனகியவள், திரும்பப் புடவையை எடுத்த இடத்தில் வைத்து விட்டுத் தலை வார ஆரம்பித்தாள்.

சஞ்ஜீவ் தூங்கி எழுந்தவன், நேராகக் குளியல் அறைக்குச் செல்ல... பாரதி அவன் குளித்து விட்டு வருவதற்குள் அந்தப் புடவையைக் கட்டிவிட வேண்டும் என்று நினைத்து, போட்டிருந்த சுடிதாரை அவிழ்த்து விட்டு, புடவை மாற்ற... அவள் புடவையைக் கட்ட ஆரம்பிக்கும் போதே... சஞ்ஜீவ் தனது ஷேவிங் செட்டை எடுக்கக் குளிக் காமல் வெளியே வந்து விட்டான்.

திடீரென்று சஞ்ஜீவ் வந்ததும், என்ன செய்வது என்று தெரியாமல் பாரதி மொத்தப் புடவையையும் வாரி, அவள் மேல் போட்டுக் கொள்ள... சஞ்ஜீவும் பாரதியை இப்படி ஒரு நிலையில் பார்ப்போம் என்று எதிர்பார்க் காததால்... முதலில் திகைத்து நின்றவன், பின் பாரதியின் முகத்தைப் பார்த்துவிட்டு, அவளை வம்பு இழுக்கும் ஆசையில்,

“ஏய், நீ எதுக்கு இந்தப் புடவை கட்டின?” என்று முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டு கேட்க... பாரதி பயந்து விட்டாள்.

“அப்ப இது எனக்கு வாங்கின புடவை இல்லையா...?” என்ற பாரதி திகைத்து நிற்கும்போதே... சஞ்ஜீவ் அவள் அருகில் சென்று, அவளைத் தன் கை வளைவுக்குள் கொண்டு வந்தவன்,

“இது என் ஃப்ரெண்ட், அவன் வீட்ல கொடுக்கச் சொல்லிக் குடுத்து விட்டான்...” என்றான்.

“பொய் சொல்லாத... ஜாக்கெட் என்னோட அள வுக்கு இருக்கு...” என்று பாரதி சந்தேகமாகக் கேட்க...



“அப்படியா! எங்கே பார்க்கலாம்?” என்றவன், அவளிடம் இருந்த புடவையை உருவ... பாரதி புடவையை இறுக்கிப் பிடித்தவள், “உதை வாங்கப் போற சஞ்ஜீவ், ஒழுங்கா உண்மையைச் சொல்லு...” என்றதும்.

“உன்னோட ஜாக்கெட் ஒண்ணை, உனக்குத் தெரியாம திருடிட்டுப் போய் அளவு கொடுத்தா... உன் அளவுக்கு இல்லாம...” என்று பாரதியைப் பார்த்துக் கண் சிமிட்டியவன், அவளை இறுக அணைத்துக் கொண் டான்.

பாரதியும் அதுவரை இழுத்து வைத்திருந்த மூச்சை விட்டவள், அவன் மேல் நன்றாகச் சாய்ந்து கொள்ள... சஞ்ஜீவ் மெதுவாகப் பாரதியின் கழுத்து வளைவில் முத்த மிட... பாரதியின் உடல் சிலிர்த்தது.

அவள் எதுவும் சொல்லாததால்... தைரியமாக முன்னேறிய சஞ்ஜீவ், மெதுவாக அவளிடம் இருந்த புடவையை வாங்கி ஓரமாக வைத்தவன், பாரதியின் கட்டிலில் சரிய... இருவருமே இந்த உலகத்தில் இல்லை.

அவள் முகமெங்கும் முத்தமிட்டவன், அடுத்த கட்டத்துக்கு முன்னேறத் துடிக்க... அப்போது பாரதியின் கைபேசி அழைத்தது.

சஞ்ஜீவ் அப்போதும் அவன் வேலையை நிறுத் தாமல் தொடர... பாரதி தன் அருகில் இருந்த செல்லை எடுத்துப் பார்க்க.. அதில் தான்யாவின் பெயரைப் பார்த்ததும், பாரதிக்கு அதுவரை இருந்த மயக்கம்

தெளிந்து, அவள் அக்காவின் திருமணம், அவள் திருமணம் நடந்த சூழ்நிலை எல்லாம் நினைவுக்கு வர... அவள் சஞ்ஜீவ்வை விலக்கினாள்.

திடீரென்று பாரதி எதற்காக விலகுகிறாள் என்று புரியாத சஞ்ஜீவ், "சும்மா இரு பாரதி!" என்று முனகினான்.

பாரதி, "தான்யா போன் பண்றா சஞ்ஜீவ்!" என்று சொல்ல... "அப்புறம் பேசு..." என்றவன், அவள் இதழ் களைச் சிறை செய்ய... பாரதியால் எதுவும் பேச முடிய வில்லை. சிறிது நேரம் கழித்தே சஞ்ஜீவ் நிமிர்ந்தான்.

"நீ சொன்னது எல்லாம் பொய்!" என்று கேட்ட சத்தத்தில்...

திடீர்னு எதுக்கு இப்படிச் சொல்றா என்று நினைத்த சஞ்ஜீவ், அவள் முகம் பார்க்க... பாரதியின் முகம் இறுகி இருந்தது.

"நீ கல்யாணத்துக்கு முன்னாடி எனக்காகக் காத் திருப்பேன்னு சொன்னது எல்லாம் பொய். கல்யாணம் ஆகிட்டா, என்னால ஒண்ணும் பண்ண முடியாதுன்னு நினைச்சுச் சொல்லி இருக்க... உனக்குத் தான்யா வாழ்க் கையைப் பத்தி எந்த அக்கறையும் இல்லை..." என்று பாரதி பேசிக் கொண்டே செல்ல...

"போதும் நிறுத்து... ஏதோ உனக்கு விருப்பம் இல்லாம உன்னைத் தொட்ட மாதிரி சொல்ற... நீயும் இவ்வளவு நேரம் பேசாமத்தான இருந்த..." என்ற சஞ்ஜீவ் எழுந்து அமர...



பாரதி வேகமாகப் போர்வையை எடுத்து அவள் மேல் மூடிக் கொண்டாள்.

அதைப் பார்த்ததும் சஞ்ஜீவுக்கு இன்னும் ஆத்திரம் வர... இவளை ஏதோ கற்பழிக்கப் பார்த்த மாதிரி... என்னமா சீன் போடுறா... என்று நினைத்தவன்,

"இப்ப திடீர்னு என்ன வந்தது? இவ்வளவு நேரம் நல்லாத்தான இருந்த. அதுக்குள்ள என்ன ஆச்சு?" என்று கேட்டவனுக்கு, அப்போதுதான் தான்யா செல்லில் அழைத்தது ஞாபகம் வந்தது.

இவங்க அக்கா நினைப்பு வந்ததும், என்னைக் கழட்டி விட்டுட்டா... என்று நினைத்தவன்.

"உனக்குத் தான்யா சந்தோஷமா இல்லைன்னு தெரியுமா...? நீயா ஏன் ஓவரா கற்பனை பண்ற... தான்யாவை நல்ல இடத்திலதான் கல்யாணம் பண்ணி இருக்கீங்க. அதோட ஷக்தி ரொம்ப நல்லவர். அவர் உங்க அக்காவைப் பார்த்துக்க மாட்டாரா...?" என்று சஞ்ஜீவ் கேட்க... பாரதி அவனைப் பார்க்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அவள் முகத்தைப் பற்றித் தன் பக்கம் திருப்பிய சஞ்ஜீவ், "உன்னை லவ் பண்ணதே தவறு. நான் வேற என்னடி தப்பு செஞ்சேன். உன்னை லவ் பண்ண பாவத்துக்கு, நீ என்னை என்ன வேணா பேசுவியா...?" என்றவன்...

பாரதி வலியால் முகத்தைச் சுருக்குவதைப் பார்த்து, அவளிடம் இருந்து விலகி எழுந்து நின்றவன்,

"நான் திட்டம் போட்டு எதுவும் செய்யலை பாரதி. அது உனக்கே தெரியும். நான் ஒண்ணும் முற்றும் துறந்த துறவி இல்லை. எனக்கு உன்னைப் பார்த்ததும் ஆசை வந்துச்சு. இல்லைன்னு சொல்லலை... என் பொண்டாட்டின்னு உரிமையிலதான் அப்படி நடந்துகிட்டேன். எனக்கு ஒண்ணும் அது தப்பா தெரியலை...

"எனக்கும் தான்யா மேல அக்கறை இருக்கு... அதை விட ஷக்தி மேல நம்பிக்கை இருக்கு. உனக்குத் தான் அது இல்லை..." என்ற சஞ்ஜீவ் அங்கிருந்த புடவையை எடுத்து, பாரதியின் மேல் போட்டு விட்டுக் குளியல் அறைக்குள் சென்றுவிட்டான்.

பாரதிக்குச் சஞ்ஜீவ் சொல்வது உண்மை என்று அவள் அறிவுக்குப் புரிந்தாலும், அதை ஏற்றுக்கொள்ள மனம்தான் இல்லை. தன் அக்கா சந்தோஷமாக வாழ்கிறாள் என்று உறுதியாகத் தெரியாமல், தான் மட்டும் சந்தோஷமாக வாழ்வது அவளுக்குச் சுயநலமாகப் பட்டது. மெதுவாக எழுந்து புடவையைக் கட்டியவள், மீண்டும் ஒரு முறை தலை வாரி முடிக்கும்போது சஞ்ஜீவ் குளியல் அறையிலிருந்து வெளியில் வந்தான்.

சஞ்ஜீவ் பாரதியைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் உடை அணிந்து வெளியே செல்ல... பாரதியும் அவன் பின்னே கீழே இறங்கிச் சென்றாள்.

பாரதிக்கு அவள் புகுந்த வீட்டினர் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்ல... அப்போது அங்கே வத்சலாவும், ஸ்ரீனிவாசனும் வந்தனர். அவர்களும் தங்கள் மகளுக்குப்



பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லிவிட்டு, சஞ்ஜீவ்வையும், பாரதியையும் அவர்கள் வீட்டில் காலை உணவு உண்ண அழைத்தனர்.

சஞ்ஜீவ், "வரோம்... ஆனா அதுக்கு முன்னாடி..." என்றவன், உள்ளே சென்று குளிர்சாதனப் பெட்டியில் இருந்து, நேற்று அவன் வரும்போது வாங்கி வந்திருந்த கேக்கை எடுத்துக் கொண்டு வந்து டேபிளில் வைத்து, பாரதியை வெட்டச் சொல்ல... அவள் ஆச்சர்யமாகப் பார்த்தாள்.

ஏனென்றால் அது அவளுக்கு மிகவும் பிடித்த சாக்லேட் கேக்.

இதய வடிவத்தில் கேக்கின் நடுவே "Happy Birthday to my Love" என்று எழுதியிருந்தது.

பாரதி புன்னகையுடன் கேக்கை வெட்ட... சஞ்ஜீவ் அவனே முதலில் சிறிது கேக்கை எடுத்துப் பாரதிக்கு ஊட்டிவிட... பாரதியும் சஞ்ஜீவுக்கு ஊட்டி விட்டாள்.

அதை எல்லோரும் மகிழ்ச்சியுடன் பார்க்க, சௌமியா பொறாமையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாளாவது இந்த மனுஷன் இப்படி எல்லாம் நம்ம பிறந்த நாளைக் கொண்டாடி இருப்பாரா என்று சரவணன் மேல் சௌமியா கோபம் கொண்டாள்.

அவள் என்ன நினைக்கிறாள் என்று சரவணனுக்குத் தெரியும். அவன் மனதிற்குள், நீ இங்க இருந்தாதான... எப்ப பாரு... உங்க அம்மா வீட்ல போய் உட்கார்ந்துகிட்டா... நான் என்ன செய்யுறது... என்று நினைத்தான்.

பாரதி மற்ற எல்லோருக்கும் கேக் கொடுத்ததும் அவளும் சஞ்ஜீவும், அவள் அம்மா வீட்டுக்குச் சென்றனர். அங்கே சஞ்ஜீவ் ஸ்ரீனிவாசனுடன் பேசிக் கொண்டே சாப்பிட, பாரதியால் அவனுடன் பேச முடியவில்லை.

சாப்பிட்டதும் அவள் பள்ளிக்குக் கிளம்ப,

"இன்னைக்கும் வேலைக்குப் போகணுமா பாரதி... சஞ்ஜீவ் வந்திருக்காங்க. நீ லீவ் போட்டுட்டு வீட்ல இருக்கக் கூடாதா...?" என்று வத்சலா தன் மகளிடம் சொல்ல...

"இன்னைக்குப் பரிட்சைம்மா... பசங்க டவுட் கேட்டா மத்த டீச்சர்ஸ்க்குச் சொல்லத் தெரியாது. நான் போய்த் தான் ஆகணும்," என்ற பாரதிக்குமே வேலைக்குச் செல்ல இஷ்டம் இல்லை. தான் இன்று சஞ்ஜீவை அதிகம் பேசி விட்டோம் என்று அவளுக்குமே புரிந்துதான் இருந்தது.

முதலில் சஞ்ஜீவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அது இப்போது முடியாது. மாலை பள்ளியில் இருந்து வந்ததும் பேசிக் கொள்வோம் என்று நினைத்தவள், மனமில்லாமல் சஞ்ஜீவிடம் சொல்லிக் கொண்டு பள்ளிக்குக் கிளம்பினாள்.

பள்ளியில் அவளுக்கு நிற்கக் கூட நேரம் இல்லை. ஐந்தாம் வகுப்பில் இருந்து, ஒன்பதாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு இன்று ஃப்ரெஞ்ச் பரிட்சை. அவள் ஒவ்வொரு வகுப்பிற்கும் சென்று, அவர்களுக்கு எதுவும் சந்தேகம் இருக்கிறதா என்று கேட்டு, அப்படி இருந்தால்... அதைத் தெளிவு படுத்திவிட்டு வந்தாள்.



பாரதி மாலை பள்ளியில் இருந்து வெளியே வரும் போது, ஒரு வேளை சஞ்ஜீவ் வந்திருப்பானோ என்று அவள் கண்கள் தேடத்தான் செய்தன.

எப்போதும் சஞ்ஜீவோடு அவள் சண்டை பிடிப்பதும், அதற்குப் பின் அவன் அவளைச் சமாதானப்படுத்துவதும் அவர்களுக்குள் வாடிக்கை என்பதால்... இந்தத் தடவையும் அது போல் நினைத்திருந்தாள்.

அவளுக்கு இன்னும் அவள் பேசிய வார்த்தையில் இருந்த வீரியம் புரியவில்லை. அது சஞ்ஜீவை ரொம்பக் காயப்படுத்தியதையும் அவள் அறியவில்லை.

பாரதி ஆவலாக அவர்கள் வீட்டிற்கு வந்தபோது... சஞ்ஜீவ் அங்கே இல்லை. பாரதி அவர்கள் அறையில் சென்று பார்க்க... அங்கேயும் அவன் இல்லை. அவர்கள் அறையில் உள்ள பொருட்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டு, அறை பெருக்கிச் சுத்தம் செய்யப்பட்டிருந்தது.

சஞ்ஜீவ்தான் செய்திருக்கிறான். எப்போதும் பாரதி தான் செய்வாள். இன்று காலையில் நடந்த கலவரத்தில், நேரம் இல்லை என்று அப்படியே விட்டுவிட்டுச் சென்றிருந்தாள்.

பாரதி சஞ்ஜீவின் பையைத் தேடிப் பார்க்க... அது அங்கே இல்லை. அப்போதுதான் அவளுக்குச் சஞ்ஜீவ் கோயம்புத்தூர் சென்று விட்டான் என்று புரிந்தது.

ஏனோ தெரியவில்லை, அது பாரதிக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தந்தது. சொல்லிக்காமப் போயிட்டானே

என்று நினைத்தவளுக்கு அழுகையாக வர, ஏதாவது முக்கியமான வேலை வந்திருக்கும். அதான் சொல்லாம போய்ட்டான் என்று நினைத்தவள், தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு கீழே சென்றாள்.

கீழே ராதாவும் அதையேதான் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தார். அப்படி என்ன வேலையோ... வந்த உடனே கிளம்பிப் போய்ட்டான்.

பாரதிக்கு அன்று வேலை செய்யவே பிடிக்க வில்லை. அவள் ராதாவிடம், தனக்குத் தலை வலிக்கிறது. அதனால் தன் அறைக்குப் போகிறேன்... என்று சொல்லி விட்டு மாடிப்படி ஏற...

சஞ்ஜீவின் பாட்டி, "நான் சொல்லலை... வந்த புதுசுல எல்லோரும் ஓடியாடி வேலை செய்வாங்க. அப்புறம் நம்ம தலையில வேலையைக் கட்டிடுவாங் கன்னு..." என்று சத்தமாகப் புலம்ப...

அதைக் கேட்ட பாரதி, அவள் அறைக்குச் சென்று உடை மாற்றி, முகம் கழுவி வந்தவள், எப்போதும் போல் இரவுச் சமையலுக்கு உதவி செய்து விட்டு பசி இல்லை என்று சொல்லிப் படுக்கச் சென்றாள்.

பாரதி அவள் அறைக்கு வந்து, கதவைச் சாத்தி யதும் சஞ்ஜீவோடு செல்லிலாவது பேசுவோம் என்று நினைத்து, அவனை அழைக்க... சஞ்ஜீவ் போனை எடுக்கவில்லை.

பாரதி திரும்ப அழைக்க... செல் ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தது.



பாரதிக்கு அப்போதுதான் சஞ்ஜீவ் கோபத்தில் கிளம்பிச் சென்றிருக்கிறான் என்று புரிந்தது. பாரதி கட்டுப் படுத்த முடியாமல் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

அங்கே ரெயிலில் அமர்ந்திருந்த சஞ்ஜீவ்... என்ன வெல்லாம் பேசிட்டா... இன்னும் நான் அவ மேல வச் சிருக்கற காதலைப் புரிஞ்சிக்கவே இல்லையே.. இனி நான் வேணும்னா... அவதான் என்னைத் தேடி வரணும். நான் அவளைத் தேடிப் போக மாட்டேன் என்று முடிவெடுத்தான்.

## 17

அருந்ததியின் தம்பிக்குத் திருமணம். அவள் புகுந்த வீட்டினர் அனைவரையும் வருந்தி அழைத்தவள், தான்யாவை மட்டும் அழைக்கவில்லை.

அவளுக்கு எப்படியும் தான்யா வருவாள் என்று தைரியம். அதைக் கவனித்துக் கொண்டிருந்த ஷக்தி மனதில், அவன் போட்டு வைத்திருந்த கட்டுப்பாடு எல்லாம் விலக ஆரம்பித்தது. அவன் அப்போதைக்கு எதுவும் சொல்லவில்லை, அமைதியாக இருந்தான்.

திருமணத்திற்கு முன் தினமே ஷக்தி வீட்டினர் அனை வரும் அருந்ததியின் தம்பி திருமணத்திற்குச் சென்று விட... ஷக்தியும், தான்யாவும் மட்டும் வீட்டில் இருந்தனர்.

மறு நாள் தாலி கட்டும் நேரத்தில் ஷக்தி மட்டும் சென்று சிறிது நேரம் நின்றுவிட்டு வந்தான். ஷிவா ஏன் தான்யா வரவில்லை என்று கேட்டதற்கு, அவளுக்கு உடம்பு சரி இல்லை என்று சொல்லிவிட்டான்.

அருந்ததிக்கு மனதிற்குள் உறுத்தலாக இருந்தது. தான் தான்யாவைத் தனியாக அழைக்காததால்தான், அவள் திருமணத்திற்கு வரவில்லையோ... இது மற்றவர் களுக்குத் தெரிந்தால்... தன்னைப் பற்றி என்ன நினைப் பார்கள் என்று முதல் தடவையாகக் கவலைப்பட்டாள்.

தான்யா திருமணத்திற்கு மட்டும் இல்லை... அதன் பிறகு நடந்த விருந்திற்குமே வரவில்லை. அவள் வர வில்லை என்பதை விட, ஷக்தி அவளை வர வேண்டாம் என்று சொல்லிவிட்டான்.

அது ஏன் என்று தான்யாவிற்கும் புரிந்துதான் இருந்தது. இங்கயே தன்னைக் கேலி பேசும் அருந்ததி, இன்னும் அவள் வீட்டிற்கு வேறு சென்றால்... என்னென்ன பேசுவாளோ என்று பயந்து கொண்டுதான் இருந்தாள்.

அதனால் ஷக்தி வர வேண்டாம் என்றதும், தான்யா நிம்மதியாக வீட்டில் இருந்து விட்டாள்.

அருந்ததி இல்லாததால் வீட்டில் சுதந்திரமாக நடமாடி யவள், ஸ்வாமி அறைக்குச் சென்று விளக்கேற்றிப் பாட்டுப் பாடி மகிழ்ச்சியாக இருந்தாள். அவளுடைய முகத்தில் இருந்த மலர்ச்சியைப் பார்த்த ஷக்தி ஒரு முடிவுக்கு வந்தான்.

தன் தம்பியின் திருமணம் முடிந்து வந்த அருந்ததி, அதன் பிறகு அடக்கி வாசித்தாள். அவளுக்கு ஷக்தி தன் மீது கோபமாக இருக்கிறான் என்று புரிந்தது.

அவன் வேறு ஷிவாவிடம் ஏதாவது சொல்லித் தொலைத்தால்... அவன் ருத்ர தாண்டவம் ஆடி விடு வான். எதற்கு வம்பு என்று பேசாமல் இருந்தாள்.



அன்று ஷரண்யா, தன் கணவனுடன் பிறந்த வீட்டிற்கு வந்திருந்தாள். எல்லோரும் ஹாலில் அமர்ந் திருந்த போது, இதுதான் சரியான நேரம் என்று நினைத்த ஷக்தி, “அப்பா... நான் கோயம்புத்தூரில் இருக்கிற ஹாஸ் பிடல்ல வேலைக்குச் சேர்ந்திடலாம்னு இருக்கேன். அதனால தான்யாவோட அங்கே வீடு பார்த்துப் போயிடு றேன்...” என்று ஒரு குண்டைத் தூக்கி அலுங்காமல் போட... அதைக் கேட்ட தான்யா உட்பட எல்லோரும் அதிர்ந்தனர்.

“திடீர்னு ஏன்ப்பா இப்படி ஒரு முடிவு... உனக்கு இங்க இருக்கிற ஹாஸ்பிடல்ல வேலை பார்க்கிறதே... நல்லாதானே இருக்கு...” என்று ஈஸ்வரன் கேட்க...

“வேலை ஒண்ணும் பிரச்சனை இல்லைப்பா. ஆனா... என்னோட கல்யாணத்தைப் பத்தி சிலர் விமர் சிக்கிறதா என் காதுல விழுந்தது. என்னால எதுக்கு உங்களுக்கு எல்லாம் பிரச்சனை... அதனாலதான் நான் தனியா போயிடலாம்னு பார்க்கிறேன்...” என்று ஷக்தி விளக்கினான்.

அவன் ஏதோ காரணமாகத்தான் அப்படிச் சொல் கிறான் என்று புரிந்து கொண்ட ஈஸ்வர் அமைதியாக இருக்க...

“கல்யாணம் உன்னோட சொந்த விஷயம். அதோட நீ எங்களோட முழுச் சம்மதத்தோடதான் தான்யாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டே... அப்படி இருந்தும் உங் களைப் பற்றி யார் பேசுறது... அவங்களுக்குத் தைரியம்

இருந்தா என்கிட்ட வந்து பேசச் சொல்லு, பார்க்கலாம்!" என்று ஷிவா கோபமாகப் பேச...

ஷக்தி, அருந்ததியையும், ரவியையும் ஒரு பார்வை பார்க்க... இருவருமே அரண்டு விட்டனர்.

அருந்ததி, "தான்யா! நீ இன்னும் சாப்பிடலையே... வா, நம்ம ரெண்டு பேரும் சேர்ந்து சாப்பிடலாம்," என்று சமாதானக் கொடி பறக்கவிட...

"நீ வாழ்க்கை இழந்த பெண்ணுக்கு வாழ்க்கை கொடுத்திருக்க... உன்னோட நல்ல மனசு புரியாம... யாரு உங்களைப் பத்தி தப்பாப் பேசுனது. நீ என்கிட்ட இதைப் பத்தி ஒரு வார்த்தை சொல்லி இருந்தா... நானே அவங்களை உண்டு இல்லைன்னு பண்ணி இருப் பேனே..." என்று ரவி சண்டைக்கு வரிந்து கட்டிக் கொண்டு நிற்பதைப் போல் நடிக்க...

"போதும் அத்திம்பேர்! எதுக்குப் பெரிய வார்த்தை எல்லாம் பேசுறீங்க. நான் தான்யா விஷயத்துல எந்த தியாகமும் பண்ணிடலை. அதோட நான் வாழ்க்கை கொடுக்கிற அளவுக்கு, அவ வாழ்க்கை மோசமாவும் இல்ல. அவளுக்கு நல்ல அப்பா, அம்மா... அவளுக்காக எதையும் செய்யும் தங்கையும் இருக்கா... நான் அவ வாழ்க்கையில வரலைன்னாலும், அவங்க தான்யாவை நல்லபடியாவே வாழ வச்சிருப்பாங்க.

"தான்யாவும் யாரையும் எதிர்பார்த்து இல்லை. அவ படிச்சு நல்ல வேலையில இருந்தா..." என்ற ஷக்தி தான்யாவைப் பார்க்க, அவளும் அப்போது அவனைத் தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.



"எனக்குத் தெரிஞ்சு இப்போ என்னாலதான் தான்யா கஷ்டப்படுறா. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு இந்த ஊருக்கு வந்ததுனாலதான், அவளால வேலைக்கும் போக முடியலை. இப்ப அவ மத்தவங்க பேச்சையும் கேட்கிற மாதிரியும் ஆகிடுச்சு. என்னால அவளுக்கு ஏற்பட்ட பாதிப்பை, நான்தான் சரி செய்யணும். அதனால தான் நாங்க கோயம்புத்தூர் போறோம்னு சொல்றேன்.

"அங்க தான்யா படிப்புக்கு ஏத்த வேலையும் கிடைக்கும். அவ மனசு கஷ்டப்படும்படியான பேச்சையும் கேட்க வேண்டியது இருக்காது..." என்று ஷக்தி பொறுமை யாக விளக்கினான்.

ஷக்தி பேசியதில் இருந்த நியாயத்தைப் புரிந்து கொண்ட ஈஸ்வர், "சரி ஷக்தி, உன்னோட விருப்பப்படியே செய்..." என்று சொல்லிவிட்டு எழுந்து உள்ளே சென்றார்.

ஆனால்... அதைத் தாங்கிக் கொள்ள முடியாத ஷிவா, ஷக்தியின் அருகே வந்து, அவன் சட்டையைப் பிடிக்க... பதறிய விஜயா வேகமாகச் சென்று ஷிவாவைப் பிடித்து இழுக்க...

ஷக்தி பதிலுக்கு ஏதாவது செய்து விடப் போகிறான் என்று பயந்த தான்யா வந்து ஷக்தியைப் பிடித்துக் கொண்டாள்.

அவள் கைகளை விலக்கிய ஷக்தி, ஷிவாவின் கைகளை விலக்காமல் அவனை நிமிர்ந்து பார்க்க...

"யாரோ பேசுறாங்கன்னு, நீ குடும்பத்தை விட்டுப் பிரிஞ்சு போவியா... உன்கிட்ட இருந்து நான் இதை எதிர்

பார்க்கலை ஷக்தி. எதுடா சாக்குன்னு நீ தனியாப் போகப் பார்க்கிற... உனக்கு எங்களை எல்லாம்விட, நேத்து வந்த உன்னோட பொண்டாட்டி பெரிசா போய்ட்டா இல்ல... ச்சே... எக்கேடும் கெட்டுப் போ... இனிமே என்னோட பேசாதே!" என்று வெறுப்புடன் சொன்ன ஷிவா, ஷக்தியின் சட்டையில் இருந்த தன் கைகளை உதறிவிட்டுச் செல்ல...

வெளி ஆளுங்க பேசலை. உன்னோட பொண்டாட்டி தான் பேசறாங்க என்று சொல்ல முடியாமல் தவித்த ஷக்தி கண் கலங்கி நின்றான்.

ஷக்தியின் நிலையும் தெரிந்து, ஷிவாவின் ஆதங்கமும் புரிந்த விஜயாவும், ஷரண்யாவும் மௌனமாகக் கண்ணீர் வடிக்க... இதையெல்லாம் எதிர்பார்த்திராத அருந்ததியும், ரவியும் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்து நின்றனர்.

இருவருக்குமே தங்களால்தான் இந்தப் பிரச்சனை என்று நன்றாகவே தெரிந்தது.

தங்கள் அறைக்கு வந்த ஷக்தி, தான்யா அழுது கொண்டிருப்பாள், அவளை எப்படிச் சமாளிப்பது என்று நினைத்துக் கவலையோடு அவளைப் பார்க்க... அவன் எதிர்பார்ப்பைப் பொய்யாக்கிய தான்யா, வருத்தப்படாமல் மாறாக மகிழ்ச்சியாக இருந்தாள்.

அவளுக்குத் தன்னால்தான் குடும்பம் பிரியப் போகிறது என்று மனதில் குற்ற வுணர்வு ஒரு பக்கம் எழுந்தாலும், தனக்காக ஷக்தி தன் குடும்பத்தை விட்டே விலக நினைக்கிறான் என்பது மகிழ்ச்சியைத் தந்தது.



இனி இந்த அருந்ததி முகத்தையும், ரவியின் முகத்தையும் அடிக்கடி பார்க்க வேண்டியது இல்லை. அவர்களின் கிண்டலான பார்வையையும், குத்தலான பேச்சுக்களையும் கேட்க வேண்டியது இல்லை என்பதே அவளுக்குப் பெரும் நிம்மதியாக இருந்தது.

சஞ்ஜீவ் கோயம்புத்தூர் சென்று இன்றுடன் இரண்டு வாரமாகி விட்டது. அவன் நடுவில் சென்னைக்கு வரவும் இல்லை. பாரதியைச் செல்லில் அழைக்கவும் இல்லை. பாரதி அழைத்தாலும் எடுக்கவில்லை. இரண்டு மூன்று நாட்கள் அவனுடன் பேச முயன்று பார்த்து விட்டுப் பாரதியும் விட்டுவிட்டாள். நீ பேசலைனா போ. எனக்கு என்ன... என்று இருந்தவளின் வீம்பு எல்லாம், அவன் இரண்டு வாரங்களாகியும் வரவில்லை என்றதும் ஆட்டம் காண ஆரம்பித்தது.

பாரதிக்கு எப்போதும் சஞ்ஜீவின் நினைப்புதான். இரண்டு வாரமாகி விட்டது. அவனுடைய கோபம் குறைந்திருக்கும் என்று நினைத்து இன்று மீண்டும் செல்லில் அழைத்தாள்... அவன் தயவு, தாட்சணை பார்க்காமல் செல்லை அணைத்துவிட்டான்.

திமிர் பிடிச்சவன், போன்ல கூடப் பேச மாட்டேங்கிறான். போனை எடுத்துப் பேசினாத்தானே சாரியாவது கேட்க முடியும் என்று நினைத்த பாரதி... இவனோட வேற எப்படி பேசுறது என்று யோசித்தவள், சஞ்ஜீவுக்கு whatsapp-ல் இருந்து ஹாய் என்று மெசேஜ் அனுப்பினாள்.

சஞ்ஜீவ் அவளுக்குப் பதில் அனுப்பவில்லை. ஆனால்... அவன் மெசேஜ் பார்க்கிறான் என்று தெரிந்து கொண்ட பாரதி, அன்றிலிருந்து தினமும் அவனுக்குக் காலை, மாலை, இரவு வேளைகளில் ஏதாவது மெசேஜ் அனுப்புவாள். Good morning, good night, சாப்பிட்டியா, எப்ப இங்க வருவ... இப்படி ஏதாவது அனுப்புவாள்.

தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் அனுப்பியும், சஞ்ஜீவிடம் இருந்து பதில் வரவில்லை என்றதும் சோர் வுற்ற பாரதி, இரவு, படுக்கையில் படுத்துக் கொண்டு அழுதவள், வேகமாக எழுந்து, 'நீ என்னோட பேச மாட் டியா! நான் இப்ப அழறேன் தெரியுமா...' என்று மெசேஜ் அனுப்ப... அதைப் பார்த்தும் சஞ்ஜீவ் பதில் அனுப்ப வில்லை.

அன்று இரவு பாரதி அழுது கொண்டே தூங்கினாள்.

பாரதியின் மெசேஜ் பார்த்த சஞ்ஜீவ்க்கு, அவளை உடனே அழைக்கச் சொல்லி அவனின் உடலும், மனமும் துடிக்கத்தான் செய்தது. தான் அவளை ரொம்பவும் தவிக்க விடுகிறோம் என்று அவனுக்குப் புரிந்துதான் இருந்தது.

ஆனால் அவள் இப்போதுதான் அவனைத் தேட ஆரம்பித்திருக்கிறாள்... உடனே அவளோடு பேச ஆரம் பித்தால்... பாரதி மீண்டும் பழையபடி ஆகி விட்டால்... அதனால் அவள் தன்னைத் தேடி இங்கு வரட்டும் என்று நினைத்த சஞ்ஜீவ், 'சாரிடா கண்ணம்மா...' என்று மனதிற்குள் சொல்லியபடி படுத்திருந்தான்.

பாரதி அவனைத் தேடி வருவாளா...?



## 18

அடுத்த வாரம் தீபாவளி. ஷக்தி - தான்யா மற்றும் சஞ்ஜீவ் - பாரதிக்கு இந்த வருடம் தலைத் தீபாவளி.

அதற்கு எப்படியும் சஞ்ஜீவ் வந்துதான் ஆக வேண்டும் என்று பாரதி தைரியமாக இருந்தாள்.

வத்சலா தன் இரண்டு பெண்களுக்கும் தலைத் தீபாவளிக்குச் சீர் கொடுப்பதற்காக, உடைகள் வாங்கப் பாரதியையும், வனிதாவையும் அழைத்துக் கொண்டு பெரிய துணிக் கடைக்குச் சென்றார்.

பாரதி தனக்கும், தான்யாவிற்கும் ஒரே மாதிரி டிசைனில் வேறு வேறு நிறத்தில் பட்டுப் புடவை எடுத் தவள், அதே போல் ஷக்திக்கும், சஞ்ஜீவ்க்கும் ஒரே நிறத்தில் பேன்ட்டும், வெவ்வேறு நிறத்தில் சட்டையும் எடுத்தாள்.

வத்சலாவும், வனிதாவும் அவர்களுக்குப் புடவை பார்க்கும் நேரத்தில், சஞ்ஜீவ்க்கு அவள் சார்பாகப் பாரதி ஒரு அடர் நீல நிற குர்தா எடுத்தாள். அந்தக் குர்தாவின் கழுத்துப் பகுதியில், தங்க நிற நூலால் வேலைப்பாடு செய்யப்பட்டு மிகவும் அழகாக இருந்தது.

சஞ்ஜீவ் அவள் அம்மா எடுத்த உடையைக் காலை யும், தான் எடுத்ததை மாலையும் போட்டுக் கொள்ளட்டும் என்று ஆசையாக எடுத்தாள்.

இங்கே ஷக்தியின் வீட்டில் ஷிவா ஷக்தியோடு பேசு வதே இல்லை. ஷக்திக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

அவன் யாருக்கு என்று பார்ப்பான். ஷக்தியின் நிலையை அறிந்த விஜயா, ஒரு நாள் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் ஷிவாவிடம் பேசினார்.

"ஷிவா, நீ இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி இருக்கப் போற? நீதான் இந்தக் குடும்பத்துக்கு மூத்த பிள்ளை. நீயே இப்படி நடந்துக்கலாமா...?"

"நான் என்னமா தப்பா நடந்துகிட்டேன். ஷக்தி தான் நம்மை விட்டுத் தனியாப் போறான். அதுல உங்களுக்கு வருத்தம் இல்லையாம்மா...? நீங்க அவனுக்குச் சொல்லக் கூடாதா...?"

"என்ன சொல்லச் சொல்ற, ஷிவா...? உனக்கு ஷக்தியைப் பத்தித் தெரியாதா...? அவன் சென்னையில தான் படிச்சான்... அவன் நினைச்சிருந்தா அங்கேயே இருந்திக்க முடியாதா...? நம்ம கூடச் சேர்ந்து இருக்கணும்னுதான், இங்க வந்து வேலை பார்க்கிறான். அப்படிப்பட்டவன் இப்ப தனியா போறேன்னு சொன்னா, உனக்குப் புரியலையா...? பிரச்சனை வெளியே இல்லை. நம்ம வீட்லதான்..." என்று விஜயா சொல்லியதும்,

ஷிவா அதிர்ச்சியுடன் தன் அம்மாவைப் பார்க்க...

"உங்க அத்திம்பேர் எப்போதும் ஜாடையா தான்யாவைக் கிண்டலாவே பேசுறார். எத்தனை நாள் அவனும் பொறுப்பான். அவன் உங்க அத்திம்பேரை எதாவது கேட்க முடியுமா...? அதையும் மீறிக் கேட்டா, ஷரண்யாவை நம்ம வீட்டோட அனுப்பிடுவாங்க. அதனால்தான் அவன் விலகிப் போறான்..." என்ற விஜயா மறந்தும் அருந்ததியைப் பற்றிச் சொல்லவில்லை.



ஆனால் தனிமையில் இருந்து யோசித்த ஷிவாவுக்கு, ரவி பேசியதற்காக மட்டும் ஷக்தி இந்த முடிவுக்கு வந்திருக்க மாட்டான் என்றே தோன்றியது.

அருந்ததியின் தம்பி திருமணத்திற்குத் தான்யா வராததில் இருந்தே... தன் மனைவியும் தான்யாவை ஏதோ பேசியிருக்கிறாள் என்று புரிந்து கொண்டான்.

அருந்ததிக்குத் தன் சித்தியின் மகளை ஷக்திக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று ஆசை. ஆனால் ஷக்தி முடியாது என்று மறுத்து விட்டதால்... அவள் ஷக்தியின் திருமணத்திற்குக் கூட விருப்பம் இல்லாமல்தான் வந்தாள்.

அருந்ததி தான்யாவுடன் சிரித்துப் பேசி ஷிவா பார்த்ததே இல்லை. ஒவ்வொன்றாக யோசிக்கும் போது ஷிவாவுக்குத் தன் மனைவி மேல் சந்தேகம் வந்தது.

அன்று மாலை ஷிவா அவன் அறையின் கட்டிலில் படுத்திருக்க, அருந்ததி துணி மடித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அங்கே வந்த அவர்கள் மகன் தனுஷ், ஏதோ கணக்குப் புரியவில்லை என்று அருந்ததியிடம் கேட்க, அவள், "உனக்கு வேற வேலையே இல்லடா... இப்பதான் துணி மடிக்க உட்கார்ந்தேன். நீயே இன்னும் ஒரு தடவை நல்லாப் போட்டு பாரு..." என்று சொல்ல... தனுஷ் முகம் வாடிவிட்டது.

"அம்மா வேலையா இருக்காங்கல்ல. நீ போய்த் தான்யா சித்திகிட்ட சொல்லித் தரச் சொல்லு..." என்று ஷிவா சொன்னதும்,

"சித்திகிட்ட பேசினா அம்மா அடிப்பாங்க... எது வேண்டும்னாலும் அவங்களையோ இல்லை பாட்டி யையோதான் கேட்கணும்னு சொல்லி இருக்காங்க..." என்று தனுஷ் அருந்ததியின் குட்டைப் போட்டு உடைக்க...

ஷிவா அருந்ததியைப் பார்த்த பார்வையில், அவள் உடல் நடுங்க எழுந்து நின்றாள்.

"அம்மா சித்தியைத் தொந்தரவு பண்ணக் கூடா துன்னு அப்படிச் சொல்லியிருப்பாங்க..." என்று ஷிவா, அந்தப் பிஞ்சு மனதில் நஞ்சைக் கலக்க வேண்டாம் என்ற எண்ணத்தில் சொல்ல...

"இதையேதான் ஷக்தி சித்தப்பாவும் அன்னைக்குச் சொன்னாங்க. நான் அம்மா மதியம் தூங்கும் போது சித்தப்பா ரூமுக்குப் போய் விளையாடுவேனா... அப்ப சொன்னாங்க. அப்பா, நான் போய் சித்திகிட்ட படிக்கவா...?" என்று தனுஷ் ஏக்கமாகக் கேட்க...

ஷிவா சரி என்று அவனை அனுப்பிவிட்டுத் திரும்பி அருந்ததியைப் பார்க்க... அவள் கண் கலங்கி நின்றாள்.

"என் பக்கம் தப்ப வச்சிக்கிட்டு, நான் ஷக்தி மேல கோபப்பட்டிருக்கேன். ஏதோ அவன் பொண்டாட்டி பேச்சைக் கேட்டுட்டு ஆடுற மாதிரி. கடைசியில பார்த்தா என் பொண் டாட்டிதான் சரி இல்லை..." என்றவன், தொடர்ந்து,

"இனி நான் அவன் முகத்தில எப்படி முழிப்பேன்? அம்மா கூட என்கிட்ட எதையும் சொல்லலை. ஆனா... அவங்களுக்குக் கண்டிப்பா தெரிஞ்சிருக்கும்," என்றவன் தலையைத் தன் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு படுக்கையில் அமர...



அருந்ததி நடுக்கத்துடன் அவன் அருகில் சென்று, அவன் தோளைத் தொட... ஷிவா வேகமாக எழுந்து, அவள் கன்னத்தில் ஒரு அறை விட்டவன், அவள் அதிர்ந்து நிற்கும்போதே, "நீயெல்லாம் பொம்பளையாடி! ஒரு சின்னப் பொண்ண போய் ஒதுக்கி வச்சிருக்க. இனி ஒரு வார்த்தை நீ என்கிட்ட பேசின, நான் மனுஷனாகவே இருக்க மாட்டேன்..." என்றவன் எழுந்து வெளியே சென்று விட்டான்.

அன்றிலிருந்து ஷிவா அருந்ததியுடன் பேசுவதே இல்லை. ஷக்தியிடம் எப்போதும் போல் பேச ஆரம்பித் தான். அருந்ததி ஷிவா தன்னிடம் இப்படிப் பேசாமல் இருந்து விடுவான் என்று எதிர்பார்க்காததால் அவளுக்கு அது மிகுந்த அதிர்ச்சியாக இருந்தது.

அந்த அதிர்ச்சி அவளுக்குத் தேவைதான். ஏனென் றால் அது அவளிடம் நல்ல மாற்றத்தையும் ஏற்படுத்தியது.

அருந்ததி இப்போது தான்யாவிடம் ஒழுங்காக நடந்து கொண்டாள். தன் மகன் தனுஷையும் தான்யா விடம் பழக விட்டாள்.

அருந்ததியின் மாற்றத்தைப் பார்த்து மகிழ்ந்த விஜயா, அதைத் தன் இளைய மகனிடம் சந்தோஷ மாகப் பகிர்ந்து கொள்ள... "ஆனா... ஷிவா அண்ணா மன்னியோட பேச மாட்டேன்கிறார்மா..." என்றான் ஷக்தி, வருத்தத்துடன்.

"இப்படி அவன் இருந்தாதான் அவ அடங்குவா... எல்லாம் கொஞ்ச நாள்ல சரி ஆகிடும். இப்ப தான்

பிரச்சனை இல்லையே ஷக்தி! அருந்ததி மாதிரி ரவி திருந்துற ஆள் இல்லைதான். ஆனா... அவர் எப்பவோ ஒரு தடவைதான் நம்ம வீட்டுக்கு வருவார். அப்ப அவர் தான்யாவை எதுவும் சொல்லாமப் பார்த்துக்கிறேன்.

"இனியும் நீ தனிக்குடித்தனம் போகணுமா...? நாம எல்லாம் சேர்ந்தே எப்பவும் போல இருக்கலாமே...!" என்று விஜயா ஆசையும், தவிப்புமாக ஷக்தியின் முகம் பார்க்க...

அவன் அம்மா கேட்டதற்கு ஷக்தியால் உடனே சரி என்று சொல்ல முடியவில்லை. ஏனென்றால் இதுவரை தான்யா அவனிடம் தனிக்குடித்தனம் செல்ல வேண்டாம் என்பது மாதிரி எதுவும் சொல்லவில்லை.

அதனால், "கொஞ்சம் யோசிச்சு சொல்றேன்மா..." என்றதோடு, ஷக்தி தன் பேச்சை முடித்துக் கொண்டான்.

விஜயாவும் ஒரு பெருமூச்சுடன் எழுந்து சென்றார்.

தீபாவளிக்கு முன் தினமே ஷக்தியும், தான்யாவும் தலை தீபாவளிக்கு வந்து விட, சஞ்ஜீவைத்தான் ஆளைக் காணோம். சஞ்ஜீவ் வருவானென்று பாரதி பள்ளியில் விடுமுறை சொல்லிவிட்டு வீட்டில்தான் இருந்தாள்.

அவளுடன் சஞ்ஜீவ் பேசாததால், அவளுக்கு அவன் எப்போது வருகிறான் என்று தெரியவில்லை. அது தெரியாத வீட்டினர் அவளிடமே சஞ்ஜீவ் எப்போது வருகிறான் என்று கேட்டால், அவள் என்ன சொல்லுவாள்? 'வேலை முடிஞ்சதும் வருவேன்னு சொன்னாங்க!' என்று மழுப்பலாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.



பாரதி அவள் அம்மா வீட்டில்தான் இருந்தாள். இரவு ஏழு மணி ஆனதும் ஷக்தியும், தான்யாவும் சேர்ந்து பட்டாசு போட... அதை வீட்டினர் வேடிக்கை பார்த்தனர்.

பாரதி ஒரு சேரில் சோர்ந்து போய் அமர்ந்து விட்டாள். தான்யாவும், ஷக்தியும் பட்டாசு வெடிக்க அழைத்ததற்கும் செல்லவில்லை.

மாலை போய் இரவும் வந்து விட்டது, ஆனால்... சஞ்ஜீவ் மட்டும் வரவில்லை. இரவு உணவு முடிந்ததும், வத்சலா தன் இரு பெண்களிடமும் தீபாவளிக்கு வாங்கிய புதிய உடையில் மஞ்சள் வைக்கச் சொன்னார்.

பாரதி ஒவ்வொரு உடையாக எடுத்துக் கொடுக்க, தான்யா அதில் மஞ்சள் தடவினாள். சஞ்ஜீவ்க்கு வாங்கிய சட்டையையும், ஷக்திக்கு வாங்கிய சட்டையையும் கையில் எடுத்த பாரதி, அந்த இரண்டையும் திருப்பித் திருப்பிப் பார்க்க... தான்யா அவளைப் பார்த்து முறைத்தாள்.

"காலையில் இருந்து எத்தனை தடவைடி பார்ப்ப... ரெண்டுல எதைத்தான் சஞ்ஜீவுக்கு எடுக்கப் போற? முடிவு பண்ணிட்டியா இல்லையா...?"

"ஒரே குழப்பமா இருக்கு தான்யா. சஞ்ஜீவ்க்கு இந்த சந்தன கலர்தான் எடுத்தேன். ஆனா... அந்த ப்ளூவும் நல்லா இருக்கற மாதிரி இருக்கு. எனக்கு எதை எடுக்கறதுன்னே தெரியலை..." என்று பாரதி குழப்பத்துடன் சொல்ல...

"பேசாம ப்ளூ கலரே எடு. சந்தன கலர் சஞ்ஜீவை இன்னும் கறுப்பாக் காட்டும்..." என்று தான்யா யோசனை

சொல்ல... அதைக் கேட்ட பாரதிக்குக் கோபம் வந்து விட்டது.

"என்ன சஞ்ஜீவ் கலர் கம்மின்னு சொல்லிக் காமிக் கிறியா... உன் வீட்டுக்காரர் கலர்தான். ஒத்துக்குகிறேன். அதுக்காக நீ சஞ்ஜீவ் கலர் கம்மின்னு சொல்லிக் காமிக்க வேண்டாம். சஞ்ஜீவ் கலர் கம்மியா இருந்தாலும் அழகு, தெரியுமா?" என்று பாரதி கண்களில் கனவுடன் சொல்ல...

"அப்ப என் வீட்டுக்காரர் மட்டும் அழகா இல்லையா...? ஒழுங்கா என் வீட்டுகாரருக்கு எடுத்த சட்டையைக் கொடு!" என்று தான்யா ப்ளூ கலர் சட்டையைப் பிடுங்க...

பாரதி அவளிடம் ப்ளூ கலர் சட்டையைக் கொடுத்து விட்டுச் சந்தன கலர் சட்டைக்கு அவளே மஞ்சள் வைத் தாள்.

"ஓ... உங்க வீட்டுக்காரர் சட்டைக்கு, நீங்கதான் மஞ்சள் வைக்கணுமா?" என்று கிண்டல் செய்த தான்யா, "ஆமா... உன் வீட்டுக்காரருக்கு ஒரு குர்தா வாங்கினியே, நல்ல டார்க் ப்ளூல... அதைப் போட்டா உன் வீட்டுக்காரர் தெரிவார்னு நினைக்கிற..." என்று மேலும் பாரதியை வம்பு இழுக்க...

"சஞ்ஜீவ் ஒண்ணும் கறுப்பு இல்லை. நீ என்னைக் கிண்டல் பண்ணு... எதுக்குச் சஞ்ஜீவை வம்பு இழுக்குற?" என்று கேட்ட பாரதி, தான்யாவை அடிக்கத் துரத்த...

வீட்டில் இருந்த வத்சலாவும், வனிதாவும் தங்கள் கணவன்மாரை விட்டுக் கொடுக்காமல் சண்டை போடும் இரு பெண்களையும் பார்த்து சந்தோஷத்தோடு சிரித்தனர்.



தான்யா உள் அறைக்கு ஓடினாள். ஷக்தி அங்கே தான் இருந்தான். அக்காவும், தங்கையும் சண்டை போடு வதைக் கேட்டுக் கொண்டுதான் இருந்தான்.

ஷக்தியின் அருகே சென்று அமர்ந்த தான்யா, அவன் கையோடு கை கோத்தவள், "பாருங்க. என்னை அடிக்க வர்றா, என்னன்னு கேளுங்க..." என்று சொல்லி உரிமையுடன் அவன் மேல் சாய்ந்து கொள்ள...

"தப்பு உன் மேலதான். நீதான் அவளை வம்பு இழுத்த..." என்று ஷக்தி பாரதிக்குப் பேச...

அதைக் கேட்டுக் கொண்டே உள்ளே வந்த பாரதி, அவர்களின் நெருக்கத்தைப் பார்த்து விட்டுத் தயங்கி நின்றவள், வந்த வழியே திரும்பிச் செல்ல...

அதைக் கவனித்த ஷக்தி, "உள்ளே வா பாரதி..." என்று அழைக்க...

பாரதி, "பரவாயில்லை இருக்கட்டும்..." என்று சொல்லி விட்டு வெளியே சென்றாள்.

வெளியே வந்த பாரதி, தன் அம்மாவிடம் தான் அந்த வீட்டுக்குப் போய்த் தூங்குவதாகச் சொல்ல...

"எதுக்குடி இந்த நேரத்துல அங்க போற... இங்கேயே இரு!" என்றதற்கு,

"இல்லம்மா. சஞ்ஜீவ் நைட் அங்கதான் வரு வாங்க..," என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

பாரதி சென்றதும், ஷக்தி தான்யாவைத் தன் கை அணைப்பில் கொண்டு வந்தவன், "என்ன மேடம்

இன்னைக்கு ஒரு மாதிரி பேசுறீங்க...” என்று புன்னகையுடன் கேட்டுக் கொண்டே, அவள் முகம் பார்க்க,

தான்யா தன் சிவந்த முகத்தை ஷக்தியின் மார்பில் வைத்து அழுத்த...

அதற்கு மேல் விளக்கவும் வேண்டுமா... அங்கே ஷக்தி, தான்யாவின் இல்லறம் நல்லபடியாகத் துவங்கியது.

அது நாள்வரை மனதில் இருந்த குழப்பம், சஞ்சலம் எல்லாம் மறைந்து, தான்யாவின் மனதில் தான் ஷக்தியின் மனைவி என்று பதிந்தது. இனித் தனக்கு அவன் இருக்கிறான். அதே போல் தானும் அவனை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதி பிறந்தது.

பாரதி அவள் அறையின் ஜன்னல் திண்டில் அமர்ந்து, சஞ்ஜீவ் வருகிறானா என்று ரோட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் சஞ்ஜீவைத் தொடர்பு கொள்ள முயன்ற போது எல்லாம், செல் ஸ்விட்ச் ஆஃப் என்றே வந்தது.

சஞ்ஜீவ் சொன்னது போல, தான்யா சந்தோஷமாத்தான் இருக்கா... நாமதான் தேவையில்லாம சஞ்ஜீவைப் பேசிட்டோம்.

சஞ்ஜீவ் கோபத்தில் வராம இருந்திடுவானோ... என்று மனதிற்குள் புலம்பிக் கொண்டு இருந்தாள்.

சஞ்ஜீவ் வருவானா....?



## 19

**தீ**பாவளி அன்று காலை வெடிச் சத்தத்தில்தான் பாரதி கண்விழித்தாள். நேரம் அப்போது ஐந்து மணி.

அவள் எழுந்ததும், முதலில் சஞ்ஜீவைத் தான் தேடினாள். ஒரு வேளை அவள் தூங்கும் போது, வந்திருப்பானோ என்று நினைத்துத் தேடியவள், அவன் அங்கேயில்லை என்றதும், சிறிது நேரம் திரும்பக் கட்டிலில் படுத்து விட்டாள்.

அவளுக்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது. நல்ல நாளும் அதுவுமாக அழ வேண்டாம் என்று நினைத்தவள், எழுந்து அவள் அறையைச் சுத்தம் செய்துவிட்டுக் குளிக்கச் சென்றாள்.

பாரதி அவள் மாமியார் அவளுக்கு எடுத்திருந்த புதுப் புடவையைக் கட்டிக் கொண்டு கீழே இறங்கும் போது, அவளது மாமனார் சஞ்ஜீவ்வுடன் செல்லில் பேசும் சத்தம் கேட்டு அப்படியே நின்றாள்.

“என்ன சஞ்ஜீவ் சொல்ற, நீ வரலையா...? ஏன்டா இப்படி பண்ற? தலை தீபாவளி அதுவுமா வரலைன்னா நல்லாவா இருக்கும். பாரதி கிட்ட சொல்லிட்டியா... முதல்ல அவளுக்குப் போன் பண்ணு...” என்று சொல்லிவிட்டு வைத்தவர், தன் மனைவி ராதாவிடம், “சஞ்ஜீவ் இன்னைக்கு வரலையாம். அவனுக்கு ஏதோ ஸ்பெஷல் டியூட்டி போட்டிருக்காங்களாம்...” என்றார்.

“இவனுக்குத் தலை தீபாவளின்னு சொல்லி லீவ் கேட்கக்கூட முடியலையா...? என்ன வேலையோ...

சொல்ற பேச்சுக் கேட்டாதானே. படிச்ச இன்ஜினீயரிங் படிப்புக்கு வேலைக்குப் போடா. இந்தப் போலீஸ் வேலை எல்லாம் நமக்கு ஒத்து வராதுன்னா, கேட்கலை..." என்று ராதா புலம்ப...

"உன் பையன் வேலை விஷயத்துல மட்டுமா நம்ம பேச்சைக் கேட்கலை. கல்யாண விஷயத்துலயும்தான் கேட்கலை. அப்படி என்ன இவனுக்குத் தலை தீபாவளிக்குக் கூட வர முடியாமப் போகும். கோயமுத்தூர் போனதுக்கு அப்புறம் ஒரு தடவை இங்க வந்தான். அதுவும் வந்த அன்னைக்கே திரும்பிப் போனான்.

"அதுக்கப்புறம் இங்க வரவே இல்லை. ஒழுங்கா நாம சொல்ற இடத்தில் கல்யாணம் பண்ணி இருக்கலாம். லவ் பண்றானாம் லவ்வு. என்ன தகராறோ என்னவோ... புதுசாக் கல்யாணம் பண்ணவன், இப்படியா பொண் டாட்டிய விட்டுட்டு இருப்பான்..." என்று ராதாவின் அம்மா ஒரு பக்கம் புலம்ப,

"ஆமாம் பாட்டி, இவங்க ரெண்டு பேரும் புதுசாக் கல்யாணம் ஆனவங்க மாதிரி இல்லை..." என்று சௌமியா மேலும் பாட்டியைத் தூண்டி விட்டாள்.

'ஆமாம்... இவளை மாதிரி ஊர் ஊரா சுத்தலைன்னு நினைக்கிறா போல...' என்று நினைத்த ராதா, "பாவம், அவளை எதுவும் சொல்லாதீங்க... அவளும் நேத்துல இருந்து வாசலை, வாசலைத்தான் பார்க்கிறா... உன் பேரன் சரியில்லை. அதுக்கு அவள் என்னமா பண்ணுவா?" என்று தன் இளைய மருமகளுக்குப் பரிந்து பேசினார்.



இப்படி ஆளாளுக்கு ஒன்று பேச... இதெல்லாம் பாரதி படியில் நின்று கேட்டுக் கொண்டிருக்கிறாள் என்று யாருக்கும் தெரியவில்லை. பாரதி வந்த வழியே திரும்பி, அவள் அறைக்குச் செல்ல...

மாடியில் நின்று இவர்கள் பேசியதைக் கேட்ட சரவணன், கீழே இறங்கிச் சென்று, "எதுக்கு இப்படித் தேவை இல்லாம பேசுறீங்க, பாரதி எல்லாத்தையும் கேட்டுட்டா..." என்றதும்,

"அவ இங்கேயா இருக்கா... அவ அம்மா வீட்ல இல்லையா...?" என்று சௌமியா மற்றும் பாட்டி இருவரும் வாயைப் பிளக்க,

"அவங்க வீட்டுக்குத் தான்யா வந்திருக்கிறதுனால, இடம் பத்தாதுன்னு நினைச்சாளோ என்னவோ, நேத்து நைட் பத்து மணிக்கு, இங்க வந்துட்டா... நான்தான் கதவைத் திறந்து விட்டேன்..." என்று சுதாகரன் சொல்ல...

"இதை முன்னமே சொல்லி இருக்கக் கூடாதா...?" என்று முகவாயைத் தோளில் இடித்தபடி பாட்டி சமையல் அறைக்குச் செல்ல... ராதா கவலையுடன் தன் கண வரைப் பார்த்தார்.

சிறிது நேரத்தில் மாடியில் இருந்து இறங்கி வந்த பாரதியின் கையில் ஒரு பை இருந்தது. அவள் அம்மா வீட்டிற்குப் போவதற்கு... எதற்கு இத்தனை பெரிய பை என்று எல்லோரும் யோசனையாகப் பார்க்க,

சுதாகரனின் அருகே வந்த பாரதி, "அப்பா, நான் கோயம்புத்தூர் போறேன்..." என்று ஏதோ பக்கத்தில் இருக்கும் கடைக்குப் போவது போல் சொல்ல...

எல்லோரும் திகைத்து என்ன சொல்வது என்று தெரியாமல் பாரதியையே பார்த்தனர். பாரதி அடுத்து அவள் மாமியாரிடம் திரும்பி, "நீங்க பூஜை முடிச்சதும் கிளம்பறேன்மா!" என்றாள்.

"இப்ப திடீர்னு எப்படிம்மா தனியாப் போவே? சஞ்ஜீவ் என்ன சொல்வான்னு தெரியலையே..." என்று சுதாகரன் தயங்க...

"நிறையப் பேர் அவங்க புருஷன் இருக்கற வெளி நாட்டுக்கே தனியாப் போகும் போது, இங்க இருக்கிற கோயம்புத்தூர்க்கு என்னால போக முடியாதா...? நான் பத்திரமா போய்டுவேன்ப்பா. கவலைப்படாதீங்க. சஞ்ஜீவ் தான் எனனை வரச் சொன்னார்..." என்று பாரதி சஞ்ஜீவ் மேல் பழியைத் தூக்கிப் போட்டு விட்டுச் சமையல் அறைக்குள் புகுந்து கொள்ள... அதற்கு மேல் யாராலும் எதுவும் பேச முடியவில்லை.

சுதாகரன் சஞ்ஜீவை செல்லில் அழைக்க, பாரதி யின் நல்ல நேரம் அவன் எடுக்கவில்லை.

பூஜை முடிந்ததும் பாரதி கிளம்ப, வெறும் வயித்துல போகாதே என்ற ராதா அவளுக்கு வடையும், பாயசமும் எடுத்து வந்து கொடுக்க... பாரதி அதைக் கஷ்டப்பட்டு விழுங்கினாள்.

ராதா, வீட்டில் செய்த பலகாரங்களை, சஞ்ஜீவ்க்காக, நீட்டாக பாக் செய்து அவளிடம் கொடுத்தார்.

"நீ எதுல கோயம்புத்தூர் போகப் போற...?" என்று சுதாகரன் கேட்க, "ட்ரெயின்ல போறேன்ப்பா... எங்க



வீட்டுக்குப் போய்... அப்பாவைக் கூட்டிட்டு ரயில்வே ஸ்டேஷன் போறேன்..." என்று சொல்லிவிட்டுப் பாரதி மேற் கொண்டு யார் பேசவும் இடம் தராமல், வேகமாகக் கிளம்பிச் சென்றாள்.

வீட்டுக்கு வெளியில் நின்று புத்தாடை கட்டி, பட்டாசு வெடித்துக் கொண்டிருந்த தான்யாவும், ஷக்தியும் பாரதியையும், அவள் கையில் இருந்த பையையும் புரி யாமல் பார்க்க... பாரதி அவர்களைக் கண்டு கொள்ளாமல் வீட்டுக்குள் சென்றவள், ஸ்வாமி படத்தின் முன்பிருந்த அவளுக்கும், சஞ்ஜீவ்வுக்கும் வாங்கிய உடைகளை எடுத்துப் பையில் வைத்தாள்.

அவள் பின்னே உள்ளே வந்த தான்யா, "சஞ்ஜீவ் வந்தாச்சா... நீ எங்க போற?" என்று பாரதியைப் பார்த்துக் கேட்க, அவள் பதிலே சொல்லவில்லை.

அவளையே பார்த்த ஷக்தி அங்கிருந்த சேரில் சென்று அமர்ந்தான்.

"அம்மா, இங்கே வாங்களேன்..." என்று கத்திக் கொண்டே தான்யா உள்ளே சென்றாள்.

அவளுடன் ஹாலுக்கு வந்த வத்சலா பாரதியையும், அவள் கையில் இருந்த பையையும் புரியாமல் பார்க்க...

"நான் கோயம்புத்தூர் போறேன்மா..." என்றாள் பாரதி எங்கோ பார்த்துக் கொண்டு.

"இப்படி திடீர்னு எப்படிடி போவ? உங்க வீட்டு மனுஷங்க எதுவும் சொல்லலையா...?" என்று வத்சலா சந்தேகமாகக் கேட்க...

"சஞ்ஜீவ்தான் வரச் சொன்னாங்க. அவங்களுக்கு வர முடியலையாம். என் மாமனார், மாமியார் சரின்னு சொல்லிட்டாங்க. பாரு, பக்ஷணம் கூடக் குடுத்திருக்காங்க," என்று பாரதி பையில் இருந்து ராதா கொடுத்தவற்றை எடுத்துக் காட்ட...

"அதெல்லாம் நீ தனியாப் போக வேண்டாம். நாளைக்கு உங்க அப்பாவைக் கொண்டு விடச் சொல்றேன்..." என்றார் வத்சலா கண்டிப்புடன்.

பாரதி தரையில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தவள், "அம்மா! உனக்கு என் மனசு புரியலையா... கல்யாணமாகி வர்ற முதல் தீபாவளி. எனக்குச் சஞ்ஜீவ் கூட இருக்கணும்னு இருக்காதா... எனக்குச் சஞ்ஜீவைப் பார்க்கற வரை நிம்மதியே இருக்காது. என்னைப் போக விடும்மா, ப்ளீஸ்..." என்றாள். அதற்கு மேல் அவளைத் தடுக்க யாருக்கும் மனமில்லை.

ஸ்ரீனிவாசன், "நான் கொண்டு போய் அவளை விட்டுட்டு வரேன்..." என்று கிளம்ப...

ஷக்தி, "நீங்க ஏன் மாமா அலையறீங்க. நானும் தான்யாவும் எப்படியும் நாளைக்குக் கிளம்புவோம். அதுக்கு நாங்க இன்னைக்கே கிளம்பி, பாரதியைக் கோயம்புத்தூர்ல விட்டுட்டுப் போறோம்..." என்றதும்,

தான்யாவும் அவன் சொல்வதற்குச் சரி என்று தலை ஆட்டினாள். அவளுக்குப் பாரதி அழுததும் தாங்கவில்லை.

இவர்கள் பேசுவதையெல்லாம் கேட்ட பாரதி, "நான் என்ன சின்னக் குழந்தையா, என்னை அழைச்சிட்டுப் போக. அதெல்லாம் நானே போயிடுவேன். எனக்கு யாரும் துணைக்கு வேண்டாம்..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே சஞ்ஜீவ் ஷக்தியின் செல்லுக்கு அழைத்தான்.



ஷக்தி, "சஞ்ஜீவ்தான்..." என்று சொல்லி செல்லை எடுத்துப் பேச... பாரதி அவனையே பார்த்தாள்.

"அப்படியா... சரி, சஞ்ஜீவ்!" என்று ஷக்தி பேசிக் கொண்டிருக்கும் போதே குறுக்கிட்ட பாரதி,

"அவன் என்ன சொன்னாலும் நான் கோயம்புத்தூா போகத்தான் செய்வேன். அது என்னோட வீடும்தான். எனக்கு ஒண்ணும் அவன்கிட்ட அனுமதி கேட்க வேண்டாம்..." என்று கத்த,

வத்சலா, "பாரதி, என்னதிது அவன், இவன்னு மரியாதை இல்லாம பேசுற..." என்று அதட்ட,

ஷக்தி ஏதோ சொல்ல வர... அதை எல்லாம் காது கொடுத்துக் கேட்காமல் தொடர்ந்த பாரதி, "அவன் இங்க வரேன்னாலும், நான் கோயம்புத்தூர் போகத்தான் செய்வேன்..." என்றாள் ஆத்திரமும், அழுகையுமாக.

பாரதி பேசி முடித்ததும் ஷக்தி, "முடிச்சிட்டியா, உன்னை யாரு இப்ப வர வேண்டாம்னு சொன்னது. சஞ்ஜீவ்வும் உன்னை வரத்தான் சொல்றான். இப்பதான் அவங்க அப்பா, நீ வர்றதை அவனுக்குப் போன் செஞ்சு சொன்னார் போலிருக்கு. இந்தா... நீயே பேசு!" என்று செல்லை பாரதியிடம் நீட்ட,

வரச் சொல்றானா... என்று ஆச்சரியத்தில் கண் சிமிட்டவும் மறந்து, பாரதி அப்படியே நிற்க... ஷக்தி பேசு என்று செல்லைக் கொடுத்தான்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு செல்லை வாங்கியவள், அறைக்குள் சென்றாள்.

பாரதி, "ஹலோ..." என்றதும்,

சஞ்ஜீவ், "சாரி பாரதி. என்னால வர முடியலை," என்றான் உண்மையிலேயே வருத்தமாக.

அவன் சொன்னதைக் கேட்ட பாரதி திரும்பி மலை ஏறினாள். "பொய் சொல்லாத, வேணும்னுதான் நீ வரலை. நேத்துல இருந்து என்னைப் பார்க்கிறவங்க எல்லாம் சஞ்ஜீவ் இன்னும் வரலையான்னு கேட்டுக் கேட்டே கொல்றாங்க. வரலைன்னா நேத்தே சொல்ல வேண்டியதுதானே! உனக்கு, நான் எல்லார்க்கிட்டயும் பேச்சு வாங்கணும். அதுக்குத்தான்..." என்று பாரதி பொரிய...

"இப்ப நீ நிறுத்தப் போறியா, இல்லையா... எனக்கு உன் மேலதான் கோபம். என் அப்பா, அம்மா... உன் அப்பா, அம்மா எல்லாம் என்ன பண்ணாங்க? எனக்கு நிஜமாவே வேலை, அதுதான் வரலை. இப்ப உன்கிட்ட வெட்டியாப் பேசவெல்லாம் எனக்கு நேரம் இல்லை. நீ இங்க வர்றீயா, இல்லையா... அதை முதல்ல சொல்லு..." என்று சஞ்ஜீவ் பாரதிக்கும் மேல் ஓங்கிப் பேச...

"வரேன்... எனக்குத் தீபாவளி முடியறதுக்குள்ள அங்க வரணும்..." என்றாள் பாரதி, அடங்கிய குரலில்.



அவள் சொன்னதைக் கேட்ட சஞ்ஜீவ்வின் முகம் மலர்ந்தது. "சரி. இப்ப போனை வை. நான் உனக்கு எதில டிக்கெட் இருக்குன்னு பார்த்திட்டுக் கூப்பிடுறேன்..." என்று சஞ்ஜீவ் போனை வைக்க...

'இருடா! உனக்கு நேர்ல வந்து வச்சுக்கிறேன்!' என்று நினைத்தபடி பாரதி வெளியே வந்தாள்.

வெளியே வந்த பாரதியின் முகம், ஆயிரம் மத்தாப் பூகளை ஒன்றாகக் கொளுத்தியது போல் அத்தனை பிரகாசமாக இருந்தது. செல்லைக் கொண்டு போய் ஷக்தியிடம் கொடுத்தவள், வத்சலாவிடம், "சஞ்ஜீவே எதுல டிக்கெட் இருக்குன்னு பார்த்திட்டு போன் பண்றேன்னு சொன்னாங்க..." என்றாள் புன்னகையுடன்.

கொஞ்ச நேரத்திற்கு முன்பு கத்தியது இவள்தானா என்று ஆச்சர்யப்படும் அளவுக்குப் பாரதி குழைந்து பேசினாள்.

வத்சலா, "கொஞ்ச நேரத்தில எல்லாரையும் என்ன பாடு படுத்திட்ட..." என்று சொல்லிக் கொண்டே அவள் கொண்டு செல்லத் தேவையானவற்றை எடுத்து வைக்க உள்ளே சென்றார்.

சஞ்ஜீவைப் பார்க்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் பாரதி கனவில் மிதந்து கொண்டு இருந்தாள்.

பாரதியின் கோயம்புத்தூர் வருகை சஞ்ஜீவ்வுக்கு இன்பத்தைத் தருமா... அல்லது...?

20

**பா**ரதி ஹாலில் அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்கள்தான் டிவியில் இருந்தன. ஆனால்... அவள் மனம் வேறு எங்கோ இருந்தது.

முகத்தில் புன்னகையுடன், கண்களில் கனவுகளுடன் அமர்ந்திருந்தவளைப் பார்த்து தான்யா, "இனிமே ஒருத்திக்கு நாம எல்லாம் கண்ணுக்கே தெரிய மாட்டோம்..." என்று கேலி செய்ய...

"நான் ஒரு நிமிஷம் பயந்தே போயிட்டேன். உன் தங்கச்சிக்குப் பேய் எதுவும் பிடிச்சிடுச்சோன்னு..." என்று ஷக்தி மேலும் பாரதியை வார...

பாரதிக்கு அவர்கள் பேசுவது காதில் விழுந்தால்தானே பதில் சொல்லுவாள். அவள்தான் ஒரு தனி உலகத்தில் இருந்தாளே... அதைக் கவனித்த தான்யா ஷக்தியைப் பார்த்துச் சிரிக்க...

அவன், "ரொம்ப முத்திடுச்சு... கோயம்புத்தூர் அனுப்பி வைக்கிறதுதான் நல்லது..." என்று சொல்ல... தான்யா சத்தமாகச் சிரித்தாள்.

அவள் சிரிப்புச் சத்தத்தில் சுதாரித்த பாரதி, எதற்குச் சிரிக்கிறாள் என்பது போல் தான்யாவைப் பார்க்க...

அதைப் பார்த்து ஷக்தியாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை. அவனும் சத்தமாகச் சிரித்தான். புருஷன், பொண்டாட்டி ரெண்டுத்துக்கும் பைத்தியம் பிடிச்சிடுச்சு போல என்று பாரதி மனதிற்குள் நினைத்தாள்.



சிறிது நேரம் சென்று அவர்கள் வீட்டுக்கு வந்த சரவணன், "இந்தா பாரதி! பன்னிரண்டே காலுக்கு ஃப்ளைட். நீ இப்ப கிளம்பினா சரியா இருக்கும்..." என்று அவள் கையில் பயணச் சீட்டின் நகலைக் கொடுக்க, பாரதி அவனுக்கு நன்றி சொன்னவள், துள்ளிக் குதித்துக் கொண்டு உள்ளே ஓடினாள்.

"அங்கே சஞ்ஜீவ் என்னென்ன சாமான் வச்சிருக்காருன்னு தெரியலை. எதுக்கும் ரெண்டு மூணு பாத்திரமும் அதோட கொஞ்சம் மளிகைச் சாமான்களும் வச்சிருக்கேன். இங்க இருந்து போறது பெரிசு இல்லை. போறதுக்குள்ள உருப்படியா வேலை பண்ணு. சாயங்காலம் வீட்ல, வாசல்ல எல்லாம் விளக்கேத்தி வை. அப்படியே கேசரி செஞ்சு ஸ்வாமிக்கு நெய்வேத்தியம் பண்ணிடு..." என்று வத்சலா தன் மகளுக்கு அறிவுரை சொல்ல...

பாரதி தன் அம்மா சொல்வதற்கெல்லாம் சரி சரி என்று தலை ஆட்டினாள். அப்போது ராதாவும், சுதாகரனும் அவளை வழி அனுப்ப வந்தனர்.

பாரதி ராதாவின் அருகே சென்று அமர்ந்தவள், "நீங்களும், அப்பாவும் நாளைக்குக் கிளம்பிக் கோயம்புத்தூர் வர்றீங்களாம்மா... உங்களுக்கும் சஞ்ஜீவைப் பார்க்கணும்னு ஆசை இருக்கும் இல்ல..." என்று கேட்டதற்கு...

"கல்யாணம் பண்ணி நீங்க ரெண்டு பேரும் சரியா கூடச் சேர்ந்து இருக்கல... அதனால நீ மட்டும் இப்ப

போயிட்டு வா... நாங்க இன்னொரு தடவை வரோம்..." என்ற ராதா, அப்போதுதான் நினைவு வந்தவராக,

"ஆமாம், நீ எப்ப திரும்பி வர்ற? நீ வேலைக்குப் போகணும் இல்ல..." என்று கேட்டதும்தான், பாரதிக்கு அவள் திங்கட் கிழமை பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பதே நினைவு வந்தது. அவள் பரிதாபமாக முழிப் பதைப் பார்த்த வத்சலா, "ஒரு வாரம் லீவ் போடு..." என்று யோசனை சொல்ல...

"லீவ் குடுப்பாங்களான்னு தெரியலைம்மா..." என்று பாரதி தயங்க...

"லீவ் குடுக்கலைன்னா ரொம்ப நல்லது. வேலைக்கு வரலைன்னு சொல்லிடு..." என்று வத்சலா பட்டென்று சொல்லிவிட்டு எழுந்து செல்ல...

பாரதி என்ன செய்வது என்று குழப்பத்தில் இருந் தவள், சஞ்ஜீவை அழைத்து என்ன செய்வது என்று கேட்க...

"வரும்போதே... போறதைப் பத்தி என்ன பேச்சு?" என்று எரிந்து விழுந்தவன், "முதல்ல இங்க வா. திரும்பிப் போறத பத்தி அப்புறம் யோசிக்கலாம்..." என்றான்.

அவன் சொல்வதில் இருந்தே, அவனுக்கு அவளைத் திரும்ப அனுப்பும் உத்தேசம் இல்லை என்று நன்றாகத் தெரிந்தது. ஆனால் அது புரியாத மாதிரி பாரதி சரி என்றாள்.

"வரும்போது மறக்காம ஏதாவது ஐ.டி. ப்ரூஃப் எடுத்திட்டு வா... ஏர்போர்ட்ல கேட்பாங்க..." என்று ஞாபகப் படுத்திவிட்டு செல்லை அணைத்தான்.



பாரதி அனைவரிடமும் மகிழ்ச்சியாக விடை பெற்றுக் கோயம்புத்தூர் கிளம்ப... ஷக்தியும், தான்யாவும் அவளை வழியனுப்ப ஏர்போர்ட் சென்றனர்.

தான்யாவைக் காரிலேயே அமர வைத்துவிட்டு ஷக்தி மட்டும் பாரதியுடன் ஏர்போர்ட் உள்ளே சென்றான்.

பாரதி செக்கின் செய்து விட்டு வந்ததும், ஷக்தி அவளிடம் ஒரு குளிர்பானப் பாட்டிலைக் கொடுத்து, "ஃப்ளைட்ல வாந்தி வர்ற மாதிரி இருந்தா, குடி..." என்றவன், "உட்காரு. உன்கிட்ட கொஞ்சம் பேசணும்..." என்று ஒரு இருக்கையைக் காட்ட...

பாரதி அதில் அமர... ஷக்தி ஒரு இருக்கை இடை வெளி விட்டு அடுத்ததில் அமர்ந்து, பாரதியின் முகம் பார்த்தவன், "என்ன பிரச்சினை உனக்கும், சஞ்சீவ் வுக்கும்?" என்றான் நேரடியாக.

பாரதி இதை எதிர்பார்க்காததால் சற்றுத் தடுமாறி யவள், "பிரச்சனை ஒண்ணுமில்லையே! சஞ்சீவ்வுக்கு வேலை. அதான் வரலை..." என்று மழுப்ப,

"வேலை இருந்ததுனாலதான் சஞ்ஜீவ் வரலை, அது எனக்கும் தெரியும். ஆனா சஞ்சீவ் வரலைன்னு உனக்கு ஏன் தெரியலை? நீங்க ரெண்டு பேரும் பேசிட்டு இருந்தீங்கன்னா, உனக்குச் சஞ்ஜீவ் வராதது தெரியாம இருந்திருக்காது இல்ல..." என்று ஷக்தி மடக்க... பாரதி மௌனமாக இருந்தாள்.

"நேத்து ராத்திரி நீ சஞ்ஜீவை எதிர்பார்த்துக் காத் திட்டு இருந்த... எனக்குத் தெரியும், பாரதி. நீ ஜன்னல்

கிட்ட உட்கார்ந்து இருந்ததை நான் பார்த்தேன். உனக்கும், சஞ்ஜீவுக்கும் என்ன பிரச்சனைன்னு நீ சொல்ல வேண்டாம். ஆனா... நீ உன் அக்கா வாழ்க்கையில ஏற்பட்ட கசப்பான அனுபவத்தை நினைச்சு, உன் வாழ்க்கையை வீணாக்காதே. உன் அக்கா வாழ்க்கையில் நடந்தது, கடந்து போன விஷயம். அவ இப்போ சந்தோஷமா இருக்கா. அவளை நான் நல்லாப் பார்த்துப்பேன்..."

ஷக்தி பேசப் பேசப் பாரதியின் கண்கள் கலங்கின.

அவள், "தப்பு என் மேலதான். நான் தான் சஞ்ஜீவ் கிட்ட தேவையில்லாம பேசிட்டேன். இனி பார்த்து நடந்துக்கிறேன்..." என்றாள்.

ஷக்தி புன்னகையுடன் எழுந்து நின்றவன், "சரி. பார்த்துப் போ, போனதும் போன் பண்ணு..." என்று விடை பெற்றுச் செல்ல...

பாரதி அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தவள், ஷக்தி வெளி வாயிலை அடையும் நேரம், அவன் பின்னே ஓடினாள்.

ஷக்தி எதேச்சையாகத் திரும்பிப் பார்க்க, பாரதி ஓடி வருவதைப் பார்த்து, எதற்கு வருகிறாள் என்று யோசித்துக் கொண்டு அதே இடத்தில் நின்றான்.

ஷக்தியின் அருகே வந்த பாரதி, "தேங்க்ஸ் அத்திம்பேர்..." என்று புன்னகையுடன் சொல்லிவிட்டுத் திரும்பி ஓட... ஷக்தி மகிழ்ச்சியுடன் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.



இன்றைக்குத்தான் பாரதி முதல் முறையாக அத்திம்பேர் என்று முறை சொல்லி அழைத்திருக்கிறாள்.

வெளியே வந்த ஷக்தி சஞ்ஜீவை அழைத்து, தான் பாரதியை விமான நிலையத்தில் விட்டு விட்டதாகச் சொன்னவன், "சஞ்சீவ், நீ தப்பா நினைக்கலைன்னா உன்கிட்ட ஒண்ணு சொல்லணும்...." என்றதும்,

சஞ்ஜீவ், "சொல்லுங்க ஷக்தி, நமக்குள்ள என்ன ஃபார்மாலிடீஸ்?" என்று இயல்பாகக் கேட்க...

"நீ ஏன் சஞ்ஜீவ் வரலை? பாரதி உன்னை எவ்வளவு எதிர்பார்த்தா தெரியுமா?" என்றவன், நேற்று வீட்டில் தான்யாவும், பாரதியும் சண்டை போட்டது முதல் அனைத்தையும் சொன்னவன், "பாவம்! ரொம்ப அழுதுட்டா... இப்ப உன்னைப் பார்க்க ரொம்ப ஆசையா வர்றா. அவகிட்ட உன்னோட கோபத்தைக் காமிச்சிடாதே.." என்றான் ஷக்தி வேண்டுதலாக.

"நீங்க சொல்லணுமா ஷக்தி... நான் எப்பவோ மேடம்கிட்ட சரண்டர். அவகிட்ட சொல்லி அனுப்புனீங்களா... பாவம், சஞ்ஜீவை அடிச்சிடாதேன்னு. ஏன்னா... உளவுத் துறை மூலமா வந்த தகவல்படி பாரதி என்னைத் தாக்க வர்றதாகவும், அதுக்குச் சில பேர் ஐடியா கொடுத்து அனுப்பினதாவும் கேள்விப்பட்டேன்..." என்றான் சஞ்ஜீவ் விளையாட்டாக...

ஷக்தி வாய்விட்டுச் சிரித்தவன், "நேத்தும், இன்னைக்கும் நீ கொடுத்த டார்ச்சருக்கு, அவ உன்னை அடிச்சாலும் ஆச்சரியப்படுறதுக்கு இல்லை. எதுக்கும் நீ

ஜாக்கிதையா இரு..." என்று அவனும் சஞ்ஜீவை மிரட்டி விட்டுப் போனை வைத்தான்.

காரில் வந்து இறங்கிய ஷக்தியைப் பார்த்துத் தான்யா, "ஏன் லேட்?..." என்று கேட்க...

"புருஷன், பொண்டாட்டி ரெண்டு பேரையும் பேசிச் சரிக் கட்டிட்டு வரேன். அதான் லேட்..." என்றதும் –

"பாரதிக்கும், சஞ்ஜீவ்வுக்கும் சண்டையா...? அது தான் சஞ்ஜீவ் வரலையா...?" என்று தான்யா கவலைப் பட்டாள்.

"அதெல்லாம் பெரிய பிரச்சினை ஒண்ணும் இல்லை. ரெண்டு பேரும் இப்ப சமாதானம் ஆகிட்டாங்க..." என்ற ஷக்தி, தான்யாவின் கைபிடித்து அருகில் இழுத்துத் தன் மேல் சாய்த்துக் கொண்டான்.

ஷக்தியின் முகம் பார்த்த தான்யா, "நாம தனிக் குடித்தனம் எல்லாம் போக வேண்டாம் ஷக்தி. நாம அம்மா, அப்பா கூடவே சேர்ந்து இருக்கலாம்..." என்றாள்.

அவள் சொன்னதைக் கேட்டு மிகவும் மகிழ்ந்த ஷக்தி, "என்ன திடீர் மாற்றம்...!" என்று ஆச்சர்யப்பட...

"நீங்க எனக்குக் கிடைச்சதுல, நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன். உங்களை எனக்குக் கொடுத்தது, உங்க அம்மா, அப்பாதான். அப்ப நாம அவங்களை விட்டுப் போறது நியாயமா...? நாம அவங்க கூடவே இருப் போம்..." என்றாள் தான்யா சந்தோஷமாக.

"அப்படியா சொல்ற... சரி. அண்ணியோ இல்லை அத்திம்பேரோ உன்னை ஏதாவது சொன்னா..."



"சொன்னா சொல்லிட்டுப் போகட்டும். எனக்கு நீங்க, உங்க அம்மா, அப்பாதான் முக்கியம். உங்களுக் காக நான் அவங்க ஏதாவது பேசினா பொறுத்துக்கிறேன். நாம தனிக் குடித்தனம் எல்லாம் போக வேண்டாம், ப்ளீஸ்..."

"நீ யாருக்கும் பொறுத்துப் போக வேண்டாம். உன்னை யாரும் எதுவும் பேசாம நான் பார்த்துக்கிறேன்..." என்றான் ஷக்தி உறுதியாக.

"அப்புறம் எதுக்கு நாம தனியா போகணும்...?" என்ற தான்யா தொடர்ந்து, "இன்னொரு விஷயம், நம்ம ஊர்ல இருக்கிற ஸ்கூல்ல, நான் டீச்சர் வேலைக்குப் போகட்டுமா?..." என்றாள் ஆவலாக.

"போ தான்யா! ஆனா... இப்ப இல்ல... இன்னும் மூணு வருஷம் கழிச்சு. ஏன்னா... இப்ப உனக்கு ரொம்ப முக்கியமான வேலை இருக்கு..." என்ற ஷக்தி அவளைப் பார்த்துக் கண் சிமிட்ட,

தான்யா அது என்ன அப்படி முக்கியமான வேலை என்று யோசிக்க, அவளையே பார்த்த ஷக்தி குறும்புப் புன்னகையுடன், "நேத்து நைட் நடந்தது மறந்து போச்சா, மேடம். அதோட பின்விளைவு என்ன ஆகும்னு தெரி யாதா?" என்று தான்யாவின் வயிற்றில் கை வைக்க...

தான்யா அந்தி வானமாகச் சிவந்தவள், தன் முகத்தை ஷக்தியின் தோளில் மறைக்க... ஹா... ஹா என்று சத்தமாகச் சிரித்த ஷக்தி, "ஹப்பா... புரிஞ்சிடுச்சா...?" என்றவன், தான்யாவை ஆசையாகக் கட்டிக் கொண்டான்.

பாரதி விமானத்தில் சென்று அமர்ந்த சிறிது நேரத்தில், சஞ்ஜீவ் அவளை செல்லில் அழைத்தான்.

"உனக்கு வீட்டு அட்ரஸ் மெசேஜ் பண்ணி இருக் கேன். ஏர்போர்டல இருந்து ஒரு டாக்ஸி பிடிச்சு வந்திடு. பக்கத்து வீட்ல சாவி இருக்கு..."

"என்ன சஞ்ஜீவ், இப்படி சொல்ற. நீ ஏர்போர்ட் வர மாட்டியா...?"

"புரிஞ்சுக்கோ பாரதி. பண்டிகை நாள்லதான் எங்களுக்கு வேலை அதிகம் இருக்கும். நான் சாயங் காலம் சீக்கிரம் வரப் பார்க்கிறேன். என்னோட மொபைல் ஆன்லதான் இருக்கும். நீ எப்ப வேணா கால் பண்ணு, சரியா? கரெக்டா வந்துடுவே, இல்லடா. சாரிடா..." என்று சஞ்ஜீவ் உருக...

பாரதியும் அவன் கோபமாக இருப்பானோ என்று பயந்து கொண்டிருந்தவள், அவன் சாதாரணமாகப் பேசியதும், மகிழ்ந்து, "ஓ.கே. சஞ்ஜீவ், நான் வந்துடு வேன்..." என்றாள் தைரியமாக, வரப் போவது தெரியாமல்.

அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்று தெரிந்தவர் யார்?

சஞ்ஜீவுக்கும், பாரதிக்கும் போனை வைக்கவே மனம் இல்லை. நேரில் பார்க்கும் போது பேசுவோம் என்று நினைத்த இருவருக்கும், தாங்கள் அடுத்து ஒரு பெரிய சோதனையைச் சந்திக்கப் போகிறோம் என்று தெரிய வில்லை.



## 21

பாரதிக்கு இது முதல் விமானப் பயணம் என்பதால் அவளுக்கு மிகவும் பயமாக இருந்தது. காரில் போகும் போதே வாந்தி எடுப்போம்... இப்போது விமானத்தில் வேறு போகிறோம், என்னாகப் போகுதோ என்று பயந்து கொண்டே இருந்தாள். ஆனால் அவள் பயந்தது போல் எதுவும் இல்லை.

ஷக்தி வாங்கிக் கொடுத்த குளிர்பானத்தைக் குடித்துக் கொண்டே, ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்ததால், நேரம் போனதே தெரிய வில்லை.

விமானம் தரை இறங்கியதும் முதல் ஆளாக வெளியே வந்தவள், உடனே சஞ்ஜீவை அழைக்க,

"வந்திட்டியா பாரதி, ஏர்போர்ட் டாக்ஸியிலேயே வா... எனக்கு டாக்ஸி நம்பர் மெசேஜ் பண்ணிடு..." என்று சஞ்ஜீவ் சொல்ல... பாரதியும் சரி என்று போனை வைத்தாள்.

விமான நிலையத்தில் இருந்து வெளியே வந்த பாரதி, அங்கிருந்த டாக்ஸி ஒன்றை அழைத்து அதில் ஏறியவள், சஞ்ஜீவ் சொன்னது போல் அவனுக்கு டாக்ஸி எண்ணை மெசேஜ் அனுப்பிவிட்டு, அவள் அம்மா, மாமியார் மற்றும் ஷக்திக்கு அழைத்துத் தான் நல்ல படியாக வந்து சேர்ந்து விட்டதாகச் சொல்ல... அவர்கள் அனைவரும் சஞ்ஜீவ் ஏர்போர்ட் வந்து அவளை அழைத்துச் செல்கிறான் என்றே நினைத்திருந்தனர்.

பாரதி காரின் சீட்டில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்து ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள்.

இன்னும் கொஞ்ச நேரத்தில் சஞ்ஜீவைப் பார்க்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் இருந்தாள்.

பாதி தூரம் வந்ததும், கார் ஒரு திருப்பத்தில் திரும்பிச் சிறிது தூரம் சென்றதும்தான் பாரதி கவனித்தாள்.

அந்த இடமே கலவர பூமியாக இருந்தது. கடைகளை மூடச் சொல்லிப் பொதுமக்களை மிரட்டுவதும், பஸ்சின் மீது கற்களை எறிவதும், காரின் கண்ணாடியை உடைப்பதும் என்று ஒரு பெரிய கும்பலே வன்முறையில் ஈடுபட்டிருந்தது.

பாரதி கண் எதிரிலேயே பஸ்சில் இருந்த ஒரு பெண்ணின் மண்டை உடைந்து ரத்தம் கொட்டியது. இன்னொரு பக்கம் ஒரு காரை வழிமறித்து அதில் இருந்தவர்களை இழுத்து வெளியே தள்ளிவிட்டுக் காரைக் கொளுத்தினார்கள்.

இதையெல்லாம் பார்த்துப் பாரதி அரண்டுவிட்டாள். அவள் திகைத்து விழிக்கும் போதே, இவள் வந்த டாக்ஸியின் டிரைவர் வண்டியைத் திருப்பப் பார்க்க... அவரால் வண்டியைத் திருப்ப முடியவில்லை...

இவர்கள் காரைப் பார்த்த கலவரக்காரர்கள், கையில் பெரிய பெரிய கற்களுடன், இவர்கள் வண்டியை நோக்கி வர... காரில் இருந்த டிரைவர் இறங்கி ஓடி விட்டார்.



பாரதிக்குக் காரில் இருந்து இறங்கி வெளியே ஓட வேண்டும் என்று தோன்றவில்லை. மாறாக, அவள் கண்களை மூடிக் கொண்டாள். சஞ்ஜீவ் ஆசையாகப் பேச வந்த போது எல்லாம், அவனைக் கண்டு கொள்ளாமல் எப்படித் தள்ளி வைத்தோம். இப்போது அவனுடன் சேர்ந்திருக்க ஆசையாக வந்தால்... இந்த நேரம் பார்த்து இப்படி நடக்கிறதே என்று நினைத்தவளுக்கு, தான் இனி சஞ்ஜீவை நல்லபடியாகப் பார்ப்போமா என்ற பயம் வந்துவிட்டது.

‘கடவுளே, ஒரே ஒரு தடவை சஞ்ஜீவைப் பார்த்திடணும். அவன்கிட்ட ஒரு சாரி. அப்புறம் ஐ லவ் யூ மட்டுமாவது சொல்லிடணும் ப்ளீஸ்...’ என்று மனதிற்குள் வேண்டிக் கொண்டு இருந்தவள் வேகமாகக் கண் திறந்து சஞ்ஜீவை செல்லில் அழைத்தாள்.

சஞ்ஜீவ் செல்லை எடுத்து ஹலோ என்றதும், “சஞ்ஜீவ், இங்க வழியில் ஒரே சண்டை...” என்று பதற்றமாகச் சொன்னவள், மேலும் பேசும் முன் அந்தக் கலவரக்காரர்கள் காரைச் சூழ்ந்து விட்டனர்.

அவர்களுக்கு உள்ளே ஒரு பெண் மட்டும் தனியே அமர்ந்திருப்பது தைரியத்தைத் தர... அவளைப் பார்த்து இறங்கு என்பது போல் செய்கை செய்தனர்.

தவறு செய்பர்களே தைரியமாக இருக்கும் போது, நாம ஏன் பயப்பட வேண்டும் என்று பாரதிக்குத் தோன்றியது. இனிப் பயப்படுவதால் என்ன ஆகப் போகிறது என்று நினைத்தவள், தைரியமாகவே காரில் இருந்து இறங்கினாள்.

எதிரில் நின்றவர்களைப் பார்த்து, “இப்ப எதுக்கு இந்தக் கலாட்டா!” என்று பாரதி துணிவுடன் கேட்க...

அவளின் நிமிர்வைப் பார்த்துப் புருவம் உயர்த்திய வர்கள், “எங்க தலைவரை யாரோ கொலை பண்ணிட் டாங்க...” என்றதும்,

“அதுக்கு...” என்றாள் பாரதி அலட்சியமாக.

அவள் அலட்சியமாகக் கேட்டது, அந்த அரசியல் கைகூலிகளுக்குக் கோபத்தை உண்டாக்க... “என்ன திமிரா... எங்க தலைவர் செத்துட்டார்னு சொல்றோம். ரொம்ப அசால்ட்டா பேசுற...” என்றான், அதில் இருந்த ஒருவன்.

“வேணும்னா உன்னையும் சேர்த்து வச்சு அவரோட எரிக்கச் சொல்றேன். உங்க தலைவர் செத்தா போலீஸ் ஸ்டேஷன் போய் கம்ப்ளெய்ன்ட் பண்ணுங்க. அதை விட்டுட்டு எதுக்கு இப்படி பப்ளிக்கைத் தொந்தரவு பண்றீங்க? ஏதாவது அரசியல் தலைவர் செத்துட்டா உங்க கோபத்தைக் காட்ட... உங்களுக்கு அப்பாவிப் பொது மக்கள்தான் கிடைச்சாங்களா? அங்க பாரு, அந்தப் பொண்ணு மண்டை உடைஞ்சு ரத்தம் ஊத்துது.

“அந்தப் பொண்ணா உங்க தலைவரைக் கொலை செஞ்சுது. எதுக்கு அந்தப் பெண்ணை அடிச்சீங்க? இது கொலை முயற்சி. சாட்சி சொல்ல நிறையப் பேர் இருக் காங்க. நீங்க எல்லாம் ஜெயில் கம்பி எண்ணப் போறீங்க...” என்று பாரதி அவர்களை மிரட்ட...

பாரதி பேசியதைக் கேட்ட கலவரக்காரர்களுக்குக் கோபம் வந்து விட்டது. இப்போது எல்லாம் நியாயத்தைச்



சொன்னால் அதுதான் குற்றம். ஆளாளுக்குப் பாரதியைத் திட்ட, அதில் ஒருவன் கையில் வைத்திருந்த கல்லைப் பாரதியை நோக்கி எறிய, பாரதி பயத்தில் காதிரண்டையும் பொத்திக் கொண்டு சிறிது நகர, கல் அவள் மேல் விழாமல், காரின் கண்ணாடியில் விழுந்து நொறுங்கியது.

அதோடு பாரதியின் கையில் இருந்த செல்லும் கீழே விழுந்து நொறுங்கியதில், அதுவரை அங்கு நடப்பதை யெல்லாம் கேட்டுக் கொண்டே காவல்துறை வாகனத்தில் வந்து கொண்டிருந்த சஞ்ஜீவ்வின் தொடர்பும் அறுந்தது.

சஞ்ஜீவ் பாரதி அழைத்ததும், அவள் வீட்டுக்குச் சென்று சேர்ந்து விட்டதைச் சொல்லத்தான் அழைக்கிறாள் என்று நினைத்து செல்லை எடுக்க... ஆனால் பாரதி சொன்னதோ வேறு.

அவள் சொன்னதைக் கேட்டு அதிர்ந்த சஞ்ஜீவ் “பாரதி, நீ இப்போ எங்க இருக்க...?” என்றான்.

அவளிடமிருந்து சிறிது நேரம் பதில் இல்லை. ஆனால் அந்தப் பக்கம் பாரதி வேறு யாருடனோ பேசுவதை உன்னிப்பாகக் கேட்டவன், இன்னொரு பக்கம் வேகமாகக் காவல் துறை அதிகாரிகளிடம், “எந்த ஏரியா வுலயாவது கலாட்டா நடக்குதுன்னு இன்ஃபர்மேஷன் வந்திருக்கா...?” என்று கேட்டான்.

“ஆமா... சார்! இப்போதான் ராஜாஜி நகர்கிட்ட கலவரம் நடக்கிறதா இன்ஃபர்மேஷன் வந்தது...” என்று ஒரு அதிகாரி சொல்ல...

“அங்க போலீஸ் ஃபோர்ஸ் போயாச்சான்னு கன்ஃபர்ம் பண்ணிக்கோங்க...” என்று நிற்காமல்

சொல்லிக் கொண்டே வெளியே வந்தவன், அங்கிருந்த வண்டியில் ஏறி, "சீக்கிரம் ராஜாஜி நகர் போங்க..." என்றான்.

சஞ்ஜீவ் சிறிது நேரம் சிதறவிட்ட தன் கவனத்தை மீட்டு செல்லில் அந்தப் பக்கம் என்ன நடக்கிறது என்று உன்னிப்பாகக் கவனிக்க... பாரதி அவர்களை மிரட்டிக் கொண்டிருந்தாள்.

பாரதி, கொஞ்சம் அமைதியா இரு என்று இங்கு சஞ்ஜீவ் மனதிற்குள் அலறிக் கொண்டிருக்கும் போதே.. ஏதோ தொம் என்று விழும் சத்தமும், அதோடு செல்லின் தொடர்பும் துண்டிக்கப்பட்டுவிட்டது.

சஞ்ஜீவ்வுக்கு ஒரு கணம் இதயம் நின்று துடித்தது. பாரதிக்கு ஏதோ ஆகிவிட்டதோ என்று தவிக்க ஆரம்பித் தவனின் கண்கள் கண்ணீரைப் பெருக்க... வண்டி ஓட்டிக் கொண்டிருந்த டிரைவர் அவனைக் கவலையாகப் பார்த்தவர், வண்டியை இன்னும் வேகமாகச் செலுத்தினார்.

சஞ்ஜீவ் பல முறை முயன்றும் பாரதியைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. பாரதியைத் தொடர்பு கொள்ள முடியாததால்... அவளுக்கு என்ன ஆனதோ என்று பயந் தவன், தன் கைகளில் முகம் புதைத்து அழுதான்.

நானே என்னோட பாரதியை இப்படி ஆபத்துல மாட்டிவிட்டுட்டேன். அவளோட பேசாம, போய்ப் பார்க்காம, அவளைக் கஷ்டப்படுத்தி, இங்க வரவெச்சு... எல்லாம் என்னால்தான். என்னோட பாரதியை நான் நல்லபடியா பார்ப்பேனா? கடவுளே! நான் செஞ்ச தப்புக்குப் பாரதி யைத் தண்டிச்சிடாதே ப்ளீஸ்!



எனக்குப் பாரதி வேணும்... என்று மனதிற்குள் புலம்பித் தவித்துக் கொண்டு வந்தவன், குறிப்பிட்ட அந்த இடம் வந்ததும், வண்டியில் இருந்து குதித்து இறங்கி ஓடினான்.

சஞ்ஜீவ் அங்கே சென்று சேர்ந்தபோது, ஏற்கெனவே காவலர்கள் வந்து கலவரத்தைக் கட்டுப்படுத்தி இருந்தனர். ஒரு ஆம்புலன்ஸ் அவனைக் கடந்து சென்றது. சுற்றியும் பாரதியைத் தேடியவனின் கண்களில், பாரதி வந்த டாக்ஸி பட, வேகமாக அதன் அருகே ஓடிச் சென்று பார்த்தவன், பாரதி அதில் இல்லை என்றதும், காரின் கதவிலேயே தொய்ந்து போய் நின்று விட்டான்.

சிறிது நேரம் அப்படியே நின்றவனுக்கு, அவனைக் கடந்து சென்ற ஆம்புலன்ஸ் கண் முன் தோன்ற... ஒரு வேளை பாரதி அதில் சென்றிருப்பாளோ என்று நினைத்த போதே அவன் உடல் பயத்தில் விரைக்க... சுற்றிலும் பார்த்தவனின் கண்களில் போலீஸ் வாகனத்தில் ஏறிக் கொண்டிருந்த கலவரக்காரர்கள் பட்டனர்.

கோபமாக அவர்களிடம் சென்றவன், அவர்களை எல்லாம் வண்டியில் இருந்து கீழே இழுத்துப் போட்டு அடித்து நொறுக்கினான்.

சஞ்ஜீவ்வை யார் என்று தெரிந்ததால்... அவனை மற்றக் காவலர்கள் தடுக்கவில்லை. அவன் காக்கி உடை யில் இல்லாததால் அவனைப் போலீஸ் என்று தெரி யாமல், "எதுக்குயா எங்களைப் போட்டு அடிக்கிற?" என்று அடிவாங்கியவர்களில் ஒருவன் வலி தாங்காமல் கேட்க,

"என் பொண்டாட்டிய என்னடா பண்ணீங்க? அவ ளுக்கு மட்டும் ஏதாவது ஆச்சு... நீங்க யாரும் உயிரோட

இருக்க மாட்டீங்க..." என்று சஞ்ஜீவ் சொல்லிக் கொண்டே இன்னும் அதிகமாக அவர்களைத் தாக்க....

"யாரு சார் உன் பொண்டாட்டி, நாங்க யாரையும் எதுவும் பண்ணலை..." என்றான் அங்கிருந்தவர்களில் ஒருவன்.

"நீங்க என் பொண்டாட்டியோட சண்டை போட்டதை, நான் செல் வழியாக் கேட்டேன். அதனால பொய் சொல்லாம என்ன நடந்ததுன்னு உண்மையைச் சொல்லுங்க!" என்று சஞ்ஜீவ் மிரட்டியதும்,

"ஓ... அந்தப் பொண்ணா... அதை நாங்க ஒண்ணும் பண்ணலை. அதான், 'இப்படி அநியாயம் பண்றவங்களைப் போலீஸ் வந்துதான் அடக்கணும்னு வேடிக்கைதான் பார்க்கப் போறீங்களா... இவங்களை இப்படியே விட்டா... இன்னும் இவங்களை மாதிரி நிறையப் பேர் வருவாங்க, இப்படியே காலமெல்லாம் எல்லோருக்கும் பயந்துட்டே இருக்கப் போறீங்களா?'ன்னு பப்ளிக்கைப் பார்த்துப் பேச... அது பேச்சைக் கேட்டு, ஆவேசம் வந்து, எல்லோரும் எங்களைப் போட்டு மொத்திட்டாங்க சார்... சத்தியமாச் சொல்றோம், நாங்க அவங்களை எதுவுமே செய்யலை சார்!" என்று ரௌடிகள் கோரசாகச் சொல்ல....

அப்போது தான் சஞ்ஜீவ் அவர்களை நன்றாகக் கவனித்தான். அவர்கள் எல்லோரும் ஏற்கெனவே செமத்தியாக வாங்கி இருப்பது புரிந்தது.

சஞ்ஜீவ் இன்னும் பாரதிக்கு எதுவும் ஆகவில்லை என்று நம்ப முடியாமல் இருந்தான். அவனின் தவிப்பு



பாரதியை நேரில் பார்க்கும்வரை தீராது. அப்ப இவ எங்க போனா... என்று நினைத்துக் கொண்டே, அவன் அந்த ரௌடிகளை விட்டு விலகி நடக்க....

அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவன், "சார்! உங்க பொண்டாட்டி சொல்லுச்சு சார்! 'என் புருஷன் என்னைத் தேடி வருவாரு. எனக்கு மட்டும் ஏதாவது ஆச்சு... அப்புறம் நீங்க எல்லோரும் தொலைஞ்சிங்கன்னு...' அது சொன்னது மாதிரியே ஆகிடுச்சு சார்..." என்று சொல்லிவிட்டு போலீஸ் வாகனத்தில் ஏற முடியாமல் ஏறினான்.

அவன் சொன்னதைக் கேட்டு அந்த நிலையிலும் சஞ்ஜீவ் புன்னகைத்தான். அவனுக்கு இப்போதுதான் பாரதிக்கு எதுவும் ஆகவில்லை என்று லேசாக நம்பிக்கை வந்தது. அப்போது சரியாக அவன் செல்லும் அடித்தது.

ஏதோ தெரியாத எண். ஆனால் சஞ்ஜீவ்க்குத் தெரியும், அவனைப் பாரதிதான் அழைக்கிறாளென்று.

வேகமாக செல்லை எடுத்து, "பாரதி..." என்று அவன் ஒட்டு மொத்த உயிரும் அந்த ஒரு வார்த்தையில் இருப்பது போல் சஞ்ஜீவ் அழைக்க.... பாரதியால் எதுவும் பேச முடியவில்லை. "சஞ்ஜீவ்..." என்று மட்டும் சொன்னதோடு அமைதியாக இருந்தாள்.

எதிர்பாராமல் நடந்த நிகழ்வின் அதிர்ச்சியிலிருந்து மீளாமல் இருந்த இருவராலும், சட்டென்று பேச முடியவில்லை. அதனால்... இருவரும் மௌனமாக இருந்தனர்.

ஆட்டோ டிரைவர், "என்னம்மா... லைன் கட்டாகிடுச்சா...?" என்று கேட்டதும்,

பாரதி, "இல்லை. லைன்ல இருக்காங்க!" என்றாள் மெதுவாக.

அவள் பேசியதும் சுயநினைவுக்கு வந்த சஞ்ஜீவ், "எங்கடி போன, ஒரு நிமிஷம் என் உயிரே போன மாதிரி இருந்துச்சு..." என்றான் ஆத்திரமும், அழுகையுமாக.

"எனக்கும்தான்..." என்றாள் பாரதி அழுகையுடன்.

"இப்ப நீ எங்க இருக்க பாரதி? எனக்கு உன்னை உடனே பார்க்கணும்."

"சாரி சஞ்ஜீவ்! என்னால அங்க இருக்க முடியலை, அதான்... ஒரு ஆட்டோ புடிச்சு வந்துட்டேன். நான் நம்ம வீட்டுக்குப் போறேன். நீயும் வரியா...?"

"நீ போ. நான் கொஞ்ச நேரத்தில வரேன்," என்று போனை வைத்த சஞ்ஜீவ், அங்கிருந்த காவலர்களிடம், "வேற ஏரியால கலவரம் பரவாம பார்த்துக்கோங்க. கடை எல்லாம் யாரும் மூட வேண்டாம். அந்த ஆம்புலன்ஸ்ல போனவங்களுக்குக் காயம் அதிகமா...?" என்று விசாரிக்க...

"ஒரு பொண்ணுக்குத்தான் தலையில அடிபட்டிருக்கு. இன்னொரு பெரியவருக்குக் கால்ல அடி... அவங்க ரெண்டு பேரையும்தான் ஹாஸ்பிடல் அனுப்பி இருக்கோம்..." என்று ஒரு காவலர் பதில் அளிக்க...

"சரி, ஏதாவது பிரச்சனைன்னா கால் பண்ணுங்க!" என்று சஞ்ஜீவ் தன் வாகனத்தில் சென்று ஏறினான்.

டிரைவர், "எங்க சார் போகணும்?" என்றதும், "வீட்டுக்குப் போங்க..." என்ற சஞ்ஜீவ்வின் கம்பீரம் திரும்பி இருந்ததைப் பார்த்து, சந்தோஷப்பட்ட டிரைவர் புன்னகையுடன் வண்டியை ஓட்டினார். அவரும் சிறிது



நேரமாக சஞ்ஜீவ் பட்ட பாட்டைப் பார்த்துக் கொண்டு தானே இருந்தார்.

சஞ்ஜீவ் இருப்பது ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில். வண்டியில் இருந்து இறங்கியதும், வேகமாக இரண்டிரண்டு படிகளாகத் தாவி ஏறி, நான்காவது தளத்தில் இருக்கும் அவன் வீட்டின் முன்பு நின்று, நன்றாக மூச்சை இழுத்து விட்டான்.

அதுவரை மனதில் இருந்த கலக்கத்தையும் அதோடு சேர்த்து வெளியே விட்டு, பாரதியைப் பார்க்கப் போகிறேன் என்கிற ஆவலை மட்டும் முன்னிறுத்தி, வீட்டின் அழைப்பு மணியை அழுத்த, பாரதி வந்து கதவைத் திறந்தாள்.

சஞ்ஜீவ் உள்ளே செல்லாமல், கதவின் அருகிலேயே நின்று, பாரதியைத் தலை முதல் கால் வரை நன்றாகப் பார்த்து, அவளுக்கு அடி எதுவும் படவில்லை என்று உறுதி செய்து கொண்டு நிம்மதி அடைந்தான்.

பாரதி சஞ்ஜீவையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் தெரிந்த காதலில் சஞ்ஜீவ் தன்னையே தொலைத்தான்.

இருவரும் தங்களை மறந்து நின்ற நிலையில், முதலில் சுதாரித்த பாரதி, "வாங்க ஏ.சி.பி. சார், ஏன் உள்ளே வராம அங்கேயே நிற்கிறீங்க?" என்றவள், சஞ்ஜீவின் சட்டை காலரைப் பிடித்து அவனை உள்ளே இழுத்துக் கொண்டு வர...

அவள் இழுத்த இழுப்புக்கு உள்ளே வந்த சஞ்ஜீவ், காலால் கதவை மூடிவிட்டுப் பாரதியை அணைத்தவன்... அவளைத் தன் நெஞ்சில் சாய்த்து, பாரதிக்கு ஒண்ணும்

இல்லை. அவ நல்லா இருக்கா... என்று தன் மனதிற்குப் பதிய வைத்தான். பாரதிக்கும் அந்த அணைப்பு தேவை யாய் இருந்ததால், அவளும் அவன் அணைப்பில் தன்னை மறந்து நின்றாள்.

சிறிது நேரம் சென்று இயல்புக்குத் திரும்பிய சஞ்ஜீவ், "ஏன்டி... ஊர் விட்டு ஊர் வந்த... வரும்போது கலவரத்தையும் சேர்த்துக் கொண்டு வருவியா...?" என்று பாரதியை வம்பு இழுக்க,

அவனை விட்டு விலகி, இடுப்பில் கை வைத்து முறைத்த பாரதி... "நான் இங்க சண்டை போட வரலை, சஞ்ஜீவ்!" என்றாள்.

"யாரு, நீ... வரும் போதே, ஊர்ல இருக்கிற ரௌடிங்க கிட்ட எல்லாம் வம்பு இழுத்திட்டு வந்திட்டு... சண்டை போட வரலையாம்!" என்ற சஞ்ஜீவ் தொடர்ந்து, "அந்த ரௌடிங்ககிட்ட பக்கம் பக்கமா வசனம் பேசி அவனுங்களை அடி வாங்க வச்சிருக்க... நான் வேற அவனுங்களைப் போட்டுப் புரட்டிட்டேன். தீபாவளி அன்னைக்கு உண்மையா தீபாவளி கொண்டாடினது அவனுங்கதான்..." என்றான் கண்களில் சிரிப்புடன்.

"அவனுங்க பண்ணது மட்டும் சரியா...?" என்றாள் பாரதி கோபமாக....

"இல்லடா... அவனுங்க செஞ்சது சரின்னு சொல்லலை... சொல்லப் போனா, நீ செஞ்சது ரொம்ப கரெக்ட். ஒரு போலீஸ் ஆபீசரா எனக்குப் பெருமைதான். ஆனா... உன்னோட கணவனா இருந்து யோசிக்கும்போது, உன்னை ஏதாவது பண்ணிடுவாங்களோன்னு பயந் திட்டேன். கிரேட் பாரதி, இப்படித்தான் தைரியமா எதிர்த்து



நிற்கணும். இப்படி யாரும் கேள்வி கேட்காமத்தான் இவ னுங்க ஆடுறாங்க..." என்றவன், "தனியா தூங்கப் பயப் படுற பொண்ணுக்கு இவ்வளவு தைரியமா...?" என்று ஆச்சரியப்பட....

"நான் தனியா தூங்கப் பயப்படுவேன்னு, உனக்கு மட்டும்தான் தெரியும்..." என்று பாரதி சஞ்ஜீவ்வைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சொல்ல...

அதில் மயங்கிய சஞ்ஜீவ், பாரதியை இழுத்து அணைத்தவன், "இன்னைக்கு என்னை அழ வச்சிட்டேடி, ராட்சஸி..." என்றான், நெகிழ்ச்சியாக.

அவனின் வேதனையை உணர்ந்த பாரதியின் கண்களும் கலங்கின.

"என்னால் உனக்கு எப்பவுமே கஷ்டம்தான். இல்லை சஞ்ஜீவ். அப்படியிருந்தும் உனக்கு நான்னா ரொம்பப் பிடிக்கும் இல்ல... ஏன்?" என்று பாரதி ஆவலாக சஞ்ஜீவ்வின் முகம் பார்க்க...

"தெரியலை... உன்னை முதல் தடவை பார்த்ததில் இருந்தே, நீ எனக்கு ஸ்பெஷல்தான். நீ பார்க்காத நேரம், நான் உன்னையே பார்த்திட்டு இருப்பேன். உன்னைப் பார்த்திட்டு இருக்கவே எனக்கு ரொம்பப் பிடிக்கும்..." என்றான் சஞ்ஜீவ் மனதிலிருந்து.

பாரதி அவனையே இமைக்காமல் பார்க்க...

"ஆனா மேடம்தான் என்னைக் கண்டுக்கவே மாட்டாங்க. உனக்கு என்னைப் பிடிக்காது இல்ல, பாரதி..." என்று சஞ்ஜீவ், அவளை மேலும் வம்பிழுக்க... பாரதி அவனை விட்டு விலகிச் சென்றாள்.

அந்தச் சிறு பிரிவையும் தாங்க முடியாமல், "எதுக் குத் தள்ளிப் போற...?" என்று மீண்டும் அவளை இழுத்து அணைத்த சஞ்ஜீவ், "சொல்லு, என்னைப் பிடிக்குமா... பிடிக்காதா..." என்று கிசுகிசுப்பாக அவள் காதில் இதழ் பதித்துக் கேட்க...

பாரதி அவனிடமிருந்து விலகி, "என்னைக் கொஞ்சம் தூக்கு..." என்று சிறு பிள்ளை போல் இரு கைகளையும் தூக்கிக் காட்டினாள்.

அவள் இடையில் தன் இரண்டு கைகளையும் கொடுத்து, சஞ்ஜீவ் அவளை அழகாகத் தூக்க... அவன் கழுத்தைத் தன் கரங்களால் கட்டிக் கொண்ட பாரதி, அவன் இதழில் தன் இதழைப் பதித்து, "உன்னை ரொம்பப் பிடிக்கும், உன்னை மட்டும்தான் பிடிக்கும். ஐ லவ் மை சஞ்ஜீவ்!" என்றவள், அவள் சொன்ன ஒவ்வொரு வாக்கி யத்திற்கும், சஞ்ஜீவ்வின் இதழில் அழுந்த முத்தமிட்டாள்.

தன்னவள் தன்னிடம் வந்து சேர்ந்துவிட்ட சந்தோ ஷத்தில், சஞ்ஜீவ் ஆனந்தமாகப் பாரதியைச் சுற்றினான். பாரதி கைகளை விரித்துச் சந்தோஷமாகச் சிரிக்க, சஞ்ஜீவ் வும் அவளோடு சேர்ந்து சிரித்தான்.

அந்த வீடு முழுவதும் அவர்கள் இருவரின் சிரிப்புச் சத்தத்தில் நிறைந்திருந்தது.

**இ**ரண்டு வருடங்களுக்குப் பிறகு...

இடுப்பிலிருந்த ஒரு வயதுப் பெண் குழந்தைக்குச் சாதம் ஊட்டிக் கொண்டிருந்த பாரதியின் வயிறு ஏழு மாதக் கருவைச் சுமப்பதால்... மேடிட்டிருந்தது. (இது என்ன ரெண்டு வருஷத்துல ரெண்டு குழந்தையான்னு பயந்துடாதீங்க. மேல படிங்க.)



"பாரதி! எதுக்கு இப்படி மூச்சு வாங்க இவளைத் தூக்கி வச்சிக்கிட்டு இருக்க... நான் ஊட்ட மாட்டேனா...?" என்ற தான்யா, பாரதியின் கையில் இருந்த குழந்தையை வாங்கக் கை நீட்ட...

"இவங்க சித்தப்பா என்னைப் படுத்துறதை விடவா, இவ என்னைப் படுத்திடப் போறா... விடிஞ்சா சீமந்தம். இன்னும் ஆளைக் காணோம். எப்பவும் எந்த விஷேசத் துக்கும் கடைசியிலதான் வர்றது..." என்று சலித்த பாரதி,

"தேஜு பாப்பா குட். உங்க சித்தப்பா தான் பேட்..." என்று சொல்ல... தேஜு என்கிற தேஜஸ்வினி (ஷக்தி, தான்யாவின் செல்லப் புதல்வி) பாரதி சொன்னது புரிந்தது போல் தனக்கு இருக்கும் ஒன்றிரண்டு பல்லைக் காட்டி அழகாகச் சிரிக்க... அதைத் தான்யாவும், பாரதியும் ரசித்துப் பார்த்தனர்.

மாலை நேரம் ஆனதும் சஞ்ஜீவ் இன்னும் வர வில்லை என்று பாரதியின் மனம் சோர்வுற, அவள் முகத்தைப் பார்த்த ஷக்தி, "இப்ப எதுக்கு இவ்வளவு சோகம்... போன வாரம்தான் சஞ்ஜீவ் உன்னைக் கொண்டு வந்து இங்க விட்டான். இந்த வாரம் மறுபடியும் உன்னைக் கோயம்புத்தூர் அழைச்சிட்டுப் போய்டுவான். ஏதோ மாசக் கணக்கில் அவனைப் பார்க்காதது போல இருக்க..." என்று வேண்டுமென்றே பாரதியைச் சீண்டினான்.

அவனைப் பார்த்து முறைத்த பாரதி, "அம்மா! தான்யாவையும், தேஜுவையும் அத்திம்பேர் இங்கயே விட்டுட்டுப் போறாராம். அடுத்த வாரம் வந்து அழைச் சிட்டுப் போறாராம்..." என்றாள் சத்தமாக...

"ஐயோ! நான் எங்க அப்படி சொன்னேன். என்னால் அவங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு இருக்க முடியாது..." என்று ஷக்தி பதற...

"அப்படித்தான் எனக்கும்..." என்ற பாரதி எழுந்து உள் அறையில் சென்று படுத்து விட்டாள்.

இது உனக்கு தேவையாடா என்று ஷக்தி தன்னைப் பார்த்தே கேட்டுக் கொள்ள, தான்யா அவனைப் பார்த்து மலர்ந்து சிரித்தாள். வத்சலா இரவு உணவு சாப்பிட அழைத்த போதும் பாரதி எழுந்து வரவில்லை. சிறிது நேரம் சென்று அவள் அருகில் யாரோ அமர்வதை உணர்ந்து பாரதி, கண் திறந்து பார்க்க... சஞ்ஜீவ் தான் புன்னகையுடன் அமர்ந்திருந்தான். அவனைப் பார்த்ததும் பாரதி வேகமாக எழுந்திருக்க...

"மெதுவா எந்திரிடா கண்ணம்மா... சாரிடா. கோபமா என் செல்லத்துக்கு? இந்த ஒரு தடவை என்னை மன்னிச்சிடு. இனிமே கரெக்ட் டைம்க்கு வந்திடுறேன்..." என்று சஞ்ஜீவ் சொல்லிக் கொண்டே செல்ல... பாரதி அவனைப் பார்த்துப் போதும் என்பது போல் கை காட்டியவள் - "இதெல்லாம் கேட்டுக் கேட்டு என் காது ஜவ்வே கிழிஞ்சுடுச்சு. நீ இதேதான் என்னோட ரெண டாவது சீமந் தத்துக்கும் சொல்லுவ... எனக்குத் தெரியும்..." என்றாள் கோபமாக...

"ஹே... அதுக்குள்ளே ரெண்டாவது பாப்பா பத்தி பேசுற... இந்தப் பாப்பா ரிலீஸ் பண்ணதும், அடுத்த ப்ரொடக்ஷன் ஸ்டார்ட் பண்ணிடலாம்..." என்றான் சஞ்ஜீவ் குஷியாக.

"நீயெல்லாம் திருந்தவே மாட்டேடா...!" என்று பாரதி தலையில் அடித்துக் கொள்ள...



"வேண்டாம் செல்லம். தலை வலிக்கப் போகுது..." என்று சஞ்ஜீவ் பாரதியின் கை பிடித்துத் தடுத்தவன், "வா சாப்பிடலாம்..." என்று அவளை அழைத்துக் கொண்டு சாப்பிடச் சென்றான்.

மறுநாள் பொழுது அழகாகப் புலர... சீமந்தம் நல்லபடியாக நடந்தது. சஞ்ஜீவ் அன்றே கோயம்புத்தூர் கிளம்ப... பாரதி கண்ணைக் கசக்கினாள்.

"செல்லம், இன்னைக்கே உன்னைக் கூட கூட்டிட்டுப் போகக் கூடாதுன்னு அம்மா சொல்லிட்டாங்க. இன்னும் ரெண்டு நாள்தான். சண்டே வந்து அழைச்சிட்டுப் போறேன். சந்தோஷமா பை சொல்லு. அப்பதான் என்னால அங்க போய் நிம்மதியா இருக்க முடியும்..."

"இன்னும் ரெண்டு நாள் தானே, நீயும் இங்கயே இரு..."

"எப்படிடி... எனக்கு நிறைய வேலை இருக்கு. இப்ப லீவ் எடுக்காம இருந்தாதான், உன் டெலிவரி டைம்ல லீவ் கிடைக்கும். ப்ளீஸ்டா, புரிஞ்சிக்கோ..." என்று சஞ்ஜீவ் கெஞ்சி, கொஞ்சிப் பாரதியைச் சமாதானம் செய்ய... அவள் ஒருவழியாகச் சரி என்று தலை ஆட்டினாள்.

சஞ்ஜீவ் ஊருக்குச் சென்று சேர்ந்ததும், பாரதியை செல்லில் அழைத்து, தான் வந்து விட்டதைச் சொல்ல... "நீ எப்ப இங்க வருவ?" என்று பாரதி மீண்டும் ஆரம்பித்தாள்.

'ஆரம்பிச்சிட்டா... இனி ஊருக்குப் போற வரை இதையேதான் கேட்பா...' என்று நினைத்துப் பெருமூச்சு விட்டவன், "சீக்கிரம் வந்துடுவேன்..." என்று சமாளித்து விட்டுப் போனை வைத்தான்.

சஞ்ஜீவ் எப்போதும் வேலை, வேலை என்றுதான் இருப்பான். அவன் பாரதியோடு இருக்கும் நேரம் குறைவு தான். இருந்தாலும் பாரதி அவனோடு இருக்கத்தான் விரும்புவாள். அவள் ஒரு நாளும் நீ ஏன் சஞ்ஜீவ் இந்த வேலை பார்க்கிற என்று சொன்னதே இல்லை.

அவளுக்குத் தெரியும். சஞ்ஜீவ் அவன் வேலையை ரொம்பவும் நேசிக்கிறானென்று.

இரண்டு மாதம் கழித்துப் பாரதிக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. அதுவும் அது தன்னைப் போல் இருந்ததால் சஞ்ஜீவ் தலை கால் புரியாமல் ஆடினான். குழந்தைக்கு ஷிவானி என்று பெயரிட்டு மகிழ்ந்தனர்.

அந்த வருடம் தீபாவளிக்குத் தங்கள் அம்மா வீட்டிற்கு வந்திருந்த தான்யாவும், பாரதியும் சேர்ந்து பாடினார்கள்.

“குறை ஒன்றும் இல்லை...
மறைமூர்த்தி கண்ணா...
குறை ஒன்றும் இல்லை கண்ணா...
குறை ஒன்றும் இல்லை கோவிந்தா...”

வத்சலாவும், ஸ்ரீனிவாசனும் தங்கள் பெண்களைப் பார்த்து சந்தோஷத்தில் பூரிக்க... தேஜஸ்வினியை மடியில் வைத்திருந்த ஷக்தியும், ஷிவானியை மடியில் வைத் திருந்த சஞ்ஜீவ்வும், தங்கள் மனைவிமாரைக் கண் விலக்காமல் பார்த்து ரசித்தனர்.


காத்திருப்பேனடி
கண்ணம்மா...
ரம்யா ராஜன்